முதற் பகுதி

# இந்துமத உபநிஷதங்களின் பெருமை

யாக்ஞவல்கியப்ரியா

வானதி பதிப்பகம்

R. Balachandran.

SALEM VISVA SA... PRATHISTHANAM *
SALEM-636 003.

ஸ்ரீ ஆதித்யாஸ் புக் ஷாப்
75-E, முதல் அக்ரஹாரம், சேலம்-1.

# இந்துமத உபநிஷதங்களின் பெருமை

(முதற் பகுதி)

R. Balachandran.

ஆசிரியர்

ஆத்திக வித்தகர்

யாக்ஞவல்கியப்பிரியா

வானதி பதிப்பகம்

13. தீனதயாளு தெரு

தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : அக்டோபர், 1993

உரிமை பதிவு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 27–00

*Laser Typeset by:*

**Vignesh Laser Printers**
4 & 5, Thanappa Chetty Street, Triplicane,
Madras-5. Phone : 83 32 31 (P.P)

அச்சிட்டோர் :
நாதன் & கம்பெனி, சென்னை - 600 042.

# பதிப்புரை

இந்துமத உபநிஷதங்களின் பெருமையைக் குறித்து ஆசிரியர் யாக்ஞவல்கியப்பிரியா எழுதியளித்துள்ளதை வானதி பதிப்பகம் வாசகர்களுக்குப் பெருமையுடன் வழங்குகிறது.

உபநிஷதங்களும் நீதிமொழிகளும் கடல் போன்றவை. அந்த மாபெரும் கடலிலிருந்து முத்துக்களைத் தேடி எடுத்துக் கொடுப்பது போல் ஆத்திக வித்தகர் யாக்ஞவல்கியப்பிரியா உபநிஷதங்களின் சாரத்தை – அதன் பெருமைகளை எளிமையான தமிழ் நடையில் எல்லோருக்கும் புரியும்படி எடுத்துக் கூறுகிறார். ஆன்மீக உலகத்துக்கு புதிய வரவு இந்நூல். இந்து மதத்துக்கு மாபெரும் தொண்டு செய்துள்ள ஆசிரியர் யாக்ஞவல்கியப்பிரியாவைப் பாராட்டுகிறேன்.

உயர்ந்த கருத்துக்கள் நிரம்பிய இந்நூலை தமிழ்மக்கள் பெரிதும் வரவேற்பார்கள் என நம்பிகிறேன்.

ஏ. திருநாவுக்கரசு

வானதி பதிப்பகம்.

# முன்னுரை

உபநிஷதங்கள் வேதங்களின் விளக்கமாகும். உபநிஷதம் என்றால் அருகிலிருந்து கேட்டல் – அருகிலிருந்து விளக்கம் பெறுதல் – என்றாகும்.

அதற்கேற்றாற் போல் ஒவ்வொரு உபநிஷதமும் குரு–சிஷ்ய சம்வாதமாகவே அமைந்துள்ளது.

குருவோ மகாமுனிவர் – மகா ரிஷி. சீடனோ அதி மேதாவி. அதனால் சீடர்கள் கேட்கும் கேள்விகள் மகா சிக்கலாக அமையும். குருவோ அதற்குச் சளைத்தவரில்லை. 'நீங்கள் இப்படியெல்லாம் கேட்டு, தெரிந்து கொள்வதில் அதி விருப்பமாயிருப்பதைக் கண்டு நான் மிக்க சந்தோஷமடைகிறேன்" என்று சொல்லி விட்டு பதில் சொல்லத் தொடங்கி விடுவார்.

அந்நிலையிலும் 'ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்' என்று மிக அடக்கமாகச் சொல்லி தொடங்குகிறார். சீடர்கள் மனதில் நன்கு ஆழப்பதியும்படி சொல்கிறார்.

A= B, B= C,∴ A= C என்று நாம் க்ஷேத்திர கணிதத்தில் படித்திருக்கிறோமல்லவா. அதுபோன்று படிப்படியாகச் சொல்லி விளக்குகிறார் குரு.

அவர் சீடர்களுக்கு விளக்குவது நமக்கு விளக்குவது போல் தானே! அதனால் நாம் தான் கவனமாக படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உபநிஷதங்கள் என்பது பிரம்ம வித்தை. பிரம்மமாகிய சிவபெருமானை ஜீவர்களாகிய நமக்கு அருகில் நம்முடன் ஒன்றாய் உறுதியாக அறிவித்து சம்சாரத்திற்குக் காரணமான அவித்யை முதலான நமது சகல கஷ்டங்களையும் விலக்கி பிரம்மத்துடன் நம்மை ஒன்றாய்ப் பிணைப் பித்தலால் பிரம்ம வித்தை உபநிஷத் எனப்படுகிறது.

ரிக்வேதம் பரம்பொருளின் புகழைப் பாடுவது. யஜுர்வேதம் பரம்பொருளின் கிரியைகளை விளக்குவது. சாமவேதம் ஞானத்தைப் புகட்டுவது.

"காயத்ரீ" எனும் மகாமந்திரத்தின் மூன்று பாதங்களும், இம்மூன்று வேதங்களின் சாரமேயாகும்.

'ஓம்' காரத்தின் மூன்று மாத்திரைகளையும் உரையிலும் செயலிலும் உள்ளத்திலும் வைத்து ஆழ்ந்து தியானித்து வந்தால் பரிபூரணநிலையாகிய துரீய நிலைக்கு அழைத்து செல்லும்.

அந்நிலையே சொல்லுக்கடங்கா்த சுகந்தருவதாகும் -- என்றெல்லாம் விளக்குகிறது உபநிஷதங்கள்.

இதன் மூல நூல் வடமொழியில் உள்ளதால் அநேகர் இதுபற்றி அறியாமல் உள்ளனர். அதனால் இதை அனைவருக்கும் நன்கு புரியும்படி -- எளிய தமிழில் விளக்கியுள்ளேன்.

நீங்கள் இதை நன்கு படித்து நல்ல பயன் பெறுவீர்களானால் அதுவே என் பணியின் பயனாகும்.

இந்நூலை எனது பெற்றோரின் பாதகமலங்களில் காணிக்கையாக்குகிறேன்.

*யாக்ஞவல்கியப்ரியா*

R. Balachandran

# எது உண்மை?

உபநிஷதங்கள்தாம் இந்தியத் தத்துவ ஞானங்கள் அனைத்துக்கும் மூலபாடம். ஒவ்வொரு ஞானியும் தங்கள் தங்கள் கொள்கைகளுக்கு உபநிஷத்தில்தான் ஆதாரம் தேடினார்கள். உபநிஷதமும், பார்ப்பவரின் முகத்தைக் கண்ணாடி பிரதிபலிப்பதுபோல், ஒவ்வொரு ஞானியின் சிந்தனைகளையும் அவரவருக்குத் தகுந்தபடி பிரதிபலிக்கும் படியாக அமைந்துவிட்டது.

உபநிஷத்தில் ஆத்ம ஞானம் போதிக்கப்படுகிறது.

எது உண்மை என்பதை ஆராயும் முயற்சிதான் உபநிஷதம். அது எவ்வளவோ விஷயங்களைத் தன்னுள் கொண்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட தத்துவத்தையோ அல்லது நம்பிக்கையை மட்டுந்தான் அது போதிக்கிறது என்று சொல்லமுடியாது. எல்லாத் தத்துவங்களுக்குமே அதில் ஆதாரம் காணமுடியும்.

–பிரும்ம இரகசியம் நூலில்

**ர.சு. நல்லபெருமாள்**

ஓம்

எவ்வளவோ உபநிஷதங்கள் இருந்தாலும் அவற்றில் சிலவே இன்று கிடைக்கின்றன. காரணம், இவை பெரும்பாலும் செவிவழி வந்தவை. இவற்றை ஓதியவர்கள் பலருக்கு எழுத்தறிவு இல்லை. ஏட்டுச்சுவடிகளும் இலைகளும் காலத்தால் அழிந்தன.

இவற்றில் நூற்றுக்கு அதிகமான உபநிஷத்துக்கள் இன்று கிடைக்கின்றன.

இந்த உபநிஷதங்களை யாத்த முனிவர்களின் பெயர்களை யாம் அறியோம்.

உபநிஷதங்களின் பெயர்களே வேடிக்கையாக இருக்கும். மாண்டுக்யம் (தவளை) முண்டகம் (மழித்தலை) பிருஹத் ஆரண்யம் (பெருங்காடு).

ஒவ்வொரு உபநிஷத்திலும் ஒரு சாந்திபாடம் இருக்கும். இதை ஆசானும் சீடனும் சேர்ந்து ஒரே சீராக ஓதுவார்கள். இசைக் கட்டுள்ள ஒலிக்குச் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக்கும் வலிமை உண்டல்லவா?

எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் பார்ப்போம்.

"ஓம்" இதற்கு நிகரான சொல் எந்த மொழியிலும் இல்லை.

–பாரதி போற்றிய பன்னரும் உபநிடதநூலில்.

**தி.சா. ராஜு**

# இதனுள்ளே.....


| | | |
|---|---|---|
| 1. | ஈசாவாஸ்யோபநிஷத் | 1 |
| 2. | கடோபநிஷதம் | 23 |
| 3. | சுவேதாஸ்வதர உபநிஷதம் | 78 |
| 4. | கேநோபஷிதம் | 114 |
| 5. | ஐதரேய உபநிஷதம் | 128 |
| 6. | மைத்ரீ உபநிஷதம் | 134 |
| 7. | சுபால உபநிஷதம் | 147 |
| 8. | ஜாபால உபநிஷதம் | 156 |
| 9. | பிரச்னோ உபநிஷதம் | 159 |
| 10. | வஜ்ர சூசிக உபநிஷதம் | 187 |
| 11. | பைங்கல உபநிஷதம் | 193 |
| 12. | அதர்வசிகோபநிஷதம் | 197 |
| 13. | பஞ்ச பிரம்மோபநிஷதம் | 202 |

# உபநிஷதங்களின் பெருமை

## ஈசாவாஸ்யோபநிஷத்

உபநிஷதங்களையே வேதாந்தம் என்று பெரியோர் கூறுவர். வேதங்களின் முடிவே வேதாந்தம்.

வேதங்கள் நான்கு வகைப்படும். இந்நான்கு வேதங்களுக்கும் முறையே இருபத்தொன்று, நூற்றொன்று, ஆயிரம், ஒன்பது சாகைகள் – கிளைகள் – உள்ளன.

ஒவ்வொரு சாகையின் முடிவிலும் ஒவ்வொரு உபநிஷத் உண்டு. ஆக மொத்தம் ஆயிரத்து நூற்று முப்பத்தி ஒன்று உபநிஷதங்கள்.

இவைகளுள் நூற்றெட்டு உபநிஷதங்களே – அச்சிடப்பட்டு – பிரசித்தமாக உள்ளன.

வேதங்கள் சிவபெருமானது மூச்சுக் காற்றுகள் ஆகையால் மகரிஷிகளால் இயற்றப்பட்டவையல்ல. அனாதிகளே ஆகையால் வேதங்களின் கடைசி பாகமாகிய உபநிஷத்துக்களும் மகரிஷிகளால் இயற்றப்பட்வையல்ல என்றாகிறதல்லவா!

சிவபெருமானது மூச்சுகளானதால் அனாதிகளாயுள்ளவை என்பது வேதியர்களின் சிந்தாந்தம் வேதமும் அவ்விதமே கூறுகிறது.

உபநிஷத் என்பது பரம வித்யை, பிரம்மமாகிய சிவபெருமானை ஜீவர்களாகிய நமக்கு அருகில் நம்முடன் ஒன்றாய் உறுதியாய் அறிவித்து சம்சாரத்திற்குக் காரணமான அவித்யை முதலான நமது சகல கஷ்டங்களையும் விலக்கி பிரம்மத்துடன் நம்மை ஒன்றாய்ப் பிணைப்பித்தலால் பிரமவித்யை உபநிஷத் எனப்படுகிறது.

பிரம்ம வித்தையைத் தெளிவு படுத்தலால் கிரந்தத்திற்கு உபநிஷத் என்ற பெயர் ஏற்பட்டது.

**ஈசாவாஸ்யோபநிஷத்**

அவற்றுள் ஈசாவாஸ்யோபநிஷத் முதலாவதாக உள்ளது.

இது யஜுர் வேதத்தின் உட்பிரிவாகிய சுக்லம் கிருஷ் ணம் என இரண்டில் சுக்ல யஜுர் வேதத்தின் உட்பிரிவான காண்வ சாகையைச் சேர்ந்தது.

ஈசாவாஸ்யம் என்று அந்த உபநிஷத் தொடங்குவ தால் அதற்கு அந்தப் பெயர் வரலாயிற்று.

ஈசாவாஸ்யோபநிஷத்தில் பதினெட்டு மந்திரங்கள் உள்ளன.

ஈசனாகிய சிவபெருமானைக் கொண்டு உலகத்தை மறைக்கவேண்டும். அதாவது உலகத்தை சிவபெருமானை விட்டு வேறாகப் பார்க்காமல் உலகம் சிவமயம், சிவனைத் தவிர வேறன்று என்று காணவேண்டும்.

உலகத்தைக் காண்போருக்குச் சிவமில்லை. சிவபெ ருமானைக் காண்போருக்கு உலகமில்லை.

சிவமே உலகமாகத் தோன்றும் நிலை சம்சாரநிலை. உலகமே சிவமாய்த் தோன்றும் நிலை முக்தி நிலை.

இக்கருத்தே "கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்" என்று சிறுபிள்ளகள் வரை பரவியுள்ளது.

கல்லால் நாயுருவம் செய்யப்பட்டதில், கல்லைப் பார்ப்போருக்கு நாய் தெரியாது, நாயைப் பார்ப்போருக்கு கல் தெரியாது. அதுபோல் இங்கும் உலகத்தை சிவமாய்ப் பார்ப்பவர்க்கு உலகமில்லை. சிவத்தை உலகமாய்ப் பார்ப் போருக்கு சிவமில்லை என்று கருத்து.

பொய்யான உலகினை வெறுத்துத் துறவறம் பூண்டு மெய்யான சிவானந்தத்தை அனுபவித்து ஆத்மாவைக் காப்பாற்றவேண்டும்.

ஒருவருடைய பணத்திலும் பற்று வைக்காதே! சிவா னந்தானுபவமாகிய மோட்சத்தை அடைவது சிவஞானத்

தால். அவ்வித ஞானத்தைப் பெற அதிகாரமற்றவர்கள், அவ்வதிகாரம் ஏற்படுவதற்கு வேதத்தால் அறிவுறுத்தப் பட்ட அவரவர்க்கேற்ற கருமங்களைச் செய்யவேண்டும். இன்றேல் மோட்சத்தை உய்வதற்கு வேறு வழியில்லை.

சிவனோடு ஒன்றாக ஆத்மாவை அறியாதவர்கள் சம்சார பந்தத்திலேயே உழல்வர்.

ஜீவர்களுக்கு ஆத்மாவாகிய சிவஸ்வரூபம் விகார மற்றது. மனம் வாக்கு முதலான இந்திரியங்களுக்குப் புலப் படாதது. எங்கும் எப்பொழுதும் எல்லா உலகுமாகவுள்ளது. அது அறிந்துள்ள அறிஞர்கட்கு ஆத்மஸ்வரூபமானதால் நெருங்கியுள்ளது. ஆனால் அறியாதவர்களுக்கு எட்டியுள் ளது.

சிவஸ்வரூபத்திலே உலகம் மாயையினால் தோன்று கிறது. சிவஸ்வரூபம் எங்கும் நிறைந்துள்ளது. அதுவே நமது ஸ்வரூபம் என்று, சிவப் பொருளின் ஒன்றாய் இருக்கும் தன்மையை அறிந்தவர்க்கு சோகம் மோகம் இவைகள் விலகிப் போகும்.

சிவ ஸ்வரூபத்திற்கு ஸ்தூலம் சூட்சுமம் காரணம் என்ற மூவகை சரீரமும் கிடையாது.

அது பரிசுத்தமும் பாபசம்பந்தமற்றதாக உள்ளது. அதுவே இவ்வுலகிற்குக் காரணம். பிராணிகளுக்குக் கர்ம பலனை அளிப்பதும் அதுவே. கர்மங்களையும் கடவுளின் உபாசனைகளையும் சேர்த்துச் செய்பவர்களுக்கு ஸ்வபா வமாக உள்ள அஞ்ஞானத்தினால் ஏற்பட்ட காமம், ஞானம், வியாகிருதமாகிய உலகம் அவ்யாகிருதமாகிய மாயை இவைகளைச் சேர்த்து உபாசிப்பவர்களுக்கு அதர்மம், காமம் இவைகள் விலகி மோட்சத்திற்கு அருகிலுள்ள பிரம்ம லோகம் கிடைக்கும்.

இது சுக்ல யஜுர் வேதம் வாஜஸநேய சம்ஹிதையில் நாற்பதாவது அத்யாயமாகும். இக்காரணத்தால் இதை "சுக்ல யஜுர் வேதீய சம்ஹிதோபநிஷத்" என்று கூறுவதும் உண்டு.

கிருஹஸ்தாசிரமத்திலிருந்து மகன் ஆசைகளை அடக்கினவனானான். நியமங்களுடன் கூடினவனாய் பேரின்பத்தில் இச்சை கொண்டான்.

உடனே தன் தகப்பனார் ரிஷி "தத்யங் ஆதர் வணரை" அணுகினான். அவரை நமஸ்கரித்தெழுந்து உப தேசம் செய்தருளும்படி வேண்டிக் கொண்டான்.

"ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே!

பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வகிஷ்யதே"

"ஓம்! அது பூர்ணம் (முழுப்பொருள்). இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணமே எழுகின்றது. அப்பூர் ணத்திலிருந்து பூர்ணத்தை எடுத்தும் எஞ்சி நிற்பதும் பூர்ணமே!"

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

"குறைவிலா நிறைவே கோதிலா வமுதே!
யீறிலாக் கெழுஞ்சுடர்க் குன்றே! !
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே...."

என்று மணிவாசகப் பெருமானும் பாடியுள்ளாரே!

உலக வழக்குப்படி ஒரு பொருளிலிருந்து ஒரு பகுதியை எடுத்துவிட்டால், அது முழுமையை இழந்து ஒரு பகுதியாகத் தானே இருக்கும்? கணிதத்தின் சித்தாந்தம் கூட அப்படித்தானே!

ஆனால் பரம்பொருள் இந்த க்ஷேத்திர கணித நூல் நியதிக்கு அடங்காது. பகுதிகள் வேறுபட்டபோதிலும், முதற்பொருள் முழுமை கொண்டே இருக்கும். வேற்றுமை யும் ஒற்றுமையும் கலந்து நிற்பதே பரம்பொருளின் தன்மை யாகும்.

பரம்பொருளின் மேலான நிலை இது !

தத்யங் ஆதர்வணர் தன் மகனுக்கு உபநிஷத்தை உப தேசிக்குமுன் முழுமுதற் பொருளையும் தன் ஆத்மாவையும் சேர்த்து உலகத்தை ஈன்ற ஈஸ்வரனும், அவனின்று

கிளைத்த என் ஆத்மாவும் முழுப் பொருள்கள். ஆம். பொருளினின்று உண்டாகிய பகுதியும் முழுப்பொருளே! முதற் பொருளும் முன்போலவே தன் முழுமைக்கு குறைவு இல்லாமல் நிற்கிறது. அந்த முதற் பொருள் எனக்கு சாந்தி தருக!" என்று தியானிக்கும்படி செய்கிறார்.

ஓம். மாறுகின்ற இவ்வுலகில் தோன்றி மறைகின்ற அனைத்தும், இறைவனால் வியாபிக்கப்பட்டதாக அறிந்து கொள். அப்படியே நீ காண வேண்டும். அநித்தியத்தை விட்டுவிட்டு, என்றும் நித்தியமாக உள்ள பேரின்பத்தைக் கண்டு கொள்.

அந்த ஈஸ்வரபாவனையால் - அவனின்றி உல கில்லை என்று தள்ளுவதால் .ஏற்பட்ட தியாகத்தால் உன்னைக் காப்பாற்றிக் கொள்.

ஈஸ்வரன் வாழ்ந்திருக்கவே இவை படைக்கப்பட்டன என்றால், இவர்களுக்கு உரிமை இல்லாமற் போகுமே! அதனால் அவனால் வகிக்கப்படுவதற்காகவே இவை எல்லாம் படைக்கப் பட்டன எனறு சொல்லப்பட்டுள்ளது.

சீவன் மனம் விரும்பி வேண்டிக் கொண்டாலன்றி அவன் அவற்றில் வாழ்பவனாக அமைய மாட்டான் ; அமைய முடியாது.

ஆனால் கடமையைச் செய்ய அவற்றை உயிர்ப் பித்து வைத்திருப்பான்.

பற்றில்லாமல் வாழ்தலே துறத்தலாகும். இவ்வுடல் செய்யும் தொழில்களால் தோன்றும் பொருட்செல்வத்தை யும் அறிவுச் செல்வத்தையும் அவன் சீவர்களுக்கே தந்து விடுகிறான். அதனால் துறப்பதனால் எவ்வித நஷ்டமும் ஏற்படுவதற்கில்லையே!

அத்துறவு காரணமாய் மனமும், அறிவு காரணமாய் "வாக்" எனும் சீவனும் தூய்மையடையும்.

உயிரைப் போஷிப்பதற்காக மட்டும் அவசியமான பொருளை 'அவன்' கொடுத்ததென ஏற்றுக் கொண்டு

வாழ்ந்து வா. வேறு எவருடைய பொருளின் மீதும் ஆசை வைக்காதே! பேராசை அடையாதே!

ஆசையை அகற்றினால் அனைத்தும் நமக்கும் சொந்தம் என்பது விளங்குமே!

அசையாத கடல் உருண்டோடுகிற அலையாகவும் காட்சியளிக்கிறது. அத்தகைய அலையையும் கடல் எனக் காண்பதே முறையாகும். உலகாக விள்ங்குபவன் ஈசன். ஆதலால் உலகையே ஈசனாக உணர்வது ஆத்ம சாதனம். ஈசனாக காண்பதில் அதனிடத்து நாம் வைக்கின்ற இணக்கத்தை மேலானதாக்குகிறோம்.

கீழான இணக்கத்தை மேலான இணக்கமாக மாற்றுவது தியாகம் ஆகும்.

ஜீவன் ஈசனோடு இணங்கியிருந்து இன்பம் பெறுவதில்-குழந்தை தாயிடம் பெறுவது போல்-தூய்மை மிகவுண்டு.

ஒவ்வொரு ஜீவனுக்கும் நலம் தருவதற்கு ஏற்றவளவே ஈசன் செல்வத்தை எடுத்து வழங்குகிறார். அதற்கு மேல் எதையும் அபகரிக்கும் மனப்பான்மை ஆத்ம சாதகனுக்கு ஏற்படுவதில்லை.

"ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்"

என்று ஆன்றோர் சொல்லும் உள்ளதே!

ஆசைச் சுழல் கடலில் ஆழாமல் ஐயா நின்
நேசம் புணைத்தாள் நிறுத்தினால் ஆகாதோ?

என்று தாயுமானாரும் பகர்ந்துள்ளாரே!

இது ஞான நிஷ்டை - நிவிருத்தி மார்க்கம் - ஆகும்.

இவ்விதமாகப் பற்றற்று கருமபலன்களுக்காக விருப்பம் கொள்ளாமல் —ஆனால் மிகுந்த ஆர்வத்துடன்—பணிகளைச் செய்கின்ற மனித வாழ்வை இவ்வுலகில் விரும்புவன், ஒரு நூற்றாண்டுகாலம் வாழ விருப்பம் கொள்ளட்டும்.

மானிடனே! இதுவே உனக்கு வழி! எவ்வழியில் கருமப் பற்றுத் தொடராதோ அதற்கு இதைவிட வேறு வழி யில்லை. இறைவனில் நிலைத்திருந்து செய்கின்ற கருமங்கள் மாத்திரமே மனிதனின் ஆத்மாவைப் பிணிக்காது.

இது, பற்று நீங்கிய கரும நிஷ்டை பிரவிருத்தி மார்க்கம் – ஆகும்.

கடவுளைக் காணுதற் பொருட்டு நாம் கருமத்தை யெல்லாம் கடந்து செல்ல வேண்டும்.

இயற்கையின் கருமம் என்பது சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகியவைகளின் அசைவு ஆகும். அந்த அசைவு ஒய்ந்தால் இறைவன் தென்படுவான்.

"வேண்டார்கள் கன்மம்
விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்மம்
அதில் இச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்மம்
மிகுதியோ ராய்ந்தன்பே!"

என்று திருமூலரின் திருமந்திரமும் செப்புகிறதே!

ஞானத்துடன் கருமஞ்செய்யவேண்டும் என்பதே நியதி. ஞான நிஷ்டன் சாவையும் வெறுக்க மாட்டான்; வாழ்வையும் விரும்ப மாட்டான்.

"அன்பர் பணி செய்யவெனையாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்று தாயுமானாரும் பாடியுள்ளாரே!

ஞானசித்தி பெறுவதற்குமுன் எவனும் கருமத்தை முற்றும் துறந்து விட முடியாதே!

செடியில் பிஞ்சு விடத்தொடங்கியதும், பூ தானே உதிர்ந்து விடுகிறதல்லவா! அதுபோல் ஞானசித்தி ஏற்பட்டதும், கருமம், கருமப்பலன்–தானே நழுவிப்போகும். அப்போது அது நியம நிஷ்டைகளில், நாதம் போல் - ஒடுங்கி விடும்.

இங்கு நூறாண்டுகாலம் என்பது வாழ்நாள் முழுவதும் என்பதைக் குறிக்கும். சோம்பியிருத்தல் கூடாது. உடலைத் தொழிற் படுத்த வேண்டும். அதனால் விளையும் நல்வினை தீவினைகள் அதற்கே உரியன. உள்ளே யிருக்கும் ஆத்மனைச் சேரா.

"நான்" எனப்படும் சீவனுக்குச் சஞ்சித கர்மம் மட்டுமே, உண்டு. ஆகாம்ய 'ப்ராரப்தங்கள்' உடலுக்கு உரியனவாம்.

முழுக்க அடர்த்தியான இருள் நிறைந்த—ஆதவனின் ஒளி படராத—உலகங்கள் உள்ளன. எவர் ஆத்ம ஹத்தி செய்து கொள்கிறார்களோ அவர்கள் – அந்த அறிவிலிகள் - அவ்விருள் சூழ்ந்த அசுர உலகங்களுக்கே போய்ச் சேருகின்றார்.

இங்கு சூரியன் என்பது இறைவனைக் குறிக்கும். ஊனுடல் அவனின்றும் வேறுபட்டது. சூக்கும உடலையே ஜீவன் காண்கின்றான். அதனை வாயிலாகக் கொண்டு ஊனுடலையும், நிலத்தினைப் பொருள்களையும் காண்கின்றான். ஆத்மாவை அறியாது இருத்தலே அதனைக் கொலை செய்வதற் கொப்பாகும்.

இறந்து போனவனிடத்தில் உயிருக்கு அடையாளமான உணர்ச்சி காணப்படாதல்லவா! அதுபோல் அஞ்ஞானியிடம் ஆத்மா இருக்கும் அடையாளமே செயலில் காணப்படுவதில்லை.

"இரக்கமென்றொரு பொருளிலாத நெஞ்சினர்
அரக்கரென்றுளர் சிலர் அறித்தினீங்கினர்"

என்று கம்பரும் கூறியுள்ளாரே!

ஒரு பொருள், ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்றால் அசைந்தாக வேண்டும். ஆனால் ஆத்மாவோ அசையாமலேயே மனத்தைவிட வேகமாய்ச் செல்வதாக உள்ளது. மனோவேகத்தைத் தாண்டிச் சென்று விட்டதால் முன்னமேயே இந்திரியங்களின் அதிருஷ்டானமான –

தேவர்கள் இதை அடையவில்லை. பொறிகள் "அவனை" எய்த முடியாது. "அவன்" எப்போதும் அவற்றிற்கு அப்பா லேயே இருந்து வருகின்றான். அமைதியாய் அது நிலையாக நின்று கொண்டே - ஓடுகின்ற அனைத்தையும், முந்திவிடுகின்றது. அவனில் வியாபித்திருக்கும் வாயுதேவன் உயிர்களின் செயல்கள் அனைத்தையும் தாங்குகிறான். அவனன்றி அங்கு உயிர் வாழ்க்கை ஏது?

மனது எங்கு சென்றாலும் அதற்கு முன்னமேயே போய்விட்டாற்போல் அங்கும் ஆத்ம ஸ்வரூபம் பிரகாசித் துக் கொண்டிருக்கிறது. இது இயற்கையின் விந்தையே!

இங்கு 'தேவர்கள்' என்பது பொறிகளாகும். அவை முன்னோக்கி ஓடினால் அவனை அடைய முடியவில்லை. திரும்பிக் கண்டால் அவர்களிடம் சிக்கிக் கொள்வான். அவற்றிற்கு இந்த உண்மை தெரியாது!

வளி என்பது வாயுவின் பெயராகும். அணு அதனு டைய இலக்கண நிலை. இந்நிலையில் வாயு தன்னைத் தானே தீ யாகக் காட்டிக் கொள்கின்றது. தீ யணுதோன்றும் பொழுது அதனுள் ஜீவன் பிறக்கின்றான்.

இந்த நிலையில் ஜீவன் தன்னை ஈன்ற சாத்துவிகத் தையும் காண்கின்றான். ஆனால் அதுவே சடமாகித் தனக்கு உடலாக அமைந்து விட்டது என்பதை அரிய மாட்டான். ஆனால், ஆன்மாவைத் தன்னிருப்பினை வெளி அறிந்து கொள்கின்றது. எனவே ஜீவன் தன் தொழில்களை அதன் மீது திணிப்பதாக சொல்லப்பட்டுள் ளது.

அவனிடம் அசைந்து கொடுக்கும் தன்மை உண்டு. ஆனால் அசைவதில்லை, அவன் மிகத்தொலைவில் உள் ளவன்; ஆனால் அண்மையிலும் உள்ளான். அவன் எல் லாவற்றின் உள்ளேயும் இருக்கின்றான்; அதேசமயத்தில் அனைத்திற்கும் புறத்தேயும் அப்பாலும் - உள்ளான்.

"இறையாஃ எவ்வுயிரகத்தும்
அகம்புறத்தும் புறத்தும்

இலங்கு நடத்தரசே – என்
இசையும் அணிந்தருளே!"

என்று வடலூர் வள்ளலாரும் பாடியுள்ளாரே!

கடலின் கீழ்ப்பகுதி அசைவதில்லை மேற்பகுதி அசைகிறது. நிர்க்குண பிரம்மம் அசைவதில்லை, சகுண பிரம்மும் அசைகிறது. அறிவிலிகளுக்கு அது தூரத்தில் இருக்கிறது. விவேகிகளுக்கு அது அந்தராத்மாவாக இருக் கிறது.

அந்தர்யாமியாயிருப்பதும் பிரம்மம்; அதீதத்தில் இருப்பதும் பிரம்மம்.

பற்று அற்றதாயினும் அனைத்தையும் பற்றித் தாங்கு வ'தாயும், குணங்கள் அற்றதாயினும் குணங்களை அனுப விப்பதாயும், பொருள்களுக்கு வெளியாகவும் உள்ளாகவும் அசையும் பொருள்களாகவும் அசையாப் பொருள்களாகவும், சூட்சமத்தன்மையால் எளிதாக அறி தற்கு முடியாததாகவும் உள்ளது.

நடுங்கும் ஜீவன் மேகக்கூட்டத்தினுள் மறைந்து கொண்டு இருப்பதனால் காண்போருக்குத் தொலைவில் உள்ளது. நடுக்கமில்லாத வெளி அருகே உடலுக்கு வெளியாக எல்லோரும் காண இருக்கிறது. இவ்விரண்டும் ஒன்றாகவே தொழிற்படுகின்றன.

எவன் எல்லா உயிர்களையும் தன்னில் தன் ஆத்மா வினிடத்திலேயும் மற்ற எல்லா உயிர்களில் தன்னையும் காண்கின்றானோ, அவன் யாரையும் வெறுப்பது இல்லை. அப்படி வெறுத்தால் தன்னையே வெறுத்துக் கொண்டவ னாகி விடுவானல்லவா!

அவன் எல்லாவற்றிலும் தங்கியிருப்பவனாகை யால், பூதங்கள் எல்லாம் அவனுடைய அங்கங்களே என்று நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வுண்மையை அறிந்தவன் மெய்ஞ்ஞானியாகி எல்லோரிடத்திலும் சமப்பார்வை உடையவனாக இருப்

பான். இதனால் இவன் யாராலும் சிந்திக்கப்படமாட்டா னல்லவா!

அங்கும் இங்கும் வாழும் எல்லா உயிர்களும் தானே என்றாகி விடுகின்றது. அத்தகைய ஒருமையைக்காணும் அவனுக்கு மயக்கம் ஏது? துக்கம் ஏது? துன்பந்தான் ஏது?

எவன் துன்பத்திலும் இன்பத்திலும் சமமானவனோ, விருப்பையும் வெறுப்பையும் ஒன்றாய் கருதுபவனோ ஓடு, கல், பொன் இவைகளைச் சமமாய்ப் பாவிப்பவனோ, இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒன்றாய்க் கருதுப வனோ, அவன் மாபெரும் குணாதீதனாவான். அவன் நிலை பெரு நிலையாகும். சுகர் நிலையென்ன? ஜடபரதர் நிலையென்ன? அந்த அதீத நிலையையடைந்தவனா வான்.

வெளி பரமான்மா, சீவான்மா என்ற பரிணாமத் தால் தோன்றிய ஆன்மாக்களும் ஆகாயத்திலிருந்து ஆன் மாவாகவே உண்டாயின. அம்முழுமுதற்பொருளே ஆதிமூலமாக உள்ளவன் என்பதனை முதலான்மா அறி விக்க சீவன் அறிவான். அதன் பின்னர் அவனுக்கு மயக் கம் தோன்றாதல்லவா. துன்பமும் முற்றிலும் அகன்று விடுமே!

அந்தப் பரமாத்மா தன் பேரொளியால் – எங்கும் நிறைந்துள்ளான். அவன் உடலில்லா நுண்ணியன். அவன் ஊறுபாடு இல்லாதவன். அவன் தூயோன், தீமை யினால் தீண்டப்படாத நிலையினனாய் உள்ளான். அவன் எல்லாமறிந்தவன்; மனதை ஆள்பவன், அனைத் தையும் கடந்தவன்; தானே உண்டானவன்; படைப்பு அனைத்திலும் உள்ளார்ந்த நிலையில் தானே இயற்கை யாக எவராலும் படைக்கப்படாமல் – அமைந்து எங்கும் வியாபித்து அனைத்திற்கும் அப்பாற்பட்ட கடந்த நிலையில் கடவுளாக உறையும் "அவன்" ஒரு மாபெரும் உன்னதமான தலைவனாவான்.

அவன் ஒப்பிலாத் தத்துவ ஞானி! இவ்வுலகில் அவ ரவர்க்குரிய கடமைகளை முறையே நிர்ணயித்து வைத்த வன் அவனே! தொடக்கமும் முடிவும் இல்லாத ஊழூழி காலங்களினிடையே, பொருள்களுக்கும், உயிர்களுக்கும் இடையே உள்ள ஒரு பரிபூரணமான நியதியை ஏற்படுத்தி அதை உறுதி செய்தவன் அவனே!

வெளி பரமாணு, அணு, நீர்த்துகள் நிலத்துகள் இவை எல்லாவற்றினின்றும் முதல்வன் காலத்தின் கோலத்தைப் பூண்டவனாய் வெளிப் படுகின்றான்.

ஏற்கனவே உடல் இல்லாதவன் என்று குறிப்பிடப் பட்டுள்ளதால், இப்பொழுது எல்லையில்லாதவன் என்று கொள்ளலாமல்லவா!

அவ்வண்ணம் ஏற்பட்டதே நமது வேதமாகும். அதனால் நம் வேதத்தை ஆக்கியோன் இவன்தான் என்று எந்த மானிடனையும் குறிப்பிடுவதற்கில்லை. அனாதி யான இறைவனாலேயே இயற்கையினாலேயே - ஏற்ப டுத்தப்பட்டது அந்த வாழ்க்கை முறை. அதை, நாலு வேதங்களைச் செப்பம் செய்து வைத்தவர் வியாச முனி யாவர்.

எவர் கர்மமாகிய அறியாமையை உபாசிக்கிறார் களோ அவர்கள் சம்சாரமாகிய இருளில் வீழ்கின்றனர். இன்ப வாழ்க்கைக்கான செயலை மட்டுமே பின்பற்றிச் செல்லும் அவர்கள் காரிருளில் உலவுகின்றனர். எவர் தேவதைகளின் உபாசனையின் - அதாவது அறிவை மட்டுமே பின்பற்றிச் செல்வதில் - ஆசை வைத்து ஒழுகு வோர் அதனின்றும் ஆழமான இருளில் புகுகின்றவர்க ளுக்கு ஒப்பாவார்கள்.

அந்த ஆத்ம வித்தையால் தேவலோகம் தேவதைக ளின் உபாசனை கிட்டும். அவ் வித்தையால் - கருமத்தால் - பித்ருலோகந்தான் கிட்டும்.

வெளி, காண்பான் மட்டுமே யாகையால் அவித்தை யைப் போற்றுபவனாவான். சத்துவம் அறிவான் மட்டுமே

யாகத் தொழிற்பட்டு எதனையும் காண்பதில்லையாகை யால் வித்தையில் களிப்போனாகிறான்.

வெளி, தன்னை முற்றிலும் அறியாத பரமாணு, அணு, நீர்த்துகள், தன்னை அறியும் திறனற்ற நிலத்துகள் என்பவற்றை உறைவிடங்களாகக் கொள்கின்றது.

சத்துவம், ஊனுடல்களைத் தன்னுடைய உறை விடங் களாகக் கருதிக் கொள்கிறது.

அறிவின் மேம்பாட்டினால் விளைவது 'வேறு' செயலின் மேம்பாட்டினால் விளைவது 'வேறு' என்ற உண்மையை முன்னோர் விளக்கினர். தொன்மை காலத்து தீரர்களிடமிருந்து, ஞானிகளிடமிருந்து இந்த உபதேசம் விளக்கப்பட்டதையே நாம் அறிந்தோம்.

இவ்விரு மார்க்கங்களும் வெவ்வேறு பலனையளிக் கக்கூடியவை; ஆத்ம ஞானத்தினின்றும் வேறுபட்டவை.

வித்தை என்பது முயன்று பெறும் அறிவாகும். கற்றல், கேட்டல், அனுபவம் என்பவை இதற்கு வாயில்க ளாய் அமையும். சத்துவம் தோன்றியது முதல் வித்தையை அறிந்து கொள்வதாகவே உள்ளது. இது உணர்வினை அடிப்படையாகக் கொண்ட அறிவு எனப்படும். இதன் விளைவாக 'நான்' என்ற அகங்காரம் தோன்றும்.

அவித்தை கல்லா அறிவு எனப்படும். அது காண்பத னால் கிடைப்பதாகும்.

காண்பதனால் காணப்படும் பொருளின்மீது பற்று தோன்றும். வெளிக்கு இது தோன்றுவதில்லை. ஆனால் சீவான்மவுக்கு மட்டுமே இது தோன்றுகிறது. இது ஒரே பொருளைத் தொடர்ந்து காண்கின்றது. அதி தெய்வ ஞானமே பற்று காரணமாக அதிபூத ஞானமாக மாறிவிடு கின்றது.

எவன் வித்தை–அறிவு, அவித்தை செயல், இரண் டையும் அறிகின்றானோ அவன், செயலால் மரணத்தை வெல்கின்றான். அறிவினால் அமரநிலை அடைகின் றான்.

அவித்யா கருமமாயினும் பலதேவதைகளின் உபாச னையாயினும் இறைவனுக்கே அர்ப்பணம் எனக்கருதி செய்தால், அவன் தேவதைகளின் கருணையினால் படிப் படியாக உயர்ந்து, முடிவில் முக்தியைப் பெற்று விடுகி றான்.

சத்துவம் உணர்ந்து அறிந்து கொள்ளுகின்றது. சீவன் கண்டு சுவைக்கின்றது. இதனால் நாம் பெறும் அறிவு ஒருமுகமானதாக இருப்பதில்லை. விஞ்ஞானம் அல்லது உள்ளீட்டின் அறிவினையும், பூத ஞானம் அல்லது உருவங்களின் அறிவினையும் நாம் கலந்து விடுகின் றோம் என்று யோகநூல் விளக்குகின்றது.

இதனால் பதி அல்லது ஆன்மஞானத்தைப் பெறாமல் பசு அல்லது பூத ஞானத்தை மட்டும் பெறுகின் றோம்.

சத்துவம் பதிஞானத்தைப் பெற சீவன் அதனைக் காணவேண்டும். இது உருவங்களையே காண்பதனால், நான் என்ற அகங்காரம் பற்றிக்கொள்கின்றது. இதற்கு "எனது" என்ற மமகாரம் சேர்கின்றது.

ஆனால் சீவன் பதியுண்மையைக் கண்ட மாத்தி ரமே, மமகாரம், அகங்காரம் இரண்டும் அறவே அழியும். தனக்கு நிலைபேற்றினை அளிக்கும் வெளியைச் சீவன் காண்கிறான். தானே அவன் என்று அறிகிறான். இதனால் சுருதியறிவும் - வித்தையினால் - சத்துவம் நிலை பேற்றினைத் தனக்கு உரியதாக அறிந்து மகிழும்.

எவன் 'அசம்பூதியை' உடல் வடிவில் வெளிப்படாத உள்ளார்ந்து தோன்றா இயற்கையை - உபாசிக்கிறானோ, அவன் காரிருளில் நுழைகிறான்.

எவன் - சம்பூதியை - அனைத்திற்கும் அப்பாற்பட்ட உருவை உபாசிக்கிறானோ அவன் இன்னும் அதிகமாக இருளில் புகுகின்றவனுக்கு ஒப்பாவான்.

ஐம்பொறிகள் வாயிலாக இன்பநுகர்ச்சியிலேயே சதா உழன்று கொண்டிருப்பவர்கள் அசுரர்கள் ஆவர். புரா

ணங்களில் கூறியுள்ளபடி அசுரர் என்பார் ஒருதனி இனத்தினர் அல்ல. மக்களுள் சிறு நெறி செல்பவரே அசுரர். ஆத்ம ஞானத்துக்குரிய பெருவாழ்வைப் புறக்கணிப்பதால் அன்னவர்கள் அருள் துறைக்குப் புறம்பானவர்கள் ஆகின்றனர். வீணில் பிறந்திருந்து இறந்தவர் ஆகின்றனர் அவர்கள். மறுபிறவிகளில் அவர்கள் மேலும் கீழ்மையுறுவர்.

அந்தக்கரணத்தைத் தன்னுடைய உடலாகக் கொண்டிருப்பதனால் ஆன்மா அதனைப் போற்றுவதாக உள்ளதும் அந்த அமைப்பின் தலைவனாக உள்ள ஜீவான்மா ஊனுடலையே தனது உடலாகப் போற்றுகின்றது. இதனால் ஒருவரேயாகிய இருவரும் வேறு வேறு உடல்களைக் கொண்டுள்ள இருவராக வாழ நேரிடுகிறது.

சார்பு நிலைப் பிரபஞ்சத்தில் அனைத்திற்கும் அப்பாற்பட்ட உருவை உபாசிப்பதால் பெறப்படுவது வேறு. உள்ளார்ந்த தோன்றா இயற்கையை உபாசிப்பதால் விளைவது வேறு என்று விளக்கினர் முன்னோர். தொன்மைகாலத்து தீரர்களே— ஞானிகளே— இதை விளக்க, நாங்கள் கேட்டறிந்தோம்.

பிறந்திருப்பது ஊனுடல் மட்டுமேயாம். அந்தக்கரணம் அல்லது சூக்கும உடல் என்றும் உள்ளது போலவே எல்லா ஊனுடல்களிலும் இருக்கும்.

பிறந்திருக்கும் ஊனுடலைக் கருவியாகக் கொண்டால் அதனைப் போன்ற பிறந்திருப்பதை மட்டுமே அறியலாம். இதனால் நிலையாமையும் துன்பமும் தான் கிடைக்கும்.

பிறவாததாகிய சூக்கும உடலைக் கருவியாகக் கொண்டால் ஆன்மாவினை அறியக் கூடும். இதனால் ஒருமையறிவும் நிலைபெறும். துன்பம் கலவாத இன்பமும் கிடைக்கும்.

இவ்விரண்டையும் எவன் ஒன்றாகக் கூட்டி - அறிகிறானோ அவன் - உள்ளார்ந்த தோன்றா இயற்கையை உபாசிப்பதால் - சாவைத் தாண்டுகிறான் - மரணத்தை

வெல்கிறான். பற்று அனைத்திற்கும் அப்பாற்பட்ட உருவை உபாசிப்பதால் சாகாத் தன்மையை – அமர நிலையை அடைகின்றான்.

சமாதி ரூபமான பிரம்மானுபவம் ஒன்று. சமாதிக்குத் தடையாயுள்ள கோபம் முதலிய கெட்ட குணங்களிலிருந்து விடுபடுதல் மற்றொன்றாகும்.

ஒருமையைப் போற்றுவதே எனினும் வெளி எண்ணிலடங்காத அலைகளின் உருவத்தில் பலவாக உள்ளது.

சத்துவம் எண்ணிக்கையால் ஒன்று மட்டுமேயாம். எனினும் சரீரி அல்லது உடலுடையதாகையால், தன்னையே பலவாகப் படுத்திக்கொண்டு ஒவ்வொரு சரீரத்திலும் அதனதன் உயிராக உள்ளது.

அந்தக்கரணம், காரண உடல், சூக்கும உடல் என்று இரண்டாக உள்ளதல்லவா!

சத்துவம் காரண உடலை உடையாகப் பெற்று அதற்கு வெளியேயிருக்கின்றது. சீவன் சூக்கும உடலின் உடைமைப் பொருளாக அதன் உள்ளேயிருக்கின்றது. இதுவே விடுதலை பெறவேண்டும். பிறவாதிருக்கும் இயல்புடைய சூக்கும உடலின் தலைவன் மட்டுமே இறைவனைக் காணக்கூடும். ஒருமுறை இறைவனைக் கண்டபின், சகச நிலையில் உடல் பிற பொருள்களோடு உறவு கொண்டாலும் அந்த இன்பத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

மெய்யறிவு பெற்றதனைச் சமாதிநிலையினின்றும் வெளிப்பட்டுச் சகசநிலையில் இருக்கும் பொழுது அறிய வைப்பவை இரண்டாகும்.

அவை ஒலி கேட்டல், உடலினால் இன்பம் பிரதிபலிக்கப்படுதல் என்பனவையாம்.

சிவஞான போதமும் திருக்களிற்றுபடியாரும் முன்னதனை மட்டும் குறிப்பிடுகின்றன. ஆனால் வேதம் பின்னதற்குச் சிறப்பளிக்கின்றது.

ஓ! சூரியனே! ஒளிமயமான இறைவனே! தங்க மயம மான வட்டிலால் உண்மையின் வதனம் மறைக்கப்பட்டுள் ளது. அச்சத்தியத்தை நாடும் - தொழுது வந்திருக்கும் நான் அதனை நன்றாய்க் காணும் வண்ணம் அம்மறைப்பை-திரையை விலக்கியருள்வீராக!

ஆத்ம சாதகன் சத்வ குணத்தில் நிலை பெற்றிருக் கும் பொழுது சகுணபிரமத்தின் காட்சி கிட்டுகிறது. நாத பிரம்மம் என்பதும் சகுண பிரம்மமேயாகும். அந்த கல்யாண குணங்களுடன் சகுண பிரம்மம் பிரகாசிக்கிறது. அப்பொழுது எல்லாம் உருக்கியெடுத்த பொன் மயமாய்ப் பிரகாசிக்கிறது.

அதையும் தாண்டி நிர்விகிற்ப சமாதியில் நிர்க்குண பிரம்மத்தை சாதகன் எட்டவேண்டும். அதுவே சிதம்பர ரகசியமாகும்.

சகுண பிரம்மத்தின் அருளால் நிர்க்குணபிரம்மம் அடையப்பெறுகிறது. காண்போன் காணப்படு பொருள், காணுதல் என்றும் திரிபுடியற்ற நிலை அது. அது விளக்க முடியாத இரகசியமாகும்.

பகலவன் ஒளி - பிரகாசம் - தன்னுள் உறையும் எவ னையும் எந்த பரம புருஷனையும் - காணவொட்டாது மறைப்பது போல் ஜீவனுடைய அறிவை உலகப் பகட்டு, உலக ஆசை மறைக்கிறது.

ஊனுடலையும் அதன் வாயிலாக உலகத்தையும், காணும் ஜீவன் அவற்றைத் துறந்து இறைவனைக் காணும் விருப்ப முடையவனாய் அவனைத் தனக்குக் காட்சியளிக் குமாறு இதனால் வேண்டிக் கொள்ளுகின்றான்.

ஓ!ஆதவா! இவ்வுலகை உயிர்ப்பித்துக்காப்பவனே! விண்ணில் தனியாக சஞ்சரிப்பவனே! அனைத்தையும் அடக்கிக்கட்டுப்படுத்துபவனே! பிரமபுத்திரனே! உன் ஒளி பொருந்திய பேரழகுத்திருவுருவை நான் கண்டுகளிக் கும் வண்ணம். கண்களைக் குருடாக்கும் உன்

கிரணங்களைச் சற்று சுருக்கி உன் ஒளியை உள்ளுக்கு வாங்கிக் கொள். உன்னுடைய மேன்மையான திருவுருவம் எதுவோ அதை நான் காணும்படி அருள் செய்.

"ஒளியே, ஒளியின் உணர்வே
உணர்வின் உவகை பொங்கும்
களியே, களிக்கும் கருத்தே
கருத்தைக் கவளம் கொண்ட
வெளியே, வெளியின் விளைசுகமே!"

என்று தாயுமானாரும் செப்பியுள்ளாரே!

உன் சூரிய மண்டலத்தில் உறையும் புருஷன் எவனோ, அவனே நான்.

மிகுந்த தொலை தூரத்தில் ஆதவனில் உறையா நின்ற அப்பரம்பொருள் தனது அகத்தின் அடியாழத்தில் உறைந்துள்ள இந்த ஆத்மாவே ஆகும் என்பது இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. எவன் ஜீவனுக்குள் உறைகின்றானோ அவனும், ஆதவனில் உறைகின்றவனும் ஒருவனே! அவன் சித்தமறியாதபடி நின்றிலங்கும் திவ்விய தேஜோமயனாவான்.

வெளி நாமம், வளிரூபம் எனப்படுகின்றன. எனவே இறைவன் ரூபியாகவும் சத்துவம் அவனுடைய ரூபியாக வும் இருந்து பரமான்மாவாகத் தொழிற்படுகின்றன. அலையாக உள்ள இறைவனை அவனுடைய ரூபம் அலை வடிவில் சுற்றி வரும் சீவனாகத் தோற்றுவிக்கின்றது. சீவன்களும் அலைகளைப் போல் பலராவர்.

வெளிபொருளும், சீவன் அதனுடைய பிரதிரூபமும் ஆகும். சாத்துவிகம் கண்ணாடியாக இருந்து தன்னுள் பிரதி ரூபத்தைத் தோற்றுவிக்கின்றது. இறைவன் தன்னுடைய பிரதிரூபத்தைப் பார்க்கும் பொழுது, அது அவனைக் காண்கின்றது; தன்னை அவனாக அறிகின்றது.

இவ்வுயிர் இம்மூச்சுக்காற்று - அமரநிலையுடன் அழிவில்லாது எங்கும் நிறைந்துள்ள பேருயிரை அடையட்டும். அதன் பிறகு இந்த உடல் சாம்பலாகப் போகட்டும். ஓம்

கார ரூபியாகவும் அக்னிரூபமாகவும் சங்கல்ப ரூபியாக வும் உள்ள இறைவனே – பகவானே! என்னை நினைவு கொள். என்னால் செய்யப்பட்ட முயற்சிகளனைத்தையும் நினைவுகொள். ஓ! பகவானே! என்னை நினைப்பீர், என்னால் செய்யப்பட்டதை நினைப்பீர்.

மும்மையால் முழுமை பெறும் ஒருமையைக் காட்சிய ளவையால் அறிந்து கொள்ள ஊனுடல் சீ வனுக்குப் பயன் படுகின்றது. அதன் பின்னர் அது தூசுகளாகும்படி எரிக்கப்படுகின்றது. இடையறாது தொழிற்பட்டமையால் பிராணன் ஜீவனுடைய நிலையை எய்தித்தான் ஆகாயமா கத் தன்னை உயர்த்திக் கொண்டதனை அறிகின்றது. தூசு களைத் திரட்டி ஒன்றாக்குகிறது; அதன் செயலால் தோன்றிய புதுமையாகும். ஊனுடலையும் அவ்வாறு படைத்துக் கொள்கின்றது. பயன் பெற்றபின் ஊனுடலைத் தூசுகளாகிவிடும் வண்ணம் துறந்து விடுகின்றது.

உயிரற்றவைகளுக்கு இதனால் நஷ்டமொன்று மில்லை.

ஓ, அக்கினியே!எங்கள் நற்கருமங்களால் உண்டான செல்வத்தை அனுபவிப்பதற்கு, நல்ல பாதையின் மூலம் இறுதிப்பேரின்பத்திற்கு எங்களை அழைத்துச் செல்வீர்! வஞ்சகமாக மறைந்திருந்து எங்களைக் கெடுக்கும் பாவத் தின்று எங்களை விடுவியும். அந்தப் பாவங்களை நாசம் செய்வீர். எங்களது எண்ணிலா வணக்கங்களையும் பிரார்த்தனைகளையும் தங்களுக்கே அர்ப்பணித்து பூஜிக் கிறோம் என்ற மந்தரத்துடன் முற்றுப் பெறுகின்றது.

இக்கடைசி இரண்டு மந்தரங்களும் தகன காரியம் சம யத்தில் ஓதப்படவேண்டியவை, ஓதப்பட்டும் வருகின்றன.

சமித்து முதலியவைகளைப் பரிசுத்தப்படுத்தி அக்னி யில் அர்ப்பணம் செய்வது போல ஜீவனை யதார்த்த ஞானத்தால் பரிசுத்தம் செய்து பிரம்மத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மற்ற உபாயம் அனைத்தின்று விடுபட்ட ஜீவனைப் பிரமத்தினிடம் ஒப்படைத்து விடவேண்டியது. இதுவே ஞானமும் யோகமுமாகும்.

'நம'என்று உபாசித்தாலே போதுமே; காமங்கள் அப்படி உபாசிப்பவனை வணங்கி நிற்கும்.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்துள்ள ஈசனை உணர்ந்து கொள்ள வேண்டும். பற்றுகளை அறவே துறந்து, அனைத்தையும் ஈஸ்வரனுக்கு அர்ப்பண மாக செய்து வரவேண்டும். அதுவே சிறந்த வாழ்க்கையா கும்.

"அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொளி நிறைந்தது எது?
தன் அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்......"

என்று தாயுமானாரும் பாடியுள்ளாரே!

அதை மறந்து வாழ்வோர், தங்கள் ஆத்மாவையே கொன்றவர்களாவார்கள். அவர்களது வாழ்க்கை நரகத் திற்கே ஒப்பாகும்.

அந்த ஆத்ம ஸ்வரூபம் மனதிற்கு எட்டாதது; இந்திரி யங்களுக்கும் எட்டாதது ஆகும். அதைக் கொண்டுதான்,

"எங்கும் நிறைந்திருப் போன்
எட்டியும் எட்டாதிருப் போன்...."

என்று சொல்லிப் போந்தனர் பெரியோர்.

அனைத்தையும் ஆத்மாவிலும், ஆத்மாவை அனைத் திலும் காண்பவனுக்கு எப்படி வேற்றுமை தோன்றும்? எதை வெறுப்பான்? அவனுக்குத் துன்பமும் கிடையாது ! மயக்கமும் கிடையாது.

ஆத்ம ஞானம் இல்லாத உபாசனையாகட்டும், கரும மாகட்டும் முக்திக்கு அழைத்துச் செல்லவே செல்லாது. அதற்கு மாறாக அது சம்சார இருளில் அழுத்தும். எனினும்,

அவைகளை ஞானத்துடன் தக்கமுறையில் அனுஷ்டித்து வந்தால் நிச்சயம் அவனைப் படிப்படியாக கைதூக்கிவிடும்.

இவ்வுடல் உயிரற்று கீழே விழுவதற்குமுன்னர், அது முடிவில் ஒருபிடி சாம்பலாவதெனத் தெரிந்து அதில் உள்ள பற்றை ஒழித்தாக வேண்டும். ஓங்கார உள்ளொளி யாய் விளங்கா நிற்கும் மாபெரும் ஜோதியைப் பணிந்து போற்ற வேண்டும். அதனிடம் ஆத்ம சமர்ப்பணம் செய்தல் வேண்டும். உய்வதற்கு இதுவே வழியாகும்.

ஆழ்வார் பார்த்தார். இறுதிக் காலத்தில் 'அவன் நினைவு வருமோ, வராதோ என்று அஞ்சினார். அதைக் கொண்டுதான்–

"எய்ப்பு என்னை வந்து நலியும் போது அங்கு
ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன்.
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்.
அரங்கத் தரவணைப் பள்ளியானே!"

என்று பாடிப்போந்தார்.

ஓம்!முவ்வகையிலும் சாந்திநிலவுக!

இவ்வுடல் கீழே விழுந்த தருணத்தில் இறைவன் நினைவு வரவேண்டும். அதற்கு பூர்வாங்கப் பயிற்சி வேண்டும்.

அன்றாட வாழ்க்கையிலேயே அவன் நினைவைக் கொண்டிருக்கவேண்டும். அப்பொழுதுதான் இறுதி எண் ணமும் "அவன்" மேல் பாயும்.

இந்த இடத்தில் அஜாமிளன் கதையை நினைவு கொள்ளலாம். அவன் வாழ்க்கையில் கடவுளையே மறந்த வன். மிக்க துர்க்குணம் நிறைந்தவன். இறுதிநாளில் அவனை அழைத்துப் போக யமதூதர் வந்தனர். அவ்வே ளையில் தன்மகனை 'நாராயணா' என்று அழைத்துவிட் டான் அஜாமிளன். அதனால், அதன் பிறகு அந்த யம தூதர்களுக்கு அங்கு இடமில்லாமற்போய்விட்டது.

"முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னு
மிந்தப்
படி சாந்த ஊழ்வை நினைப்பதல்லால் பொன்னின்
அம்பலவர்
அடி சார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறிவாரில்லையே!"

என்று மக்கள் பொருட்டு இரங்குகின்ற அன்னையின் உள்ளம் போன்றே பட்டணத்தடிகள் இரங்குகின்றாரே!.

ஓம்! அது பூர்ணம். இதுவும் பூர்ணம். பூர்ணத்திலிருந்து பூர்ணம் தோன்றுகிறது. பூர்ணத்திலிருந்து பூர்ணத்தையெடுத்தும் பூரணமே எஞ்சி நிற்கின்றது.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

முவ்வகையிலும் – ஆன்மீக நிலையிலும் (ஆத்யாத்மிகம்) பிரபஞ்ச ஈடுபாட்டு நிலையிலும் (ஆதி பௌதிகம்) இறைநிலைகள் தொடர்பிலும் (ஆதிதெய்விகம்) ஆக இம் மூன்று நிலைகளில் எனக்கு சாந்தி நிலவுவதாகுக!

இதைக்கொண்டே இறுதியில் 'ஓம்! சாந்தி! சாந்தி' சாந்தி என்று மூன்று முறை சொல்லப்படுகிறது.

# கடோபநிஷதம்

கிருஷ்ண யஜுர்வேதத்தின் உட்பிரிவான கடசாகையைச் சேர்ந்தது இது. அதனால் இதற்கு கடோபநிஷத் என்று பெயர் வந்தது. இதையே கடகோபநிஷத்து என்று சொல்லுவதும் உண்டு.

அதர்வணவேதத்திலும் இவ்வுபநிஷத்து சேர்க்கப் பட்டிருக்கிறது. இதற்கு ஆதிசங்கரர் விரிவாக பாஷ்யம் எழுதியுள்ளார்.

இதில் ஆறு வல்லிகள் உள்ளன.

இதில் கரமகதி, புனர்ஜன்மம் யோகி சரீரத்தை விட வேண்டிய கிரமம் முதலியவை விளக்கப்படுகின்றன.

இது நசிகேதன் யமன் இவ்விருவரின் சம்வாதமாக அமைந்தது. ஒருவருக்கும் உபயோகமற்ற பொருளைப் பிறருக்குத் தானம் செய்வது கூடாது. இவ்விதமிருக்க யாகத்தில் பிரயோஜனமில்லாத கிழப்பசுக்களைத் தானம் செய்த தகப்பனுக்கு நல்ல லோகம் கிடைக்காது என்று பயந்து பயன்படக்கூடிய என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள் எனக் கேட்ட நசிகேதனின் கருத்தை அறியாமல் தகப்பன் கோபத்தால் உன்னை யமனுக்குக் கொடுத்தேன் எனக் கூற சத்தியத்தைக் காப்பாற்ற யமலோகமடைந்து நசிகேதன் யமனிடம் மூன்று வரம் பெற்ற கதை இதில் கூறப்படுகிறது.

ஆஸ்திக்யம் சத்தியம் நல்லொழுக்கம் அதிதி பூஜை பித்ருபக்தி முதலியவைகள் மிகவும் முக்கியமானவை.

உபாசனம் கர்ம இவைகளைச் சேர்த்து அனுஷ்டானம் செய்தால் பிரம்மலோகத்தை அடையலாம். மோட்ச

மும் அதன் ஸ்தானமும் சிரேயஸ், காமமும் அதன் சாதன மும் பிரேயஸ். சிரேயஸ் பிரேயஸ் இவ்விரண்டிலும் சிரேயஸே உயர்ந்தது. அவித்யைச் சேர்ந்தது. பிரேயஸ். வித்யைச் சேர்ந்தது சிரேயஸ். அவித்யையை விலக்கி வித்யையை அடைவதே மேலானது.

பரலோகமே கிடையாது என்று கூறும் நாஸ்திகன் யமலோகத்தை அடிக்கடி அடைந்து பிறப்பு இறப்பு என்றும் பெரும் துக்கத்தை அடைந்து கஷ்டப்படுவான்.

மிகவும் அநுபவம் வாய்ந்த குருவே உபதேசிக்கத் தக்கவர். தர்க்கம் முதலான யுத்திகளால் ஆத்ம ஞானத்தை அடையவும் முடியாது. விலக்கவும் முடியாது.

ஆத்மஸ்வரூபம் புண்யபாப சம்பந்தமற்றது. ஜனன மரண சம்பந்தமுற்றது. காலங்களையும் கடந்தது. சகல வேதங்களும் ஆத்ம ஸ்வரூபத்தையே அறிவுறுத்துகின்றன.

பிரம்மசர்யம் கர்மங்கள் தபஸ் முதலிய சாதனங்கள் ஆத்ம ஸ்வரூபத்தை அறிவதன் பொருட்டே உள்ளன. பிரணவத்தின் உபாசனத்தால் ஆத்ம ஞானத்தை அடையலாம்.

உலகத்தையும் அதை சம்ஹாரம் செய்யும் காலனை யும் சம்ஹரிக்கும் ஈசானன் என்று பெயருள்ள சிவனுடைய உபாசனம் சிவானுக்ரஹம் இவற்றால்தான் சிவஸ்வரூப மான ஆத்ம ஞானத்தை அடையலாம்.

ஈஸ்வரன் ஜீவனுக்கு நண்பனாக அவன் செய்யும் கர்மம், அநுபவம் இவைகளுக்கு சாட்சியாய் இருதயத்தில் வீற்றிருக்கிறான்.

சரீரமாகிய ரதத்தில் ஏறிய ஜீவனாகிய தலைவன், மனதாகிய கடிவாளத்தால் இந்திரியங்களாகிய குதிரை களை அடக்கி நல்வழியில் செலுத்தி சம்ஹாரமாகிய இரு ளுக்கு அப்பாலுள்ள சிவஸாயுஜ்யமாகிய பரமபதத்தை அடையவேண்டும். விபரீதமாகச் செலுத்தி சம்ஹார பந்தத் தில் போகக்கூடாது.

பிண்டமாகிய சரீரத்திலுள்ள ஆத்மாவே அண்டத்தில் உள்ளது. அண்டத்திலுள்ளதே பிண்டத்திலுள்ளது. எங்கும் ஒரே ஆத்மா வசிக்கிறார். எங்கும் நிரம்பியுள்ளார். பேதத்தைப் பார்ப்பவன் மிருத்யுவை அடைகிறான். சரீரமாகிய புரத்தில் வசிக்கும் பிரம்மத்தை யோக பலத்தால் அறியவேண்டும்.

சரீரத்தில் மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாய் விளங்கும் ஆத்ம ஸ்வரூபமே பரபிரம்மமாம். அதை அறிந்தால் மோட்சம். அதை அறியாமலிருந்தால் கர்மங்களுக்கு தக்கவாறு நரகம் ஸ்வர்க்கம் முதலிய பந்தங்களை அடைவர்.

சம்சாரமாகிய விருட்சத்திற்கு மூலமான பிரம்மத்தை அறிந்து விருட்சத்தைப் பிளக்க வேண்டும்.

வஜ்ஜிரம் போன்று எவரைக்கண்டு பயந்து ஜகத் அசைகிறதோ, சூரியன் அக்கினி முதலியோர் தத்தம் காரியங்களைச் செய்கின்றரோ அந்த சிவ பெருமானே பிரும்மம். அவரை யோக பலத்தால் இந்த ஊரிலேயே அறிந்து முக்தி பெற வேண்டும்.

அல்லது அவரை உபாசித்து அர்ச்சிராதி மார்க்கத்தால் பிரம்மலோகம் சென்று அங்கும் முக்திபெறலாம். அதுவும் காரணமான மாயையில் அடங்கியதே!

காரண சரீராபிமானியான வியஷ்டி பிராக்ஞனும் சமஷ்டி மாயாபிமானியான அவ்யாகிருதன் என்கிற ஈஸ்வரனும் ஒன்று.

அது மகாரப் பொருளானபடியால் மகார ஸ்வரூபம், பிரணவத்தின் மாத்திரை மூன்றும் அதன் பொருளான விசுவ, தைஜஸ, பிராக்ஞர்களான வியஷ்டி, விராட் ஹிரண்யகர்ப அவ்யாகிருதர்ளென்னும் சமஷ்டி.

இவர்கள் நான்காவதாய் உபாதியற்ற சுத்தமான ஆத்ம ஸ்வரூபத்தில் கல்பிக்கப்பட்டவர்களானபடியால் நான்காவதாக விளங்கும் அந்த சுத்த ஆத்மஸ்வரூபம்,

ஞானத்தால் மூன்று அவஸ்தைகளும், உபாதியால் ஏற்பட்ட அதன் அபிமானிகளான் வியஷ்டி சமஷ்டி புருஷர்களும், ஸ்தூல சூட்சுமகாரண பிரபஞ்சங்களும், இவ்வாறாகிய அக் ஞானத்தில் கல்பிக்கப்பட்ட இரண்டாவதான வஸ்துக் களெல்லாம் பாதிக்கப்பட்டு விட்டபடியால் சாந்தமான சிவமென்றுரைக்கப்படும் மங்களமான இரண்டாவது பொருளற்ற ஒரே பொருளான பரமஸ்வரூபமே எஞ்சிய முக்திஸ்வரூபம்.

இவ்விதம் ஓங்காரத் தியானத்தின் மகிமையால் சுத்த மான ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்து கைவல்யத்தைப் பெறலாம்.

ஓம்! குரு சிஷ்யர்களாகிய எங்கள் இருவரையும் பிரம் மம், சேர்த்து இரட்சிக்கட்டும். இருவரும் சேர்ந்து மிகுந்த பலத்துடன் உழைப்போம். எங்கள் விசாரணை -அத்தியய னம் -பிரகாசத்துடன் அமையட்டும். ஒருவர்க்கொருவர் நாங்கள் இருவரும்-பகைத்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

## 1

அன்னதானத்தில் கீர்த்தியடைந்தவனான வாஜசிர வஸ், விசுவஜத் என்னும் யாகத்தில் தம் உடைமைகளை யெல்லாம் தானம் செய்தான். அதை அனைவரும் அறிவர். அவனுக்கு நசிகேதன் என்ற மகன் இருந்தான்.

தான் சொர்க்கம் அடையவேண்டும் என்ற ஆசையின் உந்துதலால்தான் அந்த அரசன் அவ்வாறு தானம் செய்து–யாகம் செய்தான்.

தானம் செய்வதற்காக. தட்சணை கொண்டுவரப்பட் டபோது நசிகேதன் கூர்ந்து பார்த்தான். அப்பொழுது அச் சிறுவனுடைய சிந்தனையில் சிலிர்ப்பு ஏற்பட்டது. உடனே அவன் சிந்திக்கலானான்.

நசிகேதன் சிறுவனாயிருந்தாலும் மிகுந்த புத்தி சாலி. அவனுக்கு "மெய்யுணர்வு" விளக்கமாயிருந்தது– அங்கு நடந்ததை சிரத்தையுடன் கவனித்து இவ்விதமாக நினைத்தான்.

நீர் அருந்தக்கூட முடியாத, புல்லும் தின்ன முடியாத அளவுக்கு வந்து, பால் கறக்க இயலாத சக்தியற்ற இக்கிழப் பசுக்களை தானமாகக் கொடுத்தால் உண்மையில் ஆனந்த மில்லாத துன்பம் நிறைந்த உலகையல்லவா அடைவான்"

எவ்வளவு சரியாக எண்ணியிருக்கிறான் அச்சிறு வன்!

பிறகு அங்கிருந்த தன் அப்பாவைப் பார்த்து அப்பா! என்னை யாருக்குத் தானம் கொடுக்கப் போகிறீர்கள்? என்றான். அப்பா கவனிக்காமலிருப்பதைப்பார்த்து மறு முறையும் அதே கேள்வியைக் கேட்டான். மூன்றாம் முறையும் அதையே கேட்கும் பொழுது, அப்பாவுக்கு கோபம் வந்து விட்டது "உன்னை யமனுக்குக் கொடுக்கி றேன்" என்றார்.

மகன் முதல் தடவை அப்படிக் கேட்டபொழுதே அப் பாவின் காதில் கேட்கத்தான் செய்தது. என்ன பையன் இப்படிக் கேட்கிறானே!' என்று சங்கடப்பட்டான். "என்ன பதில் சொல்வது இவனுக்கு?'' என்று அவன் எண்ணிக் கொண்டிருந்த பொழுது, நசிகேதன் அடுத்தடுத்து அதையே கேட்டுவிட்டான். சரியான பதில் சொல்லத் தோன்றாமற்போகவே கோபம் வந்து விட்டது. உடனே வாயில் வந்த பதிலைச் சொன்னான் வாஜசிரவஸ். ஆனால் நசிகேதன் என்னவோ நல்ல எண்ணத்துடனே தான் கேட்டான்! இம்மாதிரியான தானத்தால் ஏற்படப் போகும் குற்றம், அப்பாவுக்கு பிரியமான தன்னைத் தானம் செய்தால் நீங்குமே என்று கருணையுடன் எண்ணியே அவ்விதம் கேட்டான்.

இங்குள்ளவர்களுள் நான் முதலிற் செல்வேன்.இன்றேல் பலருக்கு மத்தியில் நான் போகிறேன். யமனுக்கு என்னால் ஆகவேண்டியது என்ன இருக்கிறது? அப்பா, என்னால் எதை யமனுக்கு செய்யக் கூடும்.'' என்று சிந்தித்தான் நசிகேதன்.

'யமனிடம் நான் தனியாகவா போகிறேன்? எனக்கு முன் எத்தனையோ பேர்கள் அவனிடம் சேர்ந்திருக்கிறார் கள். எனக்குப் பிறகும் எத்தனையோ பேர்கள் அவனிடம் போகப் போகிறார்கள். என்னை யமன் என்ன செய்து விடப்போகிறான்.. என்றே எண்ணினான் அச்சிறுவன்.

முன்னோர்கள் எவ்வண்ணம் இருந்தனர் என்பதை கவனித்துப்பார்த்து அவ்வண்ணமே மற்றையோரும்இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்து நாமும் அப்படி நடந்து கொள்ளவேண்டும் மனிதன், ஏதோ பூண்டுபோல் அழி கின்றான். மீண்டும் அதே பூண்டுபோல் உண்டாகின்றான்.

கடந்த காலத்தில் மனிதர் எவ்வாறு மாண்டு போனார்கள் என்பதையும் இனிமேல் அவர்கள் எப்படி மரிப்பார்கள் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும். நமக்கு முன் வாழ்ந்தவர்கள் எங்கே? நமக்குப்பின் வருபவர் களின் கதிதான் என்ன? அழியும் தன்மையையுடைய மனிதன் நெற்பயிர்போல் வளர்ந்து முதிர்ந்து அறுபடுகி றான், மீண்டும் முளைக்கின்றான்.

யமாலயம் போய் சேர்ந்தான் நசிகேதன். அப்பா பிரியமனமில்லாமல் உத்தரவு கொடுத்து அனுப்பினார். என்ன செய்வது? யாகத்தில் சொன்ன சொல்லை நடத்தித் தீரவேண்டுமே! அப்போது யமன் அங்கு இல்லை. அதனால் யமன் வரும்வரை மூன்று நாட்கள் நசிகேதன் வாயில் தண்ணீர்கூட படாமல் பட்டினியாகவே காத்திருந் தான்.

ஓ! மரணதேவனே!அதிதியாகிய அந்தணன் அக் னியின் அம்சமாக உன் இல்லத்தில் நுழைகிறான். அவ

னுக்கு சாதுக்கள் இந்த சாந்தியை செய்கிறார்கள். வைவஸ்தரே! முதலில் அர்க்கிய பாத்திய வடிவான தண்ணீரைக் கொண்டுவந்து படையுங்கள் என்றனர் அங்குள்ளோர்.

அக்னியே அப்படி மானிட வடிவத்தில் வந்துள்ளான். அந்த தேவனை நீ மரியாதை செய்து வரவேற்பாயாக என்றனர்.

எந்த அறிவீனனானவன் வீட்டில் ஓர் அந்தணன் பட்டினியாய் சாப்பாடின்றி தங்குகிறானோ, அவனுடைய ஆசைகளையும், நல்லோரிணக்கத்தையும் தேவபூஜையையும், மனித சேவையும், மற்றும் அவனுடைய மக்களும் பசுக்களும் அக்னிவடிவமாகிய அவன் பொசுக்கச் செய்கிறான்.

அந்தணனுக்கு விருந்தோம்பல் செய்யாதவன், எத்தனை அறிவில்லாதவன்! அவனது எதிர்கால நம்பிக்கைகளையும் இறந்த கால தகுதிகளையும், நிகழ்கால உடைமைகளையும் அவன் இழந்து விடுகிறான். அவனுடைய மக்களுடன் அனைத்தையுமே இழந்து விடுகிறானே!

'அந்தணனே' வந்திக்கத்தக்க அதிதியாய் நீ இங்கு மூன்று இரவுகள் பட்டினியாக இருந்து விட்டதால், அக்குற்றத்தைப் போக்க உன்னை நமஸ்கரிக்கின்றேன். எனக்கு நன்மை உண்டாக வேண்டும். அதற்காக நீ என்னிடம் மூன்று வரங்கள் – தனித்தனியாகக் கேட்டுக்கொள்' எனக் கூறினான் யமன்.

"அதிதியாய் வந்த நீ சரியாக வந்தனை செய்யப்படாமல் என் இல்லத்தில் மூன்று நாட்கள் பட்டினியாய் – காத்திருந்தாயாதலால், நான் அபராதம் செய்தவனானேன் என்று வருத்தம் தெரிவித்து அதற்குப் பரிகாரமாக நீவிரும்பும் மூன்று வரங்களை இப்பொழுதே கேள் தருகிறேன்" என்று நசிகேதனை உற்சாகப்படுத்தினான் யமன்.

"யமதர்மராஜனே! என் தகப்பனார் என்னைக் குறித்து சாந்தமுடையவராகவும், கலக்கமற்றவராகவும், கோபமில்லாதவராகவும் இருக்கட்டும். உன்னால் விடப்

பட்டு - உன்னிடமிருந்து திரும்பி செல்லும் என்னை, அவர் அன்புடன் ஏற்று ஆசீர்வதிக்கட்டும். இதையே என் முதல் வரமாகக் கோருகின்றேன்.

சாவித்திரி, யமனிடம் கேட்ட வரம் போலல்லவா உள்ளது இது!

யமனே! என் தகப்பனார் என்மேலே கொண்டுள்ள கோபமெல்லாம் தணிந்து சாந்தியடையட்டும். அப்பொழுதுதானே நான் உன்னிடமிருந்து விடுபட்டு திரும்பிச் செல்லும் பொழுது என்னை அன்புடனும் பிரீதியுடன் வரவேற்பார். அதனால்தான் இதை அம் மூன்று வரங்களுள் முதன்மையாகக் கேட்கிறேன் என்று நசிகேதன் வணக்கத்துடன் தெரிவித்தான்.

நான் அளிக்கும் வரத்தால் உன் தகப்பனார் முன் போலவே உன்னிடம் பிரீதியுடனிருப்பார். மரணத்தினின்று விடுபட்ட உன்னை, ஆவலுடன் பார்த்து அன்புடன் வரவேற்பார். இரவு நேரங்களில் சிறிதும் கோபமில்லாமல் தூங்குவார்.

நசிகேதன் இப்படி யமனிடமிருந்து விடுபட்டு வந்து விட்டான் என்று அறிந்ததும் அப்பாவிற்கு எவ்வளவு சந்தோஷமிருக்கும்! அவர் கொண்டிருந்த கோபமெல்லாம் பறந்தே போய் விடாதா! மகனையும் அன்புடனும் ஆசையுடன் வரவேற்பார். பிறகு அவர் அன்றிரவு நிம்மதியுடன் தூங்கக் கேட்பானேன்!

சுவர்க்கலோகத்தில் சிறிதும் அச்சமேயில்லை, அங்கு நீர் இல்லையல்லவா! அங்கு வயோதிகத்தால் பயமே கிடையாது. சுவர்க்கலோகத்தையடைந்தவன் பசி தாகம் இன்றி துன்பமற்றவனாய் ,இன்புறுகிறான்.

விண்ணாட்டில் அச்சம் ஏது? அங்கு முதுமையும் கிடையாது; இறப்பும் கிடையாது. எமனுக்குத்தான் அங்கு இடமே இல்லயே. அதனால் அங்குள்ள நல்லோர்கள் பசி, தாகம், துன்பம் இவற்றையெல்லாம் கடந்து எப்பொழுதும் இன்பத்தையே அனுபவிக்கிறார்கள்.

யமதர்மராஜனே! அவர்களை சுவர்க்கத்திற்கு வழி நடத்திச்செல்லும் அந்த அக்னி வித்தையை நீ அறிவாய். சிரத்தையுடன் இருக்கும் எனக்கு அதை உபதேசித்தருள வேண்டும். சுவர்க்கத்தில் இருப்பவர்கள் அடையும் தெய்வீக நிலையை - அதைப் பற்றிய ஞானத்தை - நான் என்னுடைய இரண்டாவது வரத்தால் கோருகின்றேன்.

விண்ணுலத்திலுள்ளோர் அமர நிலை எய்தியவராவார்கள். புனிதமான வேள்வித்தீயே அவர்களை அங்கு வழி நடத்திச் சென்றுள்ளது. அது மரணதேவனுக்குத் தெரியாமல் எப்படி நடக்கும்! நசிகேதன் அதை நன்றாக அறிவான். அதனால் அதை விளக்கிச்சொல்லும் படி யமனைக் கேட்கின்றான் நசிகேதன். இதை என்னுடைய இரண்டாவது வரமாக வைத்துக் கொள்ளுங்களேன்" என்கிறான்.

நசிகேதா! சுவர்க்க சம்பந்தமான அந்த அக்னி வித்தையை நான் நன்கு அறிவேன். அதை உனக்குச் சொல்கின்றேன். நீ அதை நன்றாய்த் தெரிந்து கொள். சுவர்க்கலோகத்துக்கு அழைத்துச் செல்லும் சாதனமாயுள்ள இது, உலகனைத்தும் நிலைபெறும் இடமாகவும், புத்தியில் வைக்கப் பட்டுள்ளதாகவும் நீ தெரிந்து கொள்.

"அவ்வித்தையை - அப்புனிதப்பாதையை - நான் நன்கு அறிவேன். முடிவில்லா உலகங்களே - விண்ணாட்டை - எய்துதற்கு வழியாய் விளங்கியும் அவற்றிற்கு அடித்தளமாயுள்ளதுமான அவ்வேள்வித் தீ ஒவ்வொருவருடைய இதயத்தின் புனித இடத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ளது" என்கிறான் யமதர்மராஜன்

நம் உடலிலுள்ள கோஷ்டாக்கினி, சாப்பிட்டதைச் சமைக்கிறது. தர்சனாக்கினி உருவங்களைக் காண்கின்றது. ஞானக்கினியோ "இது நல்லது, கெட்டது" என்று கர்மங்களை அறிகிறது. இவைகளின் இடம் மூன்றாகும். வயிற்றில் கோஷ்டாக்கினி, முகத்தில் தர்சனாக்கினி, இதருதயத்தில் ஞானக்கினி. ஆத்மா இந்த யக்ஞத்தை -

வேள்வியை – செய்பவனாவான். வெளியில் நிகழும் வேள்வி உள்ளே நிகழும் வேள்வியின் பிரதிபிம்பமேயாகும்.

சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் அவ்வக்னி வித்தையையும், அந்த வேள்விக் குண்டம் அமைப்பதற்கு உபயோகிக்கும் கற்கள் எவ்வகையானவை, என்ன கணக்குடையவை, எப்படி பயன்படுபவை என்பது போன்ற அனைத்தையும் அவனுக்குக் கூறினார். அவனும் அதை அவர் கூறியபடியே திருப்பிச் சொன்னான். அது கேட்டு மகிழ்ச்சியடைந்த யமன் மீண்டும் கூறத் தொடங்கினான்.

இங்கு அந்த வேள்விக் குண்டத்தைப் பற்றியெல்லாம் விரிவாக விளக்குகிறான் யமன். 360 நாட்களுடன் கால ரூபியாயிருக்கும் விஷ்ணுவின் அம்சம். உலகுக்கெல்லாம் அவனே காரணம், அவனையறிந்தே ஒருவன் விடுபடுகிறான் என்று விளக்கி, அதன் கணக்காக 360 கற்கள் பயன்படுத்த வேண்டும் என்றெல்லாம் சொல்கிறான் யமன்.

உலகங்களின் தோற்றம் – அதாவது உலகப்படைப்பைப் பற்றியும், –அவ்வேள்விக்குண்டம் எத்தனை கற்களால் அமைக்க வேண்டும், எப்படி அமைக்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் நசிகேதன் நன்றாய் தெரிந்து கொள்கிறான். அதனால் மகிழ்ச்சியடைந்த யமன் மேலும் சொல்லத் தொடங்குகிறான்.

மகிழ்ச்சியுடைய மகாத்மாவாகிய யமன் இப்போது மீண்டும் ஒரு வரத்தை உனக்கு அளிக்கின்றேன். உன் பெயராலேயே இவ்வக்னி வித்தை இவ்வுலகெங்கும் பிரசித்தமடைய்ட்டும். இந்தா இந்த பல வண்ணமுள்ள இரத்தின மாலையை பெற்றுக்கொள்" என்று அளிக்கின்றான்.

ஆனால், மனதைக்கவரும் – கர்ம மார்க்கத்தைக் குறிக்கும் அந்த மாலையை நசிகேதன் ஏற்றுக் கொள்ளவில்லை. சாதாரண சிறுவனா அவன்! அறிவாளியாயிற்றே!

இந்த நசிகேத வேள்வியை மூன்று தடவை அனுஷ்டித்தவன், அம்மூன்றுடன் தொடர்புடையவனாகி, யக்ஞம், அத்தியயனம், தானம் ஆகிய மூன்று கர்மங்களைச் செய்கிறவன் பிறப்பு இறப்புகளைத் தாண்டுகிறான். ஹிரண்ய கர்ப்பனிடம் தோன்றியவனும், அனைத்தையும் அறிந்தவனுமான அக்னிதேவனை அறிந்து ஆத்மாவாக உணர்ந்து, அளவுகடந்த அமைதியை எய்துகிறான்.

இவ்வேள்வியை மும்முறை செய்வதால், அவன் அக்னிதேவனின் மேன்மையை உணருகிறான். அதனால் அறிவின் வாயிலாகவும், வழிபாட்டின் வாயிலாகவும் உன்னதமான சாந்தியை அடைகிறான். அந்த நசிகேத வேள்விக்கு அத்தனை முக்கியத்துவம் கொடுத்து மூன்று தடவை அனுஷ்டித்தாலே போதும் என்று சொல்லப் பட்டுள்ளது. அதை அத்தியயனம் செய்து அறிந்து அனுஷ்டித்தவனாகிறான். வேதம் ஸ்மிருதி, சிஷ்டாசாரம் இம் மூன்றினோடும் ஐக்கியமாகி விடுகிறான். அதன் பிறகு அவன் பிறப்பதுக்கு பெரு நிலையைக் கேட்க வேண்டுமா?

இந் நசிகேதாக்னியை மூன்று வகையிலும் உணர்ந்து அதை உபர்சனை செய்கின்றவன், அதர்மம், அஞ்ஞானம் துவேஷம் முதலிய யமபாசங்களை ச் சரீரம் விழுவதற்கு முன்பே உதறிவிட்டு, சோகம் அற்றவனாய் சுவர்க்கத்தில் இன்புறுகிறான்.

மூன்றையும் அறிந்து வேள்வித் தீயின் பலிபீடத்தைக் கட்டி, மும்முறை செய்கின்றவன், பிறப்பின் தளைகளையெல்லாம் தூர எறிகின்றான். துயரமற்ற நிலையில், விண்ணாட்டில் - சுவர்க்கத்தில் - பேரின்பத்தை காண்கின்றான்.

மனம், வாக்கு, காயம் இம் மூன்றையும் ஒன்றாகச் செலுத்தி உள்ளத்தில் வீற்றிருக்கும் பரமாத்மாவே வேள்வித் தீ என்று அறிந்து ஆசைப்பற்றுகளனைத்தையும் அதில் எறிந்துப் பொசுக்கியவன் பரமபதம் அடைகின்றான் என்பதே உட்பொருளாகும்.

நசிகேதா! இரண்டாவது வரத்தால் நீ எதை அறிய விரும்பினாயோ, அந்தச் சுவர்க்க சம்பந்தமான அக்னி வித்தையை உனக்கு விளக்கப்பட்டுவிட்டது. இதை – இந்த வேள்வியை – மக்கள் இனி உன்னுடையதாகவே சொல்லுவார்கள். நசிகேதா! மூன்றாவது வரத்தைக் கேள்.

"விண்ணாட்டிற்கு இட்டுச் செல்லும் வேள்வி இதுவே, இரண்டாம் வரத்தின் மூலம் நீ தெரிந்து கொண்டாய். 'இனிமேல் இதை மக்கள் 'நசிகேத வேள்வி' என்றே அழைப்பார்கள். உன் கேள்வியால் அது வெளிப் பட்டதால் அதற்கு உன்பெயரையே வைக்கப் பட்டுள்ளது" என்று சொல்லி நசிகேதனை உற்சாகப்படுத்துகிறான் யமன்.

நசிகேதன் கூறுகிறான் – இப்பூத உடலைவிட்டுக் கிளம்பும் ஜீவன் – இப்டியிருக்கிறது என்று சிலரும் அப்படி யில்லை என்று சிலரும் வாதிக்கிறார்களே! அது பற்றிய உண்மையை எனக்கு உபதேசிக்க வேண்டும். இதுவே எனது மூன்றாவது வரமாகும்.

ஒரு மனிதன் இறக்கும் பொழுது, அவன் ஜீவனுக்கு என்ன நேருகிறது. பலர் பலவிதமாகச் சொல்லிக்கொள்கி றார்கள். ஆனால் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறான் நசிகேதன்.

முந்தைய காலத்தில் தேவர்களுங்கூட இந்த விஷயத் தில் சந்தேகங் கொண்டிருந்தனர். ஏனெனில் பிறப்பு இறப் பின் சட்டம் அத்தனை மர்மமானது. அந்த ஆத்மாவின் இயற்கை அரிதற்கரியதாகும். அதனால் நீ வேறொரு வரத் தைக் கேள் நசிகேதா! இதுபற்றி என்னை வற்புறுத்தாதே! இதனின்றும் என்னை விடுவித்துவிடு என்கிறான் யமன்.

அப்படியா! தேவர்களுக்குக் கூடவா இந்த ஐயப்பாடு எழுந்துள்ளது! யமதர்மனே! இதை அறிதல் அரிது என்று நீங்களே சொல்கிறீர்களே! மேலும் இதை விளக்கிச் சொல்லத்தக்க மாபெரும் குரு உம்மைத் தவிர வேறு யார் உளர்? இதைவிடப் பெரியதோர் வரமும் எனக்கு இல்லை. என்கிறான் நசிகேதன்.

யமதர்மன் – பொன்னையும் பொருளையும் ஆடுமாடுகளையும், யானை, குதிரைகளையும் பெற்றுக் கொள். நூறாண்டு வாழும் புத்திர பௌத்திராதிகளையும் விரும்பிப் பெற்றுக் கொள். பூமியில் மிக விரிந்து செழிப்பான நிலப்பரப்பைத் தேர்ந்தெடுத்து, நீ எத்தனை காலம் வாழவேண்டும் என்று விரும்புகிறாயோ அத்தனை காலம் வாழ்ந்துகொள்.

அல்லது, இதற்கு சமமானது என நீ எண்ணும் வேறு ஏதேனும் வெகுமதியைத் தேர்ந்தெடுத்துகொள். திரண்ட செல்வத்தோடும் நீண்ட ஆயுளோடும் இருந்து அனுபவி. இந்தப் பரந்த உலகுக்கு பேரரசனாக இருந்து வாயேன். உன்னுடை ஆசைகள் அனைத்தையும் நான் நிறைவேற்றி வைக்கின்றேன்.

அழியும் இயல்புடைய மானிட உலகில் நீ எதை வேண்டுமானாலும் அடைவதற்கு அது எவ்வளவு அரிதாயிருந்தாலும் சரி. உனக்குப் பணிவிடை செய்ய இரதங்களோடும் இசைக்கருவிகளோடும் கூடிய அழகான கன்னிகைகளை நான் உனக்குத் தருகின்றேன். ஆனால் நசிகேதா! மரணத்தின் மறைபொருளை மாத்திரம் என்னைக் கேட்டு விடாதே!

செவ்வையாய்ப் பரிசோதிக்கப்பட்ட சிஷ்யனுக்கே பிரம்மோபதேசம் என்ற எண்ணத்தினால் யமன் இவ்வண்ணம் கூறுகின்றான். நெருப்பைத் தூண்டிவிட்டபின்னரே ஹோமம் செய்ய வேண்டும் – செய்யமுடியும். அதுபோல் மனதைக் கிளறிவிட்ட பிறகுதானே உபதேசம் செய்ய வேண்டும்!

ஓ! அனைத்துக்கும் முடிவானவரே! இவையெல்லாம் இன்றைக்கிருந்தாலும் நாளைக்கு அழிவனவாயிற்றே! மனிதனுடைய இந்திரியங்கள் அனைத்தின் வலிமையையும் இவை அழிப்பவையாயிற்றே! எத்தனைதான் நீண்ட வாழ்வாயினும் அது அற்பமே! முடிவில் வாகனங்களாகட்டும் ஆடல் பாடல்களாகட்டும், மரணமுற்று – உன்னுடையவையாகவே ஆகின்றன!

இந்த இன்பங்களெல்லாம் நிலையானவை அல்லவே! கொடுப்பதுபோல் காட்டி மறுபடியும் உன்வசமே திரும்பக் கூடியப் பொருளைக் கொடுக்கிறேன் என்கிறாய். இவை உனதேயாகும்; ஒருநாள் கொண்டு போய் விடுவாயே! எனவே இவை உண்மையில் கொடுத்த வரங்கள் ஆகமாட்டா என்கிறான் நசிகேதன்.

மனிதன் ஒரு போதும் செல்வத்தால் திருப்தியடையக் கூடியவனன்று. உன்னைத் தரிசித்து வந்தால் நிச்சயமாக வேண்டிய பொருளை அடைவோம். அதனால் அதைத் தனியாய்ப் பிரார்த்திக்க வேண்டியதில்லை. நீ எங்களை ஆண்டு அனுக்கிரகிக்கும் வரை வாழ்வையும் அடைவோம். அதனால் என்னால் விரும்பப்படும் வரம் நான் ஏற்கனவே கேட்டதுவேயாகும்.

உங்களை எந்நேரமும் கண்ணெதிரே வைத்துக் கொண்டு செல்வத்தை நாங்கள் எப்படி அனுபவிக்க இயலும்? உங்கள் ஆக்ஞைக்கு நாங்கள் அடங்கியிருக்கும் பொழுது நாங்கள் எப்படி வாழ்ந்து விடமுடியுமர் நீதான் ஆயுளையும் பொருளையும் அபகரித்துச் செல்பவன். உன்னைக் கண்டு உன் அருள் பெற்றால் அவற்றை இச்சிப்பவர்க்கு அவை தாமே கிடைக்கும். ஆனால் அறிவாளி அவற்றைப் பொருட்படுத்த மாட்டான். ·னவே, நான் கேட்ட வரந்தான் எனக்கு வேண்டும்.

மூப்பும் மரணமும் இல்லாதவர்களிடம் சேர்ந்து பழகி, அவர்களிடமிருந்து பெறுவதற்கரிய பெரும்பயனை உணர்ந்தும், வயோதிகத்திற்கும் இறப்புக்கும் அடிமையாகி பூமியில் வாழும் எந்த மனிதன் - சிற்றின்பங்களின் சிறுமையைக் கண்டு கொண்டபின்னும் - ஆடல்பாடல் இன்பங்களை எண்ணி இங்கே நீண்ட வாழ்வில் பிரியங் கொள்வான்?

அழியும் மனிதன் ஒருவன், மண்ணுலகிலேயே தனது சொந்த அமரத்துவத்தை உணர்ந்து விட்டால் அதன் பிறகு அவன் இன்பத்தை நல்கும் நீண்ட வாழ்நாளையோ

அல்லது வஞ்சகம் நிறைந்த-ஆனால் எழில் நலத்தை நல்கும் - - காமிய இச்சையையோ விரும்புவானா?

யமதர்மனே! எந்தப்-பெரிய-பரலோக விஷயத்தில் மக்கள் இருக்க விரும்புகின்றார்களோ அதுபற்றி எங்களுக்கு கூறியருளல் வேண்டும். எளிதில் புத்திக்கு எட்டாததாய் - மறைந்துள்ள - அவ்விஷயத்தைப் பற்றிய வரத்தையன்றி வேறொன்றையும் நசிகேதன் விரும்பவில்லை.

இம்மைக்குப் பின்னுள்ள பெருநிலையை - மிகப் பெரிய "இதற்கப்பாலுள்ள பெருநிலையைப் பற்றி ஒருவன் கொண்டுள்ள ஐயத்தை விளக்குவீர். அம்மர்மத்தின் திரையை விலக்கக் கூடிய இவ்வரத்தைக் கொடும். இதுவே நசிகேதன் கேட்கக் கூடிய வரம், இதைத்தவிர வேறெந்த வரத்தையும் நசிகேதன் தேர்ந்தெடுக்கமாட்டான்.

## 2

யமன் - பேரின்பம் என்பது ஒன்று, சிற்றின்பம் என்பது அதனின்று முற்றும் வேறானது. இவை இரண்டுமே - வெவ்வேறு விஷயங்களில் - அவனை இழுத்துக் கட்டுப்படுத்துகின்றன. அவற்றுள் பேரின்பத்தை பின்பற்றுபவனுக்கு உயர்ந்த நன்மை உண்டாகின்றது. சிற்றின்பத்தை பின்பற்றுபவன் அப் பெருநிலையைப் பெறுவதிலிருந்து நழுவுகிறான்.

அங்கு இரண்டு பாதைகள் உண்டு. ஒன்று பேரின்பத்திற்கு அழைத்துச் செல்லும். பொறிகளால் அனுபவிக்கும். - சிற்றின்பத்துக்கான பாதைக்கு அழைத்துச் செல்வது மற்றொன்று. இரண்டுமே ஆத்மாவை கவர்ந்திழுக்கக் கூடியவைதாம். பேரின்ப பாதைக்குச் செல்பவன் நன்மையை எய்துகிறான். ஆனால் அடுத்த பாதையான, பொறிகளின் இன்பத்தையனுபவிக்க - சிற்றின்பத்தை தொடர்வோன் - இறுதிப் பயனை எய்துவதில்லை.

இரண்டுபாதைகளுமே மனிதனை நாடிவந்து முன் நிற்கின்றன. தீரனாயிருப்பவன் அவைகளை நன்கு பரிசீலனை செய்து, வேறுபாட்டை உணர்கிறான். தீனன், சிற்றின்பத்தை விட்டு பேரின்பத்தையே வரிக்கின்றான். ஆனால் மந்த புத்தியுள்ளவனோ, பொருளை சம்பாதிப்பதிலும் அதைக் காப்பாற்றுவதிலும் விருப்பங்கொண்டு 'பிரேயஸ்ஸை' சிற்றின்பத்தை வரிக்கிறான்.

முன்னே இருக்கும் இரண்டு பாதைகளைப் பற்றி நன்கு ஆராய்ந்து பேரின்பத்திற்கான பாதையையே ஞானி தேர்ந்தெடுக்கின்றான். ஆனால் மூடனோ பொறிகளின் இன்பத்துக்கான பாதையில் போகிறான்.

நசிகேதா! உள்ளத்தைக் கவரும் பிரியமான இன்பங்களை அற்பமென்று கண்டு கொண்டு நீ விட்டொழிததாய். எந்தப் பொருள் நாட்டத்தில் பலர் ஆழ்ந்து மடிகின்றார்களோ அந்த மாயப்பாதையை நீ அடையவில்லை.

'மகிழ்ச்சியையும் இன்பத்தையும் தருவது போல் தோன்றும் பொறிகளின் இன்பங்களைப் பற்றி நீ சிந்தித்திருக்கின்றாய் போலும். அதனால்தான் அவைகளை வேண்டாம் என்று மறுத்து விட்டாய். சங்கிலிபோல் மனிதனைப் பந்தத்துக்குள்ளாக்கும் கர்ம மார்க்கத்தை மாயப்பொருள்வழியை -நீ அடைய விரும்பவில்லை. எதனைக் கொண்டு மக்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்களோ, எதனடியில் அவர்கள் மூழ்குகின்றார்களோ அதை நீ ஏற்றுக் கொள்ளவில்லை.

அவித்தையும், வித்தை என தெரிந்துகொள்ளப்படுவது எதுவோ அதுவும், இட்டுச் செல்லும் பாதைகள் ஒன்றுக்கொன்று வெகுதூரம் உள்ளவை; வேறுபட்டவை. நசிகேதா! வித்தையை நாடியவன் நீ என உன்னை அறிகின்றேன்; ஏனெனில், காமபோகங்கள் அநேகமிருந்தும் உன்னை அவை அசைக்கவில்லையல்லவா!

அறிவுக்கான பாதை ஆங்குண்டு. கூடவே அறியாமை எனும் பாதையும் உண்டு. அழிவது அவித்தை,

அழியாதது வித்தை. வித்தையும் அவித்தையும் ஒளியும் இருளும் போன்றவை. அவித்தையில் பற்றுவிடாதவன் வித்தையை அடைய முடியாது. அவைகள் ஒன்றுக்கொன்று மிகத் தொலைவில் உள்ளவை, வெவ்வேறு முடிவுகளுக்கு அழைத்துச் செல்பவை. நானாவித இன்பங்களாலும் நின்னை கவர்ந்துகொள்ள முடியவில்லையே! எனவே, நீ - அறிவுப் பாதையை - ஞானப்பாதையையே பின்பற்றுகிறாய்.

அந்த அவித்தையினுள்ளே ஆழ்ந்துவிட்ட மூடர்கள், தாமே தீரர்கள் என்றும், முற்றும் அறிந்த பண்டிதர்கள் என்றும் எண்ணிக் கொண்டு தடுமாற்றம் அடைந்தவர்களாய், கண்ணில்லா குருடரால் வழி காட்டப்பெற்ற குருடர் போல - அதிலேயே சுற்றிச் சுற்றி வருகின்றனர்.

அறியாமையில் நிலைகொண்டு, தம்மை கல்விமான்களாகவும், அறிஞரெனவும் எண்ணிக்கொண்டு குருடரால் வழி நடத்திச் செல்லப்படும் குருடரைப்போல், இலட்சியமேதுமின்றி - துன்பங்கள் நிறைந்த அப்பாதைகளில் இங்குமங்குமாக சுழன்று சுழன்று அலைகின்றனர்.

அதில் கவனமில்லாதவனுக்கும் காணும்பொருளில் மோகமடைந்து மதியிழந்துள்ள அவிவேகிக்கும், பரலோக விஷயமும் ஆத்ம ஞானமும் விளங்காது. இதுவே லோகம், பரலோகம் என்று ஒன்றுங் கிடையாது என எண்ணும் அவன் மீண்டும் மீண்டும் யமனாகிய என்வசமே அகப்படுகிறான்.

விசாரம் ஏதும் இல்லாது, விவேகமற்ற சிறுபிள்ளைத் தனமாக நாட்களைக் கடத்துபவர்கள், செல்வத்தால், மயக்கமடைந்தவர்கள், கவனமில்லாதவர்கள், இவர்களனைவருக்கும் இவ்வாழ்க்கைக்கு அப்பால் உள்ள உறுபொருள் தெரிவதேயில்லை அவர்கள் தெரிந்து கொள்வதும் இல்லை. இதைத்தவிர வேறொரு உலகம் இல்லை என்று சொல்லிக்கொண்டு, மீண்டும் மீண்டும் மரணத்திலிருந்து மரணத்திற்கே ஏகுகின்றனர். அஞ்ஞானி செல்லாத நாண

யத்தைப் போன்றவன். மீண்டும் அதை உருக்கி வார்ப்பதற்காக யமனிடம் அனுப்பப்படுகின்றான்.

எதைப் பற்றி பலர் கேள்விப்பட்டதில்லையோ, கேட்டிருந்தாலும் அதைபற்றி அறியவில்லையோ, அதைப் பற்றி கூறுகிறவன் மிகவும் அரிதாகும். அதை அடையும் நிபுணன் அரிது; நிபுணனான குருவினால் உபதேசிக்கப் பட்டு அதை அறிகிறவன் அனைத்திலும் அரிதாகும்.

ஆத்மாவைப் பற்றி கேள்விப்படாதவர் அநேகர். அப்படி அறிந்து கொண்டு அதை அடைவோரும் அநேகர் இல்லை! அதுபற்றி எடுத்துப்பேசி யோசிக்கும் ஆசாரியனே அறிவுள்ளவனாவன். குருவினால் உபதேசிக்கப் பட்டும், அநேர்கள் அறிந்து கொள்வதைக் காணோமே! ஆயிரத்தில் ஒருவன் சித்திபெற முயற்சிக்கின்றான். அப்படி முயற்சி செய்யும் சித்தர்களுள் யாரோ ஒருவன் தான் உண்மையில் ஆத்மாவை பரம்பொருளை உணர்கின்றான்.

தாழ்ந்த மனிதனால் விவரிக்கப்பட்டால், ஆத்மா நன்கு விளக்கமடையக் கூடியது அன்று. ஏனெனில் அது பலவிதமாய் சிந்திக்கப்பட்டிருக்கிறது. பிரம்மத்திடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவரால் உபதேசிக்கப்பெற்றால், இதில் பலவிதமான வேறுபட்ட சிந்தனைக்கு இடமே இல்லை. அதுவோ அணுவுக்கும் அணுவாயிருப்பது; அதை தர்க்கத்தால் அறிய முடியாது.

ஆத்மாவை எய்தாத — அதுபற்றி நன்கு அறிந்து கொள்ளாத — ஒருவனால் ஆத்மாவைப் பற்றிப் போதிக்க எப்படி இயலும்! மிக்க சிந்தனையாலும் அதனை எய்த முடியாது. பிரம்மத்திடம் அபேத புத்தியுள்ள ஆசாரியன் வழியாகச் சொல்லுதலே – கேட்டு அறிதலே – அதனை எய்தும் வழியாகும். மிக உயர்ந்த எண்ணங்களையெல்லாம் விட அது உயர்வானது. உண்மையில் எல்லா எண்ணங்களுக்கும் அப்பால் உள்ளது. அணுவே மிகவும் சிறியது. அந்த அணுவிற்குள் அணு என்றால் அதைச் சிந்

திக்கக்கூட நமக்குத் திறன் இல்லையே! 'இதுவல்ல, அது வல்ல' என்று விளக்கும் முறையிலன்றி ஆத்மாவைப் பற்றி உபதேசிக்க வழியேயில்லை.

இதுபற்றி தாயுமானாரும்....

"அருஎன் பனவும் உருஎன் பனவும் அன்றி
அகமும் புறமும் அன்றி – முறைபிற ழாது
குறியும் குணமும் அன்றி நிறைவும் குறைவும் அன்றி
மறை ஒன்று எனவிளம்ப – விமல்மது ஆகி
அசலம் பெற உயர்ந்து விபுலம் பெற வளர்ந்து
சபலம் சபலம் என்றுஉள் – அறிவினர்காண
-ஞானவெளியிடை மேவும் உயிராய்..."

என்று பாடியுள்ளாரே!

பிரியமான நசிகேதா! நீ அடைந்துள்ள புத்தி விசாலம், தர்க்கத்தால் அடையக்கூடியதல்ல. தகுந்த வேறு ஆசிரியனால் விளக்கப்பட்டால்தான் அது தெளிந்த ஞானத்தின் பொருட்டாகும். நீ உண்மையான திடசித்தமுள் ளவனாய் இருப்பது மிகுந்த ஆச்சரியத்தையளிக்கின்றது. உன்னைப் போல் கேட்டு அரிய ஆவலுடையவன் இனி மேலும் எனக்குக் கிடைக்கட்டும்.

இப்புனிதமான ஞானத்தை பகுத்தறிவால் விளங்கப் படுவது இல்லை. மேலான நல்லாசிரியன் ஒருவனால்தான் இதனை விளக்க முடியும். உன்னுடைய லட்சியம் ஆச்சரி யப் படத்தக்க விதமாக உறுதியாயுள்ளது. நீ ஆத்மாவை அறிந்தவன் போலானாய். உன்னைப் போன்று திடசித்த முள்ள வேறொரு மாணவனை என்னால் காண இயலுமா!

சேமித்து வைத்த செல்வம் நித்தியமானதல்ல என்பதை நான் அறிவேன். அநித்தியமான பொருள்க ளால் நித்தியமான – ஆன்மாவாகிய – அச் செல்வத்தை அடைந்துவிட முடியாததுதான். இருந்தாலும் அந்நிலையில் லாப் பொருள்களைக் கொண்டே நசிகேத வேள்வி என்னாலே விளக்கப்பட்டதாகும். அதனால் கல்பகாலம்

வரை நீடித்துள்ள இந்நித்திய யம பதவியை நான் பெற்றவனானேன்.

செல்வக் கருவூலங்கள் அநித்தியமானவை என்பதையும், என்றும் நித்தியமாயுள்ள பரம்பொருள், இந்த அநித்திய பொருளால் அறியக் கூடியதன்று என்பதையும் நான் அறிவேன். நசிகேத வேள்வியைக் கூட இவ்வண்ணமே தான் நான் நிறுவியுள்ளேன். அநித்தியத்தை நிலையில்லாதனவற்றை, அதில் எரித்து சாம்பலாக்கியதால் தான் நான் நித்தியமான இந்நிலையை பெற்றிருக்கின்றேன். அழியும் பொருள்களும் பகவானுக்கு அர்ப்பிக்கப் பட்டால் அழியாப் பொருளைப் பெறுவதற்குச் சாதனமாகும்.

அவ்வண்ணம் செய்தால் புண்ணிய பாவ வடிவமான கரும பந்தத்திலிருந்து விடுபடுவாய் என்று கீதையில் கண்ணனும் பகர்ந்துள்ளாரே!

ஆசைகளின் முடிவுக்கு எல்லையாகிய நிலமும், உலகுக்கெல்லாம் உறைவிடமும், செய்யும் கருமங்களுக்கெல்லாம் முடிவான பயனும், அச்சமின்மை நிலைபெறும் இடமும், அனைவராலும் புகழ்ந்துபோற்றப்படுவதும், அளவுக்கடங்காது எங்கும் பரந்து நிற்பதும், உயிர்க்குயிராய் உள்ளதுமாகிய ஆன்ம நிலையை உன் திடச்சித்தத்தால் உணர்ந்து, அநித்தியமான அனைத்தையும் நீ தீரனாக தாண்டிவிட்டாய் நசிகேதா!

ஆசைகளின் பூர்த்திக்கு எல்லையையும், வையகத்து ஆளுகையையும், வேள்வியின் அழிவிலாப் பெரும்பயனையும், பயமின்மையே இல்லாத இடமும், புகழின் மாட்சியையும், எல்லையில்லாது பரந்து பிரிந்து உள்ளதாகிய ஆன்ம நிலையையும். உன் முன்னே வைத்தும் நீ உன் திட சித்தத்தால் அனைத்தையும் தாண்டி விட்டாய் – ஒதுக்கி விட்டாய் – நீத்து விட்டாய்.

பார்ப்பதற்கு அரியதும், எங்கும் ஊடுருவி உள்ளுறையும் மறைபொருளும்; குகையாகிய புத்தியில் நிலைபெற்ற

தும், உடலெங்கும் வியாபித்து நிற்பதும், மிகவும் பழைமை யான பொருளுமாகிய, அந்த மேலான சுடர் ஒளியை, ஆழ்ந்த தியானத்தால் - அத்யாத்ம யோகத்தால் - உணர்ந்த தீரன் இன்பதுன்ப கிளர்ச்சியிலிருந்து விடுபட்ட வனாகின்றான்.

காண்பதற்கு அரிதாய், மனித இதயத்தில் கண்ணுக் குப் புலனாகாது வாழ்கின்ற, காலத்திற் காப்பாற்றப்பட்ட பரம்பொருளின் மீது - ஆழ்ந்த தியானத்தால் - தன் மனத்தை எப்பொழுது பதிய வைக்கின்றானோ, அப்பொ ழுதே - அந்நொடியிலேயே - அவ்வறிஞன் இன்ப துன்பங் களிலிருந்து விடுபட்டவனாகின்றான்.

வெளிவிஷயங்களிலிருந்து மனதை முற்றிலும் விடு வித்துக்கொண்டு, ஆழ்ந்து ஆத்மாவிடத்தில் செலுத்து வதே உண்மையான தியானமாகும். அதுவே அத்யாத்மயோகம். ஆத்மாவின் உண்மை உருவத்தை - சொரூபத்தைத் - தனக்குள் கண்டபின், அவனுடைய மகிழ்ச்சியும் துக்கமும் இரண்டுமே அற்றுப் போகும். எல்லாம் வல்ல இறைவனுக்கு-பரம்பொருளுக்கு - நன்மை யேது? தீமைதான் ஏது? அவனுடைய ஆசாபாசங்கள், சுக துக்கங்கள் - இவைகளுக்கிடையில் - இருப்பினும், அவற் றால் அந்த மேலான ஆத்மா தீண்டப்படுவதில்லை - தொடப்படுவதில்லை. அவ்வண்ணமாக உள்ள ஆத்மா வைக் கண்டு உணர்வதே கிடைத்தற்கரிய மோட்சமாகும். வீடு பெற்றான் என்பதும் அதுவே !

இதைக்கேட்டு நன்றாய் உணர்ந்து, விவேகத்தினால் தர்ம மூலத்திலிருந்து பிரித்து எடுத்து அணுபோன்ற இவ் வான்மாவையடைந்த மனிதனே, பெறவேண்டியதைப் பெற்று ஆனந்திக்கிறான். மோட்ச வீடு நசிகேதனுக்கு திறந்திருப்பதாகவே எண்ணுகிறேன் என்றான் யமதர் மன்.

சொல்வதைக் கேட்டு நன்றாய் புரிந்து கொண்டு, அதன் இயல்பினைக் கண்டு பிடித்து அதன் அடியாழத்தை

ஒரு மனிதன் எப்பொழுது எய்துகின்றானோ அப்பொழுதே அவன்அப்பேரின்ப மூலத்தில் புகுந்து இன்பங் காண்கின்றான். ஆத்மாவின் மேம்பாட்டிற்காக உன்னுள் உரைந்து நிற்கும் பிரம்மத்திற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ள வீடுதான் நசிகேத வேள்வியாகும்.

நசிகேதன் சொல்கின்றான் - தருமத்திற்கும் அதருமத்திற்கும் அப்பாற்பட்டதாயும், இக்காரிய காரணத்திற்கு அப்பாற்பட்ட தாயும், இப்பொழுது உண்டானதிற்கும் இனிமேல் உண்டாகப் போவதற்கும் அப்பாற்பட்டதாயும் உள்ளதாக நீ எதைக் காண்கின்றாயோ அதையே எனக்குக் கூறி அருள்வாய்.

நல்வினை தீவினை என்பவற்றிற்கப்பால், இந்தக் காரியத்திற்கும் காரணத்திற்கும் அப்பால், கடந்து சென்றதும் இனி வரப்போவதற்கும் அப்பால், நீங்கள் எதைக் காண்கின்றீர்களோ அதையே எனக்குக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன் யமதர்மராஜனே!

யமன் கூறுவது — வேதங்கள் எல்லாம் எந்தப் பொருளைப் போற்றிப் புகழ்கின்றனவோ, தவங்கள் எல்லாம் எதை நாடுகின்றனவோ, எதை விரும்பி - எதை முன்னிட்டு - பிரம்மசரியம் அனுஷ்டிக்கப்படுகிறதோ அதை அந்தப் பதத்தை — உனக்குச் சுருக்கிக் கூறுவேன். அதுவே 'ஓம்!' எனும் பிரணவ மந்திரமாகும்.

எதனை வேதங்கள் புகழ்ந்துரைக்கின்றனவோ, தியாக உணர்வுடன் செய்யப்படும் வேள்விகளெல்லாம் எதனைப் போற்றுகின்றனவோ, எதனை விரும்பி பரிசுத்தமான தூய வாழ்க்கை கடைப்பிடிக்கப் படுகின்றதோ, அதனை உனக்குத் தெரிவிக்கின்றேன். சுருக்கமாக அது 'ஓம்' என்பதாகும். மிகவும் புனிதமான மந்திரமாகும் அது.

அப்புனித மந்திரமும் என்றுமுள்ள பிரம்மமாகும். அதுவே, அதி உன்னதமான இறுதியாகும். அதை அறியும் பொழுது, விருப்பங்களனைத்தும் நிறைவேறுகின்றன.

"தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்களைத் துட்பொருளை
ஐயயுனக் தருளியவா றார் பெறுவா ர்ச்சோவே"

என்று திருவாசகம் செப்புகிறது!

அதுவே விடுதலைக்கான உன்னத வழியாகும். அதுவே நேர்த்தியான உதவியுமாகும். அம்மாபெரும் சொல்லை அறியும் போது, மனிதன் பிரம்ம லோகத்தில் பெரியோனாகின்றான்.

இதன் உண்மையை தெளிவுறத் தெரிந்து கொண்டவன் பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை. இந்த ஆத்மா எங்கிருந்தும் உண்டாகவில்லை. அதேபோல் இதிலிருந்து எதுவும் உண்டாகவில்லை. இது பிறப்பற்றதாயினும் என்றுமுள்ளது; அழிவற்றது அனைத்துக்கும் முன்னுள்ளது. இவ்வுடல் அழிக்கப்படும்போதும், அழிக்கப் படாமல் நிற்பது அது.

ஆத்மன் என்பவன் ஒருவனே! அப்பெரும்பொருளான ஆத்மன் ஒருபோதும் பிறப்பதுமில்லை; இறப்பதுமில்லை. அவனுக்கு முன்னரும் எதுவுமே இருந்ததில்லை. அவன் நித்தியன். இவ்வுடல் விழும் பொழுது, மரணமடையும் பொழுது - கடந்து விட்ட அல்லது வரப்போகும் காலங்களுக்கப் பாறபட்டுள்ள, என்றும் பிறவாததும் - ஆனால் என்றும் உள்ளதுமான - ஆத்மாவிற்கு மரணமேது? அழிவேது? கிடையவே கிடையாது.

ஆத்மா எங்கும் நிறைந்துள்ளதால் ஒரு சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்தையடைவது எங்ஙனம் என்ற சந்தேகம் எழலாம். உண்மையில் ஒரு சரீரத்தை விடுவதும் மற்றொன்றை அடைவதும் ஆத்மாவுக்கு இல்லைதான். இப்பூமியிலுள்ள நமக்கு சூரியன் உதிப்பதாகவும், அஸ்தமிப்பதாகவும் தோன்றுகிறதேயொழிய உண்மையில் அப்படியில்லையே! அவ்வண்ணமே பிறப்பற்ற ஆத்மா, பிரகிருதி சம்பந்தந்தால் சரீரத்தில் புகுவதுபோலும், அதை விடுவதுபோலும் தோன்றுகிறது.

கொலைசெய்பவன், தான் கொல்வதாக நினைத்தாலும், அவ்வண்ணமே கொலையுண்டவன் தான் கொல்லப்பட்டதாக நினைத்தாலும் - இவ்விருவரும் உண்மை நிலையை அறியாதாரே! ஒவ்வொருவனிடமும் உறையும் அழிவில்லா ஆத்மா, கொல்வதுமில்லை; கொல்லப்படுவதுமில்லை.

அணுவுக்கு அணுவாயும், மிகப்பெரியதற்கும் பெரியதாயும் உள்ள ஆத்மா, இச்சீவனுடைய உள்ளத்தில் உறைவதாகும். ஆசையம் அழித்தவன் - ஆசை நீங்கியவன் - இந்த ஆத்மாவைக் காண்கின்றான். அச்சமயம், துக்கமற்றவனாய் தன் அந்தக்கரணங்களின் தெளிவால் இந்த ஆத்மாவின் பெருமையையும் உணர்கின்றான்.

அணுவுக்கணுவாய் இருப்பது, பெரிதுக்கும் பெரிதாய் எப்படி அமையக்கூடும் என்ற சந்தேகம் எழலாம். அது 'தஹரவித்தை' யாகும்.

அசையாத நிலையில் இருந்து கொண்டே அவன் தொலைவில் - மிகத் தொலைவிலும் - அலைந்து திரிகின்றான். துயிலின் நிலை கொண்ட அவன் எங்கெங்கோ - எல்லா இடங்களுக்குமே போகின்றான். இவ்வண்ணம் தன்னுள் உறைந்து கிடக்கும் ஆத்மாவினால் தவிர - இன்ப துன்பங்களுக்கு அதிபதியான அப்பிரம்மத்தை - வேறு எதனால் அறிய இயலும்!

நாம் காண்பனவற்றுள் காண இயலாதவனாகவும், நிலையில்லாதனவற்றுள் நிலைத்து நிற்பவனாகவும் நிலை கொண்டுள்ள - எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பிரம்மத்தை, எப்பொழுது அறிஞர் உணர்கின்றனரோ, அப்பொழுது அவர்கள் இன்ப நிலையை - துன்பத்திற்கப்பாலுள்ள நிலையை - எளிதில் எய்துகின்றனர்.

வேதங்களைக் கற்று அறிவதாலோ, நுண்ணறிவாலோ, பரந்த கேள்வி ஞானத்தாலோ - விசாரணையாலோ இந்த ஆத்மா ஒரு சாதகனால்

அடையப்படுவதில்லை. அவன் எப்பொதும் ஆத்மா ஒன்றையே - அந்த ஆத்மாவினால் - தியானிக்கின் றானோ அப்போது அவனால் அடையப்படும். அப்போது அவனுக்கு ஆத்மாவானது தனது உண்மை உருவத்தைக் காட்டுகின்றது - வெளிப்படுத்துகின்றது.

கல்விமேம்பாட்டினால், ஆத்மா அடையப்படுவ தில்லை. புனித போதனையினாலும் மதி நுட்பத்தினாலும் கூட அவனை அடைய இயலாது, அதனால் தேர்ந்தெடுக் கப்பட்டவர்களால் மட்டுமே அதனை அடைய இயலும். ஏனெனில், அவர்களும் அதனைத் தேர்ந்தெடுக்கிறார் களே! அந்த நிலையில்தான், தான் தேர்ந்தெடுத்தவருக்கு ஆத்மா தன் மகிமையை வெளிப்படுத்துகின்றது!

மனத்தை ஒருமுகப்படுத்தி சாந்தி பெறாதவனும், இந் திரியங்களின் இச்சையை அடக்காதவனும், துர்நடத்தையி லிருந்து விலகாதவனும், ஆழ்ந்த தியானத்திலமர்ந்தாலும் இந்த ஆத்மாவை அடையமாட்டான்.

தீயவழிகளை கைவிட்டொழிக்கவேண்டும். பொறி களின் இச்சைகளை தன்போக்கில் விடாமல் அடக்க வேண்டும். மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். இதயத்தில் அமைதி குடிகொண்டிருக்க வேண்டும். இவைகளன்றி ஆழ்ந்த நிலையில் மனதைக் கூட்டினாலும் ஆத்மாவை எய்த இயலாது.

எந்த ஆத்மாவுக்கு அந்தண க்ஷத்திரியாதியோர் அன்னம் போன்றவர்களோ, எந்த ஆத்மாவுக்கு உலகையே உண்ணும் யமன் ஊறுகாய் போன்றவனோ அந்த ஆத்மா எவ்வண்ணம் உளது என்று எவன் அறிவான்?

ஆத்மாவின் ஆற்றலால் ஏற்படும் மகிமையே அந்த ணர் க்ஷத்திரியர் உள்பட அனைவரையும் அடித்துக் கொண்டு போய்விடுகிறது. மரணத்தையுங்கூட ஊறுகாய் போன்று ஆக்கிக் கொள்கிறது. அப்பேர்ப்பட்ட ஆத்மா

எங்கிருக்கிறது என்பதை உண்மையில் யார் அறிகிறார்; எவருக்குத் தெரிகிறது?

எல்லாவற்றையும் உண்பவனாக இங்கே கூறப்பட்டுள்ளது பரமாத்மா. வாழ்க்கை உணவு என்றால் இடையிடையில் ஏற்படும் மரணம் ஊறுகாய்போலும்! அதை திருந்தாத புத்தியுள்ளவன் எவனும் அறியாமாட்டான். உள்ளந்தெளிந்தாலொழிய உள்ளத்திலுள்ள பொருளைக் காணமுடியாது.

## 3

இவ்வுலகில், அவரவர்களால் சுயமாக செய்யப்பட்ட கருமத்தின் பலனை அனுபவிப்பவர்களாய் பரவெளியில் இருதயகுகையில் இருவர் உள்ளார்ந்து உறைகின்றனர். பிரம்ம ஞானிகளும், பஞ்சாக்னி உபாசகர்களும், நசிகேத வேள்வியை மும்முறை செய்தவர்களும் அப்படி உறைந்துள்ள அவ்விருவரையும், வெயிலுக்கும் நிழலுக்கும் ஒப்பிட்டுப் பேசுகின்றனர்.

இதயத்தின் ஒப்பற்ற பரவெளியில் – உள்ளத்தின் மிக உன்னதமான மறைவிடத்தில் – உண்மையெனும் உலகில் வாழ்க்கை அமுதினைப் பருகி தமது கர்மாக்களின் பலா பலன்களை அனுபவிக்கின்ற ஜீவாத்மா, பரமாத்மா என (இரண்டு) உள்ளன. பிரம்மத்தை அறிவோரும்; புனிதமான ஐந்து அக்னிகளை வளர்ப்போரும், மும்முறை நசிகேத வேள்வி செய்தோரும் அவற்றை ஒளியும் நிழலும் எனவே கூறுகின்றனர்.

ஒரு மக்கள் கூட்டத்தின் இடையில் குடைபிடித்துக் கொண்டு ஒருவன் சென்றாலும், அக்கூட்டத்தை குறிப்பிடும்போது குடைபிடித்துப் போகிறவர்கள் என்று கூறுவது போல், இங்கு ஜீவன் மட்டும் கர்மபலனை அனுபவிப்பவனாகவும் ஈசுவரன் அனுபவியாதவனாகவும் இருந்தாலும், இருவரும் அனுபவிப்பதாகவே சொல்லப்பட்டுள்ளது.

மற்றும், வெயிலுக்கு ஏற்பட்ட தடை அல்லது குறையே நிழலின் வடிவத்தை உண்டாக்குகிறது. வெயிலுக்கு வடிவம் ஏது? ஆனால் நிழலுக்கு வடிவம் உண்டு. ஆனால் வெயிலே ஒளிப் பொருளாகும். ஒளியின் குறைக்கே நிழல் என்று பெயர். அதனால் வெயில் வேறு நிழல் வேறு அல்ல. இவ்வண்ணம் ஜீவாத்மா, பரமாத்மாவின் நிழலாகிறது. அத்தடையை நீக்கியவுடன், அந்நிழலும் வெயிலும் ஒன்றாகி விடும். அதன் பிறகு நிழலேது!

பஞ்சாக்னி உபாசகர்கள் ஐந்து வித ஹோமம் செய்பவர்களாவார்கள். அவை பிரம்மயக்ஞம், தேவயக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பூதயக்ஞம், பித்ருயக்ஞம் என ஐந்து வகையாகும்.

துன்பம் நிறைந்த இவ்வுலகை லகுவாக கடந்து செல்ல உதவும் பாலமாக அமைந்துள்ள நசிகேத வேள்வியை நாம் செய்வோமாக! விடுதலையை விரும்புவோருக்கு இறுதிப் பயனாகவும், புகலிடமாகவும், அச்சம் என்பதே இல்லாத அழிவில்லாத சாசுவதமான பரப் பிரம்மத்தை நாம் அறிவோமாக.

இவ்வுடலைத் தேராகவும், மனதைக் கடிவாளமாகவும், புத்தியைத் தேரோட்டியாகவும், ஜீவனை அத்தேரில் வீற்றிருப்பவனாகவும் அறிந்துகொள்.

இவ்வுடலே தேராகிறது. அத்தேரின் தலைவன் ஆத்மாவாகும். பகுத்தறிவே சாரதியாகிறது. மனம் கடிவாளங்கள் ஆகின்றன என்பதைத் தெரிந்துகொள்.

இந்திரியங்களைக் குதிரைகள் என்றும், அவைகளின் விஷயங்களே செல்லும் பாதைகள் என்றும் கூறுவர். இவ்வுடல், பொறிகள், மனம் இவற்றுடன் கூடிய ஜீவனையே "போக்தா" என்று ஞானிகள் சொல்கின்றனர்.

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே செய்யும் பாலா நிறையநீறாமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்கும் போற்றவிக் காட்டினோமே"

என்று திருநாவுக்கரசரும் பாடியுள்ளாரே!

பொறிகளே குதிரைகளாகும். அவைகளின் நுகர்ச்சிப் பொருள்களே, அவை செல்லும் பாதைகளாகும். மனத்தோடும் பொறிகளோடும் ஒருவனது ஆத்மா இணையும் பொழுது, அவன் 'இன்ப துன்பம்' உடையவனாகிறான்.

அடக்கப்படாத மனதுடனும், தெளிந்த அறிவைப் பெற்றிராத புத்தியுடனும் உள்ளவன் எவனோ அவனுக்கு, சாரதிக்கடங்காத துஷ்டக் குதிரைகள்போல், இந்திரியங்கள் வசப்படமாட்டா.

பயிற்சி பெறாத தேரோட்டி, துஷ்டக் குதிரைகளை எப்படிச் சமாளிப்பான்? அவை சாரதிக்கு அடங்காதே! அதுபோல், தெளிவில்லாத அறிவும், திண்மையான மனதும் இல்லாதவன் இந்திரியங்களை எப்படி வசப்படுத்துவான்? அவனால் முடியாதே! இந்திரியங்கள் அவனுக்கு அடங்கி நடக்காவே! அவன் வாழ்க்கையின் ஆட்சியாளனாய் அமையமுடியாதே!

ஆனால் ஒரு நல்ல சாரதி பயிற்சி பெற்ற சாதுவான குதிரைகளைக் கொண்டு தேரை அழகாக ஓட்டுவான். அதுபோன்று சரியான தெளிந்த அறிவைப் பெற்றிருப்பனுடைய மனம் ஒருபோதும் தளர்வடையாது. அவன் இந்திரியங்களை வெகு லகுவாக அடக்கியாள்வான். அத்தெளிந்த அறிவே அவனை வாழ்க்கையின் ஆட்சியாளனாய் எளிதாக அமைத்துவிடுகின்றது.

"பொறிவாயி லைந்த வித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார் "

என்று திருக்குறளும் சொல்லுகிறதே!

தெளிந்த அறிவு இல்லாதவனும், கவனமில்லாதவனும் தூய்மையில்லாதவனுமாக இருப்பவன், இந்நெடிய பயணத்தின் சரியான இறுதியை அடைவதில்லை. அதற்கு மாறாக அவன், ஒரு மரணத்திலிருந்து மற்றோர் மரணத்தினுக்குமாக மீண்டும், மீண்டும் அலைந்து திரிகின்றான்.

சலன புத்தியுள்ளோனுக்கு சரியான பாதை தெரிவதில்லை. அதனால் பாதை பிரண்டு மீண்டும் பிறப்பு, இறப்புக்கு ஆளாகின்றான். என்ன பரிதாபம்!

தெளிந்த அறிவைப் பெற்றிருப்பவனோ மிகவும் கவனமாயிருந்து, மிகவும் தூயோனாய் சென்று அப்பயணத்தின் சரியான இறுதியை எய்துகின்றான். பிறகு, அதனின்று அவன் ஒரு போதும் திரும்புவதேயில்லை.

அறிவு தெளிவுள்ளவனுக்கு சரியான பாதை தெரிந்து விடுகிறது. நெடுக சென்று இறுதியையடைகின்றான். அதுவே சரியான முடிவு. அதனால் அங்கிருந்து திரும்ப அவனுக்கு மனமே இராது.

எவன் விவேகமுள்ள புத்தியுடைய சாரதியாகவும், அடக்கப்பட்ட மனதைக் கடிவாளமாகவும் கொண்டுள்ளானோ அவன் சம்சாரமாகிய சரியான வழியின் எல்லையை அடைகின்றான். அதுவே எங்கும் நிறைந்த பரம் பொருளுடன் ஒன்றிய பரமபதம் என்னும் நிலையாகும்.

தன் பகுத்தறிவால் தேரைச் செலுத்த வேண்டும். கண்ணும் கருத்துமாயிருந்து மனமாகிய கடிவாளத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். அவ்வண்ணம் கவனமாயிருந்து தேரைச் செலுத்துவோன், சரியான பாதையாகச் சென்று சரியான இறுதியையடையக் கேட்க வேண்டுமா! அந்த இறுதியான இடமே பரம பவித்திரமான பரமபதமாகும்.

தேரில் கட்டின குதிரை வசப்படாவிட்டால் கடிவாளத்தையும் சாரதியையும் இழுத்துக் கொண்டு செல்லும். கடிவாளத்தைக் கொண்டு குதிரையை சாரதி அடக்கி நடத்தப் பயிலுதல் வேண்டும். அப்பொழுதுதான் அவனால் சரியான பாதைக்குச் சென்று சரியான இறுதியையடைய முடியும்.

இந்திரியங்களை விட மேலானவை அவைகட்குக் காரணமான சூட்சம பூதங்கள்; அவைகளை விட

மேலானது மனம்; அதைவிட மேலானது புத்தி; அதைவிட மேலானது ஆத்மாவாகும்.

பொறிகளுக்கப்பால் புலன்களும், புலன்களுக்கப் பால் மனமும், மனத்திற்கப்பால் பகுத்தறிவும், பகுத்தறிவுக் கப்பால் மனிதனிடம் உள்ள ஜீவாத்மா விளங்குகின்றது.

அந்த மகத்தான ஜீவாத்மாவைவிட மேலானது மூலப்பிரகிருதியாகும். அதற்கும் மேலானவன் பரமபுருஷ னாவான். இப்பரம புருஷனைவிட மேலானது ஒன்றுமே யில்லை. அந்நிலைதான் இறுதியான எல்லை; அதுதான் உன்னதமான நிலை.

மனிதனிடமுள்ள ஜீவனுக்கு அப்பால் பிரபஞ்சத் தின் உறுபொருள் ஒன்று உள்ளது. அதற்கும் அப்பால் பர மாத்மா விளங்குகின்றான். அவனுக்கப்பால் வேறு எதுவுமே இல்லை. அவனே பாதையின் இறுதிப்பயனா வான். எங்கு சென்று திரும்புவதில்லையோ அதுவே பர மாத்மாவின் உயர்ந்த உறைவிடம்.

இப்பரம புருஷன் - பரமாத்மா - உயிர்களனைத்தி லும் மறைவாக உறைந்துள்ளான்; வெளிப்படத்தோன்றுவ தில்லை. ஆனால் நுண்ணறிவுள்ளோர்களால் ஒருமுகப்பட்ட உள்ளாழ்ந்த - சூட்சம அறிவால் அப்பரம புருஷன் பார்க்கப்படுகிறான்.

பரமாத்மாவின் பேரொளி - சக்தி - அனைத்து உயிர்களிலும் - காண இயலா நிலையில் - மறைந்து உறைந்து மிளிர்கின்றது. நுண் பொருளைக் காணவல்ல பேரறிஞர்கள் - ஆழ்ந்து ஒருமுகப்படுத்தப்பட்ட தங்கள் பேரறிவால் அப்பரமாத்மாவை அறிந்துகொள்கின்றார் கள். அவர்களால் தான் முடியும்.

நுண்ணறிவுடைய அறிஞன் - விவேகி-தன் வாக்கை மனத்தில் ஒடுக்கி, அதை ஒளிமயமான புத்தியில் ஒடுக்கி, புத்தியை ஜீவாத்மாவில் ஒடுக்கி, அதை எல்லாம் ஒழிவடையும் பரமாத்மாவில் ஒடுக்க வேண்டும்.

"விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர்
காலமினியில்லை

யுடையா னடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ டுடன்போவதற்கே
யொருப்படுமி
னடையவோ நாம்போய்ச் சிவபுரத்து ளணியார்
கதவதடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்க னாள்வான்
புகழ்களையே"

என்று மணிவாசகரும் பாடியுள்ளாரே!

பேச்சை மனத்திலும், மனத்தை பகுத்தறிவிலும், பகுத்தறிவை பிரத்யகாத்மாவிலும், அப்பெரும்பொருளை அமைதியான உருவான - எல்லைக்கிறுதியாயுள்ள - பர மாத்மாவிலும் பேரறிஞர் சரண் அடையக்கடவர்.

எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்! சிறந்த பேராசிரியர்களைக் கொண்டு அறிவு விளக்கத்தை - ஞானத்தைப் பெறுங்கள். அந்த வழிப்பாதை - கத்தியின் நுனிபோல் கூரியதாகும். நடப்பதற்கும் கடப்பதற்கும் அது கடினமானதாகும் என்று அறிஞர்கள் - ஞானிகள் - பகர் கின்றார்.

எழுமின்! விழிமின்! உன்னதமான பேற்றையடைய அயராது உழையுங்கள். இப்பாதைமிகவும் ஒடுக்கமானது; பின்பற்றுவதற்கு மிகவும் அரிது! கத்திமுனை போன்று கூர்மையானது என்று சொல்கின்றனர் அறிவோர்.

இது சம்சாரமாகிய சொப்பனத்தில் ஆழ்ந்துள்ள ஜீவனை தட்டியெழுப்பும் மந்திரமாகும். சம்சாரமாகிய தூக் கத்தினின்று விழிப்பது எளிதான காரியமல்ல. அதற்கு விடுபடவேண்டும் என்ற பெருவிருப்பம் உள்ளத்தில் பொங்கி எழவேண்டும். அத்துடன் கத்திமுனைமேல் நடப் பதுபோல் மிகுந்த சாக்கிரதையுடன் புலன்களையும் மன தையும் அடக்கிச் சீலத்தைக் காப்பாற்றி, மனதை மாசற நிறுத்தி வேற்றுமை உணர்ச்சியை அறவே நீக்க வேண்டும்.

'இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்' என்று சூடிக் கொடுத்த நாச்சியாரான ஆண்டாளும் பாடி யுள்ளாரே!

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் இவைகளுக்கு அப்பாற்பட்டதும், மாறுபாடு இல்லாது என்றும் உள்ளதும், ஆதியும் அந்தமும் இல்லாததும், மகத்துவத்துக்கு மேலானதும், நிலைபிறழாமலிருப்பதும் எதுவோ அதை அறிந்து இறப்பினின்று – மரணத்தின் வாயினின்று விடுபடுகிறான்.

ஆத்மாவானது ஒலியும் உருவமும் இல்லாதது. மணம் இல்லாதது, சுவையறிய இயலாதது, தொட்டு உணர முடியாதது, அழிவற்றது, மாற்றமுடியாதது, ஆரம்பமோ இறுதியோ இல்லாதது. பகுத்தறிவுக்கப்பால் உள்ளது. ஆத்மாவின் உணர்வுநிலை, தன்னைத்தான் வெளிப்படுத்தும்பொழுது, மனிதன் மரணத்தின் வாயினின்று விடுபடுகிறான்.

யமதர்மராஜனால் உபதேசிக்கப்பட்ட இத்தொன்மையான நசிகேதன் கதையைக் கேட்போரும், கற்போரும் பிரம்மபதவியை – பிரம்மலோகத்தின் மாட்சிமையை – அடைகின்றனர்.

இந்த நசிகேதன் கதைக்கு அத்தனை மேன்மையுண்டு. அதனால்தான் கிடைப்பதற்கரிய பெரும்பதவி கிடைக்கிறது!

இந்தப் பரம இரகசியத்தை எவன் பிரம்மத்தையடைய விருப்பமுள்ளோர்களின் கூட்டத்தில் ஓதுகின்றானோ, அல்லது சிரார்த்த காலத்தில் சிரத்தையுடன் ஓதுகின்றானோ, அவனுக்கு அளவில்லாத நற்பயன் கிட்டும். அது நற்பயனை அளிப்பதாக ஆகிறது.

இந்த உன்னத மேலான தர்மத்தை பிரம்ம நாட்டமுடையோர்களின் குழாத்திடையோ அல்லது சிரார்த்த காரியத்தின் பொழுதோ பக்தி சிரத்தையுடன் ஓதுபவன், அழிவிலாப் பெருவாழ்வுக்கு ஆயத்தம் செய்கின்றான். அந்தப் பதவியை அடைய இருப்பவனே அப்படி நடந்து கொள்வான். அது அவனுக்கு அளவில்லாத நற்பயனை அளிப்பதாக ஆகிறது.

## 4

இந்திரியங்களை வெளிநோக்கு உடையவையாகவே ஏற்படுத்தியுள்ளான் பரமேஸ்வரன். அதனால்தான் மனிதன் வெளித்தோற்றங்களையே காண்கின்றான். இருந்தும் எவனோ ஒரு தீரன் மரணமிலாப் பெருவாழ்வை விரும்பி, வெளிநோக்கை அடக்கி உள்முகமாய் பார்வையைத் திருப்பி அந்தராத்மாவைப் பார்க்கிறான்.

பொறிகளைப் புறத்தே செல்லும்படியாகவே படைத்துள்ளான் இறைவன். அதனால் அவை புறத்திலுள்ள பொருள்களின் மேல் ஏகுகின்றன; உள்ளுறையும் ஆத்மாவிடம் செல்வதில்லை. ஆனால், அமரநிலையை அடைய விரும்பும் ஒரு தீரன், தன் பார்வையை உள்ளுக்குள் செலுத்தி ஆத்மாவைப் பார்த்து விடுகிறான். எவனோ ஒருவன்தான் அப்படிச் செய்கின்றான். அனைவரும் அப்படிச் செய்வதில்லை!

இந்திரியங்களை வெளி வியாபாரம் மட்டு உடையனவாய் ஆத்மாவைப் பார்க்க முடியாமல் இருப்பது வெளி நாட்டுக்கு பகிஷ்காரம் செய்தது போன்ற தண்டன்னையாகும். நான் என்பது யார்? அது பரமாத்மா; உண்மையில் அது பரமாத்மாவின் பிரதிபிம்பமே! அவனின்றி நான் என்பது ஒன்றில்லை.

திருவண்ணாமலையில் உறைந்த ரமண மகரிஷியும் இதையேதான் உபதேசித்து வந்தார். நான் யார் என்று விசாரணை செய்து வா. உண்மை ஒளி உனக்குக் கிடைக்கும் என்றார் அவர்.

அறிவில்லாதோர் வெளியேயுள்ள இன்ப நுகர்ச்சிகளையே தொடர்கின்றனர். அவர்கள் விரிந்து கிடக்கும் மரண வலையில் விழுகின்றனர். ஆனால் தீரர்களோ – அறிவாளிகளோ - அழிவற்ற அவ்வுண்மைப்பொருளை அறிந்து - நிலையற்ற இவ்வுலக வாழ்க்கைகளில் – எதுவும் நிலை கிடையாது என்று தெரிந்து எதையும் நாடுவதில்லை.

மூடர்கள் இவ்வுலகத்து இன்பங்களைப் பின் தொடர்ந்து ஓடுகின்றனர். ஆனால் அங்கு இவர்களைப் பிடித்துப் போட விரித்து வைத்திருக்கும் மரணத்தின் வலையில் விழுந்து அகப்பட்டுக் கொள்கின்றனர். அதன் பிறகு அதனின்று மீள்வதேது? ஆனால் அமர நிலையைக் கண்டு கொண்ட அறிஞர்களோ, இவ்வுலகத்து அநித்திய பொருள்களில், அழிவிலாப் பரம்பொருளைத் தேடுவதில்லை. அவர்களுக்கு இங்கு கிடைக்கமாட்டாது என நிச்சயம் தெரியும்.

அவனுக்கு இங்கே ஒரு கருமத்தைச் செய்ததால் பயன்இல்லை. ஒன்றைச் செய்யாததாலும் எப்பயனும் இல்லைதான். எல்லாப் பொருள்களிலும் நாடத் தகுந்ததும் அவனுக்கு ஒன்றும் இல்லை. இந்நிலையில் அவன் ஏன் உலகத்து அநித்தியமான இன்பங்களின் மீது நாட்டங் கொள்ளப்போகிறான்? கொள்ளவே மாட்டர்ன்.

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் வடிவான இந்திரிய நுகர்ச்சிகளை எந்த அறிவால் மனிதன் அனுபவிக்கின்றானோ, அதைக் கொண்டே அவன் அவைகளைப் பிரித்தும் காண்கின்றான். அதற்குப் புறம்பாக உள்ளது எது? இதுவே ஆத்மாவாகிய அதுவாகும்.

எதன் மூலம் நாம் ஒலிகளையும், வண்ணங்களையும், நறுமணங்களையும், இனிய காதல் உணர்வுகளையும் உணருகின்றோமோ, எதனருளால் நாம் ஞானப் பேற்றை எய்துகிறோமோ, உண்மையில் எதைக்கொண்டு நாம் எதையும் அறிய இயலுமோ அது ஆத்மாவாகிய அதுவே யாகும்.

எது தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் அப்பாற்பட்டதோ, எதைவிட உயர்ந்தது வேறொன்றுமில்லையோ அதுவே இது.

'நம்மிடம் உள்ளதும், உயர்ந்ததும், எங்கும் எல்லாவற்றிலும் உறைந்துள்ள ஆத்மாவின் வாயிலாகத்தான், நாம் விழிப்பிலும் கனவிலும் உணர்வு நிலையோடு கூடியிருக்

கின்றோம்.' என்பதை அறிந்துகொள்ளும் அறிஞர் துன்ப மிலா நிலையைப் பெறுகின்றனர்.

நம் வாழ்க்கையே இந்த ஆத்மாவில் கட்டுண்டு உள்ளது. அதனுடைய ஆற்றலினால்தான் நாம் உயிர் வாழ கின்றோம் என்று அறிந்து கொண்ட பிறகு துன்பம் எப்படி ஏற்படும்? ஏற்படாதல்லவா!

கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் - ஆகிய இம் முக்காலங்களின் அதிபதியை, மலர்களின் இனிமையை ஒரு தேனீ அனுபவிப்பதைப்போல், இந்திரியங்களாகிய மலர்களை அனுபவிக்கும் ஆத்மாவை உள்ளுயிரை ஒருவன் அறியும் போது, அவன் அச்சமிலாப் பெரு வாழ்வை - பெருநிலையை எய்துகின்றான். இது உண்மை யில் அதுவே.

முக்காலத்திற்கும் அதிபதி பரமாத்மாவாகும். அப் பர மாத்மாவின் ஒரு பகுதியே ஒரு சாயலே இச் ஜீவாத்மாவா கும் என்று அறிந்து கொண்டுவிட்டால் போதுமே! அதன் பிறகு அவனுக்கு அச்சமேது! எளிதில் பெருநிலை கிட்டி விடும் அவனுக்கு.

நீர் எல்லாம் தோன்றுவதற்கு முன்னர் ஆதியில் தன் எண்ணத் தீயினின்று பிறந்தவரும், இதயத்தில் புகுந்து மூலகங்களோடு உறைபவருமான இப் பிரம்மம். - இது உண்மையில் அதுவே

முன்னைப் பழம் பொருட்கு
முன்னைப் பழம் பொருளே!

என்று மணிவாசகப் பெருமானும் பாடியுள்ளாரே!

இயற்கையாயும், உயிர் ஆற்றலாயும் வெளியாகும் முடிவிலாத் தோற்றத்திலுறையும் இறைவன்; மூலகங்களி லிருந்து பிறந்தவரும், இதயத்தில் புகுந்து அங்கு வாழ்பவரு மான தெய்வம் - இது உண்மையில் அதுவே.

இயற்கையின் எழில் இறைவனின் திருவுருவம் தானே! அதுவே ஒவ்வோர் இதயத்திலும் குடிகொண்டுள் ளது. இது உண்மை.

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர் தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்த மணமலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் ஊறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே."

என்று வடலூர் இராமலிங்க சுவாமிகளும் பாடியுள்ளாரே!

ஒரு தாயின் கர்ப்பப்பையில் வளர்ந்துவரும் கருவைப் போல், புனித வேள்விகளின் பொழுது தீக்கடையப் பயன்படும் அரணிக் கட்டையில் மறைந்துள்ளவரும், அனைத்தும் அறிந்தவரும், ஞான வழியில் செல்வோர், கர்ம வழியில் செல்வோர் இவர்களின் காலைப் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளும் அக்னிதேவன். இது உண்மையில் அதுவே!

அறணிக்கட்டையைக் கடையும் பொழுது நெருப்பு உண்டாகிறது. அது தோன்றுவதற்கு முன் எங்கு இருந்தது. அவ்வண்ணம் மனதிற்கு தோன்றியும் கண்ணிற்குப் புலப்படாது உறைந்து கிடக்கின்றான் அக்னித்தேவன்.

எதனில் சூரியன் உதயமாகிப் பிறக்கின்றானோ, மீண்டும் எதில் சென்று அவன் மறைகின்றானோ, எதனில் தேவர்கள் அனைவரும் தங்கள் தோற்றத்தைப் பெற்றுள்ளனரோ. எதற்கப்பால் எந்த மனிதனும் போக முடியாதோ் – இது உண்மையில் அதுவே.

இங்கு எது இருக்கின்றதோ, அங்கேயும் அதுவே தான். அங்கு எது உள்ளதோ அதுவே இங்கும். இங்கு எவன் வேற்றுமை காண்கின்றானோ அவன் மரணத்தினின்று – மரணத்தையே பெறுகிறான்.

எனக்கென் றிருந்த உடல் பொருளும்
யானும் நினவன்றீந்த வண்ணம்

அனைத்தும் இருந்தும் இலதாக
அருளாய் நில்லா தழிவழக்காய்
மனத்துள் புகுந்து மயங்குவுமென்
மதிக்குட் களங்கம் வந்ததென்னோ
தனக் கொன் றுவமை அறநிறைந்த
தனியே தன்னந் தனிமுதலே"

என்று தாயுமானார் பாடலும் செப்புகின்றது.

இங்கேயிருப்பது அங்குமிருக்கின்றது; அங்கேயிருப்பது இங்குமிருக்கின்றது. அப்படியிருக்கும் போது, அப்பிரம்மத்தை ஒன்றுக்கு மேற்பட்ட பலவாய் காண்போர்கள், அதாவது பரப்பிரம்மம் ஒன்றுதான் என்று அறியாதவர்கள், இறப்பினின்றும் மீண்டும் இறப்பிற்கே அலைந்து திரிகின்றனர்.

"ஆங்கென்று மீங்கென்று முண்டோ
சச்சிதானந்த சோதிய கண்ட வடிவாய்
ஓங்கி நிறைந்தது கண்டால்"

என்று தாயுமானாரும் பாடியுள்ளாரே!

இதை மனதாலேயேதான் அடையவேண்டும். இங்கு சிறிதும் வேற்றுமை கிடையாது. இங்கு வேற்றுமை காணும் எவனும் மரணத்தினின்று மரணத்தையே யடைகின்றான்.

இவ்வுண்மையை மனத்தாலேதான் கற்றிடவேண்டும். பரம்பிரம்மம் பல இல்லை ஒன்றுதான். அதனை ஒன்றாய்க் காணாமல் பலவாய்க் கண்டால் - அப்படிக் காண்பவர் மீண்டும் மரணவாயிலிலேயே புகுந்து திரிகின்றனர். இது உண்மையில் அதுவே.

பூமியின் நான்கு திக்குகளிலும் சென்றாலும் உண்மையான தருமத்தை ஓரிடத்தும் காணமுடியாது. இருப்பதெல்லாம் உன் மனத்திலேயே. - ஆம் உன் மனத்திலேதான் குடி கொண்டிருக்கிறது. ஈசுவரன், குரு, அடியார் இவர்களுடைய அருள் இருந்தாலுங்கூட, இன்னொரு அருள் இல்லையென்றால், ஜீவன் நாசமடைய வேண்டியதுதான். அந்த முக்கியமான அருள் தன் நெஞ்சி

னதாகும். தான் பெருநிலை - முக்தியடையவேண்டும் என்ற பேரார்வம் அவரவர் நெஞ்சில் உதிக்கவேண்டும். அது இன்றேல் எது நடைபெறும்!

காற்றினால் மேகங்கூடுகிறது; மீண்டும் அக்காற்றி னாலேயே அது கலைகிறது. அவ்வண்ணமே பந்தம் கற் பிப்பதும் மனதுதான்; மோட்சம் க்றபிப்பதும் மனதுதான்.

நமது கட்டைவிரல் அளவில் ஒரு ஜோதிச்சுடர். தீச்சு டர். அவ்வண்ணமே நம் உள்ளே ஆத்மா வாழ்கின்றது. சென்றது, இனிமேல் வரப்போவது எனும் இவற்றின் தலைவனாய் அதனை அறியும்போது நமது அச்சங்க ளெல்லாம் அடியோடு நீங்கிவிடுகின்றன. - இது உண்மை யில் அதுவே.

நம்முள்ளுரையும் அச் சோதிச்சுடரை உள்ளார்ந்த, மனங்கொண்டு' அறிதல் வேண்டும். உண்மையில் நாம்' செய்ய வேண்டியது அதுவே!

இதயக்குகையினுள்ளே அம் மாபுருஷன் கட்டை விரல் அளவினனாய் - புகையில்லாத - சோதிச்சுடராய் உள்ளான். நேற்று உண்டானதற்கும் நாளை உண்டாகப் போவதற்கும், பரம்பிரம்மமாகிய ஈசுவரனாகிய - அவனே இன்றைக்குள்ளவன், நாளைக்குமுள்ளவன்.

எவ்வித புகையில்லாத தீச்சுடர்போல் கட்டைவிரல் அளவில் மிளிர்ந்து கொண்டிருப்பது ஆத்மா. கடந்த காலம், வருங்காலம் இவைகளின் தலைவன் அதுவே. இன்றும் நாளையும் என்றும் மாறாத ஒரே நிலையினன் - இது உண்மையில் அதுவே.

ஒரு மாபெரும் மலைமுகட்டில் பெய்யும் மழையானது, பாறைகளின் வழியாக நாற்புறங்களிலும் வழிந்தோடுகி றது. அவ்வண்ணமே பலவகைப்பட்ட பாகுபாடுடைய நிலையில் பொருட்களைக்காணும் மனிதன், நாற்றிசைக ளிலும் அதனை பின்தொடர்ந்து ஓடுகின்றான்.

அவன்தான் என்ன செய்வான்? அவன் அறிந்தது அவ்வளவு தான். அதனால் அவன் 'அதோ இதோ' என்று

மருட்சியடைந்து நாற்திசைகளிலும் ஓட வேண்டியிருக்கிறது.

பரிசுத்தமான தண்ணீரில் பரிசுத்தமான தண்ணீரைக் கலந்தால், எவ்வண்ணம் பரிசுத்தமான தண்ணீராக ஆகிறதோ அவ்வண்ணமே உண்மை உணர்ந்த பேரறிஞனின் – முனிவனின் – ஆத்மா ஆகிறது.

"உள்ளது மில்லதுமாய் முன் – உற்ற
உணர்வது வாயுன் னுளங்கண்ட தெல்லாந்
தள்ளெனச் சொல்லி என் ஐயன் – என்னைத்
தானாக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி
சங்கர சங்கர சம்பு சிவசங்கர சங்கரசம்பு"

என்று தாயுமானாரும் பாடியுள்ளாரே!

சுத்தமான நீரின்மேல் பெய்யும் தூயநீர், அதோடு ஈரறக் கலந்து விடுகிறதல்லவா! அது போலவே ஓ! நசிகேதா! அறிஞனின் ஆத்மா பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து விடும்.

பெருகியோடும் நதிகள் எங்ஙனம் நாம ரூபங்களை இழந்து சமுத்திரத்தில் மறைகின்றனவோ அவ்வண்ணமே ஞானி நாமரூபங்களிலிருந்து விடுபட்டு உயர்ந்ததற்கெல்லாம் உயர்ந்த, மேலானவற்றிற்கெல்லாம் மேலான தேஜோமயமான – ஜோதிச்சுடரான – பரம்பொருளை அடைகிறான்.

## 5

பிறப்பே இல்லாதவனும், கோணலில்லாத புத்தியுடையவனும் ஆகிய அவன், இப்பதினோரு வாயிலுடைய பட்டினத்தைக் கொண்டுள்ளான். அவனைச் சிந்தித்து உணர்ந்தபின் எவனும் துக்கிக்க மாட்டான். சரீரத் தொடர்பினின்றும், பிறப்பினின்றும் விடுபட்டு முக்தனாய் நிற்கின்றான் – இது உண்மையில் அதுவே!

பிறப்பில்லாததும், எப்போதும் உணர்வுடன் ஒளிர்ந்து கொண்டிருக்கும் தூய அழிவிலா ஆத்மாவுக்குப் பதினோரு வாயில்கள் கொண்ட இவ்வுடலென்னும் நகரம் உடைமையாகின்றது. எனவே இந்நகரின் தலைவனை தியானித்து உணர்வதன் மூலம் - மனிதன் துன்பங்களிலிருந்து விடுபடுகிறான்; அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

இந்திரியங்களை வசப்படுத்திய புருஷன் மனத்தால் எல்லாக் கருமங்களையும் துறந்து சுகமாக பலவாயில்களுடைய புரியில் ஒன்றும் செய்யாமலும், செய்விக்காமலும் இருக்கின்றான்.

அறையாத மிகு பெருங்காற்று அடித்தாலும்
சிறிதும் அசையாதே அவியாதே - அண்டபகிரண்ட
துறையாவும் பிண்டவகைத்துறை முழுதும் விளங்கும் -
தூண்டதே விளங்குகின்ற ஜோதி மணி விளக்கே!

என்று வள்ளலாரும் பாடியுள்ளாரே!

இம்மாபெரும் பிரபஞ்சத்தின் அண்ட வெளியில் அவன் சூரியனாய் உள்ளான். காற்றாகவும் வானாகவும் உள்ளவன் அவனே! யாகம் புரியும் இடத்தில் அவன் அர்ச்சகனாயுள்ளான். வேள்விக்குரிய பாத்திரத்தில் அவன் சோமரசமாய் திகழ்கின்றான். மனிதருள்ளும் தேவருள்ளும் குடி கொண்டுள்ள அவனே வானுலகங்களிலும் வாழ்கின்றான். அவன் நிலத்திலும் உள்ளான்; நீரிலும் உள்ளான். அறமும், உண்மையும் அவனே! ஆற்றலும் அவனே!

எங்கும் நிறை நாதபிரம்மம், இறைவன் இல்லாத இடம்தான் எது?

இதயத்தில் சுடர்வடிவாய் கோயில் கொண்டிருக்கும் அவ்வாத்மாவை - ஜீவ ஒளியை அந்தக் கரணங்கள் - ஆற்றல்கள் - அனைத்தும் வணங்கி நிற்கின்றன. உள்ளிழுக்கும் மூச்சையும் வெளியிடும் மூச்சுக் காற்றையுங்கூட அவனேதான் ஆளுகின்றான்.

அவனோ இவ்வுடலாகிய நகரத்தின் அதிபதி. அதன் பிறகு அங்குள்ள அனைத்தும் அவனுக்குட்பட்டவை தாமே! அவன் அவற்றை ஆள்வதற்குக் கேட்க வேண்டுமா?

இப்பெருநிலையிலுள்ள ஆத்மா, உடலோடு தளைப்படுத்தும், கட்டுக்கள் அவிழ்த்து எறியப்படும்பொழுது, எஞ்சியிருப்பது என்ன? - இது உண்மையில் அதுவே!

சலனமே இல்லாத - மௌனமே - இறுதி முடிவாகும் என்பதையே தட்சிணாமூர்த்தியின் மூர்த்தம் காட்டுகிறது.

பிராணனாலோ அபானனாலோ எந்த மனிதனும் ஜீவித்திருக்கவில்லை. இவ்விரண்டுக்கும் எது ஆதாரமாயுள்ளதோ அதனாலன்றோ அவன் ஜீவித்திருக்கின்றான்!

அழியும் இயல்புடைய மனிதன் உயிர் வாழ்வது உள்ளிழுத்து வெளிவிடும் மூச்சுக் காற்றாலல்ல. அவ்வண்ணம் மூச்சுக்காற்று இயங்குவதற்குக் காரணபூதனாக எவன் உள்ளானோ, அவனாலன்றோ உயர் வாழ்கின்றான்.

கௌதமா! கவனித்துக் கேள்! மிகவும் பழமையானதும் மிகவும் இரகசியமானதுமான இப் பிரம்மத்தைப் பற்றி மீண்டுங் கூறுகிறேன். இதையறியாமல் மரணத்துக்குப் பின் ஜீவாத்மா எவ்வண்ணம் உழல்கிறதென்றும் கூறுகிறேன்.

அழிவிலா பிரம்மத்தைப் பற்றிய மர்மம் பற்றியும், இறப்புக்குப் பின்னர் ஆத்மாவுக்கு என்ன நேர்கிறது என்பது பற்றியும் உனக்குக் கூறுவேன்.

அவரவர் கருமத்துக்கும் ஞானத்துக்கும் தக்கவாறு, உடல்படைத்தோர் சிலர், வேறு உடல்களை வேண்டி யோனியை யடைகின்றனர். சிலர் தாவர நிலையைப் பெறுகின்றனர்.

விடுபடும் ஆத்மா வேறொரு தாயின் கருப்பையையடையலாம். அதனால் அது வேறொரு புது உடலை எய்தலாம். அல்லது மரம் செடிகளின் நிலையையும்

அடையலாம். அது அவரவர் செய்துள்ள கருமத்துக் கொத் தாற்போல் அமையும்.

நல்ல கருமத்தைச் செய்கிறவர்கள் நல்ல கருப்பையும், கெட்ட கருமத்தைப் புரிவோர் கெட்ட கருப்பையும் அடைகி றார்கள். சத்துவ குணமுடையோர் மேலே செல்கிறார்கள்; ரஜோ குணமுடையவர்கள் மத்தியில் நிற்கின்றனர்; கடைக்குணச்செயலுடைய தாமசர்களோ கீழே செல்லு கின்றனர்.

·உறங்கும்பொழுது எவன் பலவிதமான ஆசைகளை உருப்படுத்திக் கொண்டு விழித்திருக்கின்றானோ, அவனே சுத்தனாவான்; அவனே பிரம்மம்; அவனே அமி ருதம். அவனிடத்திலேயே உலகங்களெல்லாம் நிலைபெறு கின்றன. அவனை மீறிச்·செல்பவன் எவனும் இல்லை. இதுவே அது.

துயிலின்போது விழித்திருந்து, கனவுகளாம் வியப்பை நிகழ்த்துவதுமான ஆத்மன் ஒன்று உண்டு. அவனே தூயோன். அவனே உண்மையில் அழிவிலாப் பெருவாழ்வு எனப்படுவோன். இவ்வுலகமனைத்தும் அப்ப ரப் பிரம்மத்தில்தான் நிலைகொண்டிருக்கின்றன. அவன் நிலைக்கு அப்பால் செல்லவல்லோர் எவருமிலர். இது உண்மையில் அதுவே!

ஒரே நெருப்பு எவ்வண்ணம் பொருள்களனைத்தி லும் புகுந்து, அவை அவை உருவத்துக்கேற்றவாறு தனித் தனி உரு கொண்டதோ, அவ்வண்ணமே உயிர்களனைத்திற்கும் ஒன்றேயாகிய அந்தராத்மா அந் தந்த உருவங்களுக்குத் தக்க உருவுடையதாக ஆகி, அவை கட்கப்பாலும் உள்ளதாயிற்று.

எரிபொருள்களுக்குத் தக்கபடி தீ – ஒன்றேயெனி னும் – புதுப்புது வெவ்வேறு வடிவங்கள் எடுப்பதைப் போல், எல்லா உயிர்களிலும் வாழ்கின்ற ஒரே ஆத்மா, தான் புகும் உருவங்களுக்கேற்றபடி புதுப்புது வடிவங்கள்

எடுக்கின்றது. அவன் அனைத்தின் உள்ளும் இருக்கின்றான்; புறமும் இருக்கின்றான்.

ஈசுவரனுடைய நாமங்கள் அனந்தம். ரூபங்களும் அனந்தம். நீ எந்த நாம ரூபத்துடன் உள்ளன்புடன் அறிய விரும்புகிறாயோ அதே நாம ரூபத்துடன் உனக்குப் புலப்படுவான். ஒரே பொருளான தண்ணீரைச் சிலர் ஜலம் என்றும்; சிலர் பாணி என்றும் கூறுவதுபோல பரம்பொருளாகிய ஒன்றையே சிலர் சிவன் என்றும், சிலர் விஷ்ணு என்றும், சிலர் அல்லா என்றும் சிலர் கிறிஸ்து என்றும் அழைக்கவில்லையா?

காற்று ஒன்றே ஆனாலும், எங்கெங்கு நுழைகிறதோ, அவ்வற்றிற்குத் தக்கபடி புதுப்புது வடிவங்கள் பெறுவது போல், எல்லா உயிர்களுள்ளும் வாழும் ஒரே ஆத்மாவும், தான் நுழையும் உயிர்களுக்கு தக்கப்படி புதுப்புது வடிவங்கள் எடுத்துக் கொள்கின்றது. அவன் எங்கும் உள்ளும் புறமும் வியாபித்துள்ளான்.

அவன் அந்தந்த உருவங்களிலும் உறைந்து எங்கும் நிறைந்துள்ளான்.

இவ்வுலகுக்கு கண்ணாகவுள்ள சூரியன், நமது கண்ணின் குற்றங்களால் எவ்விதம் பாதிக்கப் படுவதில்லையோ அதேபோல், தோன்றியுள்ள உயிர்களனைத்திற்கும் ஒன்றேயாகிய அந்தராத்மா, உலகத்துத் துன்பங்களால் பாதிக்கப்படாமல் அவைகட்கு அப்பால் உள்ளது.

இப்பரந்த உலகைக் காணும் சூரியன், தன்னைக் காணும் பார்வையின் குற்றங்களால் எந்தவிதத்திலும் தீண்டப்படுவதில்லை. பாதிக்கப்படுவதில்லை. அவ்வண்ணமே அனைத்தினுள்ளும் கோயில் கொண்டு வாழும் ஒரே ஆத்மா - பரம்பொருள் - புறத்துயரங்களால் தீண்டப்படுவதில்லை. பற்றுஅற்று இருப்போனை பற்றிக் கொள்வது எப்படி? முடியாதே!

தாமரைப்பூ மலரும் அதே வேளையில் முள்ளப்பூவும் மலர்கிறது. சுவையான பலாப்பழம் பழுக்கும் அதே

வேளையில் கசப்பான எட்டிப்பழமும் பழுக்கிறது. இருந்தாலும் இவைகளின் குணதோஷங்கள் ஆதவனை அணுகாது – தொடாது.

"அவனேயவனு மவனுமவனும்
அவனே மற்றெல்ல முமறிந்தனமே"

என்று நம்மாழ்வாரும் பாடியுள்ளாரே!

இவ்வுலகிலுள்ள பொருள் அனைத்திற்கும் ஆண்டவனும் அந்தராத்மாவுமாகிய அவன், ஒன்றேயாகிய தன் வடிவைப் பலவாகச் செய்யும் அவனை, தங்களிடம் உறைபவனாய்க் காணும் தீரர்களுக்கே அழிவிலாச் சுகம் ஏற்படும்; மற்றோருக்கில்லை.

எல்லாவற்றுள்ளும் நிலை கொண்டிருக்கும் பரம்பொருள் ஒரே தலைவனாவான். அவன் பல வடிவங்களுள் புகுந்து அந்தந்த வடிவினனாகின்றான். அப்பேர்ப்பட்டவனை தன் ஆத்மாவில் காணும் அறிஞனே –அந்த அறிஞன் மட்டுமே – அழிவிலாப் பேரின்பத்தை எய்துகின்றான்.

அநித்தியமான பொருள்களிடை நித்தியமாயும், அறிவுள்ள உயிர்களில் அறிவாயும், ஏகமாய் நின்று அனைவருடைய ஆசைகளையும் அளிப்பவனாயுள்ள அவனை, தங்களிடம் உறைபவனாய் காணும் தீரர்களுக்கு சாசுவதமான சாந்தி ஏற்படுகிறது. மற்றவருக்கில்லை.

"உடல்பொய் யுறவாயின் உண்மையுற வாகக்
கடவாரார் தண்ணருளே கண்டாய் – திடமுடனே
உற்றுப்பார் மோனன் ஒருசொல்லே
யுண்மைநன்றாய
பற்றிப்பார் மற்றவெல்லாம் பாழ்"

என்று தாயுமானாரும் பாடியுள்ளார்.

அழிந்து போகும் பொருள்களுக்கு நடுவில் அவன் அழிவில்லாதவனாகத் திகழ்கின்றான். உணர்வோடு கூடிய உயிர்களின், தூய உணர்வு நிலையும் அவனே!

இதையறிந்து தம் ஆத்மாவில் அவனைக் காணும் அறிஞர் மட்டுமே அழிவிலா சாந்தி பெறுகின்றனர்.

"அது" எனப்படும் அந்த மேலான ஆத்ம சுகத்தை சுட்டிக்காட்ட இயலாதாயினும் இதுவே இங்கு பிரத்தியட்சமாய் விளங்குவதாம் என்று ஞானிகள் கருதுகின்றனர். அது தன்னில்தானே ஒளிரும் சுடர் போன்றதா அல்லது வேறு ஒளியைப் பெற்று பிரகாசிக்கும் பொருள் போன்றதா? அதை எங்ஙனம் அறிவது?

"இது அதுவே" என அவர்கள் சொற்களால் விளக்க முடியாத உள்ள பேரின்பத்தை உணர்கின்றனர். "இதனை" எங்ஙனம் அறிய முடியும்? அது, தானே ஒளிர்கின்றதா? அல்லது மற்றொன்றின் ஒளியைப்பெற்று ஒளிர்கின்றதா? என்று கேட்டான் நசிகேதன்.

பொருள்களைப் பார்ப்பது உள்ளத்துள் ஒளிரும் ஒளியேயல்லாது, வெளியில் வீசும் ஒளியல்ல இந்த உள்ளொளி தன்னில்தானே ஒளிர்கிறதா அல்லது ஈஸ்வர சங்கல்பத்தினால் ஏற்படும் ஒளியால் பிரகாசிக்கின்றதா? எப்படி அறிவோம் அதை? பரமாத்மா வேறு ஆத்மா வேறா? அல்லது இரண்டும் ஒன்றா? "அதுவானால் அது வாவர், அதுவே சொல்லும்" அது அத்தைத்தின்று அங்கேயே இருக்கும்" என்று பகவான் ரமணரும் கூறியுள்ளாரே!

அங்கே ஆதவன் பிரகாசிப்பதில்லை. சந்திரனும் நட்சத்திரங்கள் கூட பிரகாசிப்பதில்லை. மின்னல் கொடிகளுக்கும் அங்கு பிரகாசம் கிடையாது. இந்த அக்கினி எப்படிப் பிரகாசிக்கும்? சுயப் பிரகாசமாயுள்ள அவனைக் கொண்டே மற்ற அனைத்தும் பிரகாசிக்கின்றது. அவனொளியினாலேயே இவையனைத்தும் விளங்குகின்றது.

"மைக்கால் இருட்டு அனைய இருள்இல்லை இருவினைகள்
வந்து ஏற வழியும் இல்லை
மனம் இல்லை, அம்மனத்து இனம்இல்லை வேறு ஒரு

வரவுஇல்லை, போக்கு இல்லை.
அக்காலம் இக்காலம் என்பது இலை எல்லாம்
அதீ தமயம் ஆனது அன்றோ?
அண்ட பகிரண்டமும் அடங்க ஒருநிறைவு ஆகி
ஆனந்தம் ஆன பரமே!"

என்று பரவுகிறார் தாயுமானவர்.

அருணனோ, சந்திரனோ, அங்கு உலவும் விண் மீன்களோ ஒளிர்வதேயில்லை; மின்னல்களும் அங்கு பளிச்சென பிரகாசிப்பது கிடையாது. இவ்வையத்து நெருப்புக்கள் அவ்வெதனினும்;இல்லை. சுயப்பிரகாசமாய் ஒளிரும் அவன் ஒளியினின்றே இவையனைத்தும் ஒளி பெறுகின்றன. அவனது பேரொளிதான் படைப்பனைத்தையும் பிரகாசிக்கச் செய்கிறது! என்று யமதர்மன் விளக்கினான்.

கண்முதற் புலன்க ளந்தக்கரணங்கள்
விளங்குமெத்தாற்
றண் பதியருக்கனங்கி தாரகை விளங்குமெத்தால்
விண்முதற் தமியாவும் விளங்குமைத்தாலந்த
உண்மையாம் சிவப்ரகாச ஒளியது வாழிவாழி

எனத் தாயுமானவரும் பாடியுள்ளாரே!

## 6

மேலே வேரும் கீழே கிளைகளுமுள்ள இந்த அசுவத்தமரமே மிகவும் பழமையானது. அதன், மூலமே சுத்தம்; அதுவே பிரம்மம்; அதுவே அமிருதமுமாகும். அதனிடத்திலேயே இவ்வுலகங்களெல்லாம் நிலைபெறுகின்றன. அதை மீறிக்கொண்டு செல்பவன் எவனும் இல்லை. இது உண்மையில் அதுவே.

நித்தியம் - அழிவின்மை - என்னும் ஓர் அசுவத்த மரம் உயரே - விண்ணில் வேர்களைக் கொண்டிருக்கின்றது. அதன் கிளைகளோ கீழே பாதாளம் வரை

பரந்திருக்கின்றன. அதுவே ஒளி சான்ற தூய பரம் பொருள் – பிரம்மம் - ஆகும். அமரநிலை கூட அதுவே தான். அனைத்துலகமும் அப்பரம் பொருளில் தான் நிலை கொண்டுள்ளன. அப்பரம் பொருளுக்கப்பால் எவரும் செல்ல இயலாது. இதுவே அது.

சேக்கிழார், தன் பெரிய புராணத் தோற்றுவாயில் பாடிய "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவ"னாயிருக்கும் பரம்பிரம்மமே – பரமாத்மாவே – வேராகும். இன்றிருந்து நாளை ஞானந் தோன்றியதும் இல்லாமற் போவதைக் குறிக்கவே இங்கு அசுவத்தமரத்தை சொல்லப்பட்டுள்ளது.

இப்பிரபஞ்சம் முழுவதும் அவனிடமிருந்தே மலர் கின்றது. இப்பிரபஞ்சம் முழுவதும் அவனது உயிரே கனல் கின்றது. பேரிடியின் ஆற்றலும் கம்பீரமும் அவனது பேராற்றலிலிருந்தே பிறக்கின்றது. அவனை அறிவோர் அமரநிலை எய்துவிடுவர்.

எங்கும், எதிலும் உறைந்துள்ள பரம்பொருளின் வியாபகத்தை அறிந்துகொண்டு விட்டபிறகு, இவ்வுலகில் இடமேது? அமரநிலை அடைய வேண்டியதுதான்!

அப் பிரம்மத்திடம் கொண்ட அச்சத்தினால்தான் அக்னி எரிகின்றது.. அவனுக்கு அஞ்சியே சூரியன் பிரகா சிக்கின்றது. அவனுக்கு அஞ்சியே மேகங்களும், காற்றும் ஏன்? மரணங்க கூட தம்தம் வழிகளில் இயங்குகின்றன.

அக்னி, சூரியன், மேகம், காற்று இவையனைத்தும் அவன் கட்டளைக்கு அடிபணிந்தே இயங்குகின்றன. ஆமாம்! மரணம் ஏற்படுவது கூட அப்படியேதான். அவனு டைய உத்தரவினால்தான். "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று பெரியோர்கள் சொல்லியுள்ளார் களே!

இச்சரீரம் விழுவதற்குமுன் இங்கேயே ஒருவன் "அவனை" அறிய முடியாமற்போனானெனின், பிறகு பிறப்பு இறப்பு சுழற்சியில் அகப்பட்டுக் கொண்டு

ஸ்தாவர ஜங்கமங்களில் சரீரத்தை மீண்டும் அடைபவனா கின்றான்.

இவ்வுடலினின்று உயிர் பிரிவதற்கு முன் அதாவது இப்பிறவியிலேயே - அவனைக்காண வல்லானாயின், அவன் பிறப்பு இறப்பு எனும் அடிமைத் தளையினின்று விடுதலை பெறுகின்றான். இன்றேல் அவன் புதுச்சிருஷ்டி களிலும், புது உலகங்களிலும் மறுபடியும் மறுபடியும் பிறந்து மடிகின்றான்.

இப்பிறவியிலேயே திடமான மனதுடன் ஆழ்ந்த தியானத்தின் மூலம் அவனை அறிந்து கொண்டானா யின், எளிதில் விடுதலை பெறுகின்றான். இன்றேல் பிறப்பு இறப்பு சகடத்தில் சுற்றிச் சுழன்றுகொண்டிருக்க வேண்டியதுதான்.

கண்ணாடியில் தெரிவதுபோல் அவரவருள்ளத்தி லும், கனவில் போல் பிதிருக்கள் உலகத்திலும், நீர் நிலையில் காணப்படுவதுபோல் கந்தருவருலகத்திலும், வெயிலும் நிழலும் போல் பிரம்ம லோகத்திலும் ஆன்மா அறியப்படுகின்றது.

ஒரு தூய கண்ணாடியில் நம் உருவம் தெரிவது போல், ஒரு தூய ஆத்மாவில் பிரம்மம் காணப்படுகின்றது. ஒளியை ஒத்த தூயோனாய் அவன் பிரம்மலோகத்தில் தோன்றுகின்றான். ஆனால் பிதிருக்கள் உலகத்தில் கனவு பற்றிய நினைவைப் போல் அவன் காணப்படுகிறான். அதே பிரம்மம், அமைதியான சலனமற்ற நீரில் தோன்றும் பிரதிபிம்பம்போல் காணப்படுகின்றான்.

அவரவர் உள்ளத்தின் நிலைக்கேற்ப "அவன்" உருவம் அமைகின்றது. ஆனால் உள்ளமோ அந்தந்த இடத் திற்கேற்றாற் போல் அமைகின்றது.

இம்மானிட உலகத்தில்தான் கண்ணாடியில் முகத் தைத் தெளிவாய்ப் பார்ப்பதுபோல் ஆத்ம தரிசனம் தெளி வாய்ப் பெறலாம். மற்ற உலகங்களில் எளிதல்ல.

தேவலோகம் சென்று பகவான் எங்கே என்று வினவி னால் அவர் பூலோகத்தில் இருப்பதாகவல்லவோ நாங்கள் அறிகிறோம் என்றே சொல்வார்கள்.

ஆத்மாவிலிருந்து, இவ்வுலகியல் சான்ற பொறிகள் எதுவும் தோன்றுவதில்லை எனவும், அவைகளின் - அப் பொறிகளின் - விழிப்பும் துயிலும் அவற்றின் சொந்த இயல்பே எனவும் அறிந்து கொண்டால் போதும். அத்த கைய அறிஞன் அதன்பின்னர் ஒரு நாளும் துன்புறுவதே யில்லை.

இப்படித்தான் என - ஆத்மாவுக்கும் பொறிகளுக்கும் உள்ள தொடர்பை தெரிந்து கொண்ட பிறகு துன்பம் தோன்றுவதற்கு என்ன இருக்கிறது! இப்படியோ, அப்ப டியோ, என்று சந்தேகங்கொண்டு அது பற்றி பூரணமாகத் தெரியாதவரைதான் துன்பம்! வியக்தமாக தெளிவாக தெரிந்து கொண்ட பின் துன்பம் எல்லாம் பறந்தே போகும்.

இப்பொறிகளுக்கப்பால் மனம் இருக்கிறது மனத் திற்கப்பால் பகுத்தறிவு உள்ளது. பகுத்தறிவுக்கப்பால் மனி தனுடைய ஜீவன் மிளிர்கின்றது. அதற்கப்பாலோ அனைத்தையும் படைத்தருளும், இப்பிரபஞ்சத்துப் பெரும் பொருள் இலங்குகின்றது.

எதற்கெடுத்தாலும் மனம் தான் முன்னிற்கும். ஆழ்ந்த மனத்தில் பகுத்தறிவு தோன்றும். அப்பகுத்தறிவுக்கு காரண பூதனாயுள்ளது ஜீவனாகும். இவ்வனைத்திற்கும் மேலாயுள்ளது தான் பரமாத்மா.

அதற்கும் அப்பால், எங்கும் வியாபித்துள்ள - வரை யறைகளுக்கப்பாற்பட்ட - மாபுருஷன் விளங்குகின்றான். அழியக் கூடிய மனிதன், அழியாப் பொருளாகிய "அவனை" அறியும் பொழுது விடுதலை அடைகின்றான். அடுத்து அமரநிலை எய்துகின்றான்.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தி ஆகி
அருளொடு நிறைந்ததுஎது? தன் அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்ததுஎது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோடிகள் எலாம்
தம் தெய்வம் எம் தெய்வம் என்று.

.................................................................

என்றெல்லாம் தாயுமானவரும் பாடியுள்ளாரே!

எவனும் இதைக் கண்ணால் காண்பதில்லை. இதனுடைய உருவமும் கண்முன் நிற்காது. உறுதியான மனம் படைத்தவர்களாலும் நிச்சயமான புத்தியாலுமே இது அடையத் தக்கதாகும். அவ்வண்ணம் இதை அறிந்தவர்கள் சாகா நிலையை அடைகின்றனர்.

கண்ணுக்குத் தோன்றும் வடிவில் இல்லை அவனது உருவம். அழியத்தக்க கண்களால் அவனை எவரும் காண இயலாது. தூய எண்ணங்களால், தூய மனத்தால், தூய இதயத்தால் மட்டுமே அவன் அறியப்படுகிறான். அவனை அறிந்தோர் எளிதில் அமரவாழ் வெய்துகின்றனர். துவிஜர்கள் பரப்பிரம்மத்தை நாள்தோறும் அக்கினியில் பூசிக்கின்றனர். யோகிகளோ தங்கள் இதயத்திலேயே பூசிக்கின்றனர். முதிர்ச்சி பெறாத அறிவுடைய சாதாரண மக்களோ பிம்பங்களில் பூசிக்கின்றனர். ஆனால் சமதர்சிகளோ எங்கும் நிறை பொருளாகவும் பூசிக்கின்றனர்.

ஞானேந்திரியங்கள் ஐந்தும் எப்பொழுது மனதுடன் ஒன்றி அசையாது நிற்கின்றனவோ, புத்தியும் தொழிலற்றுப் போகின்றதோ, அதுவே உயர்ந்த நிலையாகும்.

பகுத்தறிவு நிலைகொண்டு, ஐம்பொறிகளும் மனமும் மோனத்தின் அடங்கி அமைதி யெய்தும்பொழுது பரகதி – மேலான பதவி – தொடங்கப்பெறும்.

இந்திரியங்கள் அமைதிபெற்ற அந்த ஸ்திரமான இந்திரிய தாரணையே யோகம் ஆகும். யோகமானது தோன்றி மறையும் இயல்புடையதாதலால், அப்போது அந்நிலையை அடைந்தவன் மிகுந்த கவனமாக இருத்தல் வேண்டும்.

பொறிகள் அமைதிபெற்ற இந்த உறுதிப்பாடே யோகம் எனப்படுகிறது. யோகம் தோன்றி மறையும் – அடையவும் இயலும்; இழக்கவும் நேரும் – ஆதலால் எப்போதும் விழிப்புடன் ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும். சற்று கவனக் குறைவாய் இருந்தால்கூட போதும்; பாதை தவறிவிடும்.

மனத்தாலும் கண்ணாலும் வாக்காலும் அடைதற்கு முடியாதது ஆன்மா. இருந்தாலும் ஆத்மா உளது என்று உணர்ந்து கொள்ளும் ஞானிகளிடமிருந்து அல்லாது வேறு எவரால் அடையக்கூடும்?

எண்ணங்களும் சொற்களும் எப்பொழுது ஆத்மாவை எய்துதல் கிடையாது; எய்துதல் முடியாது. கண்ணாலும் அதனைப் பார்க்க முடியாது. "அவன் உள்ளான்" என உணர்ந்து சொல்வோனால் அன்றி, பிறகு எவனால் – எவ்வண்ணம் – அறிதல் இயலும்? பிரம்மத்தை இல்லை என்று ஒருவன் கருதுவானாயின் அவன் இல்லாதவனாகவே ஆகிவிடுகிறான்.

உண்டு, இல்லை இவ்விரண்டினுள் முதலில் உண்மையான நம்பிக்கையால் காணக்கூடும் என்று அதில் நாட்டம் பெற்றவனுக்கு, உண்மைநிலை, தானே வெளிப்படும்.

அவனைக் காணக்கூடும், காணக்கூடாது என்ற இவ்விரு நிலையில், அவன் இருக்கிறான் என நம்பிக்கையுடன் காணும்போது, அவனது இயல்பின் வெளிப்பாடு ஒளிர்ந்து மிளிரும். அவனைக்காணக்கூடும் என்று அதில்

சகுண நாட்டம் கொண்டவனுக்கு, நிர்க்குணமாய் அருவுருவுகளுக்கு அப்பாற்பட்டதும் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாததுமான அந்த உண்மை நிலை அவசியம் வெளிப்படும். அவனை அவனது இயல்பில் அனைத்திற்கும் அப்பாற்பட்டுள்ள அவனது உண்மை நிலையில் உணரவேண்டும். நுனியில் பிளவுபட்டுள்ள நூல், ஊசியின் காது வழியே நுழையாதல்லவா! அவ்வண்ணம் ஆசை அற்பமிருந்தாலும் ஒருவன் பரப்பிரம்மத்தின் சந்நிதானத்தை அடை இயலாது.

மனதில் – இதயத்தில் – பொதிந்துள்ள ஆசைகள் அனைத்தும் எப்போது ஒழிகின்றனவோ அழிகின்றனவோ – அப்போதுதான் சாகும் இயல்புடைய மனிதன் இறவா வரம் பெறுகின்றான். பிரம்மத்தை அநுபவிக்கிறான்.

இதயத்தைப் பற்றி நிற்கும் ஆசைகள் அனைத்தும் நீத்துவிடும் பொழுது, பிறப்பு இறப்பில் கட்டுண்ட மனிதன் அழிவிலாப் பெருவாழ்வு பெறுகிறான். இவ்வுலகிலேயே அவன் பிரம்மத்தோடு ஒன்றிவிடுகிறான். இந்த உடலிலேயே அணைந்த தீபம்போல் சகல பந்தங்களும் நிவிருத்தியானபடியால் எளிதில் பிரம்மத்தை அடைகிறான்; பிரம்மமாகவே ஆகிவிடுகிறான்.

இதயத்திலுள்ள முடிச்சுகள் அனைத்தும் எப்போது இங்கேயே அவிழ்ந்து போகின்றனவோ அப்போதே அவன் – சாகும் இயல்புடைய அவன் – சாகாதவனாகின்றான். உபதேசத்தின் முடிவு இதுவே.

"அடக்கிப் புலனைப் பிரித்தே அவனாகிய
மேனியில்
அன்பை வளர்த்தேன்
மடக்கிக் கொண்டான் என்னைத் தன்னுள் சற்றும்
வாய்பேசா வண்ணம் மரபும் செய்தாண்டி"

என்று தாயுமானவரும் பகர்ந்துள்ளாரே!

அவனுடைய இதயத்தைப் பிணித்துள்ள கட்டுகள் அனைத்தையும் அவன் அவிழ்த்து எறியும்பொழுது, அவன் அழிவிலாப் பெருவாழ்வு - அமரத்வம் - அடைகின்றான். இதுவே புனிதமான போதனையாகும். அவித்தையாலும் அகங்காரத்தாலும் ஏற்படும் சிக்கல்களே இருதயத்திலுள்ள முடிச்சுகளாகும். அவற்றைத்தான் அவிழ்க்கவேண்டும். அது எளிதாகா விட்டாலும், மனத்திண்மையால் எளிதாக்கிக் கொள்ள்லாம்.

இருதயத்திலுள்ள நூற்றொன்று நாடிகளில், ஒன்றே ஒன்று தலையின் உச்சியை நோக்கிப் பாயும். அப்பாதை வழியே மேலே சென்று ஜீவன் அமரநிலை எய்துகின்றான். மற்ற நாடிகளோ மீண்டும் மரணத்துக்கே காரணமாகின்றன.

இதயத்தினின்று நூற்றியொரு நுண்ணிய வழிகள் பிறந்து வருவன. அவற்றுள் ஒன்று தலையின் உச்சிக்கு ஆயிரம் இதழ்களுள்ள தாமரையை நோக்கி - எழுந்து செல்கிறது. இதுதான் - அமர நிலைக்கு அழைத்துச் செல்லும் பாதையாகும். பிற பாதைகளோ பிறப்பிறப்பு எனும் முடிவுக்கு இட்டுச் செல்பவையாகும்.

உடலில் உறைந்து நிற்கும் அந்தராத்மா, மக்களின் இருதயத்தில் கட்டைவிரல் அளவுள்ளவனாக எப்போதும் வீற்றிருக்கிறான். புத்திவன்மையால் - புல்லிலிருந்து ஈர்க்கை உருவி எடுப்பது போல் - அவனை உடலிலிருந்து பிரித்தெடுக்கவேண்டும். அவனையே சுத்தன் என்றும் அமிருதன் என்றும் அறியவேண்டும்.

பாம்பும் அதன் மேற் சட்டையும் வெவ்வேறானவை. அதுபோல் ஆத்மாவும் சரீரமும் வெவ்வேறானவையாகும்.

அனைத்து உயிர்களிடத்தும் என்றும் கோயில் கொண்டு வாழ்வது ஆத்மனாகும்; இதயத்தில் சுடர்விடும் ஜோதி. உறுதியாக உண்மையைத் தேடுபவன் பட்டையினின்று, உள்ளுள்ள தண்டை உரித்தெடுப்பதைப் போல் -

ஆத்மாவை பிரித்தெடுத்து உள்ளார்ந்த அழிவிலா ஜோதிச் சுடரை அறிக; இத்தூய அழிவிலாப் பேரொளியை உண்மையில் அறிக!

யமனால் இவ்வாறு உபதேசிக்கப்பட்ட இந்த வித்தையையும், மற்ற யோக விதிகள் அனைத்தையும் பெற்று நசிகேதன் எல்லா மலங்களும் நீங்கினவானாய் மரணத்தைத் தாண்டி பிரம்மத்தையடைந்தான். வேறு எவனும் இவ்வாறு அத்தியாத்மதத்துவத்தை அறிவானென்றால் அவனும் அவ்வாறு பெருநிலையையடைவான். ஓம். குரு சிஷ்யர்களாகிய எங்களை இருவரையும் சேர்த்து பிரம்மம் காப்பாற்றட்டும்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

மரணதேவன் விளக்கங்கொடுக்க, நசிகேதன் இவ்வுன்னத உண்மையை கற்றறிந்தான். அதாவது அந்தராத்மா ஐக்கியத்தைப் பற்றிய உபதேசம் முழுவதையும் அவன் அறிந்தான். பின்னர் அத் தூயோனான நசிகேதன் பிரம்மத்தோடு ஒன்றுபட்டு அமர வாழ்வு எய்தினான்.

இவ்வண்ணம் தன் ஆத்மாவை - தன்னுள் கோயில் கொண்டுள்ள - பரம்பொருளை - அறிந்து கொள்வோன் எவனும் உண்மையில் அப் பெருநிலையை அடைவான். இது உண்மை.

ஓம். மரணதேவன், நசிகேதன் - (இவர்களாலே தானே நமக்கு இவ்வளவும் தெரிய வந்தது) இவ்விருவரையும் பிரம்மம் காப்பாற்றட்டும். எங்கும் சாந்தி நிலவட்டும்.

இந்த ஆத்மன் புத்தி கூர்மையாலோ, ஏராளமாகப் போதிக்கக் கேட்பதாலோ இது அடையப்படுவத்ன்று. யாரை இது ஆட் கொள்ளுகிறதோ அவனால் இது அடையப் பெறுகிறது.

ஈசனுடைய அருள் இல்லாது ஈசனை அறிந்து கொள்ள முடியாது என்பது ஒரு கொள்கை. ஆத்ம சொரூ

பத்தை கொடுப்பவர்கள் அன்றி மற்றவர்களை ஆத்ம சொரூபத்தை அறிந்து கொள்ளமுடியாது என்பது ஒரு கொள்கை. இதைக் கொண்டுதான் மணிவாசகரும் தம் சிவபுராணத்தில்,

"அவனருளாலே அவன்தாள் வணங்கி"

என்று பாடியுள்ளார்.

இவ்விரண்டு கொள்கைகளுமே சாதனத்துக்குப் பொருந்தியவைகளேயாம்.

கண்ணுடையவனே சூரியனைக் காண வல்லவனா கிறான். ஈசன் அருள் கூர்ந்து தனது இன்னியல்பையே ஜீவர்களிடத்திலும் வைத்துள்ளான்.

பூதங்களின் தனி மாத்திரைகளாகிய சுவை, ஒளி முத லியன உயிர்களிடத்துப் பொறிகளில் அமைந்திருப்பது போன்று ஜீவதத்துவத்தில் சிவ தத்துவமும் நிறைந்திருக்கி றது. அது பரம் பொருளின் அருள் ஆகும்.

"புகவே தகேன் உனக்கு அன்பருள்
யான் என் பொல்லா மணியே
தகவே எனைஉனக்கு ஆட்கொண்ட
தன்மை எப் புன்மை யுரை
மிகவே உயர்த்தி விண்ணோரைப்
பணித்தி அண்ணா அமுதே
நகவே தகும் எம்பிரான் என்னை
நீ செய்த நாடகமே!"

என்று திருச்சதகத்தில் மணிவாசகரும் பகர்ந்துள்ளாரே!

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

# சுவேதாஸ்வதர உபநிஷதம்

இந்த உபநிடதம் யஜுர் வேதத்தைச் சார்ந்த ஒளிக் கீற்றாகும்.

பிரம்ம அன்பர்களான வித்தியார்த்திகள், முனிவர்களை அண்டித் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது இது.

அம்முனிபுங்கவர்களும் அச்சீடர்களுக்கு நன்கு விளங்கும்படி வெகு அழகாக விளக்குகிறார்கள்.

இறைவன் தன் படைப்பிலேயே மறைத்து வைத்துள்ள தெய்வ சக்தியை ஞானிகள் தியான யோகத்தில் கண்டனர்.

மறைக்கப்பட்ட நிலையில் குணங்களால் மூடப்பட்டு உயிர்களனைத்திலும் அவன் வாழ்வதைக் கண்டனர்.

காலம் உட்பட மனிதனின் உயிர்வரைக்குமான எல்லாத் தோற்றக்காரணங்களையும் ஆள்வது அந்த ஒருவனே!

மகாப்பெரிய மாயையினால் ஒரே வட்டமாக அமைந்த அவனது சக்தியின் சக்கரத்தை - பிரம்ம சக்கரத்தை - அவர்கள் கண்டார்கள்.

உயிர்கள் அனைத்தும் வாழ்ந்து மறைகின்ற இந்த மிகப்பெரிய படைப்புச் சக்கரத்தில் ஓய்வேயில்லாது பறந்து கொண்டிருக்கும் ஓர் அன்னத்தைப் போல், மனித ஆத்மா உயிர் - சுழன்று சுழன்று அலைகின்றது.

இறைவன் எங்கேயோ மிகத்தொலைவில் இருப்பதாகவே அது நினைக்கின்றது.

ஆனால் எப்பொழுது இறைவனது அன்பு – காருண்யம், அதன்மேல் இறங்கிவருகிறதோ, அத்தருணம் அது தனது சொந்த அமரத்துவ வாழ்க்கையைக் க்ண்டு கொள்கிறது.

காணும் பொருள்கள் எல்லாம் . காலக்கிரமத்தில் அழிந்து போகின்றன. ஆனால் அறியாமையிருளை அழிக்கும் இறைவனோ என்றும் . அழிவில்லாதவனாய் இருப்பவர்.

அதனால் இறைவனை அறியுங்கள். அவனை அறிந்தால் அனைத்தையும் ஆளலாம். அவனை அறிந்தால் எல்லாத் தளைகளும் விழுந்து விடும். அறியாமை இருள் அழிந்தே போகும். எனவே துன்பங்கள் எல்லாம் நீங்கி விடுமல்லாவா!

அதனால் அவனையே தியானம் செய்யுங்கள். உடல் உணர்வுக்கப்பால் உள்ள மேல் நிலையை எளிதில் அடையுங்கள்.

மரக்கட்டையில் நெருப்பு வெளிப்படையாகத் தெரிவதில்லை. எனினும் உராய்வு சக்தியால் அது ஒளிர்ந்து வெளிவருகிறது. அவ்வண்ணமே பிரபஞ்சத்துப் பிரம்மம் ஆத்மாவில் உறைந்துள்ளது. உடலில் அவன் காணத் தெரிவதில்லையாயினும் "ஓம்" எனும் தியான சக்தியால் அவன் வெளிப்படுத்தப்படுகிறான்.

பயங்கரம் நிறைந்த ஆறுகளைப் பாய்ந்து கடக்கும் ஓடம் போல் அதி பயங்கரமான பிறவிப் பெருங்கடலைக் கடக்க "ஓம்" எனும் பிரம்ம மந்திரம் உதவுகின்றது.

அந்த ஓங்கார ஒலியில் நாம் அமிழ அமிழ, நாம் பிரம்மத்தையடைந்தோமா அல்லது பிரம்மமே நம்மை வந்தடைந்ததா என்று சரியாகப் புரியாத ஒரு நிலை ஏற்படும்.

அதுவே ஒவ்வொருவரும் அடைய வேண்டிய பெருநிலை.

எல்லா மக்களுக்கும் சிறப்பாக தனிப்பட்டு நிற்கும் அதுவே, உயிர்கள் அனைத்திலும் முகமாயுள்ளது.

இறைவனின் அன்புக் கடவுளான சிவனின் – மகிமையால்தான் இப்பிரபஞ்சம் நிலை பெற்றிருக்கிறது.

அவன் எல்லாவற்றின் இதயங்களிலும் வாழ்கின்றான்.

ஒரு கட்டை விரலளவு சிறியதோர் ஒளிக் கொழுந்தாய் மானிடர்தம் இதயங்களில் மிளிர்கின்றான் அவன்.

அவனையறிந்தோர் மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுவர். ஆத்மாவே இப் பிரபஞ்சத்தின் தலைவன். அசைவன, அசையாதன அனைத்துக்கும் ஆத்மாவே தலைவன்

"கண்ணின் உள்மணி என்னவே
தொழும் அன்பர் கருத்துள்
நண்ணு கின்ற நின் அருள் எனக்கு
எந்த நாள் நணுகும்
மண்ணும் விண்ணும் மற்று உள்ளன
பூதமும் மாறாப்
பெண்ணும், ஆணுமாய் அல்லவாய்
நிற்கின்ற பெரியோய்"

என்று தாயுமானாரும் பாடியுள்ளாரே!

பிறப்புக்கும் உயிர் வாழ்க்கையின் மறு பிறவிக்கும் அப்பாற்பட்ட அழிவிலாப் பெரும் பொருள் எனப் பிரம்ம அன்பர்கள் எதனை அழைக்கின்றார்களோ, அப் பரம் பொருளை நாங்கள் அறிவோம் என்றனர் முனிவர்கள்.

அவரிடமிருந்தே ஆதியில் ஞானம் பிறந்தது.

மேலேயோ அல்லது கீழேயோ அல்லது நடுவிலுள்ள இடைவெளியிலேயோ உள்ள நிலையில் அவனை மனம் புரிந்து கொள்ளமுடியாது.

"வான் ஆகி மண் ஆகி
வளி ஆகி ஒளி ஆகி
ஊன் ஆகி உயிர் ஆகி
உண்மையும் ஆய் இன்மையும் ஆய்க்
கோன் ஆகி யான் எனது என்று
அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றாயை
என் சொல்லி வாழ்த்துவனே!"

என மணிவாசகப் பெருமானும் செப்பியுள்ளாரே!

அவனது மகிமையே இப்பிரபஞ்ச முழுவதுமாயி ருக்க, யாரோடு நாம் அவனை ஒப்பிடுவது?

அப்பேர்ப்பட்ட ஆத்மா, ஒரு மயிரை நூறாய்ப் பிரித் துப் பின் அதனையும் நூறாய்ப் பிரித்துக் கிடைக்கும் ஒரு முனையின் ஒரு முகமாக நினைக்கப்படலாம். இருப்பினும் இவ்வண்ணம் இருக்கும் ஆத்மாவில்தான் முடிவிலாப் பெருநிலையில் வித்து நிலைபெற்றிருக்கின்றது.

தூய உணர்வு நிலை அவரே! தூய அறிவும் அவரே! எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிந்தவர் அவரே! அவரது கட்டளையினால்தான், சிருஷ்டித் தொழில் அதன் பரிணாமத்தில் சுழல்கின்றது.

தான் பின்னிய பட்டு வலையினுள் ஒரு பட்டுப்பூச்சி மறைந்திருப்பதைப் போல், இயற்கையிடத்தே பிறந்த நூல் களுள் தன்னை மூடிக் கொண்டிருக்கும் இறைவன் தன்னோடு ஈரறக் கலந்து விட நம்மை அழைத்துச் செல்வாராக!

பிறப்பு இறப்பு சம்சார வாழ்வும் விடுதலையும் அவ ரிடமிருந்தே வருவன. ஆசு அமைதியின் ஆற்றலாலும் இறைவனருளாலும் சுவேதாஸ்தரர் பிரம்மத்தின் காட்சி யைக் கண்டார்.

பிறகு அவர், துறவு கொண்ட தனது நெருங்கிய சீடர் களுக்கு, மேலான தூய்மைப் பற்றியும், உண்மையைக்

காண்போர்கள் எக்கடவுளைத் தொழுது வழிபடுகிறார்களோ அப்பிரம்மத்தைப் பற்றியும் உபதேசம் செய்தார்.

ஆதி காலத்தில் கண்டு வெளிப்படுத்தப்பட்ட, இந்த வேத முடிவான உன்னத மறைபொருள், தூய இதயம் கொண்ட நல் மாணவன் அல்லது மகனுக்கு மட்டுமே உபதேசிக்கப்படவேண்டும்.

ஓம் முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

## 1

"ஓ! பிரம்மத்தைக் காணும் முனிசிரேஷ்டர்களே! இந்த மகா பிரபஞ்சத்திற்கு மூல காரணமாயிருப்பது எது? அது பிரம்மமா?

நாம் எங்கிருந்து வருகின்றோம்? எந்த மகா சக்தியில் நாம் வாழ்கின்றோம்? இறுதியில் நாம் அனைவரும் எங்கே நிலை கொள்வோம்?

யாருடைய கட்டளையால் நாம் அனைவரும் இன்ப துன்பங்களுக்கான விதியினால் கட்டுண்டு கிடக்கிறோம்?

அதற்குக் காரணமாயிருப்பது காலமா? அல்லது அந்தந்த பொருளுக்குரிய சொந்த இயல்பா? நியதியா? அல்லது எதேச்சையாக நடப்பதா?

இவைகளுக்கெல்லாம் காரணமாக உள்ளது மூலாதாரமான மூலகங்களா? அல்லது நாம் தலைவனாகப் போற்றப்படும் "வாழும் உயிர்தானா?"

என்றெல்லாம் பிரம்ம அன்பர்களான சீடர்கள் அடுக்கு அடுக்காகக் கேட்டார்கள்.

"இப்பிரபஞ்சத்திற்கான முடிவான காரணம் இவைகளுள் ஒன்றுகூட இல்லை; அனைத்தும் சேர்ந்து ஏற்படும் ஒரு கூட்டும் கூட இதற்குக் காரணமாக அமையாது.

ஏனெனில் அழிவில்லாத நித்ய ஜீவன் ஒன்று உண்டு. அதன் நிமித்தமே இந்தக் கூட்டு செய்யப்பட்டிருக்கிறது.

ஜீவனும் இப்பிரபஞ்சத்துக்குக் காரணமாயில்லை. இன்ப துன்பங்களுக்கு உட்பட்டிருப்பதால் அதற்கு விடுதலை ஏது?

பரம்பொருள் தன் படைப்பிலேயே மூடிவைத்துள்ள மறைவாக வைத்துள்ள - தெய்வசக்தியை ஞானிகள் ஆழ்ந்த தியான யோகத்தின் மூலம் கண்டனர்.

மறைந்த நிலையில் - குணங்களால் மூடப்பட்டு - உயிர்கள் அனைத்திலும் அவன் வாழ்வதைக் கண்டனர்.

காலம் உட்பட, மனிதனின் உயிர் வரைக்கும் அனைத்தையும் ஆள்வது அந்த ஒருவனே! பரம்பொருளே!!

மூன்று பட்டைகள், பதினாறு இறுதிக்கூறுகள், ஐம்பது ஆரங்கள், இருபது பிரதி ஆரங்கள், ஒவ்வொன்றும் எட்டு கொண்ட ஆறு தொகுப்புகளாகிய வட்டைகள், எண்ணற்ற புரிகளாலான ஒரே கயிறு, மூன்று வழிகள் இரண்டு காரணங்களினின்றும் எழுந்ததுமான மிகப் பெரும் மாயை - எனும் இவைகளால் ஒரே வட்டமாக அமைந்துள்ள அவனது சக்தி வாய்ந்த சக்கரத்தை - பிரம்ம சக்கரத்தை அவர்கள் கண்டார்கள்.

இம்மாபெரும் பிரபஞ்சமே ஒரு சக்கரம்போல் அமைந்துள்ளது.

பிறப்பு இறப்பு மறுபிறப்பு இவற்றிற்காளாகும் அனைத்து உயிர்களும் அதன் மேல் உள்ளன.

அது ஒரு போதும் அமைதி கொண்டு நிற்பதேயில்லை; திரும்பத் திரும்பச் சுற்றிச் சுற்றி வருகிறது. இதுவே பிரம்மசக்கரமாகும்.

ஆத்மா, தன்னைப் பிரம்மத்தினின்று வேறுபடுத்தித் தனியாக நினைத்துக் கொண்டிருக்கும்வரை, அது பிறப்பு இறப்புத்தளையில் சிக்குண்டு அச்சக்கரத்தின் மேல் மீண்டும் மீண்டும் சுழன்று வருகிறது.

ஆனால் இறைவன் அருளால், அது எப்பொழுது, தானும் பிரம்மமும் ஒன்றே என்பதை உணர்கின்றதோ,

அதன்பிறகு அது அச்சக்கரத்தில் சுழன்று அவதிப்பட வேண்டியதில்லை. அது அமரத்துவம் அடைகின்றது.

ஒளி, தீ, இருள் எனும் சத்துவ, இராஜச, தாமச இயல்புகள் இங்கு மூன்று பட்டைகளாகின்றன.

ஐந்து மூலகங்களும், ஐந்து அறிவதற்கான பொறிகள், ஐந்து செய்வதற்கான பொறிகள், ஒரு மனமும் சேர்ந்து இங்கு பதினாறு இறுதிக் கூறுகள் ஆகின்றன.

(ஐம்பது வகையான உணர்வு நிலைகள்) -ஐந்து தவறுகள், இருபத்தெட்டு பலவீனங்கள், ஒன்பது மகிழ்ச்சிகள், எட்டு வெற்றிகள் சேர்ந்து ஐம்பது ஆரங்களாக உள்ளன.

பத்துப் பொறிகளும், அவற்றின் பத்து புலன்களும் சேர்ந்து இருபது பிரதி ஆரங்களாகின்றன.

குணங்கள், தேவர்கள், உணர்ச்சியின் நிலைகள், யோகத்தின் சக்திகள், உடலின் பகுதிப் பொருட்கள், இயற்கையின் வடிவங்கள் இவைகளையே ஒவ்வொன்றும் எட்டு கொண்ட ஆறு தொகுதிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒளியோடு ஒன்றுதல், அன்போடு ஒன்றுதல், செயலோடு ஒன்றுதல் (ஞானம், பக்தி, கர்மா) இவைகளையே "மூன்று வழிகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எண்ணற்ற வடிவங்களோடு கூடிய ஆசைகளே "எண்ணற்ற புரிகளாலான ஒரே கயிறு" ஆகின்றது.

நற்செய்கை, தீச் செய்கை (பாவ புண்ணியங்கள்) இரண்டு காரணங்கள் ஆகின்றன.

ஒரே பிரம்மத்தை இரண்டாகக் காண்கின்ற பொய்த் தோற்றமே "பெரும் மாயை" ஆகிறது.

ஐந்து மூலகங்களிலும் ஐந்து ஊற்றுக் கண்களாகின்றன. அவைகளினின்று எழும் பொறி உணர்ச்சிகள், ஐந்து ஓடைகளோடு கூடி, வேகமாகப் பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கும் "வாழ்க்கை" எனும் நதியையும் அவர்கள் கண்டார்கள்.

அதன் அலைகளோ, சுவாசிக்கப்படும் ஐவகைக் காற்றுக்களால் உந்தப் படுகின்றன.

ஐவகைப்பட்ட உணர்வு ஊற்றே அதன் மூலமாகும்.

இந்த ஆறு ஐந்து சுழல்களைக் கொண்டது; ஐவகைக் கொடுமையான துன்பங்களின் அலைகளையும் உடையது.

துன்பத்தின் ஐந்து படிகளையும், ஐந்து அபாயகர மான சுற்றுக்களையும் திருப்பங்களையும் பெற்றுள்ளது அது!

பஞ்ச பூதங்கள் இங்கு ஐந்து மூலகங்களாகின்றன. ஐந்து பிராணன்களும் ஐந்து காற்றுக்களாகும்.

ஐந்து புத்திகளுக்குக் காரணமான மனம் ஐவகைப் பட்ட உணர்வு ஊற்றுகளாகின்றன.

இங்கு ஐந்து சுழல் என்று குறிக்கப்பட்டுள்ளது ஒலி முதலான விஷயங்களாகும்.

கர்மம், பிறப்பு, முதுமை, நோய், மரணம் இவையே ஐந்து துன்பங்களாகின்றன. அறியாமை முதலான இடையூறுகள், ஐந்து அபாயகரமான சுற்றுக்கள் மற்றும் துன்பத்தின் ஐந்து படிகள் இவைகளைக் குறிக்கும்.

இவ்வாறு ஒவ்வொன்றையும் சற்று மறைபொருளாக வைத்தே கூறியுள்ளார்கள்.

உயிர்களனைத்தும் வாழ்ந்து இறக்கின்ற இந்த மாயச் சக்கரத்திலே, ஓய்வே இல்லாது நெடுக பறந்து கொண்டிருக்கும் ஓர் அன்னத்தைப்போல், மனித உயிர் - ஆத்மா - சுழன்று சுழன்று அலைகின்றது!

இறைவன் - எல்லாம் வல்ல பரம்பொருள் - எங்கேயோ மிகத் தொலைவில் இருப்பதாகவே அது நினைக்கின்றது.

ஆனால், இறைவனது பேரன்பு அதன்மேல் எப்பொழுது இறங்கி வருகின்றதோ, அதே நொடியில் அது தனது சொந்த அமர நிலையைக் கண்டு கொள்கிறது.

தோத்திரப் பாடல்களால் துதிக்கப்படுவது பிரம்மமாகும். அதிலேதான் இவ்வுலகமும் ஆத்மாவும் நிலைபெற்றுள்ளன. அனைத்தையும் தாங்கும் அழிவில்லாதவன் அவன். அப்பிரம்மமே எதற்கும் மாற்றவொண்ணாத அடித்தளமாகும்.

பிரம்மத்தைக் காணும் ரிஷிகள், படைப்புகள் அனைத்திலும் அவனையே காண்கின்ற பொழுது அவனிலேயே அமைதி காண்கின்றனர்; துன்பங்கள் அனைத்திலிருந்து விடுதலை பெறுகின்றனர்.

காண்பவை - காணாதவை, நிலையானவை - நிலையில்லாதவை இவற்றோடு இணைந்துள்ள இப்பிரபஞ்சத்தை இறைவன் தாங்குகின்றான்.

மானிடனது ஆத்மா, இறைவன்ன மறந்த நிலையில் தன்னை உலக இன்பத்தோடு பிணைத்துக் கொள்கிறது. இவ்வாறு இன்ப துன்பங்களால் கட்டப்பட்டுள்ள அது இறைவனைக் காணும் பொழுது, எல்லாத் தளைகளினின்றும் அது விடுபட்டுப்போகின்றது.

ஆற்றல் - ஆற்றலின்மை, அறிவு - அறிவின்மை எனும் இவற்றோடு பொருந்தும் ஆத்மா ஒன்று உண்டு.

"இயற்கை" என்ற ஒன்றும் உண்டு. இது ஆத்மாவின் நிமித்தம் ஏற்பட்ட படைப்பாகும்.

இவற்றுடன், அங்கும் இங்கும் எனாதபடி எங்கும் பிரகாசமாய் எல்லாம் வல்ல இறைவனும் இருந்து அருளுகின்றார்.

பிறவா நிலையினையுடைய இம்மூன்றையும் ஒருவன் அறிகின்றபொழுது அவன் பிரம்மத்தையே அறிந்தவனாகின்றான்.

எங்கும் நிறைந்துள்ள எல்லாம் வல்ல இறைவனே பிரம்மமாகும். அவர் வாழும் உயிராகவும் தோற்றம் தருகிறார். உயிரின் அறிவும் ஆற்றலும் வரையறுக்கப்பட்டவையாகும்.

உயிரும் இறைவனும் பிறவாதவர்களே!

அத்துடன் இயற்கையும் இருக்கின்றது. அது அனுப விக்கிறவன், அனுபவம், அனுபவிக்கப்படும் பொருள் என்பவற்றை ஏற்படுத்துகிறது.

ஆத்மாவே முடிவில்லாதது; எங்கும் வியாபித்துள் ளது. எனவே, செய் தொழிலில் யாதொரு பங்கும் பெறாத தாய் தனித்து இருக்கின்றது.

இறைவனைத் தேடும் பேரறிஞன் – ஞானி – இம் மூன்றும் பிரம்மமேயாகும் என்று அறிகின்ற பொழுது, அதாவது இம்மூன்றிலும் முடிவில்லாதவனாயும், மாபெரும் வடிவினனாயும், கர்மப்பிணிப்பற்றவனாயும் இறைவன் உள்ளான் எனத் தெரிகின்றபொழுது, கட்டுகளி னின்று – தலைகளினின்று விடுபடுகிறான்.

காணும் பொருள்கள் இயற்கை – எல்லாம் காலப் போக்கில் அழிந்து படுகின்றன. ஆனால் அறியாமையி ருள் நீக்கும் இறைவனோ என்றும் அழிவில்லாதவனாய் உள்ளான்.

இவ்விஞ்ஞான உலகையும் ஆத்மாவையும் ஆளு கின்ற தேவன் அவனே!

அவன்பால் – அப்பரம் பொருளின்பால் – செய்யும் நிலையான பிரார்த்தனையாலும், ஆழ்ந்த தியானத்தி னால் பிரம்மத்தோடு ஒன்றுவதாலும், அவரும் ஆத்மாவும் ஒன்றே என்று அறியப்படுவதாலும், உலகியல் மயக்கம் அழிந்து போகின்றது.

அதனால் எல்லாம் வல்ல இறைவனை பிரம்மத்தை அறியுங்கள். அவனை அறிந்தால் அனைத்தையும் பெறலாம்; அனைத்தையும் ஆளலாம்.

அறியாமை இருள் மறைந்துபோகும்; பிணித்துள்ள தளைகள் அனைத்தும் அவிழ்ந்து விடும்; துன்பங்கள் எல்லாம் தொலைந்து போகும்!

பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு அனைத்தும் இல்லாமற் போகும்.

அவனையே ஆழ்ந்து தியானம் செய்து, உடலுணர்வுக்கப்பால் உள்ள உயர்நிலையை எய்துங்கள்.

இவ்வண்ணம் இப்பிரபஞ்சத்தின் தலைவனோடு பரம்பொருளோடு – ஐக்கியம் அடைவீர்களாக!

உம்முள்ளேயே எப்போதும் பிரம்மம் இருக்கின்றது என்பதை அறியக் கடவீர். அறிவதற்கு இதைவிட வேறொன்றுமில்லையே!

மனத்தையும் பொருளையும் மாயையும் உணருங்கள். ஆத்மாவையும், இப்பிரபஞ்சத்தையும், இறைவனையும் அறியுங்கள். பிரம்மத்தை அறிதல் அதுவேயாகும்!

மரக்கட்டையில் நெருப்பு வெளிப்படையாகக் காணப்படுகிறதோ? இல்லையோ! ஆனால் அரணிக்கட்டை , யால் கடையும் பொழுது அது ஒளிர்ந்து வெளிவருகிறதல்லவா!

அவ்வண்ணமே இப்பிரபஞ்சத்துப் பிரம்மம் ஆத்மாவில் உறைந்துள்ளது.

ஆனால் அவன் காணத் தெரிவதில்லையே! எனினும் "ஓம்" எனும் ஆழ்தியானத்தினால் அவன் வெளிப்படுகிறான்.

கடையும் பொழுது தீப்பொறியைத் தரும் கீழேயுள்ள கட்டையாக உள்ளது ஆத்மா. மேலே கடையும் கோலாக "ஓம்" இயங்குகின்றது. செய்யும் பிரார்த்தனையே, அந்த " ஓம்" எனும் கோலை சுழற்றிக் கடைவதற்கான சக்தியாக அமைகின்றது.

தியானம் மத்து ஆகும். மறைந்திருக்கும் வெண்ணெயாக இறைவன் வெளிப்படுகின்றான்.

இதைவிட மேன்மையாக, சத்தியமும் தன்னலமின்மையும் சேர்ந்த மாபெரும் தவத்தால் தேடும்பொழுது, மரக்கட்டையில் நெருப்பும், ஊற்றுக்களில் நீரும், பாலில் வெண்ணெயும், எள்ளில் எண்ணெயும் உறைந்துள்ளது போல், ஆன்மாவிலே இறைவன் காணப்படுகின்றான்.

பாலில், நெய் உள்ளது போல், பொருள்கள் அனைத்திலும் வியாபித்திருக்கும் ஆத்மா ஒன்றுள்ளது.

அதுவே ஆத்ம அறிவான தவத்துக்கும் தன்னலமின்மைக்கும் மூலகாரணமாய் அமைந்துள்ளது. அதுவே பிரம்மம்; அதுவே பரம்பொருள் ஆகும்!

## 2

சாவித்ரி (சூரியன்) கனலையும் ஒளியையும் காட்டி மனத்தை பிரம்மத்தினிடத்தில் பொருந்தச் செய்யட்டும். இவ்வுடலிலுள்ள இந்திரியங்களை வெளியுள்ள புலன் இன்பங்களின்றும் அடக்கி வைப்பாராக!

சாவித்ரியின் அருளால், நமது மனம் எப்போதும் அவரிடமே ஒன்றியுள்ளது. நமது ஆற்றல் அனைத்தையும் கொண்டு அவரது ஒளிக்காகவே முயல்கின்றோம்.

நமது ஆத்மாவுக்கு சாவித்ரி அவசியம் உயிர் தருவார். அந்நிலையில் ஆத்மா பேரொளியோடு மிளிர்ந்திடுமே!

நமது மனத்தையும் அதன் ஆற்றல்களையும் சாவித்ரி ஒன்றுபடுத்துகின்றார். விண்ணரசை நோக்கியே நமது எண்ணங்களை இட்டுச் செல்கின்றார்.

எல்லாம் வல்ல இறைவனையே இனிது காணும் ஞானியர்கள், மனமும் இந்திரியங்களும் அடங்கப் பெற ஒருமையில் நிலை கொள்கின்றனர்.

மண்ணில் அமரநிலை கண்டோர், தம்தம் செயல்களையே வகுத்துத் தந்த சாவித்ரியின் மகிமையை போற்றிப் பாடுகின்றனர்.

ஆதவன் பாதையை என் பாடல் அணைத்துச் செல்லட்டும். தொழுது வணங்கி தொன்மைக்காலப் பாடல்களைப் பாடுகின்றேன்.

பிரம்ம மக்களாம் அமரர்களே! எந்தன் தோத்திரப் பாடல்களைக் கேட்பீர்! வானில் வாழும் தேவர்களே வருவீர்! எனது பாடலைக் கேட்பீர்!

ஆத்மாவின் செந்தீ எங்கே கனன்று எரிகிறதோ, ஆத்மாவின் மென்காற்று எங்கே குளிர்ந்து வீசுகின்றதோ, ஆத்மாவின் சோம ரசம் எங்கே பாய்ந்து பரவுகிறதோ, அங்கேதான் புதிய ஆத்மா தோன்றுகிறது; பிறக்கிறது; புத்துயிர் பெற்று மலர்கின்றது.

சாவித்ரி நமைத்தூண்ட, அவ்வேளை பிரம்மத்தை தொழுதேத்திடுவோம். பிரார்த்தனையில் லயித்து, தியானத்தில் அமிழ்ந்து இன்புறுவோம்.

நமது அடித்தளப் பாறையாய் அவற்றைப் பெற்று விட்டால், அதன்பிறகு நமது பாவமெல்லாம் கரையப் பெற்று தூய்மையடைவோம்; அமரர் ஆவோம்.

நேரே நிமிர்ந்த சரீரத்தோடும், தலையோடும் அகத்தின் ஆற்றல்கள் அனைத்தையும் இதயத்தினுள் செலுத்தி விட்டால், பயங்கரமான ஆழம் படைத்த ஆறுகளை இலகுவாய் கடக்கும் ஓடம்போல், பிரம்மத்தின் "ஓம்" காரம் பயங்கரமான பிறவிக் கடலைக் கடக்க உதவிடுமே!

அமைதியான உறுதிப்பாட்டில் உடல் நிலைத்து நிற்க, மூச்சுத் துவாரங்கள் வாயிலாக ஒரே சீராக, அமைதியாக காற்றை இழுத்து விடும் மூச்சை மேற்கொள்வாயாக!

மனமாகிய தேர் துஷ்ட - கட்டுக்கடங்காத - குதிரைகளாலேயே இழுக்கப்படுகிறது. அத்துஷ்டக்குதிரைகள் நன்கு பழக்கப்படுத்தவேண்டும்.

யோகப் பயிற்சிக்கு ஓர் அமைதியான ஏகாந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அது சம தளமாகவும், குப்பை கூளங்களின்றி சுத்தமாக இருத்தல்வேண்டும். அங்கு காற்றுத் தொல்லையோ புகைத் தொல்லையோ இருத்தல் கூடாது. எழில் சூழ்ந்தும் அது அமையவேண்டும்.

அருவியின் சலசலவென்ற ஒலியும், சூழலின் பொலிவும், சிந்தனையை பெருக்குவதற்கும், தியானத்தைக் கூட்டுவதற்கும் ஏதுவானதாக இருத்தல் வேண்டும்.

இறுதியாக பிரம்மத்தைக் காண்பதற்கு முன்னர், பிரம்மத்தை உணர்த்துவன போன்று முதலில் காட்சிக்குப்

புலப்படும் கற்பனா வடிவங்கள் "சூரியன், சந்திரன், காற்று, வெண்பனிப்படலம், புகை, தீ, மின்னல்கள், மின்மினிப் பூச்சிகள், ஏதேனும் ஒரு தெளிவான ஒரு வடிவம்." இவை யேயாகும்.

நீர், காற்று, தீ, மண் வான் எனும் பஞ்ச பூதங்களால் ஏற்பட்டுள்ள தன் சரீரத்தின் மீது யோகியொருவன் முழு ஆளுகை பெறும்பொழுது, பிணி, மூப்பு, மரணம் எனும் இவைகளுக்கு அப்பாற்பட்ட ஆத்மத் தீயில் உருவான ஒரு புதிய உடலைப் பெறுகின்றான்.

யோகப்பயிற்சியின் முதற்பலன்கள், ஆரோக்கிய மான உடல், கொஞ்சமான கழிவுப் பொருள், உடல் இலகு வாயிருத்தல், சற்று தெளிவான நிறம், இனியகுரல், ஒருவித மகிழ்ச்சி தரும் நறுமணம், எவ்வித ஆசையுமில் லாத இயல்பு இவையாகும்.

மாசு படிந்த தங்கம், துடைத்தபின் மீண்டும் முழுப் பொலிவோடு ஒளிர்வதைப்போல, ஆத்மாவின் உண்மை நிலையைக் காணும் பொழுது அவன் அதனோடு ஒன்றி விடுகிறான்.

ஒருபோதும் அவன் துன்புறுவதேயில்லை. அவனு டைய வாழ்க்கையின் குறிக்கோள்தான் நிறைவேறிவிட் டதே!

அப்பொழுது அவனது ஆத்மா ஒரு தீபமாய்ச் சுடர் விடும். பிரம்மத்தின் உண்மையை அவன் காண்கின்றான்! உணர்கின்றான்! என்றும் பிறவாத தூய என்றென்று முள்ள இறைவனையே காண்கின்றான்!

அந்நிலையில் அப்படி இறைவனைக் காணும் நிலையில் அடிமைத்தளைகள் அனைத்தினின்றும் நீங்கி அவன் விடுதலை பெறுகின்றான்.

இங்கு ஆத்மாவே இறைவன்! படைப்பு அனைத்தை யும் எதனுடைய ஒளி ஒளிரச் செய்கின்றதோ, ஆதியிலி ருந்தே அனைத்தையும் படைப்பவன் எவனோ அந்த இறைவன் இந்த ஆத்மாவே!

ஆத்மாவின் செந்தீ எங்கே கனன்று எரிகிறதோ, ஆத்மாவின் மென்காற்று எங்கே குளிர்ந்து வீசுகின்றதோ, ஆத்மாவின் சோம ரசம் எங்கே பாய்ந்து பரவுகிறதோ, அங்கேதான் புதிய ஆத்மா தோன்றுகிறது; பிறக்கிறது; புத்துயிர் பெற்று மலர்கின்றது.

சாவித்ரி நமைத்தூண்ட, அவ்வேளை பிரம்மத்தை தொழுதேத்திடுவோம். பிரார்த்தனையில் லயித்து, தியானத்தில் அமிழ்ந்து இன்புறுவோம்.

நமது அடித்தளப் பாறையாய் அவற்றைப் பெற்று விட்டால், அதன்பிறகு நமது பாவமெல்லாம் கரையப் பெற்று தூய்மையடைவோம்; அமரர் ஆவோம்.

நேரே நிமிர்ந்த சரீரத்தோடும், தலையோடும் அகத்தின் ஆற்றல்கள் அனைத்தையும் இதயத்தினுள் செலுத்தி விட்டால், பயங்கரமான ஆழம் படைத்த ஆறுகளை இலகுவாய் கடக்கும் ஓடம்போல், பிரம்மத்தின் "ஓம்" காரம் பயங்கரமான பிறவிக் கடலைக் கடக்க உதவிடுமே!

அமைதியான உறுதிப்பாட்டில் உடல் நிலைத்து நிற்க, மூச்சுத் துவாரங்கள் வாயிலாக ஒரே சீ ராக, அமைதியாக காற்றை இழுத்து விடும் மூச்சை மேற்கொள்வாயாக!

மனமாகிய தேர் துஷ்ட - கட்டுக்கடங்காத - குதிரைகளாலேயே இழுக்கப்படுகிறது. அத்துஷ்டக்குதிரைகள் நன்கு பழக்கப்படுத்தவேண்டும்.

யோகப் பயிற்சிக்கு ஓர் அமைதியான ஏகாந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அது சம தளமாகவும், குப்பை கூளங்களின்றி சுத்தமாக இருத்தல்வேண்டும். அங்கு காற்றுத் தொல்லையோ புகைத் தொல்லையோ இருத்தல் கூடாது. எழில் சூழ்ந்தும் அது அமையவேண்டும்.

அருவியின் சலசலவென்ற ஒலியும், சூழலின் பொலிவும், சிந்தனையை பெருக்குவதற்கும், தியானத்தைக் கூட்டுவதற்கும் ஏதுவானதாக இருத்தல் வேண்டும்.

இறுதியாக பிரம்மத்தைக் காண்பதற்கு முன்னர், பிரம்மத்தை உணர்த்துவன போன்று முதலில் காட்சிக்குப்

புலப்படும் கற்பனா வடிவங்கள் "சூரியன், சந்திரன், காற்று, வெண்பனிப்படலம், புகை, தீ, மின்னல்கள், மின்மினிப் பூச்சிகள், ஏதேனும் ஒரு தெளிவான ஒரு வடிவம்." இவை யேயாகும்.

நீர், காற்று, தீ, மண் வான் எனும் பஞ்ச பூதங்களால் ஏற்பட்டுள்ள தன் சரீரத்தின் மீது யோகியொருவன் முழு ஆளுகை பெறும்பொழுது, பிணி, மூப்பு, மரணம் எனும் இவைகளுக்கு அப்பாற்பட்ட ஆத்மத் தீயில் உருவான ஒரு புதிய உடலைப் பெறுகின்றான்.

யோகப்பயிற்சியின் முதற்பலன்கள், ஆரோக்கிய மான உடல், கொஞ்சமான கழிவுப் பொருள், உடல் இலகு வாயிருத்தல், சற்று தெளிவான நிறம், இனியகுரல், ஒருவித மகிழ்ச்சி தரும் நறுமணம், எவ்வித ஆசையுமில் லாத இயல்பு இவையாகும்.

மாசு படிந்த தங்கம், துடைத்தபின் மீண்டும் முழுப் பொலிவோடு ஒளிர்வதைப்போல, ஆத்மாவின் உண்மை நிலையைக் காணும் பொழுது அவன் அதனோடு ஒன்றி விடுகிறான்.

ஒருபோதும் அவன் துன்புறுவதேயில்லை. அவனு டைய வாழ்க்கையின் குறிக்கோள்தான் நிறைவேறிவிட் டதே!

அப்பொழுது அவனது ஆத்மா ஒரு தீபமாய்ச் சுடர் விடும். பிரம்மத்தின் உண்மையை அவன் காண்கின்றான்! உணர்கின்றான்! என்றும் பிறவாத தூய என்றென்று முள்ள இறைவனையே காண்கின்றான்!

அந்நிலையில் அப்படி இறைவனைக் காணும் நிலையில் அடிமைத்தளைகள் அனைத்தினின்றும் நீங்கி அவன் விடுதலை பெறுகின்றான்.

இங்கு ஆத்மாவே இறைவன்! படைப்பு அனைத்தை யும் எதனுடைய ஒளி ஒளிரச் செய்கின்றதோ, ஆதியிலி ருந்தே அனைத்தையும் படைப்பவன் எவனோ அந்த இறைவன் இந்த ஆத்மாவே!

முன்னர் இருந்ததும் இதுவே! கருப்பையில் இருப்பதும் இதுவே! பிறந்துள்ள குழந்தையும் பிறக்கப்போகும் சிசுவுங்கூட இதுவேதான்!

மக்களனைவரிடத்திலும் சிறப்பாக தனித்து நிற்கும் அவனே, அனைத்து ஜீவராசிகளின் முகமாயுள்ளான்.

அவன் இருந்தான்; இருக்கிறான்; என்றென்றும் இருந்து வருவான்! அனைத்திலும் அவனே உள்ளான்; அனைத்தையும் காண்கின்றான்.

கங்கைகளில் இருப்பவன் எவனோ தீயில் இருப்பவன் எவனோ, செடிகொடிகளிலும் மரங்களிலும் இருப்பவன் எவனோ, இம் மாபெரும் படைப்பிலுள்ள அனைத்து பொருள்களிலும் உள்நின்று உறைபவன் எவனோ, அந்தத் தேவனை நான் தொழுது வணங்குகின்றேன்.

அந்தப் பரமாத்மாவிற்கே என் வணக்கங்கள்! அப்பரம்பொருளுக்கே என் வணக்கங்கள்!

## 3

தன் கரங்களாக மாயை என்னும் வலையையே கொண்டுள்ள இறைவன் ஒருவன் உள்ளான். அவன்தன் ஆற்றலால் அனைத்தையும் ஆள்கின்றான்.

படைப்புக் காலத்திலும் சரி, அத்தனையும் துடைத்தெரியும் காலத்திலும் சரி அவன் நிலை மாறுவதே இல்லை. அவனை அறிந்தோர் அமரத்துவம் அடைகின்றனர்.

அவன் ருத்ரன்! அவனைத்தவிர ஞானிகள் வேறொன்றையும் காண்பதில்லை.

உலகம் அனைத்தையும் தன் ஆற்றலால் ஆள்பவன் அவனே!

உயிர்களனைத்தையும் படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனும் அவனே!

அவனது கைகளும் கால்களும் எங்கும் உள! அவனது கண்களும் காதுகளும் எங்கும் உள! வானத்தை யும் பூமியையும் படைத்தவன் அவனே!

மனிதனுக்குக் கைகளையும் பறவைகளுக்கு இறக்கை களையும் அளித்தவன் அவனே!

இப்பிரபஞ்சம் அனைத்தையும் தனது பாதுகாவ லின் கீழ் வைத்திருப்பவனும், தேவர்களைப் படைத்து அவர்களுக்கு அநேக ஆற்றல்களைத் தந்தவனும் அவனே!

ஆதியில் பொன் வித்தை - இரண்யகர்ப்பனை - படைப்புச் சக்தியைப் - படைத்தவனுமான ருத்ரன் தூய அருளை நமக்கு நல்குவானாக!

மிகவும் உயர்ந்த மலைகளில் வாழும் ருத்ரனே! மன முவந்து எங்களிடம் இறங்கி வாருங்கள்!

வாருங்கள்! அச்சமும் துன்பமும் காணக்கிடைக்காத தங்களது மங்கள முகத்தின்ஒளி எங்கள்மீது வீசட்டும்.

வந்திடுவீர்! தங்கள் உள்ளார்ந்த அன்பால் எங்களி டம் வந்திடுவீர்!

தேவதேவா! தங்கள் கையிலுள்ள அம்பு எவரையும் துன்புறுத்தவேண்டாம். அவ்வம்பால் எவ்வுயிரும் துயர டையவேண்டாம். அது அன்பெனும் ஓர் அம்பாய் அமை யட்டும்!

அனைத்திலும் பெரியது பிரம்மமே! அது உன்னத மானது; முடிவில்லாதது;

இயற்கையில் உள்ள தம் வடிவங்களின்படி அனைத்து உயிர்களின் மர்மத்திலும் அப்பிரம்மம் உறைந் துள்ளது.

அனைத்தையும் அறிகின்ற அவரை, அனைத்தும் எவர் மகிமையால் நிலைபெற்றிருக்கின்றனவோ அவரை, அறிவோர் எளிதில் மரணமிலாப் பெருவாழ்வு பெறுகின் றனர்.

இருளேயில்லாத அருணன்போல் என்றும் ஒளிர் கின்ற இணையிலாப் பரமாத்மனை நான் கண்டேன். அறியாமை இருளுக்கப்பாலுள்ள பிரம்மத்தை நான் கண்டு கொண்டேன்.

அவன் ஒருவனே! அமர வாழ்வையளிப்பதற்கெ னவே அமைந்துள்ள பாதையினால் அவனை அறிந்திடுவீ ராக! மரணமிலாப் பெருவாழ்வு பெறும் அமரர் நீரே!

அவரது முடிவிலாப் பெருநிலை, சிறிது பெரிது என்னும் அனைத்திற்கும் அப்பாற்பட்டதாகும்! அவரை விடப் பெரியதும் உன்னதமானதும் வேறொன்றுமில்லை!

என்றும் எப்பொழுதும் நிரந்தரமாக உள்ள ஒரு நெடு மரம் போல், விண்ணாட்டின் நடுவில் நிற்கின்றார் அவர்!

அவரது மாபெரும் பேரொளியே படைப்பு அனைத் திற்கும் ஒளியை ஊட்டுகிறது!

இப்பிரபஞ்சம் முழுவதுமே அவர் வியாபித்துள்ளார் என்றாலும், இப்பிரபஞ்சத்திற்கு அப்பாலும் அவர், மேலே உயர்ந்து நிற்கின்றார்.

அவருக்கு உருவமில்லை; எத்துன்பங்களும் அவரைத் தீண்டுவதில்லை. அவரை அறிவோர் அமர நிலையை அடைகின்றனர்.

அறியாதோர் துன்பமும் துயரமும் நிறைந்த உலகங்களுக்கே திரும்புகின்றனர். இறைவனுடைய அன்புமயமான சிவனுடைய மகிமையால்தான் இப்பிர பஞ்சம் நிலைபெற்றுள்ளது.

மக்களின் தலை கரம் முகங்களும் அவனுடையதே யாகும். அனைத்து இதயங்களிலும் அவனே வாழ்கின் றான்.

உண்மையில் அவன் அதி உன்னத தேவனாவான். மக்களின் இதயங்களை நெகிழவைக்கும் – உருக்கும் – அருள் உருவானவன்!

அனைவரையும் தம் பேரின்பத்திற்கே அழைத்துச் செல்கின்றான்.

அழிவில்லாத அத் தூபச் சுடர்ஒளி, தம் பேரொளியின் மகிமைக்கே நம்மை அழைத்து செல்கின்றது!

அவன் பரிபூரணன்! அனைத்திலும் உறையும் ஆத்மா அவனே!

மானிடர் தம் இதயங்களில் அவன் ஒரு கட்டை விரலளவு சிறியதோர் ஒளிக்கதிராய் மிளிர்கின்றான்.

நினைவாலும் அன்பாலுமே என்றும் எய்தும் ஒரு ஞான தேவன் அவன். அவனை அறிந்தால் எளிதில் மரணமிலாப் பெருவாழ்க்கை எய்தலாம்.

அவனுக்கு – அப்பரம் பொருளுக்கு – எண்ணற்ற தலைகள்; எண்ணற்ற பாதங்கள்! அளப்பரிய அவனது நிலைதான், இப்பிரபஞ்சத்தையும், இன்னும் அதற்கப்பால் பதின்மடங்கு தொலைவிலும் நீக்கமற நிறைந்து நிற்கின்றது.

உண்மையில் இப்பிரபஞ்சம் முழுவதுமே அவன் தான். இருந்தது, இருப்பது, இருக்கப்போவது எல்லாமே அவன்தான்.

அமர வாழ்விற்குத் தலைவன் அவனே! உணவால் வாழும் உயிரெல்லாம் அவனே!

எங்கும் அசைவது அனைத்தும் அவன் கரங்கள்!
எங்கும் நடப்பது அவன் திருவடியே!
எங்கும் இருப்பது அவன் சிரசுகளே!
எங்கும் உண்பது அவனது திருவாய்களே!
எதையும் காண்பது அவனது மலர்க்கண்களே!
எதையும் கேட்பது அவனது புகழ்க் காதுகளே!
இவ்வுலகமனைத்தையும் வனைந்தவன் அவனே!
இங்குள்ளவையெல்லாம் அவனது திருக்கோயிலே!

கணக்கிலடங்கா புலனுணர்வு சக்திகளால், அவனுக்கு உணர்வு நிலையின் பேரொளி ஏற்படுகின்றது.

இருப்பினும் அவன் இச்சக்திகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் உள்ளான்.

அவன் இறைவன்; அனைத்தையும் ஆள்கின்றவன். அனைத்திற்கும் முடிவிலாப் புகலிடம் அவனே!

உடலென்னும் ஒன்பது வாயில் கொண்ட அழகான அரண்மனையில், ஆத்மா எனும் அலைகின்ற ஓர் அன்னம் வாழ்கின்றது.

வெளி உலகத்தை அனுபவிக்க அது வெகுதூரம் பறக்கின்றது. இப்பிரபஞ்சத்திற்குத் தலைவன் ஆத்மாவே! அசைவன, அசையாதன அனைத்திற்கும் தலைவன் ஆத்மாவே!

கைகளில்லாமலேயே அவன் அனைத்தையும் பற்றிக் கொண்டுள்ளான்.

பாதங்கள் இல்லாமலேயே அவன் எங்கும் நடமாடு கின்றான்; ஓடுகின்றான்!

கண்கள் இல்லாமலேயே அவன் அனைத்தையும் பார்த்துக் கொண்டுள்ளான்.

காதுகள் இல்லாமலேயே அவன் அனைத்தையும் கேட்டுக் கொண்டுள்ளான்.

ஆதிக்கும் - அனைத்திற்கும் - முதலான பரமாத்மா அவன்!

என்றும் எப்பொழுதும் உள்ள உன்னதமான பரம் பொருள் அவனே!

அவன் அனைத்தையும் அறிவான்; ஆனால் அவனை அறிவோர் ஒருவரும் இலர்.

அனைத்து உயிர்களின் இதயத்திலும் இயல்பாய் ஆத்மா ஒன்று மறைந்துள்ளது.

அதன் வடிவு அணுவினும் சிறியதாகும். ஆனால் அதன் நிலையோ, வான் வெளியினும் அகன்று விரிந்த தாகும். அவ்வாத்மாவே இறைவன்.

அவனருள் வாய்க்கப்பெற்றே, ஆசைகள் அனைத்தையும் மனிதன் அறுக்கின்றான்; பிறவித்தளைகளையும் களைகின்றான்.

துயர்களுப்பால் உயர்ந்து, அது பிரம்மம் என்பதனை அறிகின்றான்.

எவன் முடிவிலாப் பெருநிலை பெற்று அனைத்திலும் உறைந்துள்ளானோ,

எவன் காலத்திற்கப்பால் என்று மாறாது உள்ளானோ,

அப்பரம் பொருளை நான் அறிவேன்!

உயிர் வாழ்க்கையின் மறுபிறவிக்கும் அப்பாற்பட்ட அழிவிலாப் பரம்பொருள் என பிரம்ம ஞானிகள் எதனை அழைக்கின்றார்களோ அப்பரமாத்மானை நான் அறிவேன்!

## 4

ஆற்றலென்னும் தன் ஒளியைப் பலவண்ணப் படைப்பாக மாற்றிவிடும் காட்சியில் இறைவன் உறைகின்றான்.

எவனிடமிருந்து பொருள்கள் அனைத்தும் தோன்றி வந்தனவோ,

எவனிடமிருந்து பொருள்கள் அனைத்தும் திரும்பிச் சேர்கின்றனவோ,

அந்த இறைவன், ஜாதி – ஏற்றத்தாழ்வு – இல்லாத் தலைவன். ஏகவஸ்துவாய் உள்ள அவன் நமக்குத் தூய காட்சியை அருள்வானாக!

சூரியன் நீயே! சந்திரன் நீயே!
விண்ணில் கண்சிமிட்டு நட்சத்திரங்களும் நீயே !
நீரும் நீயே! நெருப்பும் நீயே!
அங்குமிங்கும் உலவித்திரியும் காற்றும் நீயே !
படைப்புத் தேவன் பிரமனும் நீயே!
அனைத்தும் முதலாம் பரம்பொருளும் நீயே!

இதோ இருக்கும் மகனும் நீயே!
அதோ இருக்கும் மகளும் நீயே!
இதோ இந்த ஆணும் நீயே!
அதோ அந்தப் பெண்ணும் நீயே!
தடிகொண்டு தாங்கி நடக்கும் தொண்டுக்கிழவனும் நீயே!

எண்ணிலா வடிவில் உறைந்து நின்றிடும்
வியத்தகு பெருங்கடவுளும் நீயே!

நீல நிறப்பறவையும் நீயே!
பச்சைவண்ணப் பறவையும் நீயே!
செங்கண் கொண்ட பறவையும் நீயே!
அழகு மஞ்சள் பறவையும் நீயே!
பளிச்சிடும் மின்னலை பக்குவமாய் மறைத்திடும் மேகமும் நீயே!

காலத்தின் கோலங்கள் பருவங்கள் நீயே!
கடல்கள் நீர்நிலைகள் பொழில்களும் நீயே!
எங்கும் நிறைந்தே உள்ளவன் நீயே!
உலகுக்கெல்லாம் மேலான உயரிடம் நீயே!
அழிவிலாப் பரம்பொருள் பிரம்மமும் நீயே!

பொருள்கள் யாவையும், ஒளி, தீ, இருள், எனும் முக்குணத்தால் இயற்கை உருவாக்கும். ஆனால் அவ்வியற்கைக்கோ, பிறப்பு என்பதே இல்லை.

வாழுமுயிர் அனைத்தும் இயற்கையின் இன்பப் பிணிப்பை இறுக்கப் பிடித்தே கட்டுண்டிருக்கும்.

இறுதியில் உண்மையை எட்டும் பொழுது, அலைந்த அவ்வுயிர்க்கு பிறவியது இல்லை.

இன்பம் நீத்திடும் பரம்பொருள் இதற்கும் அப்பால் இலங்கும் பேரின்ப வெள்ளத்தில் ஆழ்ந்திடும் அதற்குப் பிறப்பில்லை!

அந்த இரண்டு பறவைகளும் இனிய தோழர்கள். ஒரே மரத்தில் வாழ்ந்தன. ஒன்று மரத்தின் கனிகளை உண்ணும்; மற்றொன்று மோனப் பார்வையில் மூழ்கும்.

அம்மரத்தில் அலைபாய்ந்தோடி ஓயாது உழைத்து ஆடித் திரிந்தாலும், அறியாமையிலும் ஆழ்ந்து துயரடையும் முதற்பறவையே மனிதனின் ஜீவனாகும்.

ஆயினும், அம்மோனப் பார்வைப் பறவையை நோக்கியதும், அதன் மகிமையிலும் ஆற்றலிலும் மகிழ்ந்து தன் துயரைப் போக்கிடும்.

ரிக்வேதம் எவரிடமிருந்து தோன்றிவந்ததோ, அப்ப ரமாத்மாவை அறியாதவர்க்கு, ரிக்வேதம் என்ன பயனு டைத்தாகும்!

பரமனைக் கண்டோர் மட்டுமே இங்கு அமைதி கொண்டவர்களாவர்கள்!

புனித நூல்கள் அனைத்தும் பரமாத்மாவிடமிருந்தே பிறந்தவனவாகும்.

தூயவேள்விகள், மதக்கிரியைகள், பிரார்த்தனை கள், வேதங்கள் இவை யாவும் அவனிடமிருந்து தோன்றி னவாகும்!

இருந்தது. இருப்பது இனிவருவது அனைத்தும் பர மாத்மாவினிடமிருந்தே எழுவனவாகும்!

மாயை எனும் வியத்தகு ஆற்றலால் பொருள்கள் அனைத்தையும் அவன் படைத்தான்.

அம்மாயையினால்தான் இம்மனித உயிரும் பிணிக் கப்பட்டுள்ளது.

இயறகைதான் மாயை; இறைவனே அம் மாயையை ஆள்வோன். பிரபஞ்சத்திலுள்ள உயிர்களனைத்தும் அவனது எழில்பொலிவின் பாகங்களே ஆகும்!

அவனிடமிருந்தே இப்பிரபஞ்சம் எழுந்தது. படைப் பின் ஊற்றுக் கண்களை அவனே ஆள்கின்றான். இறுதி யில் அனைத்தும் அவனோடுதான் இரண்டறக் கலக்கும்!

அவன் ஒருவன்! அவன் தலைவன்! அவன் ஆசிகளை வழங்குபவன்! பரிபூரண அமைதி நிலவும் அவ் விறைவனே நாம் தொழும் தெய்வமாகும்.

ஊழியைக் காண்பவன் ருத்ரன். தேவர்களைப் படைத்தவனும், அவர்களுக்கு மகிமை தந்தவனும் அவனே!

அனைத்தையும் தன் பாதுகாவலின் கீழ் வைத்திருப் பவன் அவன்! ஆதியில் பொன் வித்தை கண்டவன்! அந்த ருத்ரன் நமக்குத் தரிசனம் தருவானாக!

நாம் வழிபடும் இறைவன் யார்? அவன் இறைவ னுக்கு இறைவனாவான்!

எவனுடைய மகிமையினால் உலகம் யாவையும் நிலைத்திருக்கின்றனவோ,

எவன், மனிதனும் மற்றும் உயிரினங்கள் அனைத் தும் நிறைந்துள்ள இவ்வுலகை ஆள்கின்றானோ அவனே தேவதேவனாவான்!

எண்ணிலா வடிவங்களை உடையவன் அவன். அவனது மகிமையினால்தான் அணுவுக்கும் சிறியன முதல் அனைத்தும் நிலைபெற்றுள்ளன.

அவன் தனது படைப்பின் மர்மத்தில் என்றும் வாழ்ந் திருப்பவன்.

அனைத்தையும் படைப்பவன் அவனே! அவனது அன்புக் காட்சியில் அழிவிலாப் பேரமைதி நிலைத்து வாழ்கிறது!

அவனே அனைத்திற்கும் தலைவன்! இப்புவனத் தின் ரட்சகன் அவனே!

அவன் அந்தந்த இதயங்களில் மறைந்து நின்று, கால உலகைக் கண்காணித்து வருகின்றான்.

தேவர்களும் பிரம்மனைக் காணும் முனிசிரேஷ்டர்களும் அவனோடு இரண்டறக் கலக்கின்றனர். அவனை அறிபவர்கள் மரணக் கட்டுக்களை வெட்டி எறிகின்றனர்.

பாலில் நெய் மறைந்துள்ளது. ஆனால் நம்மால் பார்க்க முடிகிறதோ! இல்லை. அவ்வண்ணமே அனைத்து இதயங்களிலும் அவன் மறைந்துள்ளான்.

அவனுடைய மாபெரும் மகிமையினால்தான் அனைத்தும் நிலை கொண்டுள்ளன. அப்பரம்பொருளை ஒருவன் அறியும் பொழுது, அடிமைத்தளைகள் அனைத்தினின்றும் அவன் விடுதலையடைகின்றான்.

அவரவர் இதயக் கோயிலில் குடிகொண்டிருக்கும் இப்பரம்பொருளே இறைவனாவான். உலகம் அனைத்தையும் படைத்தவன் அவனே!

அவரவர் மனங்கள் வாயிலாகவும், இதயங்கள் வாயிலாகவும் அவனை அறிவோர் எளிதில் மரணமிலாப் பெருவாழ்வை எய்துகின்றனர்.

இருளுக்கப்பால் ஓர் உன்னத இடமுண்டு.
அங்கே பகலும் இல்லை; இரவும் இல்லை.
உள்ளதும் இல்லை; இல்லதும் இல்லை.
சிவன் மட்டுமே அன்புருவான சிவன் மட்டுமே
அங்கே உள்ளான்.

இறைவனின் மகிமையாலும், இற்றவனின்
பேரெழிற்பொலிவாலும் நிறைந்த இடம் அது.
அவனிடமிருந்து சூரியனுக்கு ஒளி கிடைத்தது.
அவனிடமிருந்தே ஆதியில் ஞானம் பிறந்தது.

மேலேயோ, கீழேயோ அல்லது நடுவிலுள்ள இடைவெளியிலேயோ உள்ள நிலையில், நாம் அவனை புரிந்து கொள்ள முடியாது.

இப்பிரபஞ்ச முழுவதும் அவனது மகிமையாகவே இருக்க, நாம் அவனை யாரோடு ஒப்பிடுவது?

எட்டாத தொலைவில் உள்ளான் அவன்; கிட்டேயும் உள்ளான். ஆனால் அவனை ஊனக் கண்களால் காண இயலாதே!

ஆனால் தூய அறிவாலும், இதயத்தாலும் அவனை அறிய முடியும்! அப்படி அறிந்தோர்கள் எளிதில் அமரத்துவம் அடைகின்றனர்.

வியப்பும் அச்சமும் நிறைந்த உள்ளத்தோடு உன்னிடம் வந்து 'எந்தன் தெய்வமே! ருத்ரா! என்றும் பிறவாப் பரம்பொருள் நீ! தேவரீரின் திருமுகம் - பார்வை ஏழையென் மேல் நின்று இரங்கி ஒளிரட்டும். நினது பேரன்பு எங்கட்கு பெரும் பாதுகாப்பாக அமையட்டும் என்று இறைஞ்சுகின்றனர்.

மற்றும் 'எமது மக்களைத்துன்புறுத்த வேண்டாம்; மக்களின் மக்களையும் துன்புறுத்தாதீர்கள். எமது வாழ்வையோ, எம் குதிரைகளையோ, பசுக்களையோ வருத்த வேண்டாம்.

கோபம் கொண்டு எமது வீர மக்களை சம்ஹாரம் செய்ய வேண்டாம் என்னும் வழிபாட்டோடும் தொழுகையோடும் தங்களையே நாடி வருகின்றோம்; எமது பிரார்த்தனைக்கருள் செய்வீராக!' என்றும் தொழுகின்றனர்.

## 5

முடிவில்லாப் பிரம்மத்தின் மர்மத்தில் இரண்டு பொருள் மறைந்துள்ளன - மறைத்து வைக்கப்பட்டுள்ளன. ஒன்று அறிவாகும்; மற்றொன்று அறியாமையாகும்.

அறியாமை நீங்கி அகலும்; அறிவோ என்றும் நிலைத்து விளங்கித் திகழும்.

ஆனால் அறிவு அறியாமை இவையிரண்டுக்கும் மேலே அழிவிலா நிலையில் இருப்பது பிரம்மமே!

இப்படைப்பு அனைத்தும் எதன் சக்தியிலிருந்து எழுந்துள்ளன?

அதன் ஆற்றலினால் அனைத்தின் வேரும் மலரும் உயிர்ப்புடன் மிளிர்கின்றன?

அந்த ஒன்றே பிரம்மமாகும்!

பிரம்மத்தின் உள் இயக்கத்திலிருந்து உதித்ததுதான் பொன்வித்து. காலத்தின் தொடக்கத்திலேயே அது தோற்றுவிக்கப்பட்டதாகும்.

உயிர்களுக்கு பிறப்பு இறப்பு அளிக்கும் சம்சார வலை ஒன்றுண்டு

வாழ்க்கையெனும் களத்தில் அவ்வலையை விரித்து வைத்து பிறகு அதையிழுத்து சுருக்குகின்றவன் அவனே!

படைப்புக்கடவுளையே படைத்தருளும் தலைவன் அவன்! எங்கும் எதிலும் வியாபித்து ஆளுகின்ற ப்ரமாத்மன் அவன்.

சூரியன் தன் பிரகாசத்தால், வானமெங்கும் தூய ஒளியை சேர்ப்பதேபோல், படைப்பு அனைத்திலும் பரம் பொருளின் தண்ணருள் கலந்துள்ளதைக் காணலாமே!

அவனுக்குரித்தான இயற்கையை விரிப்பதன் மூலம், அனைத்தையுமே மலர்த்தி கனியச் செய்கின்றான்; மணமும் நிறமும் அருளுகின்றான்.

முக்குணங்களையும் அவனே ஏற்படுத்துகின்றான். அவன் ஒருவன்! இப்பிரபஞ்ச முழுவதையும் ஆள்பவன் அவனே!

வேதங்கள், உபநிஷதங்கள் இவைகளில் உள்ளார்த்தமாக உறைந்துள்ள பரம்பொருளை அறிந்திடுவீர்.

படைப்புக்கதிபதியான பிரம்மனையே படைத்தவன் அவன்.

தேவர்களும், அக்காலத்து முனிசிரேஷ்டர்களும் கண்டு மகிழ்ந்த பரமாத்மன் அவனே! அவர்கள் அமரத்துவம் அடைந்தார்கள்.

இயற்கையின் மூன்று சக்திகளால் மனிதன் கட்டுப்படும் பொழுது, அவன் தன்னலத்துக்கெனவே செயல் புரிகின்றான்.

அம்மூன்று சக்திகளால் ஏற்படும் வடிவங்களை அவனது உயிர் ஏற்கின்றது.

திசை தெரியாது அம்மூன்று பாதைகளின் வழியாகவும் ஓடி, பிறப்பு இறப்பின் வாயிலாக அலைந்து திரிகின்றது.

ஆத்மா, சூரியனின் பேரொளிபோல் பிரகாசிக்கின்றது. தான் அழிவெய்வது இல்லை; என்றும் இருப்போன் என்ற உணர்வு பெற்று, அவ்வுணர்வின் நல்லாசைகளோடும் இணையும்பொழுது, அது இதயத்தில் கட்டை விரலளவு ஓர் ஒளிச் சுடராய் திகழ்கின்றது.

இருந்தும், தூய பகுத்தறிவோடும் உள்ளத்தோடும் ஒன்றி ஒருமுகப்படும் நிலையில், அது ஓர் ஊசியின் முனைபோல் குவிகின்றது.

ஒரு மயிரை நூறாய்ப் பிரித்து, பிறகு அந்த நூற்றிலொருபாகத்தையும் நூறாய்ப் பிரித்துக் கிடைக்கும் ஒரு முனையின் ஒரு பாகமாகவே ஆத்மாவைக் கணக்கிடலாம்.

இருந்தும் இந்நுண்ணிய ஆத்மாவில்தான் முடிவிலாப் பெருநிலையின் வித்து நிலை பெற்றிருக்கிறது!

ஆத்மா ஆணும் இல்லை; பெண்ணும் இல்லை; அன்றி அலியும் இல்லை. ஆத்மா ஓர் உடலின் வடிவத்தைத் தாங்கும் பொழுது, அந்தச் சரீரத்தாலேயே தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்கிறது.

இங்கே உயிர் பிறக்கின்றது. உள்ளார்ந்த ஆசைகளோடும், இனிய கனவுகளோடும், மற்றும் வாழ்க்கையின் உணர்வோடும், அது ஓர் உடலில் புகுந்து தன்னை மலர்த்தி விரிக்கின்றது.

உணவாலும், நீராலும், மழையாலும் இன்னும் பிறவாலும் உடல் வளர்ச்சி பெறுவதைப் போல, அது பிறகு புது உடல்களில், தனது முந்தைய வினைகளுக்கேற்ப மீண்டும் பிறக்கின்றது.

உயிரின் இப்போதைய தன்மையே, மண்ணோடோ, விண்ணோடோ, கனமாகவோ அல்லது

மெலிவாகவோ உள்ள அதன் எதிர்கால உடலை நிர்ண யிக்கிறது.

அது, இப்பிறவியில் ஏற்படும் எண்ணங்களாலும் செயல்களாலும், பின்வரும் மறுபிறவி வாழ்வில், உயிரை நேரே விடுதலைக்கே இட்டுச் செல்ல முடியும்!

அல்லது அத்னால் மறுபடியும் பிறப்பு இறப்பு என்னும் அடிமைப் பிணைப்புக்கே அழைத்துச் செல்ல வும் இயலும்.

ஆனால், எங்கும் உள்ள பரம்பொருள், தனது படைப் பின் மர்மத்தில் எஞ்ஞான்றும் வாழ்ந்து கொண்டிருக்கின் றான் என்று இறைவனை அறிகின்றபொழுது அவன் அடிமைத்தளைகள் அனைத்தினின்றும் விடுபடுகின்றான்.

அவன் உடலேயில்லாத ஆவிரூபன் ஆவான். அவன் பரமாத்மன். இருந்தும் தூயதான இதயத்தால் அவனை அறிய இயலும்!

அவனே அனைத்தையும் படைக்கின்றான். உண் மையும், இன்மையும் அவனிடமிருந்தே வருவன!

அன்பே உருவான இறைவன் அவன்! என்றெல் லாம் ஒருவன் அவனை' அறியும் பொழுது – அலைந்து திரியும் தன் உடல்களை விட்டு – பிறவியிலாப் பெரு நிலையை அடைகின்றான்.

## 6

இப்பிரபஞ்சம் உண்டாவதற்குக் காரணம் இயற்கை யின் லீலா விநோதங்களே என்கின்றனர் சில ஞானிகள்.

மற்றையரோ காலம்தான் அதன் காரணமாயிருக் குமோ என மயங்குகின்றனர்.

ஆனால் நாம், இப்பிரபஞ்சத்தில் பிரம்மச்சக்கரம் உருள்வது அவருடைய மகிமையே என்று தெளிகிறோம்.

"சீ ராருந் தெய்வத் திருவருளாம் பூமிமுதற்
பாராதி யாண்ட பதியே பராபரமே"

என்று தாயுமானாரும் பாடியுள்ளாரே!

இப்பிரபஞ்சம் முழுவதும் என்றும் அவரது ஆளுகைக்கு உட்பட்டது தானே!

எல்லாம் வல்லவர் அவர்! எல்லாம் அறிந்தவர்!தூய அறிவும் அவரே! படைப்புத் தொழில் அதன் பரிமாணத் தில் சுழல்வது அவருடைய கட்டளையால் தானே!

அதனால் தானே நாம் நீரும், மண்ணும், வானும், காற்றும் தீ யும் பெற்றுள்ளோம்!

பணியின் முடிவில் ஓய்வு கண்டது பிரம்மம். அப் பொழுது மற்ற எல்லா ஆத்மாக்களுக்கும், தன் ஆத்மாவுக் கும்டையில் ஓர் அன்புப் பிண்ணப்பை ஏற்படுத்தினார்.

அந்த ஒன்று, மற்றொன்றோடு ஒன்றியது. அப்ப டியே இரண்டோடும், மூன்றோடும் எட்டோடும் ஒன்றியது.

காலத்தோடும், மனித ஆத்மாவின் நுண்ணிய அறியமுடியாத மர்மத்தோடும் அது ஈரறக் கலந்தது.

அவருடைய முதல் படைப்பே முக்குணங்களில் கட்டுப்பட்டதாகி விட்டது.

இயற்கையில் ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய இடத்தை அமைத்துள்ளார் அவர்.

அந்த முக்குணங்கள் நீங்கியவுடனே, வேலைமுடிந்து விடுகிறது. அதன் பிறகு வேறு ஒரு பெரும்பணி தொடங்க லாமல்லவா!

உயிர்கள் அனைத்திற்கும், மூலம் அவரே! பிறப்பை மேற்கொண்டுள்ள அனைத்திற்கும் வித்து அவரே!

அண்டவெளிக்கும், காலத்திற்கும் அப்பாற்பட்டவர். இருப்பினும் எண்ணற்ற வடிவங்களில் உறையும் இறைவன் அவர்.

நமது எண்ணங்களின் அடியாழத்திலும் அவரே உறைகின்றார். அவரிடம் அன்பே உருவாய் கசிந்து உருகு பவர்களுக்கு அவசியம் காட்சி தருகின்றார் அவர்.

பிறப்பிறப்புக்கும் காலத்திற்கும், நமது ஊனக் கண்க ளால் பார்க்கும் பொருள்களுக்கும் அப்பாற்பட்டவர் அவர். இருந்தும் இப்பிரபஞ்சம் முழுவதுமே அவரிடம் இருந்து தானே தோன்றுகிறது!

அனைத்து நலனுக்கும் அவரே தலைவனாதலால், நமக்கு சத்தியத்தைத் தந்து, தீமைகளை நீக்கி அருள் செய் கின்றார்.

நமது ஆத்மாவின் அடித்தளத்தில் அவரே இருந்து அருளுகின்றார் என்றும், அவரே நமது அமரத்துவப் பேரின்ப வீடு என்றும் நாம் அறிந்து கொள்ளல் வேண்டும்.

இமையவர்க் கிறையோனை, தேவதேவனை, மன்னர் மன்னனை, உயர்ந்தவற்றுக் கெல்லாம் உயர்ந் தோனை, அனைத்திற்கும் தலைவனை, அன்புத் தெய் வத்தை நாம் அறிந்து கொள்வோமாக!

ஏன் அவர் செயல் புரிய வேண்டும்? அப்பணிகளை எவ்வாறு அவர் இயற்றுகிறார்? அவருடைய பணிக்கான உபகரணங்கள் என்னென்ன? என்பதையெல்லாம் நாம் அறியக் கூடுமா?

அவ்ரோடு ஒப்பிட்டுப் பேசக்கூடியது ஒன்றுமேயில் லையே! அவரை விடப் பெரிதுதான் வேறு ஏதாவது உண்டா?

அவரது ஆற்றல்களை நாம் எண்ணற்ற வழிகளில் கண்டு மகிழ்கிறோம். அவருடைய வாலறிவும் செயலுந் தான் எத்துணைப் பெரியது? என்னே அவர் மகிமை!

அனைத்தையுமே ஆளும் தலைவராகவும், அனைத் திற்குமே மூலமாகவும் அவர் உள்ளார்.

ஆதலால் அவருக்கு முன்னர் இருந்தவர் எவரு மில்லை. அவரை ஆள்வோரும் இல்லை. அவருக்கொரு இறைவனும் இல்லை.

ஒரு பட்டுப்பூச்சி, தான் பின்னிய பட்டு வலையினுள் ளேயே மறைந்துள்ளது. அவ்வண்ணமே இயற்கையி டத்தே பிறந்த நூல்களுள் தன்னை மறைத்து மூடிக் கொண்டிருக்கும் இறைவன், தன்னோடு இரண்டற கலந்து விடும்படி நம்மைவழிநடத்திச் செல்லட்டும்.

அனைத்து உயிர்களுள்ளும் மறைந்துறையும் மாம றையோன் அவன். அவற்றின் அந்தராத்மா அவன்! எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன்!

படைப்பு அனைத்தையும் காத்தருள்பவன் அவன்! அவன் அனைத்திலும் வாழ்வதோடு கண்காணித்து வருப வனும் அவனே! இயற்கையின் மூன்று நிலைகளுக்கு அப் பாலுள்ள தூய உணர்வு நிலை' அவனே!

அவ்வப்பொழுது மாறுபாடுகள் அடையும் இயற்கையினிடையே, மாறுபாடே இல்லாத உயிர் அவன்.

தன்வசமுள்ளவன் அவன் ஒருவனே! பல்லுயிரும், மௌனமாகப் பல செயல் செய்யும் தன்மையது. இம்மௌ னச் செயல்களையெல்லாம் அவனே ஆள்கின்றான்.

அவன் மகிமையால், ஆற்றலினால் - ஒரே வித்து எண்ணிலாத் தொகையாக மாறிவிடும். அவர் ஆத்மாவில் அப்பரம்பொருளைக் காண்போர் மட்டுமே அழிவிலாப் பேரின்பத்தை அடைகின்றனர்.

அழிந்து மடியும் பொருள்களிடையே அழிவில்லாத வன் அவன். உணர்வு நிலை கொண்ட உயிர்களில், அவன் தூய உணர்வு நிலையாவான். பற்பல ஜீவராசிக ளின் பிரார்த்தனைகளை நிறைவேற்றியருளும் தனி ஒருவன் அவன்!

சாங்க்யத்தின் காட்சியாலும் யோகத்தின் ஒருமையா லும், மனிதன் பரம்பொருளை அறிகின்றான் - உணர்கின்

றான். அவ்வண்ணம் அவனை அறியும் போது, அனைத்து தளைகளினின்றும் அவன் விடுபடுகின்றான்.

சூரியனோ, சந்திரனோ, நட்சத்திரங்களோ அங்கே பிரகாசிப்பதில்லை. மின்னல் கூட அங்கு ஏற்பட்டு ஒளிர் வதில்லை. அவைகளே அப்படியாயின் இம்மண்ணுல கத்து நெருப்பைப் பற்றிக் கேட்பானேன்!

அப்பரமாத்மனிடம் ஒளிபெற்றே இவையெல்லாம் பிரகாசிக்கும். அப்பரம்பொருளின் பேரொளியே, படைப்பு அனைத்தையும் ஒளிரச் செய்கின்றது.

இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்துக்கும் ஜீவனாக உள்ளான். அவன் நித்யமானவன்!

அலைந்து திரியும் அன்னம் போன்ற அந்த ஜீவன் அவனே! நீரில் புகுந்திருக்கும் தீ யும் அவனே!

வாழ்க்கைப் பெருங்கடலிலுள்ள நெருப்புக் கனலும் ஆத்மா அவனே !அவனை அறிதலே மரணத்தை வெல்லு தலாகும். அழிவிலாப்பெரு வாழ்க்கைக்கு அவனே வழி காட்டியாயுள்ளான்; வழியுமாயும் உள்ளான்.

அனைத்தையும் படைப்பவனாயிருந்தும், அவனை படைத்தவர் எவருமிலர்.

அவன் எல்லாம் வல்லவன், காலத்தையே படைத்த வன். ஆத்மாவின் தலைவன் அவன். தூய உணர்வு நிலையில் எல்லாம் அறிபவன்!

இயற்கைக்கும் அதன் முந்நிலைகளுக்கு தலைவ னாக உள்ளவன் அவனே! பிறப்பு, இறப்பு சம்சாரவாழ்வு, விடுதலை அனைத்தும் அவனிடமிருந்தே வரு வன! பிறப்பு இறப்புக்குட்பட்ட சிறு காலத்தில் அடிமை நிலையில் உழல்வதும், பிறகு ஊழூழிக்காலம் விடுதலை அனுபவிப்பதும் அவனருளால் தான் நடைபெறுகின்றன.

ஒளிக்கெல்லாம் முதல்வன் - தேவன் - அவனே! அமரனாய், தூய உணர்வு நிலையாய் எங்கும் நிறைந்த வனாய், அனைத்துக்கும் அன்பு ரட்சகனாய் இருந்து அருளு கின்றான்.

என்றென்றும் தலைமை பூண்டு ஆள்பவன் அவனே! அவனைத் தவிர வேறு தலைவன் ஏது?

ஆகவேதான், நாம் விடுதலைக்காக ஏங்கி அபயம் தேடி அவனிடம் செல்கின்றோம். அவனும் தன் பேரருளால் தன் சொந்த பிரகாசத்தினாலேயே தன்னை நமக்கு காட்டியருளுகின்றான்.

ஆதியில் பிரமதேவனைப் படைத்து, அவனுக்குப் புனித வேதங்களை அருளியவன் அவனே!

எவன் நித்யமோனத்தில் ஆழ்ந்துள்ளானோ,
எவன் பேரெழிலும் பரிபூரணமும் இணைந்து
அருட்பெரும் ஆனந்த ஜோதியாய் திகழ்கிறானோ!
எவனிடம் நாம் பேரமைதியைக் காண்கிறோமோ
அந்த பரம்பொருளிடம்
நாம் அடைக்கலம் புகுவோமாக.

அவனே நம்மை நித்ய வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் பேராளன். இவ்வுலக வாழ்க்கையில் மலிந்துள்ள கீழியல்களையும் பாவங்களையும் எரிக்கும் ஞானக் கொழுந்து அவனே!

வான்வெளியை, தோல்போல் மடித்து வைக்க எப்பொழுது மனிதனால் இயல்கிறதோ, அந்நாளே - அப்பொழுதே - அவன் இறைவனின் உதவியின்றி - ஆத்மா தேவனை அறியாமல் - தன் துயர்களையெல்லாம் எளிதில் நீக்கவல்லவன் ஆவான்.

சுவேதாஸ்வரர் தன் அக அமைதியின் ஆற்றலாலும். பரம்பொருளின் அருளாலும் - காருண்யத்தாலும் பிரம்மத்தையே தரிசித்தார்.

பிறகு அவர் துறவு நிலை கொண்டு தனது அந்நியோந்நிய சீடர்களுக்கு மேலான தூய்மையைப் பற்றியும், சத்தியத்தைக் காண்போர்கள் எத்தெய்வத்தை வழிபடுகிறார்களோ அந்த பிரம்மத்தைப் பற்றியும் உபதேசித்து அருளினார்.

அந்த நாளில் - தொன்மைக் காலத்தில் - கண்டு வெளிப்படுத்தப்பட்ட வேதமுடிவாகும் இது.

இந்த உன்னத மேலான மறைபொருளை, தூயமனம் படைத்த சீடர்களுக்கோ அல்லது நல்மகனுக்கு மாத்திரமே உபதேசித்தருள வேண்டும்.

இறைவனிடத்தில் மேலான அன்பு கொண்டவன் – பக்தி கொண்டவன் – எவனோ,

எவன் தன் குருவை – ஆசானை – பரம்பொருளாகப் போற்றி அன்பு செய்கின்றானோ,

அத்தகையோனுக்கே இந்த உபதேசத்தின் ஞான ஒளி விளக்கமாகின்றது.

ஒரு மாபெரும் மகாத்மாவான அவனிடமே இவ் வுண்மை ஒளிர்ந்து மிளிர்கின்றது. ஆம்! உண்மையில் அது அவனிடமே ஒளிந்து மிளிர்கின்றது.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

இந்த உபநிஷத்திலும், பிரம்ம அன்பர்களான சீடர்கள் பல சந்தேகங்களுடன் குருவை அடைகிறார்கள். குரு விளக்குகின்றார்.

இறைவன் தன் படைப்பில் மறைத்துவைத்துள்ள தெய்வபக்தியை ஞானிகள் தியான யோகத்தில் கண்டனர். பார்வையினின்றும் மறைக்கப்பட்ட நிலையில் குணங்களால் மூடப்பட்டு எல்லா உயிர்களுள்ளும் அவன் வாழ்வதைக் கண்டனர். காலம் உட்பட மனிதனின் உயிர் வரைக்குமான எல்லாத் தோற்றக் காரணங்களையும் ஆள்வது அந்த ஒருவனே! என்ற முடிவுக்கு வந்தனர்.

எல்லா உயிர்களும் வாழ்ந்து இறக்கின்ற இந்த மிகப் பெரிய பிரம்ம சக்கரத்தில், மனித ஆத்மா – உயிர் – சுழன்று சுழன்று அலைகின்றது.

இறைவன் எங்கேயோ மிகத் தொலைவில் இருப்பதாகவே அது நினைக்கின்றது. ஆனால் எப்பொழுது இறைவனது அன்பு – கருணை – அதன் மேல் இறங்கி வருகின்றதோ அத்தருணமே அது தன் சொந்த அமரத்துவ வாழ்க்கையைக் கண்டு கொள்கிறது.

உண்மையும் தன்னலமின்மையும் கூடிய தவத்தால் தேடும் பொழுது, மரக்கட்டையில் தீயும், ஊற்றுக்களில் நீரும், பாலில் வெண்ணெயும் எள்ளில் எண்ணெயும் போல, இறைவன் ஆன்மாவிலேயே காணப்படுகின்றான்.

எப்போதும் பிரம்மம் உம்முள்ளேயே இருக்கின் றான் என்பதை அறியக் கடவீர். இதைவிட அறிதற்கு உயர்ந்தது வேறொன்றுமில்லை. மனத்தையும் பொருளை யும், மாயையையும், ஆத்மாவைய்யும், பிரபஞ்சத்தையும், இறைவனையும் அறியுங்கள். அதுவே பரப்பிரம்மத்தை அறிதலாகும்.

அமைதியான உறுதிப்பாட்டில் உடல் நிலைத்திருக்க ஒரே சீராகவும் அமைதியோடும் கூடிய மூச்சை மேற் கொண்டு, நிமிர்ந்த உடலுடன் அமர்ந்து பிரம்ம தியானத் தில் அமிழ்ந்து விடு. மனம் எனும் தேர் மிகவும் துஷ்டக் குதிரைகளால் இழுக்கப்படுகிறது. அவைகளை இழுத்துப் பிடித்து நீதான் பழக்கப்பபடுத்த வேண்டும்.

பிறகு இறைவனின்.. பரம்பொருளின் பரமாத்மா வின் பெருமையைப் பற்றி பரக்கப் பேசப்படுகிறது.

மாயை என்னும் வலையையே தனது கைகளாகக் கொண்டுள்ளான் இறைவன். அந்த வலையில் நீ அகப்பட் டுக் கொள்ளாமல் இருக்க அவன் கருணையையே நாட வேண்டும்.

அப்படியே அகப்பட்டுக் கொண்டாலும், மனம் உருகி அவன் அன்பைப் பெற்றால் நீ விடுதலையடையலாம்.

அழுதால் அவனைப் பெறலாமே! என மணிவாசக ரும் பகர்ந்துள்ளாரே!

மரத்தில் வாழும் இரண்டு பட்சிகளைப் பற்றி இந்த உபநிஷத்திலும் விவரிக்கப்பட்டுள்ளது. மரத்திலுள்ள இன்பதுன்பமாகிற – கனியை உண்ணும் பறவையே மனி தனின் ஜீவனாகும். ஆயினும் அதை மோனப் பார்வை யால் நோக்கும் பட்சியைக் கண்டதும், கனியை விட்டு

விட்டு அதனுடன் வந்து சேர்ந்து கொள்கிறது. பரமாத்மா வில் ஜீவாத்மா இயக்கம் அதுவே!

பாலில் நெய் மறைந்திருப்பதைப் போல், எல்லாவற் றின் இதயங்களிலும் அவன் மறைந்துள்ளான். அவனு டைய மகிமையால்தான் அனைத்தும் நிலை கொண்டுள்ளன. அப்பரம்பொருளை ஒருவன் அறியும் பொழுது, எல்லா அடிமைத்தளைகளினின்றும் அவன் விடுதலை எய்துகின்றான்.

இங்கே உயிர் பிறக்கின்றது. கனவுகளோடும் ஆசை களோடும், இன்னும் வாழ்க்கையின் உணர்வோடும் அது ஓர் உடலில் தன்னை மலர்த்தி விரிக்கின்றது. அதன் பிறகு புது உடல்களில் தனது முந்தைய செயல்களுக்கு தக்கபடி அது மீண்டும் பிறக்கின்றது. ஆனால் பிறப்பும் இறப்பும் மறுபிறப்பும் ஆத்மனைக் கட்டுப்படுத்துவதில்லை.

பிறப்பு இறப்புக்கும் காலத்திற்கும் அழியும் ஊனக் கண்களால் பார்க்கும் பொருள்களுக்கும் அப்பாற்பட்ட வன் அவன்.

ஆனால் முழுப்பிரபஞ்சமும் அவனிடமிருந்தே தோன்றுகிறது. எல்லா நலனுக்கும் அவனே தலைவன். அதனால் நமக்கு நன்மையைத் தந்து தீமையை நீக்கி அரு ளுகின்றான்.

காலத்தில் – பிறப்பு இறப்புக்குட்பட்ட இன்னாளில் – அடிமை நிலையில் உழல்தலும் அழிவிலா ஊழூழிக்காலம் விடுதலையோடிருத்தலும் அவனருளால்தான் நிகழ்கின் றன.

தான் பின்னிய பட்டு வலையினுள் ஒரு பட்டுப்பூச்சி மறைந்திருப்பதைப் போல,இயற்கையிடத்தே பிறந்த நூல் களுள் தன்னை மறைத்துக் கொண்டிருக்கும் இறைவன், தன்னோடு இரண்டறக் கலந்து விட நம்மை அழைத்துச் செல்வாராக!

# கேநோபஷிதம்

கேநேஷிதம் என்று தொடங்குவதால் அந்தப் பெயர் காரணப் பெயராக விளங்கிற்று. சாமவேதத்தில் ஜைமினி காதையில் தலவகார பிராஹ்மணத்தில் இது ஒன்பதாவது அனுவாகமாகும். அதனால் தலவகாரோபநிஷத் என்றும் கூறுவர் இதை.

இதில் நான்கு கண்டங்கள். இதில் கூறும் விஷயச் சுருக்கம் வருமாறு—

இந்திரியங்களின் வியாபாரத்திற்கு சாட்சி மாத்திர மாக நின்று, பிரேரகமாய் மற்றொன்றால் பிரகாசிக்காமல் ஸ்வயம் பிரகாசமாக உள்ள ஆத்மாவே பிரம்மம். அது அறியப்பட்டதும் அறியப்படாததுமான உலகிற்கு வேறாக, அதற்கு சாட்சியாக உள்ளது.

ஆத்மா, வாக்கு, மனது, கண், செவி, நாசி முதலிய இந்திரியங்களின் வியாபாரங்கட்கு எட்டாதது. ஆனால் இந்திரியங்களைச் சகல விஷயங்களிலும் பிரவிருத்திக்கச் செய்வது. அதை அறிந்தால் மோட்சம் கிடைக்கிறது. அதை அறியாமற்போனால் பெரும் நஷ்டமே.

சகுணமாகவும், ஜகத்காரணமாகவும் தேவர்களுக்கு ஜயத்தைக் கொடுப்பதும், அசுரர்களுக்குத் தோல்வியை அளிப்பதும், அந்தந்த கர்மங்களுக்குத் தக்கவாறு பலத் தைக் கொடுப்பதும் அந்த பரப்பிரம்மமே!

அப்பரம்பொருளை பிரம்ம வித்யா ஸ்வரூபிணி யான உமாதேவியின் அனுக்கிரகத்தால் அக்னி, வாயு, இந் திரன் முதலான தேவர்கள் அறிந்து கொண்டனர்.

அதனால் அவர்கள் மேன்மையையடைந்தனர். அந்த பிரம்மத்தை உபாசித்து எல்லோரும் ஆத்ம ஞானம் பெற்று மோட்சத்தை எய்துவர்.

சத்யமே ஞானம் பெற முக்கிய சாதனமாக உள்ளது.

இருண்ட மேகத்திடையே சமயத்தில் பளிச் சென்ற மின்னல் தோன்றி மறைவதுண்டல்லவா! அதே போன்று ஆழ்ந்த தியானத்தில், உள்ளத்தினுள்ளே ஒரு மின்னல் தோன்றி மறைவதுண்டு. அனுபவித்தவர்களுக்கே இது நன்கு விளங்கும்.

அந்த உபாசனைக்குத் தவம் அடக்கம், கருமம் என்பன அங்கங்களாகும். சத்தியமே உறைவிடம். இதை யறிபவன் தீமைகளை யெல்லாங்கடந்து, பாவங்களைச் சுட்டெரித்து எல்லையில்லா உயர் நிலை அடைகின்றான்.

அவன் அடையவேண்டியது அதுவே, எவர்களிடத்தில் சூதும், பொய்யும் வஞ்சனையும் இல்லையோ, அவர்களிடமே இது உறைகின்றது.

கர்மங்கள் யாவும் அதாவது கடமைகள் யாவும் பிரம்மத்தைச் சார்ந்திருப்பதில் பூர்த்தியாகின்றன. திரிகரணங்களால் நாம் செய்கின்ற செயல்கள் யாதும் பிரம்மத்துக்கு உரியனவாகுக.

கருவி கரணங்களைக் கடவுள் வழிபாட்டுக்கென்றே பயன்படுத்துவது கட்டறுத்தலுக்கு நிகராகிறது.

ஓம்! அனைத்து உபநிஷத்துகளிலும் விளங்கும் பிரம்மமே! என்னை விட்டுவிலகலாகாது. என்னுடைய அனைத்து அங்கங்களும், வாக்கும், பிராணனும் தம்தம் தொழிலை திறனுடன் நன்கு செய்வனவாகட்டும். நானும் பிரமத்தை விட்டு விலகவே மாட்டேன். இந்த இனிய உறவு என்றும் நிலை பெறட்டும் என்று மேன்மேலும் வேண்டிக்கொள்கின்றேன். ஆத்மாவில் மகிழ்ந்து வாழ்பவர்களிடமுள்ள தருமங்கள், என்னிடத்திலும் நிலை பெற வேண்டும் என்று பிராத்திக்கின்றேன்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக! கேனோஷிதம் என்றால் – எவன் என்னுட்புகுந்து தூங்கியிருந்த எனது வாக்கை உயிர்ப்பித்தானோ – என்பது பொருளாகும்.

**1**

1. சிஷ்யன் – யாருடை விருப்பத்தினால், ஏவலினால் இந்த மன்ம், விஷயங்களில் விழுகின்றது? மனத்தை மிகத் தொலைவில் அலையவிடும்படி செய்வது யார்? பிராணனை உயிரை – முதன் முதலாக தன் தொழிலில் பிரவேசிக்கச் செய்தது யார்? அதன் பயணத்தை முதன் முதலாக ஆரம்பித்து வைத்தது யார்? யாருடைய விருப்பத் தினால் இம்மாதிரியான வார்த்தைகளைப் பேசுகிறார்கள்? கண்களையும், காதுகளையும் தம்தம் தொழிலில் இயங்கும் படி செய்வது எந்த தெய்வம்?

2. குரு – செவிக்குச் செவியாகவும், மனத்திற்கு மன மாகவும், வாக்கிற்கு வாக்காகவும், எது உள்ளதோ, அதுவே பிராணனுக்கு பிராணனாகவும், கண்ணிற்கு கண்ணாக வும் உள்ளது. ஆத்மாவை பிரித்தறிந்தோராய் – பொறிக ளும் மனமும் தாம் அது என்ற பொய்யான கொள்கையை விடுத்து, ஆத்மாவே பிரம்மன் என அறிந்தவர்கள் – ஞானிகள் – எல்லாப்பற்றுகளையும் இங்கேயே – இவ்வுல கிலேயே துறந்து விடுகின்றனர். அதன் பிறகு அவர்கள் அமரத்துவம் அடையக் கேட்க வேண்டுமா?

அழியும் ஜடப் பொருள்களுள் அழியாப் பொருளா யும் உயிர்களுக்குள் உயிராயும் உள்ள அந்த ஆத்மாவினு டைய பிரகாசத்தால் இவையெல்லாம் பிரகாசிக்கின்றன.

அழியும் இந்திரியங்களில் ஆத்ம புத்தியை ஒழித்து உள்ளுறையும் அழியாத சைதன்யமே ஆத்மா என்று தெரிந்து கொண்டமையால், சாகாத்தன்மை – அமரத்வம் – எய்துகின்றனர். அப்போது இறப்படைந்த ஜீவன் இறவாத வனாகின்றான், இங்கேயே பிரம்மத்தை அனுபவிக்கின் றான்.

ஒரு பானையிலுள்ள சோறு எப்படி வேகின்றது. அடுப்பிலிருக்கும் நெருப்பு வேகச் செய்கின்றது. ஆனால் அந்த உஷ்ணம் பானையினுடையதல்லவே! உள்ளேயி ருக்கும் அரிசியினுடையதல்லவே! அதுபோல உடலை இயக்கும் சக்தி இந்திரியங்களுடைதன்று. அது ஆத்மா வினுடையதேயாகும்.

அநேக பொத்தல்கள் உள்ள ஒரு பானையினுள்ளே இருக்கும் ஒரு பிரகாசமான விளக்குபோன்று, உள்ளே இருக்கும் சைதன்யம் காது, கண் முதலிய கரணங்கள் வழியாக வெளியே ஊடுருவி வந்து பிரகாசிக்கின்றது.

கண்ணோ, வாக்கோ அல்லது மனமோ அங்கு செல்லாது - செல்வதில்லை. ஆனால் அதை உள்ளபடி நாம் அறியோம். ஆகையினால் அதைப்பற்றி பிறருக்கு எடுத்துச் சொல்லும் வகையும் தெரியவில்லை. நமக்கே தெரியாத ஒன்றைப் பிறருக்கு எப்படி விவரித்துச் சொல்ல முடியும்! நாம் அறிந்த பொருள்களைவிட வேறுபட்டது அது. நாம் அறியாத பொருள்களுக்கும் அது அப்பாற்பட் டது என்பதை, முற்காலத்து ஞானிகளிடமிருந்தே கேட்டுத் தெரிந்து கொண்டோம்.

எந்த - ஆன்ம - சக்தியால் கண், வெளியே உள்ள பொருள்களை கண்டு களிக்கின்றதோ, அந்த மேலான - உயர்வான - ஆன்ம சக்தியை கண்ணால் பார்க்க முடியாது. அறிகிறவனை எதனால் அறிய முடியும்? இறைவன் இந்திரியங்களுக்கு, வெளிப்பார்வையையே கொடுத்துள்ளான். அவன் சிருஷ்டித்ததே அவ்வண்ணம் தான். அதனால்தான் ஜீவன் வெளியுலகையே காண்கின் றான், அந்தராத்மாவைக் காண்பதில்லை - காணமுடிவதில்லை கண்ணை மனம் காணும், மனத்தை - மனோவிருத்திகளை - அந்தராத்மா காணும். அந்த மேலான - உயர்வான - அந்தராத்மாவை எதுவுமே காணாது - காணமுடியாது, அது தன்னில் தானே இயங்கி நிற்கும்.

"உண்மையும் ஆய் இன்மையும் ஆய்க்
கோள் ஆகியான் எனது என்று
அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றாயை
என் சொல்லி வாழ்த்துவனே!"

என்று மணிவாசகப் பெருமானும் பகர்ந்துள்ளாரே!

எதை வாக்கினால் விளக்க முடியாதோ, ஆனால் அந்த வாக்கு எதனால் விளக்கம் பெறுகின்றதோ அதுவே 'பிரம்மம்' என்பதைத் தெரிந்து கொள். எதை நீ 'இறைவன்' என்று உபாசித்து வருகிறாயோ அது 'பிரம்மம்' அன்று.

**"கேட்டு ஆரும் அறியாதான் கேடு ஒன்று இல்லான்
கிளை இலான், கேளாதே எல்லாம் கேட்டான்–"**
**(திருவாசகம்)**

எதை மனத்தால் உணரமுடியாதோ, ஆனால் எதனால் மனம் உணரப்பெறுகிறதோ –நினைக்கின்றதோஅதுவே பிரம்மம் என்பதைத் தெரிந்துகொள். எதை இவ்வுலகத்தார் தொழுது வழிபடுகின்றார்களோ அது பிரம்மம் ஆகாது.

எதைவிடப் பெரிது யாதொன்று மில்லையோ, எதற்கு பூமா என்று பெயரோ, எது எங்கும் நிறைந்துள் ளதோ, அது பிரம்மம் ஆகும். வாக்கு எதை அறியவில் லையோ, அது உள்ளே இருந்து கொண்டு வாக்காக ஆள்கின்றதோ அதுவும் பிரம்மமே!

எதைக் கண்ணால் பார்க்க முடியாதோ! ஆனால் கண்களை எதனால் பார்க்கிறானோ அதுவே பிரம்மம் என்றறிக. இவ்வுலகத்தோர் எதை தொழுது உபாசிக்கிறார் களோ அது பிரம்மம் ஆகாது

எதை நீ செவியால் கேட்க இயலாதோ, ஆனால் எதனால் உன் செவி கேட்கின்றதோ அதுவே பிரம்மமா கும். எதை நீ பிரம்மம் என்று தொழுது வழிபட்டு வருகின் றாயோ அது பிரம்மம் அன்று என்பதை தெரிந்து கொள்.

எதனை மூக்கால் - மூச்சால் நீ உள்ளிழுக்க முடியாதோ - முகர்வதில்லையோ, ஆனால் மூக்கு எதனால் முகர்வதாகின்றதோ் அதுவே பிரம்மம் என்பதை தெரிந்து கொள். எதை - இதுதான் பிரம்மம் - என்று கற்பித்து வழிபடுகிறார்களோ அது பிரம்மம் ஆகாது.

## 2

"நான் பிரம்மத்தை அறிந்து கொண்டேன் என்று எண்ணுவாயாகில், அதனைப் பற்றிய உண்மையை - அதன் ரூபத்தை - நீ அறியவில்லை அல்லது நீ அறிந்தது அற்பமே என்பது நிச்சயமாகும். ஒருவரால் - தேவதைகளி னால் - வரையறுக்கப்பட்ட நிலையில் மட்டுமே நீ அதை அறிகின்றாய். அதனால் அது பிரம்மம் ஆகாது. ஆகையி னால் உண்மையில் பிரம்மம் என்பது என்ன என்றறிய நீ இன்னும் விசாரிக்கவேண்டும் - தியானத்தில் மூழ்க வேண்டும்.

சிஷ்யன் - நான் அதை முற்றும் விசாரிக்க வேண்டும் என எண்ணுகிறேன் ஐயா! அதனால் அவ் வண்ணமே செய்வேன்.

"பிரம்மத்தை நன்றாக அறிந்து கொண்டேன் என்று எண்ணவில்லை. இருந்தும் நான் அவனை அறியவே இல்லை என்றும் என்னால் கூற முடியாது." என்று எவன் எண்ணுகிறானோ! எவன் அறியவில்லை என்றோ அறிந்தேன் என்றோ எண்ணவில்லை என்று இதை, உணர்கின்றானோ அவன் பிரம்மத்தை உணர்ந்தவன் ஆகின்றான்.

அது அறிந்த பொருள்களை வேறு, அறியாத பொருள்களுக்கும் அப்பாற்பட்டதாகும். ஒரு பூந்தொட் டியை - செடியுடன் - நிழலில் வைத்து வளர்த்தால் அந்த கிளை என்னவோ சூரிய ஒளிபக்கமே நீண்டு செல்வதைப்

பார்க்கலாம். அது போன்று மனிதனின் மனம் இறைவனை – பரம்பொருளை நாடுகின்றது.

அப்படி அறியப்படாத பிரம்மம் சிந்தனைக்கு அப்பாற்பட்டது என்பதை எவன் அறிகிறானோ, அவனுக்கு உதயமாகின்றது. சிந்தனையால் பிரம்மத்தை அறிய இயலும் என்று எவன் கற்பனை செய்கிறானோ அவன் அறிய மாட்டான். அறிவாளிக்கு எட்டாமலும், அறிவீனர்களுக்கு எட்டுப்படியாகவும் உள்ளான் என்று கருதப்படுகிறது.

அமரவாழ்வின் விழிப்பின் ஆனந்த உணர்வில் அவன் அறியப்படுகிறான். ஆத்மாவிடமிருந்தே உண்மையான ஆற்றலை – வீரியத்தையும் பெறுகின்றோம். அந்த பிரம்ம ஞானத்தால் ஏற்படும் வித்தையாலேயே மரணமிலாப் பெருவாழ்வை – சாகாநிலையையும் பெறுகின்றோம்.

இங்கேயே அவ்வுண்மையை அறிந்தவன் அழியாமல் இருக்கின்றான். அவனை அறிந்தவனுக்கே உண்மையின் ஒளி விளக்கமாகிறது. அறியாதவனுக்கோ பெரும் அழிவு ஏற்படுகின்றது – இருள்தான் ஏற்படும். ஒவ்வொரு பொருளிலும் – உயிரிலும் – ஆராய்ந்து அவனையே கண்ட ஞானிகள், இவ்வுலகை விட்டுப் பிரியும்பொழுது அமரத்துவம் அடைகிறார்கள்.

"என்னை அறியேன் நான் என்னை அறிந்தேன் நான்
என்னால் நகைப்புக் கிடனாகும் – என்னை
தலைவிடயமாக்க இரு தானுண்டோவொன்றா
யனை வரனு பூதியுண்மையால்"

என்பது ரமண மகரிஷியின் திருவாசகமாகும்.

ஆத்மபலம் இல்லாதவனால் அவனை அடையமுடியாது. உண்மையான பலம் ஆத்மபலமாகும். அந்த அரிய பலத்தைக் கொண்டே அமிருதநிலை பெறமுடியும். எவன் பிரம்மத்தை அறிந்தவனோ அவன் அப்பிரம்மமாகவே ஆகின்றான்.

## 3

பிரம்மம் தேவர்களுக்காக வெற்றி பெற்றது எவருக்கும் தெரிந்த விஷயம். பிரம்மத்தின் அந்த வெற்றியால் தேவர்கள் மிகவும் பெருமிதம் கொண்டார்கள். அதனால் அத்தேவர்கள் "இந்த வெற்றி எங்களுடையதாகும். இப்பெருமை எங்களாலேயே ஏற்பட்டது" எனக் கருதி செருக்குக் கொண்டனர்.

அவர்களுடைய அந்தத் தவறான - செருக்கு எண்ணத்தை அறிந்த பிரம்மம் அவர்கள் முன் தோன்றியது. அந்தத் தொழத்தக்கப் புனித வடிவத்தை அவர்களால் உணர முடியவில்லை. வியப்பிலாழ்ந்தனர்.

பரமேஸ்வரன் தம் யோகமகிமையால் தோற்றுவித்துக் கொண்ட, அந்த அதியற்புதமன வடிவம் மிகவும் மன ஈடுபாட்டுடன் தொழத் தக்கதாய் நின்றது. அதை தேவர்களால் அறிந்து கொள்ள முடியாமல் நம்மை வியப்பில் ஆழ்த்தும் இப்பொருள் யாது என கேட்டு ஒருவர்க்கொருவர் பார்த்து கொண்டனர்.

உடனே அவர்கள் அங்கிருந்த அக்னியைப் பார்த்து ஓ அக்னிதேவனே! இந்த வியத்தகு வடிவம் என்ன என்று தெரிந்து வருவாயாக என்று கேட்டுக்கொண்டார்கள்.

அப்படியே ஆகட்டும் என்று ஓடினான் அக்னி தேவன். அந்த யக்ஷவடிவம் நீயார்? என்று அவனைக் கேட்டது. நான் அக்னி நான் அனைத்தும் அறிந்தவன் - ஜாத வேதா - எனப் பிரசித்துப் பெற்றவன் என்றான் அக்னி.

அப்படியா? அப்படியென்றால் உன்னிடம் என்ன வீரியம் உள்ளது? என்றது.

"இப்புவியில் உள்ள அனைத்தையும் நான் எளிதில் எரித்துப் பொசுக்க முடியும்" என்றான் அக்னி.

உடனே "இதை எரி பார்ப்போம் என்று ஒரு துரும்பை எடுத்து அக்னியின் முன்பாக வைத்தது. அப்

பொழுதே அக்னி தம் வெப்பத்தின் வீரியத்துடன் அதன் மீது பாய்ந்தும், அதனை எரிக்க முடியவில்லை. உடனே இந்த வடிவம் எது என்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லையே!' என்று திரும்பிவிட்டான்.

பிறகு வாயுவைப் பார்த்து 'ஓ! வாயுபகவானே! இந்த வியத்தகுவடிவம் என்ன என்பதை கண்டு – அறிந்து – வாருங்களேன் என்றார்கள். அப்படியே ஆகட்டும் என்று சென்றான்.

அதை நோக்கி விரைந்தான். 'நீ யார்? எனக் கேட்டது. நான் வாயு. அண்டவெளியில் இயங்கும் காற்று – என்ற வகையில் நான் 'மாதரிஸ்வா' என்று பிரசித்தியடைந் தவன் என்று கூறினான்.

"அப்படியென்றால் உன்னிடம் உள்ள சக்தி யாதோ?" என்றது. பூமியில் உள்ள அனைத்தையும் நான் அப்படியே ஊதித்தள்ளுவேன்" என்றான்.

"இதைத் தூக்கு – தள்ளு பார்ப்போம் என்று ஒரு புல்லை எடுத்து அதன் முன் வைத்தது. வாயு மிக விரைவாக அப்புல்லின் மீது பாய்ந்தும் அதைத் தள்ள முடியவில்லை. இந்த மாபெரும் உன்னதவடிவம் என்ன வென்று தெரிந்து கொள்ள முடியவில்லையே!' எனத் திரும்பிவிட்டான்.

அதன் பிறகு தேவர்கள் இந்திரனே நலன்களைய னைத்தும் தருபவரே! இவ்வடிவம் என்னவென்று தெரிந்து வாருங்களேன் என்று இந்திரனைக் கேட்டுக் கொண்டனர். அப்படியே ஆகட்டும் என்று சம்மதித்து அதை நோக்கி – அவ்வடிவத்தை நோக்கிச் சென்றான். உடனே அந்தயக்ஷ வடிவம் அங்கிருந்து மறைந்தே போய்விட்டது.

அப்பொழுது விண்ணில் ஒளிமயமான எழில் உரு வத்தை – இறைவியைக் கண்டான் இந்திரன். அவளே உமாதேவி, இமய மகள் ஆவாள். இந்த வியத்தகு வடிவம் என்ன என்று அத்தேவியைக் கேட்டான்.

இதற்கு ஒற்றாற்போல் மற்றொரு புராணக்கதையும் உண்டு. அக்னி ஸ்தம்பமாக நின்றபோது, ஆண்டவனின் அடியையும் முடியையும் காண விஷ்ணுவும், பிரம்மனும், வராகமாகவும், அன்னமாகவும் மாறி ஆராய்ந்தும் காண முடிய வில்லை. பொருளுக்கும் பரம்பொருளுக்கும் வெகு தூரம். அப்படியே அறிவுக்கும் பரஞ்ஜோதிக்கும்.

## 4

அதுவே பிரம்மம். அதன் தோற்றத்தில் நீங்கள் பெருமை கொள்ள வேண்டும்' என்றாள் தேவி. அதன் பின்னர்தான் அது பிரம்மம் என்பதை இந்திரன் தெரிந்து கொண்டான்.

நமக்கு ஏற்படும் அகங்காரம் அறவே ஒழிந்து போனால் பரமேஸ்வரியின் அருள் ஏற்படும் அந்த அகிலாண்டேசுவரி உண்மை ஞானத்தை அவசியம் அளிப்பாள்.

யாதேவி சர்வபூதேஷு புத்திரூபேண சமஸ்திதா!
நமஸ்தஸ்ய நமஸ்தஸ்ய நமஸ்தஸ்ய நமோநமஹ

என்று தேவி பாகவதமும் சொல்கிறதே!

அக்கினியும் வாயுவும், இந்திரனும் எக்காரணத்தால் பிரம்மத்தை தங்களுக்கு நெருங்கிய பொருளாகக் கண்டார் களோ, மற்றும் அதை பிரம்மம் என்று அறிவதில் முதன்மை பெற்றார்களோ, அதனால் - அக்காரணத்தால் இம்மூன்று தேவர்களே மற்ற தேவர்களைவிட மேம்பட்ட வராயினர்.

இந்திரனே அதை நெருங்கிய பொருளாகக் கண்டு பிரம்மம் என்பதையும் முதன்மையாகத் தெரிந்து கொண்டான். அதனால் இந்திரன் மற்றையதேவரினும் மேம்பட்டவனானான்.

இதைக் கண்டு கொண்டேன், இதைக் கண்டுகொண் டேன் என்று களிப்புடன் கூறியதலால் அவன் பெயர் இந் திரன் ஆகிற்று என்று சொல்வதும் உண்டு.

இப்பிரம்மம் திடுக்கென்று தோன்றி மறைந்து போகும் – மின்னலின் மின்னல் போன்றது. இமைகொட்டுதல் போன்றது என்பதுதான் அது பற்றிய விளக்கமாகும். இது அதி தைவதம்.

இயற்கையில் வியப்புறும் ஒரு மின்னல் வெட்டில் அவன்காணப்படுகிறான். ஞானக்காட்சியதன் ஒளிக்கீற்றில் அவன் தோன்றுகிறான். இருண்ட மேகத்திடை மின்னலைப் போல், தியானத்தில் உள்ளத்தினுள்ளே தோன்றி மறைவதாகும்.

ஆத்மா, ஜீவாத்மாவோடு தொடர்புள்ளவகையில் பிரம்மத்தைப் பற்றிய உண்மை இதுவே. மனம் பிரம்மத்திடம் செல்லச் செல்ல, பளிச்சென்று தோன்றிமறையும் பாவனை உண்டாகிறது. இது 'அத்தியாமம்.

பிராணிகளனைத்திற்கும் பிரத்ய காத்மாவாயிருப்பதால், அந்த பிரம்மம் அனைவராலும் உபாசிக்கத்தக்கதாகும். தேடுகின்ற ஞானி மனத்தின் உதவியால் மறுபடியும் மறுபடியும் அதன் மிக நெருக்கத்தில் ஒன்றி விடுகிறான். இதுவே முடிந்த முடிவாய் இருத்தல் வேண்டும்.

எல்லா உயிருள்ளும் கோயில் கொண்டுள்ள வழிபாட்டுக்குரிய பரம்பொருள். அவனை நாடுதலே இறுதிப் பயன் என்ற பொருளில் 'தத்வனம்' என்ற பெயர் பெற்றது அது. எவன் இந்த உண்மையை அறிந்து தொழுதுவருகிறானோ அவ்னை எல்லா உயிர்களும் அன்பு செய்து விரும்பும்.

"அளவு அறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு
அடியவர்க்கு எளியான் நம்
களவு அறுத்து நின்று ஆண்டமை கருத்தினுள்
கசிந்து உணர்ந்திருந்தேயும்
உள கறுத்து உனைநினைத்து உளம் பெரும்களன்
செய்ததும் இலை நெஞ்சே
பளகு அறுத்து உடையாள் கழல் பணிந்திலை
பரகதி புகுவானே!"

என்று தமிழ் வேதமும் செப்புகிறதே!

அனைத்தின் தொகைக்கும் உரியவன் அவன் தானே! அன்பு - நாட்டத்தின் இறுதிப்பயனும் அவன் தானே! அதனால் "தத்வனம்" என்று அவனை உபாசித்து வருவோனை - இறைவன் மாட்டு இத்தகைய அன்பு கொண்டவன் பெருமைப்பட - போற்றப்பட - கேட்க வேண்டுமா?

பிரம்ம ஞானத்தை - உபநிஷத்தை - விளக்கியரு ளும்படி கேட்ட உனக்கு, நான் உபதேசித்து விட்டேன். பிரம்மத்தைப்பற்றிய இரகசியத்தை - புனிதபோத னையை - உனக்குத் தெளிவாகக் கூறினேன்.

உண்மையில் உனக்கு என்ன தெரியவேண்டுமோ அதையே விளக்கிக் கூறியுள்ளேன்.

அதன் பாதங்கள், பற்றற்று கருமத்தைப் புரிதல், தவம், தன்னடக்கம் ஆகும். அதன் மற்ற அங்கங்கள் வேதங்களா கும். சத்தியமே அதன் உயிர் - உறைவிடமாகும்.

எவர்களிடத்தில் சூதும், பொய்யும் வஞ்சனையும் இல்லையோ அவர்களிடமே இது உறைகிறது.

எவன் இவ்வுபநிஷத்தை இவ்வாறு அறிகின் றானோ, அவன் பாவங்களனைத்தையும் - தீமைகளை யெல்லாம் அறவே களைந்தவனாகின்றான். எல்லை யில்லாத உன்னதமான ஸ்வர்க்கலோகத்தில் - பரப்பிரம் மத்தில் அவன் நிலைபெறுகிறான்; உறுதியாக நிலை கொள்கிறான்.

ஓம். என்னுடைய பிராணனும், வாக்கும், கண்காது போன்ற இந்திரியங்களும் தக்க திறனடைந்து தம்தம் தொழிலை நன்கு புரியட்டும். பிரம்மத்தில் மகிழ்ந்து வாழ்ப வரிடமுள்ள உபநிஷத்தருமங்கள் எவையோ அவை என் னிடத்தில் நிலை பெறட்டும். நிரந்தரமாக இருக்கட்டும்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவட்டும்.

இந்திரியங்கள் அதனதன் தொழிலில் இறங்குவது அதனதன் இச்சையால் அன்று. அவைகளை இயக்குவிக்கிறது ஒரு பொருள். அங்கே இந்த இந்திரியங்கள் – மனம் உள்பட – செல்லாது.

அது அவன் அறிந்த பொருளுக்கெல்லாம் வேறாகும். எதை ஒருவன் தன் இந்திரியங்களால் உணர முடியாதோ, ஆனால் எந்த சக்தியால் இயங்குகின்றனவோ, அதுவே பிரம்மமாகும். அறியாமையால் எதை "பிரம்மம்" என்று தியானம் செய்கிறார்களோ அது பிரம்மம் ஆகாது. அது அறிவாளிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகும். ஆனால் அறிவீனர்கள் அதை அறிந்ததாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு செய்கையிலும் அதுவே விளங்குகிறதெனினும், அது அறியப்படாத அரிய பொருளாய் உள்ளது.

இப் பேருண்மையை தெரிந்து கொள்ளாமல் மடிந்து போகிறவன் பெரும் இழப்புக்கு ஆளாகின்றான்.

"அவனின்றி ஓரணுவும் அசையாது" என்பதே உண்மை. அதை இந்த உபநிஷதம் செம்மையாக விளக்குகிறது.

தேவாசுரயுத்தத்தில் வெற்றி பெற்று தேவர்கள் கர்வம் கொண்டனர். அவர்களுக்குப் புத்தி புகட்டவே பிரம்மம், ஜோதி வடிவில் வந்து நின்றது. ஆனால் அக்னி, வாயு இந்திரன் முதலிய தேவர்களால் அதை அறிந்து கொள்ளமுடிய வில்லையே; அதற்குள் ஜோதியும் மறைந்து விட்டது.

பிறகு தேவர்கள்பால் இரக்கங்கொண்டு – விண்ணில் மின்னலென உமாதேவி தோன்றி "அதுவே பிரம்மம்" அதன் சக்தியால்தான் நீர் வெற்றி பெற்றீர்கள். அதனால் நீங்கள் போற்றவேண்டியது பிரம்மமே!" என்று கூறி மறைந்தாள்.

இந்த பிரம்மத்தின் அனுபவம், உபாசிப்பவர்களின் மனதில் சமயத்தில் மின்னல் கொடிபோல் தோன்றி மறையும். அந்த உபாசனைக்கு சத்தியமே உறைவிடம். மற்ற தவம், அடக்கம், கருமம் இவையெல்லாம் அதன் அங்கங்களாகும்.

இதையறிந்து கொண்டால் - பாவங்களனைத்தையும் களைந்து -- எல்லையற்ற பேரின்பத்தை அடைகின்றான்.

# ஐதரேய உபநிஷதம்

இது ரிக் வேதத்தைச் சார்ந்ததாகும். ஐதரேய மகரிஷி யால் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

இதில் ஆறு கண்டங்கள். இது "ஆத்ம ஷட்கம்" என்றும் கூறப்படுகிறது.

இதில் கூறப்படும் விஷயம் - ஆதியில் ஆத்மா ஒருவனே உளன். அவன் ஆலோசித்து உலகமெலாம் சிருஷ்டித்தான். லோக பாலர்களையும் உண்டு பண்ணி னான். ஞானத்திற்கு தகுதி வாய்ந்த மனுஷ்ய சரீரத்தையும் சிருஷ்டித்தான். மனித தேகத்தை உண்டுபண்ணி அதில் அந்த பரமாத்மாவே பிரம்ம ரந்திரத்தின் வாயிலாகப் பிர வேசித்தான்.

ஜீவ ரூபனாகப் பிரவேசித்த ஆத்மா வெகுகாலம் வரை சம்சார பந்தத்தினை அநுபவித்து ஏற்ற சமயம் வாய்த்ததும் அதிருஷ்டவசத்தால் ஆசார்யனை அண்டி தனது ஸ்வரூபக் ஞானத்தால் முக்தி பெறுகிறான்.

உலகில் பிறப்பு இறப்பு என்று சொல்லும் இவ்விரு பெரும் கஷ்டத்தை மனத்தினால் நினைத்து அதனால் வை ராக்யம் பெற்று உபாதிகளை விலக்கி ஆத்ம ஸ்வரூபத் தையே பிரம்மமென அறிந்து முக்தி பெற வேண்டும் என்பதாகக் கூறுகிறது.

அதுவே பேரின்ப வாயிலாகும்.

இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்பு அறுத்துச் சோதி ஆய் அன்பு அழைத்துச்
சீ ர் ஆர் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊர் ஆகக் கொண்டான் உவந்து."

என மணிவாசகப் பெருமானும் பாடியுள்ளாரே!

ஆத்மா வாழும் இடங்கள் மூன்றாகும். அவை உறக்கத்தின் முந்நிலைகளே!

இம்முந்நிலைகளினின்று விழித்தெழுந்தால், ஆத்மாவைத் தவிர அவன் வேறு எதையும் காண்பதில்லை.

ஜீவனாய்ப் பிறந்து விட்டபிறகு, மூலகங்கள் – ஐம்பூதங்கள் – தன்னுள் ஈரறக் கலந்துள்ளதை உணர்கிறான்.

அப்பொழுதே அவன் தன் இதயத்தாமரையில் வீற்றிருக்கும் பிரம்மமே எங்கும் வியாபித்திருப்பவனாகக் காண்கிறான்.

நாம் சுவாசிக்கிறோம். அன்பு கொள்கிறோம். இவையெல்லாம் உணர்வு நிலைகளின் பல்வேறு பெயர்களாகும்.

இவைபோன்று இன்னும் பிற செயல்களைச் செய்வதும் எந்த மனத்தாலும் இதயத்தாலும் நடைபெறுகின்றதோ, அவ்விதயமும் மனமுமே "அவன்" ஆவான்.

தூய உணர்வு நிலையே அந்த ஆத்மன்
அந்த ஆத்மனே பிரம்மமாகும்.

எல்லா உயிர்களும் – அவை சிறியனவோ, பெரியனவோ – அனைத்தும் அவனே!

இவை அனைத்திற்கும் பின்னால் இருந்து கொண்டு நடத்தும் பரம்பொருளே மெய்ப்பொருளே – பிரம்மமாகும்.

அவன் தூய உணர்வு நிலை மயமானவனாவான்.

"தூயது ஆன தூரிய எனும்
தாயும் நீ, இன்பத் தந்தையும் நீ என்றால்
சேயதாம் இந்தச் சீவத்-திரன் அன்றோ
ஆயும் பேரொளி ஆன அகண்டமே!"

எனத் தாயுமானாரும் பாடியுள்ளாரே!

இவையனைத்தும் வாழும் பொழுதும், சரி, மரித்த பிறகும் சரி, அவனிலேயே நிலை கொண்டுள்ளன.

வாமதேவர், பிரம்மத்தை தூய உணர்வு நிலையாக அறிந்த பின் இவ்வுயிர் வாழ்க்கையினின்றும் நீங்கிச் சென்றார். உயர் நிலையடைந்து வானுலகுக்கே ஏகினார்.

அவரது ஆசைகளனைத்தும் நிறைவேறப் பெற்றன. அமரத்துவம் அடைந்தார். அவர் பூதேவியை உபாசித்து ஞானத்தைப் பெற்றவர் ஆவார்.

ஓம்! என் வாக்கு என் மனதில் எப்பொழுதும் ஊன்றி நிற்கட்டும். அவ்வண்ணமே மனமும் வாக்கில் ஒன்றி நிற்கட்டும். ஆன்மச் சுடரே! என்னிடம் எப்பொழுதும் பிரகாசித்தருள்வாய்.

இந்த ஆத்ம வித்தையின் அத்தியயனத்தில் இரவையும் பகலையும் ஒன்றாக்குவேன். உலகு அழகும் ஒழுங்குமாய் விளங்குவதைப் போற்றுகிறேன். அதற்கு ஆதாரமாக உள்ளது எதுவோ, அந்த மேலான சத்தியத்தையும் போற்றுகிறேன். அப்பரம்பொருள் என்னையும் ஆச்சாரியனையும் காப்பாற்றட்டும்.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

ஆதியில் ஆத்மா ஒன்றே இருந்தது. வேறு எதுவுமே கிடையாது. அப்போது அவ்வாத்மா உலகங்களைச் சிருஷ்டிக்க விரும்பியது. உடனே இவ்வுலகங்களை உண்டாக்கியது.

வானத்திற்கு மேல் அதனால் தாங்கப்பட்டிருக்கும். அம்பஸ்,' வானமாகிய 'மரீக்கி' அழியும் உலகமாகிய 'மா' அல்லது பூமி, ஞாலத்திற்கு. கீழிருக்கும் உலகமாகிய 'ஆப்' ஆகிய இவ்வுலகங்களை உண்டாக்கினார்.

அதன்பிறகு அதன் காப்பாளர்களைப் படைத்தார். பிறகு அக்காப்பாளர்களுக்கான உணவைப் படைத்தார். பிறகு அக்காப்பாளர்களினுள் நான் நுழைவேனாக என்று தீர்மானித்து, கபால ஓடுகளின் மத்தியைத் திறந்து அவர் நுழைந்தார். அதுவே பேரின்ப வாயிலாகும்.

புருஷனிடத்தில் ஆதியில் விந்து வடிவாக கர்ப்பமாயிருக்கிறான். இந்த விந்து எல்லா உறுப்புகளின் சக்தியும் திரண்ட கருவாகும். அதை எப்போது பெண்ணிடம் விடுகிறானோ அப்போது தன்னைப் பிறப்பிக்கிறான். இதுவே முதற்பிறப்பாகும்.

அது பெண்ணின் உடலுக்குச் சொந்தமான உறுப்பால் ஒன்றுபட்டுப் போகின்றது. அவள் தன்னிடம் புகுந்த பர்த்தாவின் ஆத்மாவாகிய ஜீவனைப் பரிபாலிக்கிறாள். கர்ப்பத்தைச் சுமக்கிறாள். அவள் அதைப் போற்றுகிறாள்.

இப்புத்திர உற்பத்தியாலேயே இம்மையும் மறுமையுமான உலகங்களின் தொடர்பு - சந்ததி - அறுபடாமல் பெருகி வருகின்றது. இது இவனுடைய இரண்டாவது பிறப்பாகும்.

பிதாவினுடைய ஆத்மாவாகிய இவன் புண்ணிய கருமங்களில் இவ்வுலகில் பிதாவுக்குப் பிரதிநிதியாகின்றான். பிறகு பிதாவின் உடலிலுள்ள அவனுடைய மற்றொரு ஆத்மா வயது சென்றதாய் பிரயாணப்படுகிறது. மீண்டும் வேற்றுடலில் புகுந்து பிறப்பையடைகிறது. இதுவே மூன்றாவது பிறப்பாகும்.

பிறப்புக்குமுன் கர்ப்பாதானம், பும்சவனம் முதலிய காரியங்களாலும், ஜாத கர்மா, நாமகரணம், உபநயனம், வித்தியாப்பியாசம் முதலிய காரியங்களால் பிறப்புக்குப் பின்னும் போற்றுகிறாள்.

தாயிடம் புகுந்தது முதல் பிறப்பு, தாயிடமிருந்து வெளி வந்தது இரண்டாவது பிறப்பு. இவ்வுலகைவிட்டு அவ்வுலகில் புகுந்தது மூன்றாவது பிறப்பு. இறப்பும் மற்றோரிடத்தில் பிறப்புதானே!

கர்ப்பத்தில் சயனத்திருக்கையில் ரிஷி வாமதேவர் நான் இங்கிருந்து கொண்டே தேவ ஜன்மங்கள் அனைத்தையும் அறிந்தவனானேன். கணக்கிலடங்கா இரும்புக் கோட்டைகள் முன்னம் என்னை காவல் கொண்டன. ஆனால் நான் வலையை அறுத்துக் கொண்டு கிளம்பும் பருந்துபோல் வேகமாக வெளிக் கிளம்பிவிட்டேன் என்றார்.

இவ்வண்ணம் அவர் சரீரத்தை விட்டு உயர்நிலை சென்று அழியாத பதவியை அடைந்தவரானார்.

கர்ப்பத்தில் ஒன்பதாவது மாதத்தில் அனைத்து லட்சணங்களும் பூர்த்தியடையப் பெற்றவனாய் முன் ஜன்

மத்தை நினைக்கின்றான். புண்ணிய பாவங்களை உணர்கின்றான். கர்ப்பத்தில் அனைவருக்குமே இந்த நிலை ஏற்படுவதுண்டு. ஆனால் வாமதேவருக்கு பிறந்த பின்னும் அந்த ஞானம் நழுவாமல் நிலைத்திருந்தது. மற்றவர்களுக்கு நழுவி விடுகிறது.

எதை "இது ஆத்மா" என நாம் உபாசிக்கிறோமோ அதுவே இருதயம், மனம், உணர்வு, ஆட்சி, கலைஞானம், பகுத்தறிவு, அறிவு கூர்மை, மனக்கண் கொண்டு காணுதல், மனோதிடம், மனன் சக்தி, நிச்சய புத்தி, மனக் கலக்கம், ஞாபக சக்தி, விருப்பம், தீர்மானம், பிராண சக்தி, ஆசை விஷயங்களில் கவர்ச்சி என்று வெவ்வேறு பெயர்களாகின்றன.

இதுவே பிரம்ம இந்திராதி தேவர்கள் முதல், மண், காற்று முதல் வளர்வன முளைப்பன முதல், மிருகங்கள் பட்சிகள் முதல், மனிதர், அசையும் பொருள் அசையாப் பொருள் எல்லாமுமாக நிலை பெற்றுள்ளன. அந்த பகுத்தறிவே பிரம்மம்.

முடிவு நேரத்தில் - மோட்ச காலத்தில் - பதினைந்து கலைகளும் தங்கள் மூலஸ்தானத்துக்குச் சென்று விடுகின்றன. இந்திரியங்களோ தங்கள் அதிஷ்டான தேவதைகளிடம் சென்று விடுகின்றன கருமங்கள் அனைத்தும் ஆத்மாவும் பழம் பொருளில் ஒன்று பட்டு உறைகின்றன.

சாதனத்திற்கான வழி மூன்று வகையாகும். அவற்றை பட்சிநீதி, மர்க்கடநீதி, பிபீலிகாநீதி என்பர். பறவை பழத்தை கொத்திக் கொண்டு பறக்கும் பொழுது, பழம் தவறிவிடலாம். அல்லவா! அவ்வண்ணம் குரங்கும் கௌவிக்கொண்டு தாண்டும் பொழுது நழுவ விடலாம். ஆனால் எலும்பு (பிபீலிகா) மட்டுமே மெதுவாகவும் விடா முயற்சியுடனும் உணவைச் சாவதானமாய் அனுபவிக்கிறது. இதுவே சிறந்த வழி.

வாமதேவர் பிரம்மத்தை தூய உணர்வு நிலையால் உணர்ந்தபின், இவ்வுயிர் வாழ்க்கையினின்றும் நீங்கிச்

சென்றார். வானுலகுக்கு உயர்ந்து போனார். அவரது ஆசைகளனைத்தும் நிறைவேறப் பெற்றார். அமரத்வம் எய்தினார்.

ஓம். முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

வைராக்கியமே ஞானத்திற்கு அடிப்படையாகும். அது எப்பொழுது ஏற்படும்? பல பிறவிகளை எடுத்து உழல் வதைப் பற்றி விசாரித்தால் – சிந்தித்தால் – வைராக்கியம் தோன்றும். விந்து வடிவாய் தாயின் கர்ப்பத்தில் புகுவது ஜீவனின் முதல்பிறப்பு. உலகில் ஜனிப்பது இரண்டாவது பிறப்பு. பிறகு இவ்வுலகை விட்டுச் செல்வது மூன்றாவது பிறப்பு. பிறகு எங்கெங்கேயோ வேறுலகங்களில் சுற்றி விட்டு மீண்டும் அதே முறையில் கணக்கற்ற பிறப்பிறப்பு கள்.

வாமதேவர் இது பற்றியெல்லாம் கர்ப்பத்திலிருக்கும் பொழுதே சிந்தித்துப் பார்த்து ஞானம் எய்தினார். அவ ரைப்போல் அனைவரும் ஆத்ம ஞானத்தையடைந்து உய்ய வேண்டும்.

ஆத்மா அறியப்படா நிலையில், ஆத்மாவின் நிலைகள் எல்லாம் ஒரு விழிக்கும் கனா, கனவு, கனவிலாத் துயில் என்ற இம்மூன்று நிலைகளே! இவ்வொவ் வொன்றிலும் ஆத்மா வாழ்கின்றது. நாம் விழித்துக் கொண்டிருக்கும்பொழுது கண் அவனது வாழுமிடம். கனவு காணும் பொழுது, மனம் அவனது வாழும் இடம். கனவற்ற துயிலில் இதயத் தாமரையே அவனது வாழும் இடம். ஒருவன் இம்மூன்று நிலைகளினின்றும் விழித்தெழுவானேல், இப்போது அவன் ஆத்மாவைத் தவிர வேறு எதையும் காண்பதில்லை.

மற்றும் பதினாறு கலைகளுடன் சித்தாகாசத்தில் பிரஞ்ஞான வடிவினனாய்ப் பிரகாசிப்பவன் இந்த ஆத்மா. இவ்வுலகம் அதனாலேயே நடத்தப்படுகிறது. அப் பிரஜ் ஞானத்திலேயே நிலைபெறுகிறது. பிரஜ்ஞானமே பிரம்மம்.

# மைத்ரீ உபநிஷதம்

## 1

இது மைத்ரிமாமுனிவர் அருளியதாகும்.

வாலிக்கில்யர்கள் மிகுந்த நல்லோர்களாவார்கள். மகிமை மிக்கவராகவும் தூயோராகவும், இருந்தனர். அவர்கள் ஒரு நாள் 'கிராது பிரஜாபதியிடம் சென்று' இச்சரீரம், உணர்நிலையற்ற தேர்போல் இருக்கிறதே! இதனை உணர்நிலையோடு இருக்கச் செய்யும் ஆற்றல் படைத்த உறுபொருள் எது? இதற்கு யார் தேரோட்டி?" எனக் கேட்டனர்.

பிரஜாபதி விளக்கினார்.

"ஆம். நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதே! பேராற்றல் கொண்ட உறுபொருள் ஒன்று உண்டு. அது இவ்வுலகத்து அனைத்துப் பொருள்களூடே இருக்கிறது என்றாலும், அது அவைகளுக்கு அப்பாலும் உள்ளது.

இப்பரந்த வான் வெளியின் மோனத்தில் அவன் நிலைபெற்றிருக்கின்றான். அவன் தெளிந்தோனாய் தூயோனாய் சஞ்சரிக்கின்றான்.

சரீரம், மனம் இவற்றின் வாழ்வுக்கு அப்பால் உள்ளவன். அவன் ஒருபோதும் இறவாதவன்; என்றும் உள்ளவன்.

அவனே எல்லாம் வல்ல பரம்பொருள் ஆவான். அவனது மேலான ஆற்றலே இச்சரீரத்துக்கு உணர்வு நிலை தருகின்றது. தேரோட்டி அவன்தான்"

"குருவே! உணர்நிலையில்லாத இச்சரீரத்துக்கு அப்பரம் பொருள் எவ்வாறு உணர் நிலை ஊட்டுகின்றது. அவன் எவ்வாறு தேரோட்டியாக உள்ளான்?

உறங்கும் மனிதன் விழித்தெழுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அவன் துயிலும் பொழுது, இவ்வாறு விழித்துக் கொள்வோம் என்று அறிய மாட்டான் அல்லவா! அது போலவே, யாவரும் காண இயலாத பரம்பொருளின் ஒரு நுண்ணிய பகுதி, – தன்னுடைய வருகையை உடல் உணராத நிலையில் – சரீரத்துக்கு ஒரு தூதனாய் வந்து சேர்கின்றது.

அந்த எல்லையில்லாத உணர்வு நிலையின் ஒரு பகுதியே, வரையறுத்தல் பகுத்துணர்தல் எனும் ஆற்றல்களோடு பொய்க் கருத்துக்களும் சேர்ந்து, ஓர் எல்லைக்குட்பட்ட நமது சொந்த உணர்வு நிலையாகின்றது.

விஸ்வனும் பிரஜாபதியும் படைப்பின் ஆற்றலான ஊற்றுக் கண்ணும், நம் அனைவரிடம் இயங்கும் பரம்பொருளும் உண்மையில் அவனே!

உடலுக்கு அதுவே உணர்வுநிலை அருளுகின்றது. அதுவே தேரோட்டி!

## 2

நாம் செய்யும் வினைகளைத் தொடரும் ஒளி, இருள் இவைகளினின்று விடுபட்டு, பல்வேறு பிறப்புகளின் வாயிலாக ஒரு சரீரத்தினின்று இன்னோர் சரீரத்துக்கு இவ்வுலகில் அலைந்து திரியும் ஆத்மா இதுவே!

தந்நலம் நீங்கியுள்ளதால் அவன் விடுதலை பெற்றவனாவான். இருளில் மறைந்திருக்கும் அவன் காண இயலாதவன். அத்துடன் அவன் விளக்கவொண்ணாதவன். ஆனால் அவன் வினைகள் செய்பவனாகவும், தான் இல்லாதிருப்பது போலவும் தோன்றுகிறான்.

உண்மையில் அவன் வினைகள் செய்யாதவனாகவும், என்றுமிருப்பவனுமாகவே விளங்குகின்றான். அவன் எங்கும் என்றும் உள்ள பரம்பொருள்.

அவன் தூயோன்; எவ்வகையிலும் கறைபடுத்த இய லாதவன்; ஒரு போதும் அசையாதவன்; ஒருபோதும் மாறா தவன்; அவன் ஆசைகளுக்கப்பால் அமைதிகொண்டு இப் பிரபஞ்சத்தின் நாடகத்தைக் கண்காணித்து வருகிறான்.

இப் பிரபஞ்சத்தின் முக்குணங்கள் மற்றும் பகுதிப் பொருள்கள் ஆகிய திரையின் பின்னால் மறைந்துறைகி றான். இருந்தாலும் தனது இயல்பான பேரின்பத்தில் அவன் ஒருவனே! என்றும் மாறா அவன் ஒருவனே!

## 3

மறுபடியும் வாலிக்கில்யர்கள் கேட்டனர்.

"குருவே! பரம்பொருளின் பெருமையைச் சொன் னீர்கள். வினைகளைத் தொடரும் ஒளி - இருளால் பிணைக்கப்பட்டு தனது நன்மை - தீமைகளினின்றும் மீண்டும் பிறப்பெடுக்கும் ஆத்மா என்பது என்ன?"

"இச்சரீரத்தின் மூலகங்களால் உருவாக்கப்பட்ட பூதாத்மன் எனும் வேறுபட்ட ஒன்றும் உண்மையில் உண்டு. அது அவரவர் வினைகளைத் தொடரும் ஒளி - இருளால் பிணிக்கப்பட்டுள்ளது.

அது மாறுபட்ட இருமைச் சக்திகளின் உந்துதலின் கீழ்த் தனது அலைச்சல்களினால் எழவும் வீழவும் இயல் புள்ளது. தனது நன்மை தீமைகளின் தொடர்பாக மீண்டும் பிறவி எய்துவது அதுவே. இதுவே அதன் விளக்கமாகும்.

மனித சரீரமானது, தந் - மந்திரங்கள் எனும் ஐந்து நுண்ணிய மூலகங்களிலும் மகாபூதங்கள் - ஸ்தூலபூதங்கள் - எனும் ஐந்து பருத்த மூலகங்களினும் இணைப்பே ஆகும்.

இச்சரீரத்தை மனித ஆத்மா ஆள்கின்றது. ஆனால் அமரநிலை நல்கும் ஆத்ம பரம்பொருள், தாமரையிலை யின் மேல் உள்ள நீர்த்திவலைபோல் மிகவும் தூய்மையா யுள்ளது.

இயற்கையில் முந்நிலைகள் மற்றும் பகுதிப் பொருள் களின் ஆற்றல்களின் கீழ் மனித ஆத்மா உழல்வதால் அது குழப்பத்தில் வீழ்கின்றது. இதனால், நாம் உழைப்பதற்கு வேண்டிய ஆற்றலை நமக்குத் தருகின்றதோ அந்த இறைவனை, உள்ளக் கோயிலில் உறைந்து நிற்கும் அந்த ஆத்மனை அது உணர முடியாது.

இவ்வாறு அது, இயற்கையின் முந்நிலைகளென் னும் அழுக்கு நீர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகி றது. அதனால் அது செருக்கால் நிலைகுலைந்து, ஒரு முகப்படுத்தும் வகையிழந்து, குழப்பத்தில் ஆழ்ந்து ஆசைகள் அநேகம் கொண்டு உறுதியில்லாமல் அலை கின்றது.

எப்பொழுது ஆத்மா "நான், எனது" எனும் எண்ணங் களில் விழுகின்றதோ, அப்போதே அது தனது கீழ் நிலை யகத்தோடு, வலையில் சிக்கிக் கொள்ளும் ஒரு பறவைபோல் தன்னை பிணித்துக் கட்டுகிறது.

பிரம்ம ரிஷி "பிரம்மம் உள்ளது" என்கிறார்.

பாவங்கள் நீங்கப்பெற்ற தவ ஞானியோ "பிரம்மமே வாயில்" என்கிறார்.

எப்போதும் பிரம்மத்திலேயே உறைந்து தியானம் செய்யும் யோகியோ "ஓம் காரமே பிரம்ம மகிமை" என்கிறார்.

எனவே, தூய காட்சியாலும், கடுமையான தவத்தா லும், ஆழ்ந்த தியானத்தாலும் பிரம்மத்தை அடையலாம்.

## 4

அனைத்தும் பிரம்மமே! அந்த ஒன்றுக்கு எல்லையே யில்லை. நான்கு திக்குகளுக்கும் அப்பாற்பட்டது. மேலுள்ள வற்றிற்கும் கீழுள்ளவற்றிற்கும் அப்பாற்பட்டது.

அவனது முடிவின்மை எங்கும் இலங்குகின்றது. அவனில் கீழ்மேல் குறுக்கு நெடுக்கு எதுவுமே இல்லை. அவனில் கிழக்கும் இல்லை; மேற்கும் இல்லை.

பரம்பொருள் அளப்பரியதாகும். அது கருத்துக்கு எட்டாதது. அரிதற்கரியது. அத்துடன் அது பிறவாதது. சிந்தனைக்கும் பகுத்தறிவுக்கும் அப்பாலுள்ளது. வான்வெளியின் பெருநிலையே அதன் பெருநிலையாகும்!

இவ்வுலகங்களின் முடிவில் அனைத்தும் உறங்கும் வேளையில், அவன் மட்டும் நித்திய நிலையில் விழித்திருப்பான்.

பின்னர் அவனது முடிவில்லாத வான் வெளியினின்றும் புது உலகங்கள் பூத்து விழிக்கும். நமது எண்ணத்தை போன்று அது மிகப்பரந்த ஒரு பேரண்டமாகும்.

அந்த பிரம்மத்தின் உணர்வு நிலையில்தான் இவ்வண்டம் நிலைபெற்றிருக்கிறது. அவனில்தானே அது சங்கமமாகிறது.

வானத்தில் ஒளிவீசும் அருணனின் கதிரொளியில் அவன் காணப்படுகிறான். அதே வேளையில் இம்மண்ணுலகின் நெருப்பொளியிலும் அவனைக் காணலாம். நமது வாழ்க்கையுணவை எரிக்கும் வாழ்வுத் தீயிலும் அவனைக் காணலாம். ஆகவேதான் " சூரியனில் இருப்போனும் தீயில் இருப்போனும், மனிதனின் இதயத்திலிருப்போனும் அவன் ஒருவனே! இதனை அறிவோன் அவனோடு ஒன்றுபடுகிறான்." என்று சொல்லப்பட்டிருக்கிறது.

## 5

பேரறிஞன் ஒருவன் தன் மனத்தை புறத்திலுள்ள பொருள்கள் அனைத்தினின்றும் உள்ளிழுத்துக் கொள்ளும்போது, அவனது அகந்தை ஆசைகள் அழிக்கப்பட்டு, அவனது உயிரும் உள் உணர்வுகளை நீத்துவிடும் போது அவன் அமைதியில் நிலைகொள்கின்றான்.

உயிரோ அதினின் பெரியது ஒன்றின்றும் எழுகின்றது. எனவே, நான்காம் உணர்வு நிலையாகிய "துரிய"த்தில் உயிர் தன்னை சரண் செய்வதாகும். ஆகவேதான்,

"மோனத்தில் நமது மனத்துள்ளேயே குடி கொண்டுள்ள, நம் மனதிற்கப்பாற்பட்ட பொருள் ஒன்று உண்டு. அதுவே சிந்தனைக்கு அப்பாலுள்ள உன்னத மர்மமாகும். மனமும் நுண்ணுடலும் அப்பொருளின் மீதே நிலை கொள்வனவாகுக! வேறு எதன் மீதும் நிலை கொள்ளாதிருப்பனவாகுக." எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

## 6

பிரம்மத்தை ஆழ்ந்து தியானிப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு.

ஒலியோடும் தியானிக்கலாம்; மோனத்திலும் தியானிக்கலாம்.

ஒலியினாலேயே நாம் மோனத்திற்கு ஏகுகிறோம். பிரம்ம ஒலியே "ஓம்" காரமாகும்.

அந்த "ஓம்" காரத்தின் ஒலியால் நாம் இறுதிப் பயனை எய்துகிறோம். அதுவே பிரம்ம மோனமாகும். ஈரற ஒன்றிப் போதலும் அமரவாழ்வும் அமைதியுமே இறுதிப் பயனாகும்.

தன் சொந்த நூலால் வான்வெளியின் சுதந்திரத்தை எய்துகிறது சிலந்தி. அவ்வண்ணமே தியானத்தில் ஆழ்பவனும் "ஓம்" காரத்தால் விடுதலையை எய்துகிறான்.

## 7

"ஓம்" காரம் பிரம்மத்தின் ஒலியாகும். ஓங்காரத்தின் முடிவில் மோனம் உண்டு; அது ஓர் இனிய மோனமாகும். அச்சமும் துயரமும் இல்லாத இடம் அதுவே பயணத்தின் முடிவாகும்.

அது அசைவில்லாதது; உறுதியானது, வீழாதது; என்றுமிருப்பது; அமர நிலையது. அதுவே எங்கும் நிறைந்துள்ள விஷ்ணுவாகும்.

உன்னத நிலையை அடையும்பொருட்டு, பிரம்ம மோனத்தையும் ஒலியையும் தொழுது பக்தி செய்வாயாக. அதற்கெனவே,

இறைவன் ஒலியும் மோனமுமாயிருக்கிறார். அவன் பெயர் "ஓம்"காரமாகும்-எனவே அவனைத் தியானம் செய் யுங்கள். மோனத்தில் அவனையே தியானம் செய்வீர்க ளாக!" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

## 8

எரிபொருள் இல்லாதபோது தீ அணைந்து அமைதி காண்கிறது. அவ்வண்ணமே எண்ணங்கள் மோனத்தில் கரையும்போது, ஆத்மா தன் சொந்த மூலப்பொருளில் அமைதி காண்கிறது.

சத்தியத்தைத் தேடும் மனம் எப்போது அதன் மூலத்து அமைதியைக் காண்கிறதோ, அப்போது இந்திரி யங்களின் மயக்கத்தால் செய்த, முந்தைய செயல்களின் பலனாய் ஏற்படும் பொய் ஆசைகள் அனைத்தும் வீழ்ந்து படும்.

உயிர் பிறந்து வளர்ந்து இறந்து மீண்டும் மற்றோர் சரீரத்தில் குடியேறும் அடிமை வாழ்க்கை, ஒவ்வொருவர் மனத்திலேயே நிகழ்கின்றது.

அதனால் மனத்தை எப்பொழுதும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்; ஏனெனில் எதை நினைக்கி றானோ அதுவே ஆகிறான் மனிதன். இதுவே நித்தியத் தின் மர்மமாகும்.

நல்வினை தீவினை இவை இரண்டையும் மனத் தின் அமைதி அவசியம் வெல்லும்.

அமைதியில் ஆத்மன் ஒன்றே! அப்போது மரணமி லாப் பெருவாழ்வின் பேரின்பத்தை உணர்கிறான் மனிதன்.

இவ்வுலகைப்பற்றி அநேகம் நினைக்கின்றனர்; மனக்கோட்டை கட்டுகின்றனர். இறைவனைப் பற்றி பிரம் மத்தைப் பற்றி அந்த அளவுக்கு எண்ணினாலே போதுமே! யார் எண்ணுகிறார்கள்?

அவ்வண்ணம் எண்ணினால் யார்தான் விடுதலை எய்தமாட்டார்கள்?

மனிதனின் ஒரே மனம் இருவகையாக நிற்கிறது. ஒன்று தூயமனம், மற்றொன்று அசுத்தமனம்.

ஆசையின் அடிமைத்தளையில் மனம் உழலும் போது அது தூய்மையில்லாததாகி விடுகிறது;அதாவது அசுத்த நிலையை அடைகிறது.

அதுவே ஆசையினின்று விடுபடும் போது தூய நிலையடைகிறது.

மனம் தன் இயல்பான சலன நிலைக்கு அப்பால் மோனத்திலிருக்கும்போது அது மிகமிக அப்பாலுள்ள உலகம் ஒன்றினுள் எளிதாக நுழையமுடியும். அதுவே பெறுதற்கரிய பெரும் பயனாகும்.

அந்த உன்னதப் பயனை அடையாதவரையிலும், மனம் இதயத்திலேயே உறைந்திருத்தல் வேண்டும். அதுவே அறிவுடைமையாகும்; விடுதலையும் அதுவே! பற்று எல்லாம் வெறும் வார்த்தைகளே ஆகும்.

மனதிலுள்ள மாசுகளனைத்தும் துடைக்கப்படும் ஆழ்ந்த தியானத்தால் ஏற்படும் உள்ளத்து இன்பத்தைச் சொற்களால் விவரிக்க இயலாது. அவன் ஆத்மாவோடு ஒன்றிப் போனவனாவான்.

நடை முறையில் அந்த இன்பத்தை உணர்ந்தோரே அது என்ன என்பதை உணர்வார்கள்.

காற்று காற்றோடு கலந்து ஒன்றாய்ப் போய்விடுகி றது; நீர் நீரோடு கலந்து ஒன்றாய்ப் போய்விடுகிறது. நெருப்பு நெருப்போடு கலந்து ஒன்றாய்ப் போய்விடுகிறது.

இவ்வண்ணமே மனமும், எல்லையிலாப் பெருமனத்தோடு கலந்து ஒன்றாகி விடுகின்றது. அது இறுதி விடுதலையை எய்துவது இவ்வண்ணமே!

உண்மையில் அடிமை வாழ்க்கைக்கும் சரி, விடுதலைப் பேற்றுக்கும் சரி, மனமே ஊற்றுக் கண்ணாக அமைகிறது.

இவ்வுலகப் பொருள்களுக்குக் கட்டுப்பட்டு இருத்தல் அடிமை வாழ்க்கையாகும்; அவற்றினின்று விடுபட்டிருத்தல் விடுதலைப் பேறாகும்.

இம்மண்ணில் "உஷ்ணமாக" வாழ்ந்து, இவ்வையத்தை நினைவில் கொள்ளும் அக்கினியை - அக்கினித் தேவனைப் போற்றித் தொழுவோம்.

"உன்னைத்தொழுது வணங்குவோனுக்கு இவ்வுலகை அருள்வாயாக" என்று அவனை இறைஞ்சுவோம்.

காற்றில் சலசலப்பு காட்டி வாழ்ந்து, இவ்வையத்தை நினைவில் கொள்ளும் வாயுவை - வாயு பகவானைப் போற்றித் தொழுவோமாக!

உன்னைத்தொழுது வணங்குவோனுக்கு நீ இவ்வுலகை அருள்வாயாக!" என்று அவனை இறைஞ்சுவோம்.

வானிலே தகதகவென வாழ்ந்து இவ்வையத்தை நினைவில் கொள்ளும் அருணனை - சூரிய நாராயணனைப் போற்றித்தொழுவோம்.

உன்னைத்தொழுது வணங்குவோனுக்கு இவ்வுலகை அருள்வாயாக! என்று அவனை இறைஞ்சுவோம்.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

இந்தச் சரீரத்துக்கு உணர்வு நிலை ஊட்டுவது யார்? இவ்வுடற்தேரை ஓட்டுபவர் யார்? என்றறிய விரும்பினார்கள்.

உடல், மனம் எனும் இவற்றின் வாழ்வுக்கப்பால் உறு பொருள் ஒன்றுள்ளது. என்றும் இறவாத அந்தப் பரம்

பொருளின் ஆற்றலே உடலுக்கு உணர்நிலை தருகின்றது. தேரோட்டியும் அவன்தான்!

எங்கு நிறைந்துள்ள பரம்பொருள், நுண்ணிய காண வியலாப் பகுதியாக, தன் வரவை உடல் உணரா நிலையில், உடலுக்கு ஒரு தூதனாய் வந்து சேர்கின்றது.

நம் செயல்களைத் தொடரும் ஒளி இருள் எனும் இவற்றினின்றும் விடுபட்டு, பல்வேறு பிறவிகள் வாயிலாக ஓர் உடலினின்றும் இன்னோர் உடலுக்கு இவ்வுலகில் அலைந்து திரியும் ஆத்மா இதுவே!

வினைகளைத் தொடரும் ஒளி - இருளால் பிணிக்கப்படுவது, இவ்வுடலின் மூலகங்களால் உருவாக்கப்பட்ட பூதாத்மன் ஆவன்.

மனித ஆத்மா உடலை ஆள்கின்றது என்றாலும், அந்த அமர நிலையுள்ள ஆத்மப் பரம்பொருள், ஒரு தாமரையிலையின் மேல் உள்ள நீர்த் திவலைபோல் தூய்மையாகவே உள்ளது.

சூரியனில் இருப்போனும், தீ யிலிருப்போனும் மனிதனின் இதயத்தில் கோயில் கொண்டிருப்போனும் எல்லாம் ஒருவனே!

மோனத்தில் நமது மனத்துள்ளேயே குடிகொண்டுள்ள, நம் மனதிற்கப்பாற்பட்ட ஒரு பொருள் உண்டு. அதுவே சிந்தனைக்கப்பாலுள்ள உன்னத மர்மம். மானிடனின் மனமும் நுண்ணுடலும் அப் பொருளின் மீதே நிலை கொள்வனவாகுக!

"ஓம்"காரம் பிரம்ம ஒலியாகும். ப்ரம்மமோனமும் அதுவே! ஆழ்ந்து தியானம் செய்பவன் ஓங்காரத்தில் விடுதலையை எய்துகிறான்.

எல்லாம் வல்ல இறைவன் ஒலியும் மோனமுமாயும் இருக்கின்றான்; அவன் பெயர் "ஓம் "காரமாகும். எனவே மோனத்தில் அவனையே தியானம் செய்தல் வேண்டும்.

எரிபொருள் இல்லாத தீ அணைந்து அமைதி காண்பது போல், எண்ணங்கள் மோனம் எய்தும் போது, ஆத்மா தன் சொந்த மூலத்தில் அமைதி காண்கிறது.

ஆழ்ந்த தியானத்தால், அழுக்கனைத்தும் துடைக்கப் பட்ட உள்ளத்து இன்பத்தைச் சொற்களால் விவரிக்க இயலாது. ஆத்மாவோடு ஒன்றி நிற்கும் அவ்வின்பத்தை உணர்ந்தோரே அது என்ன என்பதை அறிவார்கள்.

முடிவில் மனம் எல்லையிலாப் பெருமனத்தோடு ஈரறக் கலந்து ஒன்றுபடுகிறது; இறுதி விடுதலையை எய்து கின்றது. இது சாமவேதத்திலும் காணப்படுகிறது.

இவ்வுடல் உணர்வு நிலையற்ற ஒரு தேர் போலிருப் பதால், அதன் உணர்வு நிலையோடு திகழச் செய்யும் ஆற்றல் கொண்ட உறு பொருள் யாது? யார் இதற்குத் தேரோட்டி? என்ற கேள்வியை ஏற்படுத்திக் கொண்டு பதில் கூறப்படுகிறது.

நுண்ணிய பரம்பொருளின் ஒரு ரேகை தன் வரவை உடல் உணரா நிலையில் உடலுக்கு ஒரு தூதனாய் வந்து சேர்கின்றது.

இப்பரம் பொருளே உணர்வு நிலையாகும். ஓர் உட லினின்றும் இன்னோர் உடலுக்கு இவ்வுலகில் அலைந்து திரியும் ஆத்மா இதுவே!

எப்பொழுதெல்லாம் ஆத்மா "நான்" எனது" எனும் எண்ணங்களில் வீழ்கின்றதோ அப்போது அது தனது கீழ் நிலையகத்தோடு வலைக்கண்ணிகளில் சிக்கும் ஒரு பற வைபோல், தன்னைப் பிணித்துக் கட்டுகின்றது.

ஓங்காரமே பிரம்ம மகிமை என ஆன்றோர் இயம்பு வதால், தூய காட்சியாலும், தவத்தாலும், தியானத்தாலும் பிரம்மத்தை எய்தலாம்.

உலகங்களின் முடிவில் அனைத்துமே உறங்கும். ஆனால் நித்ய நிலையில் அவன் மட்டுமே விழித்திருப் பான்.

பிரம்மத்தின் உணர்வு நிலையில்தான் அண்டம் நிலைபெற்றிருக்கிறது. அவனில்தான் அது சங்கமமாகிறது.

சூரியனில் இருப்போனும், தீயிலிருப்போனும் மனிதனின் இதயக்குகையில் குடி கொண்டிருப்போனும் எல்லாம் ஒருவனே! இதனை அறிவோன் அவ்வொருவனோடு ஒன்றுபடுகிறான்.

அமர வாழ்வும் ஈரற ஒன்றுதலும், அமைதியுமே இறுதிப்பயன். தியானம் செய்யும் மானிடன், விடுதலையை ஓங்காரத்தால் எய்துகிறான்.

பிரம்ம தியானத்திற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒலியோடும் தியானிக்கலாம்; மோனத்திலும் தியானிக்கலாம். ஒலியாலேயே நாம் மோனத்திற்கு ஏகுகிறோம். பிரம்ம ஒலியே "ஓம்"காரமாகும்.

வான் வெளியின் சுதந்திரத்தைத் தன் சொந்த நூலால் சிலந்தி எய்தும்.

அதுபோலவே தியானம் செய்யும் மானுடனும் விடுதலையை ஓங்காரத்தால் எய்துகிறான்.

"பத்திநீ, பத்திக்கு ஆன
பலனும் நீ, பலவாய்ச் சொல்லும்
சித்தி நீ, சித்தர் சித்தித்;
திறமும் நீ, திறம் ஆர்மோன
முத்தி நீ, முத்திக்கு ஆன
முதலும் நீ, முதன்மை ஆன
புத்தி நீ எனக்கு ஒன்று உண்டோ?
பூரண னாந்த வாழ்வே"

என்று தாயுமான சுவாமிகளும் பாடியுள்ளாரே!

"இறைவன் ஒலியும் மோனமுமாயிருக்கிறார். அவன் பெயர் "ஓம்" காரம். எனவே தியானம் செய்யுங்கள். மோனத்தில் அவனையே தியானம் செய்யுங்கள்" என்கிறது வேதம்.

எண்ணங்கள் மோனம் எய்தும் போது, ஆத்மா தன் சொந்த மூலத்தில் அமைதி காண்கிறது.

சம்சாரம் - உயிர் பிறந்து மீண்டும் வேறொரு உடலில் குடியேறும் அடிமை வாழ்க்கை - மனிதனின் மனத்திலேயே திகழ்கின்றது. ஆகவே மனத்தை மானிடன் தூய்மையாய் வைத்திருப்பானாக.

நீர் நீரோடு சேர்ந்து ஒன்று படுகிறது. நெருப்பு நெருப் போடு கலந்து ஒன்றுபடுகின்றது. காற்று காற்றோடு கலந்து ஒன்றுபடுகிறது. கலந்த சுவடே தெரிவதில்லை.

அவ்வண்ணமே மனமும் எல்லையில்லாப் பெரு மனத்தோடு ஈரறக்கலந்து ஒன்றுபடுகிறது. இவ்வண்ணம் அது இறுதி விடுதலையை அடைகின்றது.

இம்மண்ணில் வாழ்ந்து, இவ்வையத்தை நினைவில் கொள்ளும் அக்னியைப் போற்றித் தொழுவோமாக!

காற்றில் வாழ்ந்து இவ்வையத்தை நினைவில் கொள்ளும் வாயுவைப் போற்றித் தொழுவோமாக!

வானில் வாழ்ந்து இவ்வையத்தை நினைவில் கொள்ளும் ஆதித்யனைப் போற்றித்தொழுவோமாக.

வேதத்தில் வரும் -

ஓம் பூர்; புவ; ஸ்வ
ஓம்தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீ மஹி !
தியோயோ நः ப்ரஸோதயாத்!!

(யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக!) என்ற பிரம்ம காயத்ரி - சூர்ய காயத்ரி - மந்திரமும் இதையே பகர் கிறது.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

# சுபால உபநிஷதம்

உலகத்தின் அடிப்படையும் அதனைத் தாங்குவோனும் நாராயணனே!

இம்மாபெரும் பிரபஞ்சத்தில் நாம் காணும் அனைத்தும், படைப்பின் தொடக்கத்தில் இருந்தேயில்லை.

எனவே இவ்வுயிரெலாம் வேரின்றி, ஆதாரமின்றி இருந்தன. இப்படைப்பனைத்திற்கும் ஆதாரமாக இருந்தது நாராயணன் மட்டுமே!

கண்ணும், காணும் பொருளும் அவனே! செவியும் கேட்கும் பொருளும் அவனே! மூக்கும் நுகர்பொருளும் அவனே! நாக்கும், சுவைக்கும் பொருளும் அவனே! செவியும் கேட்கும் பொருளும் அவனே! தோலும், தொடு பொருளும் அவனே. மனமும் நினைக்கும் பொருளும் அவனே. தெளிவும் தெளிபொருளும் அவனே.

அகந்தையும் அகங்கரிக்கப்பட்ட பொருளும் நாராயணனே! நினைக்கும் மனமும் நினைக்கப்பட்ட பொருளும் அவனே! குரலும் பேசப்பட்ட பொருளும் அவனே! இருகரங்களும் அவை செய் தொழிலும் அவனே! இருகால்களும் அவை நடப்பதும் அவனே! வெளியேற்றும் உறுப்பும், வெளியேற்றும் பொருளும் அவனே!

உற்பத்திக்கு ஆதாரமான உறுப்பும், அது அனுபவிக்கும் இன்பமும் நாராயணனே! தாங்குவோன், நியமிப்போன், செய்வோன் அனைத்தும் அவனே!

ஆதித்தர்கள், ருத்ரர்கள், மருத்துக்கள், அஸ்வினிகள், ரிக், யஜுர், சாம வேதங்கள், வேள்வி மந்திரங்கள், அவிஸ்கள், சமயக்கிரியைகள், வானொளி அனைத்தும் அவனே!

தாய், தந்தை, உடன்பிறப்பு, வாழிடம், புகழிடம், நண்பன், நித்ய வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் உயர் பாதை யாவும் அவனே!

விராஜன், சுதர்சனன், ஜித்தன், சௌமியன், அமோகன், அமிர்தன், சத்யன், மத்யமன், நாசீ ரன், சிசுரன், அசுரன், சூரியன், பாஸ்வரி இவை தெய்வவழிகளின் பெயர்களாகும்.

இவ்வழிகளின் மூலம் செல்லும் ஆத்மா இடிபோல் முழங்கும்; மோகினிபோல் பாடும்; காற்றுப்போல் வீசும்; மழையாய்ப் பொழியும்.

அவன் வருணன், அர்யமான், சந்திரன், காலத்தை விழுங்குவோன், காலத்தைப் படைப்போன், பிரஜாபதி, இந்திரன்; பெரும்யுகங்களும் அவனே! அவன் உயரே இருக்கின்றான்; இவையனைத்தும் நாராயணனே!

இவையெல்லாம் - இருப்பன, இருக்கப் போவன - அமர நிலையதனுடைய உடலும் அடையாளமுமாகும்.

இதுவே உணவால் - சோமரசமாகத் தொடர்கின் றது. அது உயிர் தரிக்கும் சோமத்தைக் கொண்டுள்ளது.

முனிவர்கள் விஷ்ணுவின் அவ்வுன்னதப் பெரு நிலையை, கண் வானத்தைக் காண்பதுபோல பிரத்யட்ச மாகக் காண்கின்றனர்.

மற்றும் இப்பேரறிஞர்கள், பிரம்ம ஞானிகள் தமது பற்றுகள் நீங்கப்பெற்று, விழிப்புடன் தம் அகப்புலன்க ளைக் கொண்டு, விஷ்ணுவின் உன்னதப் பெருநிலை யைத் தெளிவாக மக்களுக்கு உணர்த்துகின்றனர்.

விடுதலைக்கு அழைத்துச் செல்லும் கொள்கை இதுவே; வேதத்தின் கொள்கையும் இதுவே!

## 2

எங்கும், எதனுள்ளும் உறு பொருளாக உறைந்து நிற் பவன் நாராயணனே!

இச்சரீரத்தினுள் மறைவிடத்தில் ஒன்று எப்பொழுதும் நிலைபெற்று வாழ்ந்து வருகிறது.

அவன் மண்ணின் வாயிலாக இயங்குகின்றான். ஆனால் மண் அவனை அறிவதில்லை.

அவன் நீரின் வாயிலாக இயங்குகின்றான். ஆனால் நீர் அவனை அறிவதில்லை.

அவன் ஒளியின் வாயிலாக இயங்குகின்றான். ஆனால் ஒளி அவனை அறிவதில்லை.

அவன் காற்றின் வாயிலாக இயங்குகின்றான். ஆனால் காற்று அவனை அறிவதில்லை.

அவன் வான்வெளி வாயிலாக இயங்குகின்றான். ஆனால் வான்வெளி அவனை அறிவதில்லை.

அவன் மனத்தின் வாயிலாக இயங்குகின்றான். ஆனால் மனம் அவனை அறிவதில்லை.

அவன் தெளிவின் வாயிலாக இயங்குகின்றான். ஆனால் தெளிவு அவனை அறிவதில்லை.

அவன் "நான் " எனும் உணர்வு வாயிலாக இயங்குகின்றான். ஆனால் அந்த உணர்வு அவனை அறிவதில்லை.

அவன் மனத்தின் நினைப்பால் இயங்குகின்றான். ஆனால் மனத்தின் நினைப்பு அவனை அறிவதில்லை.

அவன் உடல் வாயிலாக இயங்குகின்றான். ஆனால் உடல் அவனை அறிவதில்லை.

அவன் அழிவின்மை வாயிலாக இயங்குகின்றான். ஆனால் அழிவின்மை அவனை அறிவதில்லை.

அவன் மரணத்தின் வாயிலாக இயங்குகின்றான். ஆனால் மரணம் அவனை அறிவதில்லை.

தெய்வீகமான தீமையற்ற ஒரே பரம்பொருள் மகா விஷ்ணுவே. அவனே ஜீவராசிகளனைத்திலும் கோயில் கொண்டு வாழும் உறுபொருள்.

அபாந்தரதமனுக்கு முதலில் இது உபதேசிக்கப்பட்டது. அவன் அதைப் பிரமனுக்குத் தந்தான்.

பிரமன் அதைக் கோர ஆங்கிரசுக்குத் தந்தான். கோர ஆங்கரஸ் அதனை ரைக்குவாவுக்குத் தந்தான். ரைக்குவா அதனை இராமனுக்குத் தந்தான். இராமன் அதனை அனைத்து உயிர்களுக்கும் தந்தான்.

இதுவே வேதத்தின் கொள்கை; விடுதலைக்கு அழைத்துச் செல்லும் கொள்கையும் இதுவே!

## 3

அனைத்து உலகங்களின் ஆதிமூலம் ஆத்மாவே!

"தொழுதற்கேற்ற குருவே! இவ்வுலகங்கள் யாவும் எதில் உறுதியாய் நிலைபெற்றிருக்கின்றன?" எனக்கேட்டார் ரைக்குவா.

அதற்குப் பிரமன் "இரசாதல உலகங்களில்" எனப் பதில் கூறினார்.

"இரசாதல உலகங்கள் எதில் ஊடும் பாவும் போல் நிலை கொண்டிருக்கின்றன?"

"மண்ணுலகங்களில்!"

"மண்ணுலகங்கள் எதில் ஊடும்பாவும் போல் நிலை கொண்டிருக்கின்றன?"

"வாயு உலகங்களில்!"

"வாயு உலகங்கள் எதில் நிலைகொண்டிருக்கின்றன?"

"சுவர்க்.. ; உலகங்களில்!"

"சுவர்க்க உலகங்கள் எதில் நிலை கொண்டுள்ளன?"

"மஹர் உலகங்களில்!"

"மஹர் உலகங்கள் எதில் நிலை கொண்டுள்ளன?"

"ஜனஸ் உலகங்களில்!"

"ஜனஸ் உலகங்கள் எதில் நிலை கொண்டுள்ளன?"

"தபஸ் உலகங்களில்!"

"தபஸ் உலகங்கள் எதில் நிலை கொண்டுள்ளன?"

"சத்ய உலகங்களில்!"

"சத்ய உலகங்கள் எதில் நிலை கொண்டுள்ளன?"

"பிரஜாபதி உலகங்களில்!"

"பிரஜாபதி உலகங்கள் எதில் நிலை கொண்டுள்ளன?"

"பிரம்ம உலகங்களில்!"

"பிரம்ம உலகங்கள் எதில் நிலை கொண்டுள்ளன?"

அனைத்து உலகங்களும் உத்திராட்ச மணிகளைப் போல் பிரம்மத்தில் – பரம் பொருளில் – ஆத்மாவில் நிலை கொண்டுள்ளன.

இப்படி நிலை கொண்டுள்ளன என்பதை அறிவோன், ஆத்மாவின் நிலை பெற்றிருக்கின்றான்; அப்பரம்பொருளோடு அப்படியே ஒன்றிவிடுகின்றான். இதுவே வேதத்தின் கொள்கை; விடுதலைக்கு அழைத்துச் செல்லும் கொள்கையும் இதுவே!

## 4

ஆதியில் நாராயணனிடமிருந்தே உணவு வந்தது.

ஊழிக் காலத்தில் அது பிரம்ம உலகில் முதிர்கின்றது.

மீண்டும் அது சூரிய உலகில் சமைக்கப்படுகின்றது.

அதன் பிறகு மீண்டும் அது வேள்விகளில் சமைக் கப் படுகின்றது.

பழையதாகி விட்ட உணவு; நீர்விட்டுப்போன உணவு இவற்றை உண்ணுதல் கூடாது.

பிறரைக் கேட்டு வாங்காததும், முன்னரே ஏற்பாடு செய்து கிடைத்திராததும், குறைகளில்லாத தூய உணவை யுமே ஒருவன் உண்ணவேண்டும்.

எந்த நிலையிலும் ஏவராயிருப்பினும் பிச்சை யெடுத்து உண்ணுதல் கூடாது.

## 5

ஒவ்வொருவரும் குழந்தையின் இயல்புகளை – பண்புகளை – பெற்றிருத்தல் வேண்டும்.

சரியானதா தவறானதா எனும் எண்ணங்களி னின்று விடுபட்டிருத்தலும், கபடமின்மையும், பற்றில்லா மையும் குழந்தையின் பண்புகளாகும்.

நாவடக்கம் காக்க வேண்டும். மற்றும் கல்வி வரு ணங்கள், நான்கு வாழ்க்கைப்படிகள் எனும் இவை பற்றிய மரபுகள் கருதாது, வேதங்களில் பேசப்பட்டிருக்கும் தன்மையை ஒருவன் எய்துவானாக! இவ்வாறு பிரஜாபதி அருளினார்.

அறிதற்கரிய உன்னதப் பெருநிலையை அறிந்த பின், முனிவர் ஒரு தழைத்த மரத்தடியில் நிலைகொள்ள வேண்டும்.

ஒரு பழந்துணியைக் கோவணமாகக் கொண்டு ஒருவர் உதவியுமின்றி, ஏகாந்தமாய் ஒருமுகப்படுத்திய மனம் கொண்டு ஆத்மாவில் பற்று வைத்து அமிழ்தல் வேண்டும்.

ஆசைகள் ஏதுமின்றி – ஆசைகள் அனைத்திற்கும் முடிவு கண்டவனாய், யானை வடிவில், சிங்கம், புலி, கொசு, கீரி, பாம்பு, பேய், மோகினி, என பற்பல உருவங்க ளில் மரணம் வீற்றிருப்பதை ஏற்றுக் கொண்டவனாய் – எக்காரணம் கொண்டும் அவற்றின் மீது அச்சம் கொள்ளா மல், அவன் அஞ்சவற்ற ஒரு மரத்தின் நிலையினனாய் இருத்தல் வேண்டும்.

அந்நிலையில் அவனை வெட்டிப்பிளந்தாலும் சினம் கொள்ளுதல் கூடாது; நடுங்குதல் கூடாது; ஒரு கற் பாறை போல் இருக்கவேண்டும்.

அவன் நிர்மலமான வானம்போல் இருக்கவேண்டும். எவ்விதத்திலும் மனச்சலனம் அடைதல் கூடாது.

அவன் எப்பொழுதும் சத்தியத்தின் பக்கம் நிற்க வேண்டும். ஏனெனில் உண்மையில் சத்தியமே ஆத்மன்.

மனம் அனைத்திற்கும் இதயமாயிருப்பது மண்ணே!

சுவை அனைத்திற்கும் இதயமாயிருப்பது நீரே!

வடிவங்கள் அனைத்திற்கும் இதயமாயிருப்பது ஒளியே!

"தீண்டுதல்"களுக்கெல்லாம் இதயமாயிருப்பது காற்றே!

"ஒலி"களுக்கெல்லாம் இதயமாயிருப்பது வானே!

உயிர்நிலைகள் அனைத்திற்கும் இதயமாயிருப்பது பரம்பொருளே!

எல்லா உயிருள்ளும் இதயமாயிருப்பது மரணமே! உண்மையில் மரணம் ஒளிசான்ற உறுபொருளோடு இரண்டறக்கலந்து ஒன்றுபடுகின்றது.

அப்பரம்பொருளில் இருப்பு, இன்மை இவை ஏதும் இல்லை. இதுவே வேதத்தின் கொள்கை; விடுதலைக்கு அழைத்துச் செல்லும் கொள்கை.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

இந்த உபநிஷத்தில் பிரம்மத்தை நாராயணனாகக் குறிக்கப்படுகிறது. அனைத்துள்ளும் கோயில் கொண்டு வாழும் உறுபொருள் நாராயணனே!

உலகின் அடிப்படையும் நாராயணன்; அதனைத் தாங்குவோனும் நாராயணன்.

கண் வானத்தைக் காண்பது போல, முனிவர்கள் விஷ்ணுவின் அவ்வுன்னதப் பெருநிலையை நிரந்தரமாகக் காண்கின்றனர். மாந்தர்க்கும் உணர்த்துகின்றனர்.

அவன் பஞ்சபூதங்களின் வாயிலாகவும், மற்றும் இந்திரியங்களின் வாயிலாகவும் இயங்கினாலும், அவை அவ்வ அவனை அறிவதில்லை.

அனைத்து உலகங்களின் ஆதிமூலம் ஆத்மாவே!

இவ்வுலகங்கள் யாவும் ஆத்மாவில் நிலைகொண்டிருக்கின்றன என்றறிவோன் ஆத்மாவின் நிலைபெற்றிருக்கின்றான்; பரம்பொருளோடு ஒன்றி விடுகிறான். இதுவே வேதத்தின் கொள்கையாகும்.

தூய உணவையே உண்ணவேண்டும்; பிச்சையெடுத்து உண்ணலாகாது என வலியுறுத்தப்படுகிறது.

முனிவர்களும் ரிஷிகளும் குழந்தைகளின் கபடமில்லா இயல்பை பெற்றிருத்தல் வேண்டும். உன்னத நிலையையடைய அது ஏணி போலாகும். மற்றும் மரண பயமும் அவர்களை அண்டாது.

எல்லா உயிருள்ளும் இதயமாயிருப்பது மரணமே! மரணம், உண்மையில் ஒளிசான்ற உன்னதப் பொருளோடு ஈரறக் கலந்து ஒன்றுபடுகின்றது.

இதுவே விடுதலைக்கு அழைத்துச் செல்லும் கொள்கையாகும்.

இந்த உபநிடதம் யஜுர் வேதத்தைச் சார்ந்ததாகும்.

அனைத்தும் நாராயணனே என்பதை தெளிவுறக் கூறுகிறது.

கண் வானத்தைக் காண்பதுபோல் முனிவர்கள் விஷ்ணுவின் உன்னதப் பெருநிலையைத் தெள்ளத்தெளிவாக மாந்தர்க்கு உணர்த்துகின்றனர்.

வேதத்தின் கொள்கையும் இதுவே!

"நான் எனும் உணர்வு" வாயிலாக அவன் இயங்குகிறான். ஆனால் அவ்வுணர்வு "அவனை" அறிவதில்லை.

மரணத்தின் வாயிலாக அவன் இயங்குகிறான். ஆனால் மரணம் அவனை அறிவதில்லை.

"அருக்கனில் சோதி அமைந்தோன் திருத்தரு
மதியில் தன்மை வைத்தோன் திண் திறல்
தீ யில் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்..."

எனத் திருவண்டப் பகுதியில் மணிவாசகப்பெருமானும் பகர்ந்துள்ளாரே!

விடுதலைக்கு அழைத்துச் செல்லும் கொள்கை இதுவே. வேதத்தின் கொள்கை இதுவே.

ஆத்மாவே அனைத்து உயிர்களின் ஆதிமூலம்.

இவ்வாறு இவ்வுலகங்கள் யாவும் ஆத்மாவில் நிலை கொண்டிருக்கிறான் என்று அறிபவன் - வெகு எளிதில் பரம்பொருளோடு ஒன்றி விடுகிறான்.

ஒரு குழந்தையின் பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். பற்றின்மையும், கபடமின்மையும் கொண்டிருக்க வேண்டும். நாவடக்கம் அவசியம் இருக்க வேண்டும்.

உன்னத நிலையை அறிந்தபின் முனிவராக ஒரு மரத்தடியில் நிலை கொள்ளவேண்டும். ஒரு பழந்துணியைக் கோவணமாய்க் கொண்டு, ஒருவர் உதவியுமின்றி தன்னந்தனியாக ஒரு முகப்படுத்திய மனம் கொண்டிருக்க வேண்டும்.

அந்நிலையில் அவன், பற்பலவடிங்களில் மரணம் வீற்றிருப்பதை ஏற்றுக்கொண்டவனாய் - எக்காரணம் கொண்டும் அவன் அச்சம் அடைவதே இல்லை.

அவன் வானம் போன்று இருப்பான். சினமடையவோ நடுங்கவோ மாட்டான். அவன் சத்தியத்தின் பக்கமே நிற்பான். சத்தியமே ஆத்மா.

அனைத்து உயிருள்ளும் இருப்பது மரணமே. மரணம் உண்மையில் ஒளி சான்ற உன்னதப் பொருளோடு ஈரறக் கலந்து ஒன்றுபடுகின்றது.

அப்பரம்பொருளில் இருப்பு - இன்மை - எனும் இவை ஏதுமே இல்லை.

இதுவே விடுதலைக்கு அழைத்துச் செல்லும் கொள்கை. இதுவே வேதத்தின் கொள்கை.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

# ஜாபால உபநிஷதம்

ஆருணி, சுவேதகேது, சம்வர்த்தகர், துருவாசர், நிதாகர், ரிபு, ஜடபரதர், தாத்தாத்ரேயர், ராய்வடகர் மற்றும் பல பரமஹம்சர்களும், வெளித்தோன்றா வாழ்க்கை வழிக ளும், இயல்புகளுமே கொண்டுள்ளனர்.

அவற்றால் அவர்கள் எவ்வகையிலும் பித்து பிடித்த வர்களாக இல்லாதிருப்பினும் மற்றையோர்க்கு அவர்கள் பைத்தியக்காரர்களாகவே தோன்றுகின்றனர்.

"பித்து என்னை ஏற்றுப் பிறப்புஅறுக்கும் பேச்சு
அரிது ஆம்
பத்தமே ஆக்கும் வந்து என் மனத்தை – அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேர்அருளால் நோக்கும்
மருந்து இறவாம் பேரின்பம் வந்து"

என மணிவாசகப் பெருமானும் பாடியுள்ளாரே!

அவர்கள் திரிதண்டம், கமண்டலம், சிகை, யஞ்கோப வீதம், "பூஸ்வாகா!" என்று கூறி ஜலத்தில் ஆற்றும் கடன் இவையனைத்தையும் துறந்துள்ளனரே!

அவர்கள் ஆத்மா ஒன்றையே தேடுகின்றனர். அவர் கள் பிறந்த மேனியாக இருந்து கொண்டு, பற்றுக்கள் அற்று, உடைமைகள் அற்று, பிரம்ம பாதையில் நன்கு நடந் திடவே செய்கிறார்கள்.

தூய இதயத்தோடு, உயிர் வாழ்வதற்குப் போதுமான அன்னத்தை மாத்திரமே பிட்சை எடுத்து, குறிப்பிட்ட வேளையில் உண்ணவேண்டும்.

கிடைக்கும் பேற்றையும், இழப்பையும் அவர்கள் சம மாகவே பாவிக்கவேண்டும்.

ஏகாந்த இல்லம், கோயில், புல்வெளி, எறும்புப் புத்து, மரத்தின் வேர், குயவன் குடில் அடுப்படி ஆற்றங்கரை, மலை, குகை மரப்பொந்து, ஓடைக்கரை இவை போன்ற இடங்களில்தான் அவர்கள் வாழ்க்கை நடந்தேற வேண்டும்.

எவ்வித முயற்சியின்றி "நான்" எனும் எண்ணம் இன்றி ஆழ்ந்த தியானத்தில் நிலைபெறுகின்றனர்.

தீய செயல்கள், தீய நினைவுகள், இவற்றைக் களை வதில் கவனமாக இருக்கும் இவர்கள் தம் உடல்களை துறவு முறையில் நீத்து விடுகின்றனர்.

இவர்களே பரமஹம்ஸராவர். ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக.

சரியான பாதையாகச் சென்று மேலான நிலைய டைந்தோருக்கு, இவ்வுலகச் சடங்குகள் ஏதும் பிடிபடாது.

அவர்கள் எண்ணமெல்லாம், எப்பொழுதும் பிரம் மத்திலேயே லயித்திருக்கும்.

அவர்கள் இவ்வுலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்தா லும், உலகை உணரமாட்டார்கள். உலகத்துச் செயல்களும் நிகழ்ச்சிகளும் அவர்களை எவ்வகையிலும் கட்டுப்படுத் தாது.

அவர்கள் நடந்து கொள்வதெல்லாம் ஏதோ பைத்தி யக்காரச் செயல்களாகவே தோன்றும்.

அவர்கள் சொல்வதெல்லாம் அப்படியே நடந்து விடும். இந்த நாளில் "இவன்" மறைவான் என்று முன்கூட் டியே சொல்வதும் உண்டு. அந்நாளில் சமாதியாகி விடு வார்கள்.

தான் என்னும் எண்ணமின்றி உயிருள்ளத்தில் நிறுத்திய தியானத்தில் நிலைபெற்றிருப்பார்கள்.

இந்த உபநிடதம் அதர்வவேதத்தைச் சார்ந்ததாகும். இதற்கேற்ப தாயுமானவர் பாடியுள்ளதைக் கேளுங்கள்.

"பெருவெளியாய்; ஐம்பூதம் பிறப்பு இடமாய்ப்
பேசாத பெரிய மோனம்
வரும் இடமாய்; மனம் ஆதிக்கு எட்டாத
பேரின்ப மயமாய் ஞானக்
குரு அருளால் காட்டிடவும் அன்பனைக் கோத்து
அது விழுங்கிக் கொண்டு, அப்பாலும்
தெளிவு அரிதாய்க் கலந்தது எந்தப்பொருள்? அந்தப்
பொருளினையாம் சிந்தை செய்வோம்."

ஓம்! மூவகையிலும் சாந்தி நிலவுக!

# பிரச்னோ உபநிஷதம்

இது அதர்வ வேதத்தைச் சார்ந்ததாகும்.

ஆறு ரிஷிகள் பிப்பலாத மகரிஷியினிடம் கர்மம், உபாசனம், ஞானம், இவைகளைப் பற்றி ஆறு பிரச்னங்களைக் கூறி அவ்வுண்மையை அறிந்ததால் பிரசனோபநிஷத்து எனப் பெயர் பெற்றது.

பஞ்ச பூதங்கள் பிரம்மாண்டம் இவைகள் தோன்றி, பிறகு சூரியன் சந்திரன் தோன்றி ஸம்வத்ஸரம் முதலிய காலங்கள் உண்டாகி, பிறகு தானியங்கள் தோன்றின.

அதன்பிறகு மனுஷ்யர்கள் உண்டாகின்றனர். சரீரம், இந்திரியம் இவைகளை சலிக்கச் செய்வதால் பிராணன் உயர்ந்தது.

அதன் உபாசனத்தால் மனுஷ்யர்கள், மனதின் சக்தி, ஏகாக்ரநிலை, பிரும்மலோகம் முதலிய பலனை அடைகின்றனர்.

அதற்கு சாட்சியாக உள்ள ஆத்ம ஸ்வரூபத்தையும் அறிந்து முக்தி பெறுகின்றனர்.

ஓங்கார உபாசனையினால் பிரும்மலோகம் கிடைக்கும்.

அங்கு முக்தி பெறலாம். பிராணன் முதலான பதினாறு கலைகளின் காரணமான பரமாத்மா சரீரத்தில் ஜீவரூபமாக பிரகாசிக்கிறார்.

அவரை இங்கேயே அறிந்து முக்தி பெறலாம். பிராணன் முதலிய பந்தங்கள் தொலைந்து போகும்.

ஓங்காரத்தின் மூன்று மாத்திரைகளும் (அ, உ, ம) தனித்தனியே உபாசிக்கப்பட்டால் அவை அழியும் பலனைத் தருவனவாகுக.

ஆனால் மூன்றையும் சேர்ந்து உபாசித்தால், அவை அங்ஙனமாகா. வெளி வியாபாரங்களிலும் – ஜாகரம் – உள் வியாபாரங்களிலும் – சொப்பனம் – இடை வியாபாரங்களிலும் – சுஷுப்தி – அவை முறைப்படி பொருத்தப்பட்டால் ஞானியானவன் அசைவுறான் அதுவே பிரம்ம நிர்வாணம் – சத்யோ முக்தி.

ரிக் வேதத்தால் இவ்வுலகும்யஜுர் வேதத்தால் அந்தரிக்ஷமும் சாமவேதத்தால் மகான்களே உணரும் பிரம்ம லோகமும் எய்தப்படும்.

அவையனைத்தையும் ஓங்கார உபாசனையாலேயே ஞானி அடையக்கூடும்.

ஓங்காரத்தின் மூன்று மாத்திரைகளையும் மூன்று வேதத்திலும், மூன்று காலத்திலும், மூன்று உரையிலும் செயலிலும் உள்ளத்திலும் வைத்துப்பார்த்து உபாசித்து வந்தால் அது தானாகவே உபாசனைப் பரிபூரண நிலையாகிய நாலாவது – துரீய – நிலைக்கு அழைத்துச் செல்லும்.

அதனாலேயே மூப்பு, மரணம், பயம் அற்றதும் சாந்தம் நிறைந்ததுமான பரமபதம் எதுவோ அதையும் அடையக்கூடும்.

அந்நிலையே சொல்லுக்கடங்காத சுகம் தருவது.

"காலமே! காலம் ஒரு மூன்றும் காட்டும்
காரணமே! காரணகாரியங்கள். இல்லாக்
கோலமே! எனை வா வா என்று கூவிக்
குறைவு அறநின் அருள் கொடுதால்
குறைவோ சொல்லாய்!"

என்று தாயுமானாரும் பாடியுள்ளாரே!

இந்நான்கு நிலைகளையும் அரும்பு மலர், காய், கனிக்கு ஒப்பிடுவதுண்டு. நமக்கு வேண்டியது கனிதானே!

நம்மைக் காப்பதற்காக இறைவன் தேவர்களை நியமித்துள்ளார். அவர்கள் நம்மைச் சூழ்ந்துள்ளனர். மற்றும்

அவர்கள் நம்முடைய வேண்டுதல்களை இறைவனிடம் சேர்ப்பித்து, இறைவன் நமக்களிப்பதை நம்மிடம் சேர்ப்பிக்கின்றனர்.

ஓம்! தேவர்களே! நாங்கள் எப்பொழுதும் நல்லதையே கேட்கவேண்டும். நல்லதையே காணவேண்டும். திடமான உடல் உறுப்புகளுடன் துதித்துப் போற்றி தேவர்களுக்குள்ள ஆயுள் எவ்வள்வோ அதையே அடைவோமாக! புகழ்பெற்ற இந்திரன் நமக்கு நன்மையளிக்கட்டும். எவ்வித தடையில்லாத நேர் கதியுடைய கருடன் நமக்கு நன்மையளிக்கட்டும். பிரஹஸ்பதியும் நமக்கு நன்மையளிக்கட்டும்.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

எப்பொழுதும் நம்மைச் சூழ்ந்து நின்று நம்மைக் காப்பதற்கெனவே தேவர்களை இறைவன் நியமித்துள்ளார். அவர்கள் நம்முடைய வேண்டுகோளை இறைவனிடம் சேர்த்து, அவர் நமக்களிப்பதை நம்மிடம் தேவர்கள் சேர்ப்பிக்கின்றனர். இதுவே இயற்கையின் நியதியாகும்.

## முதற் கேள்வி

ஓம். பாரத்வாஜருடைய மகன் சுகேசர், சிபியின் மகன் சத்யகாமர், சூரியனுடைய பௌத்ரன் கார்க்கியர், அசுவலரின் மகன் கௌசல்யர், கத்யரின் மகன் கபந்தீ, விதர்ப்ப நாட்டினரான பார்க்கவர் இவர்கள் அனைவரும் பிரம்ம நாட்டங்கொண்டு பிரம்ம நிஷ்டைடைந்து பிரம்மத்தை தேடுபவர்களாக இருந்தனர். இவர்கள் சமித்தை கையுறையாகக் கொண்டு, அதைப்பற்றிய அனைத்தையும் இவர்தான் நன்கு உபதேசிக்க வல்லவர் என்று உறுதி பூண்டு, பெருமைமிக்க பிப்பலாதரை அணுகினார்கள்.

வேட்கையேற்பட்டவர்களுக்கு விளக்கம் வேண்டுமல்லவா! அனைவரும் கூடி தூய பிப்பிலாதரே பிரம்மஞானம் அனைத்தையும் உபதேசிக்க வல்லவர் என தீர்மானித்தனர். உடனே, பக்தியின் அடையாளமாகவும்,

அன்னாருக்கு மரியாதை செய்வதற்கிணக்கமாகவும் கையில் சமித்தை ஏந்திக் கொண்டு அம்மாமுனியை அனுகினர்.

மன்னன், ஆசான், குழந்தைகள், இறைவன் இவர்களைக் காணச் செல்கையில் வெறுங்கையனாகச் செல்லுதல் கூடாது என்பது சாஸ்திர நியதி. அதனால், குருவினிடம் செல்லும் பொழுது, அவருடைய அக்னியை வளர்ப்பதற்கு தினந்தோறும் சமித்து அவசியமாகிறதால், அதையே கொண்டு செல்வது வழக்கம். அந்தச் சமித்து உலர்ந்திருப்பது, சிஷ்யனுடைய மனம் வைராக்கியமடைந்திருப்பதற்கறிகுறியாகவும், அது உடனே தீயைப்பற்றிக் கொள்வதுபோல், குருவின் உபதேசத்தை சீக்கிரம் கிரகித்துக்கொள்வான் சிஷ்யன் என்பதற்கறிகுறியாகவும், அது தீயில் அக்னி மயமாவதுபோல், சிஷ்யனும் தன்னை முற்றிலும் குருவிடம் அர்ப்பணித்துக் கொள்கிறான் என்பதற்கறிகுறியாகவும், அந்த சமித்து அமைகிறது.

பணிவாலும், பரிவுமிகுந்த கேள்வியாலும், விநயமான சேவையாலுமே, குருவினிடமிருந்து உபதேசம் பெறலாம். பக்தியில்லாதவனுக்கும், பணிவிடை செய்யாதவனுக்கும், தவம் செய்யாதவனுக்கும், குரு இந்த ஞானத்தை உபதேசம் செய்யமாட்டார். அதனால் அப்பேர்ப்பட்டவர்கள் குருவை அனுகுவதில் பயனில்லை.

ஓட்டைக்குடத்தில் நீர் நிற்குமா? பிரம்மச்சாரியல்லாதவன் மனம் அத்தகையதே! தவத்தில் சிறந்தது பிரம்மசரியந்தான். அது இல்லாத தவம் தவமாகாது. எவன் ஊர்த்துவரேதஸ் ஆகின்றானோ அவனே தெய்வம் என்று "ஞான சங்கிலினி தந்த்ரம்" கூறுகிறது. அந்த ஊர்துவரேதசை பிரம்மச்சாரி பெறுவதால், அவனுடையநிலை எத்துணை உயர்ந்துள்ளது!

அவர்களைக் கண்ட அம் மாமுனிவர் இன்னும் ஓராண்டு இத் தவத்தையும் பிரம்மச்சரியத்தையும் சிரத்தை யுடன் மேற்கொண்டு, பிறகு வந்து உங்கள் விருப்பப்படி

கேளுங்கள். எனக்குத் தெரிந்தால் நிச்சயமாக உங்களுக்கு விளக்குகிறேன் என்று சொல்லியனுப்பினார்.

அவரோ அனைத்தையும் அறிந்தவர், ஆனால் "எனக்குத் தெரிந்தால்" என்று சொல்கிறார். அதில் அவரது விநயமும் அவரது நிறைகுடத் தன்மையும் விளங்குகிறதல்லவா! எப்பொழுதும் பெரியோர்கள், தங்கள் பேச்சிலேயே பேச்சின் மூலமே - தங்களை வெளிப்படுத்திக் கொள்வார்கள்!

அவ்வண்ணமே இருந்து, திரும்பி வந்து கத்யரின் மகனான கபந்தீ "ஐயனே!" இந்தப்பிரஜைகள் எவ்வண்ணம் உற்பத்தியாயின?" என்று பிப்பிலா தரை அணுகிக் கேட்டார்.

"குருவே, படைப்பிலுள்ள உயிர்கள் யாவும் எங்கிருந்து எழுவன?" என்று கேட்டார்.

பிரஜாபதியானவர் - பிரஜைகளை விரும்பி - தவம் செய்தார். தவஞ்செய்து "ரயி, பிராணன்" என்ற இரட்டையைப்படைத்து 'இவை எனக்குப் பலவகையான பிரஜைகளை உண்டாக்கும்." என்று எண்ணினார். என்று பதில் கூறினார் பிப்பலாதர்.

ஆதியில், படைத்தல் எனும் இன்பத்தை விரும்பி தியானத்தில் ஆழ்ந்தார் படைப்பின் தலைவர். அப்பொழுதும் பொருளும் உயிரும் எழுந்தன. என்பொருட்டு இவைகளே உற்பத்தி செய்யுமே" என அவர் திருவுள்ளம் எண்ணியது.

பிரஜாபதி ஹிரண்ய கர்ப்பன் - உலக சமஷ்டி வடிவினன். பிராணனும், ரயியும், வலமும் இடமும், வெயிலும் நிழலும் போல இணைக்கப்பெற்றவை. பிராணனுடைய இயக்கத்தாலேயே (Matter and life) பிரஜைகள் உற்பத்தியாகி, நிலைபெற்று அழிகின்றன.

மரணம் ஒரு கந்தர்வன் என்றால், மக்கள் எல்லாம் அப்சரப் பெண்கள் ஆகிறார்கள். இவ்வுலக மேடையில்

அவர்களுடன் கூடி விளையாடுகின்றனர். காமமும் ஒரு கந்தர்வனே! மன விருப்பங்கள் - அது கிடைக்காததினால் ஏற்படும். மனக்கவலைகள் அவனுக்கு அப்சர ஸ்திரிகள் ஆகிறார்கள். இணைந்து இன்ப மயக்கத்தை ஏற்படுத்துகிறான். அதுவே பிரஜா உற்பத்திற்கு உறுதுணையாகிறது.

அப் "பிராணனே" சூரியன், "ரயி"யே சந்திரன். தூல வடிவம் சூட்சும வடிவுமுள்ள இது எல்லாம் "ரயி"யே. ஆகையால் உருவே "ரயி" என்பதாகும்.

சூரியனே உயிர், சந்திரனே பொருள். மிகப் பெரிதாயிருந்தாலும் சரி, நுண்ணியதாக இருந்தாலும் சரி, உருவம் உடையனவெல்லாம் பொருள்தானே!

அதிகாலையில் சூரியன் உதித்து கீழ்வானில் எழும் பொழுதெல்லாம், ஆங்குள்ள - கிழக்கிலுள்ள - உயிர்கள் அனைத்தையும் தன் ஒளியில் மூழ்கடிக்கின்றானல்லவா! பிறகு தெற்கும் மேற்கும் வடக்கும் இன்னும் வானமெங்கும் அவன் ஒளியால் மிளிர்கின்றது. அதுவே வாழும் உயிர் அனைத்திற்கும் உயிர் தருகின்றது.

இவ்வண்ணம் அக்னியாய், எண்ணற்ற கோடி உயிர் வகையாய் அருணன் எழுகின்றான்! ரிக்வேதத்தில் வரும் ஒரு மந்திரங்கூட இவ்வாறு இயம்புகின்றதே!

"பகலவன் பொற்கதிர்மயமாய் எழுகின்றான். அவன் ஆயிரக் கணக்கான கிரணங்களோடு நூற்றுக்கணக்கான இடங்களில் பரவும் ஜோதியன்: எங்கும் நிறைந்துள்ள தேவன் அவனே! பிரார்த்தனைகள் அனைத்தின் குறிக்கோள் அவனே! உன்னதமான அக்னி! ஒப்பில்லாத பேரொளியாவான்! அனைத்து உயிர்களின் முடிவிலா நிலை உயிர்."

கால வடிவான வருஷமே பிரஜாபதியாவான். அதற்கு - தட்சிணாயனம், உத்தராயணம் - என்ற அயனங்கள் இரண்டு. எவன் இங்கு தன் இஷ்ட பூர்த்தி வடிவான கர்ம வழியை பின்பற்றுகிறானோ அவன் சந்திரலோ

கத்தை அடைகின்றான் - அவன் மீண்டும் பிறக்கின் றான்."அதாவது அவன் மீண்டும் திரும்புகின்றான். ஆகையால், பிரஜைகளை விரும்பும் ரிஷியோ தட்சிணா மார்க்கத்தை அடைகின்றார் "பித்ருயானம்" என்னும் இது "ரயி" யேயாகும்.

வருடத்தின் காலம் என்பது படைப்புக்கடவுளாகிய பிரஜாபதியேயாவான். இதற்கு இரண்டு பாதைகள் உண்டு. ஒன்று தென்பாதை; மற்றொன்று வடபாதை; நாம் புண்ணியம் செய்கின்றோம்; வேள்விக்ள் புரிகின்றோம்" என்ற எண்ணத்தோடு தொழுவோர்கள் சந்திரலோகத் தையடைந்து பிறப்பு இறப்புக்கே ஆளாகின்றார்கள். அத னால்தான் இல்லற வாழ்வை - மக்கட்பேற்றை - விரும்பும் அறிஞர்கள் தென்பாதையை பின்பற்றுபவர்களாவார்கள். இது மூதாதையர்களிடம் இட்டுச்செல்லும் பாதையாகும். இது பொருள் - ரயி - வழியேயாகும்.

இங்கு இஷ்ட பூர்த்த கர்ம வழியென்பது, கோயில் கட் டுதல், பசுபட்சி போற்றி வாழ்தல், கிணறு வெட்டுதல், அக்னி ஹோத்ரம், அதிதி பூஜை முதலியனவாகும். அத்த னையும் கருமம் செய்வதற்கேதுவாகிறதல்லவா! ஆனால் மனந்தளராத பிரம்மச்சரியத்தாலும் தவத்தாலும் மிகுந்த வித்தையாலும் சிரத்தையாலும் ஆத்மாவை நாடியவர்கள் மேல் நோக்கி உத்தர மார்க்கத்தால் சூரிய உலகத்தை அடைகின்றனர். பிராணர்களுடைய உறைவிடமும் இறப் பும் பயமும் நீங்கிய இடமும் அதுவே. இதுவே மிகவும் உன் னதமானநிலை; மீண்டும் இதனின்று திரும்புவதே கிடையாது. ஆனால் மற்றவர்களுக்கு இது தடையாகும்.

அந்தராத்மாவைத் தேடுபவர்கள் பிரம்மசரியமும், தவமும் நம்பிக்கையும் ஞானமும் கொண்டு வடதிசை ஏகி ஆத்மீகப் பாதையைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள், எளிதில் நேரே சூரிய உலகத்தை எய்துகின்றனர். அதுவே அச்சம் இல்லாத அமர நாடு; உன்னதப் புகலிடம்; உயிர்ப்

பெருங்கடல். பயணத்தின் முடிவும் அதுவே; இது "தேவயானம்" எனப்படுவது. இதுவே கிரம முக்தி மார்க்கமாகும்.

ரிக்வேதத்தில் வரும் மந்திரம் ஒன்று இவ்வண்ணம் சொல்கிறது. பருவங்களின் மீதமர்ந்து பன்னிரண்டு வடிவங்களில் ஐந்து கால்களோடு, வடதிசை வானுலகினின்று மழையைப் பெய்விக்கும் – தந்தைபோன்ற – ஒருவரைச் சிலர் போற்றுகின்றனர். மற்றும் சிலரோ தென்திசை வான் புலத்திலுள்ள ஏழு சக்கரங்களும் ஆறு ஆரக்கால்களும் கொண்டரதம் ஒன்றிலுள்ள ஞானி ஒருவரைப் போற்றுகின்றனர்.

உண்மையில் மாதம் என்பது படைப்பின் தலைமை தான். அது இருளும் பகலும் கலங்கதே! ஔிமிக்க பகலே உயிராம், சில ஞானியர் தம் சமயச்சடங்குகளை ஒளி மிக்க பகலில் செய்கின்றனர். வேறு சிலரோ அதையே இருள் மிக்க காலத்தில் செய்கிறார்கள்.

பகலும் இரவும் பிரஜாபதியே! பகல், உயிர், இரவு, பொருள். பகலில் இன்பத்தால் இணைவோர்கள் உயிரை வீணாக்குகின்றனர். ஆனால் இரவில் இன்பத்தின் எழுச்சியால் இணைவோர் நற்பாதையை பிற்பற்றுவோராகின்றனர்.

உண்மையில் உணவும் பிரஜாபதியே! உணவிலிருந்தே சகல வித்துக்களும் உற்பத்தியாகின்றன. இதனின்றே உயிர்களனைத்தும் பிறக்கின்றன.

பிரம்மசரியமும் தவமும் எவர்களிடம் உள்ளதோ; எவர்களிடம் உண்மை நிலைபெற்றுள்ளதோ, அவர்களுக்கே பிரம்மலோகம்.

பிரஜாபதியின் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிவோர்கள் – அடங்கி நடப்போர்கள் தாமும் உற்பத்தியில் இறங்குகின்றனர். அவரைப் போலவே தாமும் ஒரு ஜதையை படைக்கின்றனர். அவர்கள் சந்திரனுடைய வெளிரிய நிலங்களையடைகின்றனர்.

எவர்களிடம் சூதும் பொய்யும் வஞ்சனையும் இல்லையோ அவர்களுக்கே இந்த குற்றமற்ற பிரம்மலோகம்.

எவரிடம் வஞ்சமும், பொய்யும், அவநம்பிக்கையும் இல்லையோ, பிரமச்சரியமும் தூய்மையும் உண்மையும் பூண்டு வாழ்வோர் எவரோ, அவர்களே சூரியனின் ஒளி சான்ற நல்லிடங்களை எய்துகின்றனர்.

## இரண்டாவது கேள்வி

அதன்பிறகு பிருகுவம்சத்தவரும் விதர்ப்ப நாட்டினரான பார்க்கவர் "ஐயனே! எத்தனை தேவதைகள் இவ்வுடல் படைத்த மக்களை ஆதரிக்கின்றார்கள்? எத்தனை தேவதைகள் இவ்வுடலை உயிர்ப்பிக்கின்றார்கள்? இத்தேவதைகளுள் சிறந்தது எது?" என்று கேட்டார்.

குருவே! உயிரொன்றை இணைத்து வைத்திருக்கும் சக்திகள் என்னென்ன? உயிரின் சுடர்களை அணையாது காத்து ரட்சிக்கும் சக்திகள் எத்தனை? அவற்றுள் எது உன்னதமானது? என்ற கேள்விகளை எழுப்பி விளக்கிக் கூறுமாறு கேட்டார் பார்க்கவர்.

ஒவ்வொரு சக்தியும் ஒரு தேவதையே!

இது ஆகாசம் - வான் - என்ற தேவதையும், வாயுவும், அக்னியும், நீரும், மண்ணும், வாக்கு, மனம், கண், காது முதலியவைகளேயாகும். அதை தம் சக்திகளை வெளிபடுத்திக்கொண்டு நாங்கள்தான் இவ்வுடலைத் தாங்குகின்றோம்" என்றன.

இச்சக்திகளனைத்தும் உயிர்ச்சுடரை ஏற்றி நாம்தாம் இந்த உயிரை இணைத்து வைத்துள்ளோம் இதற்கு அடிப்படை நாமே!" என செருக்கு மொழி பேசின.

உஸ். மயக்கமடையாதீர்கள். நானே என்று ஐந்து பாகமாகப் பிரித்துக் கொண்டு இந்த உடலை ஆதரித்துத் தாங்குகிறேன்" என்றது முக்கியமான பிராணன்.

ஐந்து பாகமானது - பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன். எனவாகும் உயிர் தம்மை

இவ்வாறு ஐந்தாகப் பிரித்துக் கொண்டு இவ்வுடலை ஆதிரித்து வருகின்றது.

உன்னத ஆற்றல் படைத்த உயிர் இவ்வண்ணம் விளக்கியும், அவை நம்பவில்லை.

வருத்தமுற்ற உயிர் ஏதோ உடலை விட்டு நீங்குவது போல் மேலே எழுந்ததுதான் தாமதம். உடனே உயிரின் ஆற்றல் அனைத்தும் உடன் எழுந்தன. உயிர் மீண்டும் உடலில் அமர்ந்த பொழுதுதான், அவ்வாற்றல்கள் அனைத்தும் தம்தம் நிலைகளில் அமர முடிந்தது.

இராணி தேனீ வெளியே பறந்து செல்லும்பொழுது அதனோடு மற்ற எல்லா ஈக்களும் சென்று, அது திரும்பி வந்து தன் அடையில் அமரும் பொழுது, அவையும் பின்னோடு வந்து சேர்வது போன்று, வாய் மனம், கண், காது, என்னும் இவ்வாற்றல்களும் நடந்து கொண்டன. அப் பொழுது தான் அவைகள் உண்மை தெளிந்தன. உடனே இன்பப் பெருக்கால் மனங்களித்து உயிரைப்போற்றி பாடல் ஒன்று பாடின.

இம்முக்கியப் பிராணனே அக்னியாக எரிகிறது. இதுவே சூரியன், இதுவே மேகம், இதுவே இந்திரன், இதுவே காற்று இவ்வுயிரே பிருதிவி, ரயி, உள்ளதென்பதும் இல்லையென்பதும், அழிவற்ற பரம்பொருளும் இதுவே!

இவ்வண்ணம் உயிரைப் போற்றி பாடி அமரநிலையில் இருப்பதும் உயிரே என்ற முடிவுக்கு வந்தன.

சக்கரத்தின் இடத்தில் ஆரங்கள் இணைந்துள்ளது போல், பிராணனிடத்தில் அனைத்தும் பொருத்தப்பட்டுள்ளன.

ஒரு சக்கரத்தைப் பார். அதன் ஆரங்கள் அனைத்தும் நடுவிலுள்ள இடத்தில்தானே நிலைபெற்றுள்ளன. அவ்வண்ணமே வேதங்களும் பிரார்த்தனைகளும் உயிரில் தான் நிலை பெற்றிருக்கின்றன. வேதியரும், வீரரும் உயிரில்தான் நிலை பெற்றுள்ளனர்.

உயிரே! இவ்வுடலிலுள்ள பொறிகளனைத்திற்கும் ஆதார பூதனாயுள்ள உன்னையே, அனைத்தும் தொழுகின்றன. பிரஜாபதியாக, தாயின் கர்ப்பத்தில் மறுபிறவி எய்தும் பொருட்டு நீ அசைந்து இயங்குகின்றாய்.

தேவர்களுக்கு – அவிகள் எடுத்து செல்பவன் நீயே! அவ்வண்ணமே மரணமடைந்தோர்க்கு செய்யும் முதற் படையலை சுமந்து செல்வதும் நீயே! முனிவர், ரிஷிகள், இவர்கள் திருவாய் மலர்ந்தருளும் பாடல்களும் நீயே! ஞானிகளின் உண்மையும் நீயேதான்.

உயிரே! பிராணனே! நீயே இந்திரன். உனக்குள்ள வீரியத்தால் ருத்திரனாகவும் உள்ளாய். பரிபாலிப்பவனும் நீயே. ஒளிகளின் அரசாக சூரியனாய்த்தோன்றி வானத்தில் சஞ்சரிப்பவனும் நீயே!

நீயே சக்திமிக்க ருத்திரன்! நீயே காக்கும் கடவுள். ஒளிமயமான இந்திரனாகவும், சூரியனாக வானத்துத் தீபங்கள் அனைத்திற்கும் தலைவனாக உள்ளவனும் நீயே!

பிராணனே! வானின்று நீ மழையாகப் பொழியும் பொழுது, உனது உயிர்கள் யாவும் மகிழ்ந்து களிக்கின்றன. எமக்கு வேண்டிய உணவு, இதனால் வேண்டிய அளவு கிடைக்கும், என்று அவை சொல்லி மகிழ்கின்றன.

உயிரே! நீயே பரிசுத்தன்! நீயே பெருமை படைத்த ஞானியாவாய்! நீயே அனைத்திற்கும் தலைவன்! அத்துடன் அனைத்தையும் அழிப்பவனும் நீயே! நீ விரும்பி நுகருவதையெல்லாம் கொண்டு வரும் ஏழைப் பொறிகள் தாம் நாங்கள். எங்கள் தந்தை நீயே! அனைத்து உயிர்களின் மூச்சும் நீயே!

உயிரே! வாய், கண், காது இவற்றில் வாழ்ந்து மனதில் வியாபித்திருக்கும் – காண்பதற்கரிய – நினது திருஅருளால் எம்மை ரட்சிப்பாயாக. எம்மிடமிருந்து என்றும் நீங்காமலிருப்பாயாக.

இதுவும், தேவலோகத்தில் இருப்பதும், அனைத்தும் பிராணனாகிய உன் வசமே! தன் மக்களைக் காக்கும்

தாயைப் போல் எங்களைக் காத்தருள்வாய். எங்களுக்கு நல் உணர்வையும் நற் செல்வத்தையும் அன்பு கூர்ந்து அருள் வாய்.

இவ்வுலகங்கள் யாவும், மற்றும் புனிதமான வானுலகும் நினது சக்தியால்தான் நிலைபெற்றுள்ளன. பிராணனே! எங்களிடம் தாயன்பு காட்டு. தூய அறிவும் பொருளும் எமக்கு அமோகமாய் தந்தருளும்!

இங்கே இந்திரன் - சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மனாகினான் - பரிபாலிப்பவன் - விஷ்ணு. அழிப்பவனோ ருத்ரன்.

## மூன்றாவது கேள்வி

அதன்பிறகு அச்வல புத்திரரான கௌசல்யர் "ஐயனே! இந்தப் பிராணன் எவ்வண்ணம் உண்டாகிறது? இவ்வுடலில் எங்ஙனம் வருகிறது? தன்னை - உள்புகுத்திக் கொண்டு - எங்ஙனம் நிலை பெறுகிறது? வெளிக் கிளம்புவது எதனால்? வெளியுலகை எப்படி தாங்குகிறது? உள் உலகத்தை எவ்வண்ணம் தாங்குகிறது?" என்று கேட்டார்.

எங்கிருந்து உயிர் எழுந்து எப்படி உடலுக்குள் வருகிறது. அப்படி உடலினூடு கலந்தபின் எவ்வாறு வாழ்கிறது? உடலைவிட்டு எப்படி வெளியேறுகிறது? புறத்தே உள்ள பிரபஞ்சத்தையும் அகத்தே உள்ள அத்தியாத்மத்தையும் எவ்வாறு நிலைபெறச் செய்கிறது? இவைகளை விளக்க வேண்டுமே என்று கௌசல்யர் கேட்டார்.

என்னிடம் நீ கேட்கும் இக் கேள்விகள் மிக மிகப் பெரியவையாகும். இருந்தும் நீ பிரம்மத்தின் மீது பேரன்பு கொண்டவனாதலால் நான் உனக்குப் பதில் சொல்கிறேன்." என்றார் பிரம்ம ஞானி பிப்பலாதர்.

ஆத்மாவினிடமிருந்தே உண்டாகிறது இந்தப் பிராணன். எங்ஙனம் இப்புருஷனிடம் நிழலோ, அவ்வண்ணமே இந்த ஆத்மாவிடம் பிராணன் பரவி நிற்கின்றது. மனத்தின் செய்கையால்தான் அது இவ்வுடலினுள் வருகிறது.

ஒருவன் தனது நிழலை தோற்றுவிப்பதைப் போல், ஆத்மாவும் – உயிரென்னும் – இந்த நிழலை தோற்றுவிக்கின்றது. அதனால் முற்பிறவியின் நிழலாக இவ்வுடலுக்கு ஒரு புதிய உயிர் வருகின்றது. ஆத்மாவின் நிழல் போன்றது பிராணன். பிராணின் இயக்கத்தால் தோன்றும் வடிவங்களெல்லாம் திரையில் தென்படும் நிழற்படங்களுக்கு ஒப்பானவையே!

தன் அதிகாரிகளை இந்த இந்த கிராமங்களில் இன்னார் இருங்கள் என்று அரசன் ஒருவன் நியமிப்பது போல், இம்முக்கிய பிராணனும் மற்ற உயிர்களை தனித் தனியே ஏவுகிறது.

எங்கேயும் அரசன் ஒருவனாகவே இருந்து ஆள முடியுமா? அதனால் அவன் தன் அதிகாரிகளை ஆங் காங்கு அனுப்பி வைக்கின்றான்; கட்டளைப் பிறப்பித்து நியமிக்கின்றான். அதேபோல் உயிரின் சக்தியான பிரா ணனும் உடலிலுள்ள மற்றைய வாழும் சக்திகளை ஆள் கின்றது.

மலத்துவாரமான ஆசனவாயிலும், கருத்துவாரத்தி லும் – அபானனை – நிறுத்துகிறது. கண்ணிலும், காதிலும், வாயிலும், மூக்கிலும், தானே – பிராணனே – நிலைபெறு கிறது. இடையிலுள்ள நாபிப் பிரதேசத்தில் உள்ளது சமானன். ஜாடராக்னியில் ஹோமம் செய்யப்பட்ட உணவை மற்ற அங்கங்களுக்குச் சமமாகக் கொண்டு செல் லுகிறது. அது அதனின்றே இவ்வேழு தீக்கொழுந்துகளும் எழுகின்றன.

இவ்வுடலில் கீழுள்ள வாசல்களை அபானன் ஆள் கின்றது. கண்ணிலும் காதிலும் பிராணன், தானே வாழ் கின்றது. வாயின் வழியாகவும் மூக்கின் வழியாகவும் அதுவே இயங்குகின்றது. உடலின் மத்திய பகுதிகளை சமானன் ஆண்டு, உயிர்க்கு ஆதார பூதனாயுள்ள உண வென்னும் படையலை – அவை அவை செழிப்புற – பகிர்ந்தளிக்கிறது. சமானனிலிருந்தே தீச்சுடர்கள் ஏழும்

எழுகின்றன. கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, நாசித் துவாரங்கள் இரண்டு, வாய் ஒன்று ஆக ஏழு தீக்கொழுந்து களாகும்.

இருதயத்தில் ஜீவாத்மா உறைகின்றான். அங்கு நூற்றொரு நாடிகள் உள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றும் நூறு நூறாகப் பிரிந்து ஒவ்வொரு கிளை நாடியும் மீண்டும் எழுபத்திரண்டாயிரம் வேறு கண்ணி நாடிகளாகவும் பிரி கின்றன. இவைகளில் வியானன் செல்லுகிறது.

ஆத்மா இதயத்தில் வாழ்கின்றது. நூற்றியொரு குழாய்களுக்கு–நாடிகளுக்கு – அதுவே மையமாகும். அவை ஒவ்வொன்றினின்றும் மேலும் ஒரு நூறு நாடிகள் தோன் றுகின்றன. கோடிக்கணக்கான இவ்வெல்லாச் சிறு குழாய் களிலும் – நாடிகளிலும் – வியானனின் சக்தியே இயங்குகின்றது.

இதயத்தின் பாங்கே இங்கே விவரிக்கப்படுகின்றது. அம் மெல்லிய சிறு நாடிகளும் வியானனின் சக்தியி லேயே இயங்குகின்றன.

இவற்றுள், ஒன்றின் வழியாக மேல் நோக்கிச் செல்லும் உதானன் – புண்ணியத்தால் – மேலான புண்ணிய உலகிற்கு அழைத்துச் செல்கிறது. பாவத்தால் பாவ உலகிற்கும், இரண்டாலும் மனித உலகுக்கும் அழைத் துச் செல்கிறது.

உதானனுடைய – வாழும் – ஆற்றல் அவற்றுள் ஒன்றின் வாயிலாக மேலே எழுந்து, நல்வினையாளரைத் தூய்மையான சொர்க்கத்திற்கும், தீவினையாளரைத் தீமை என்னும் நரகத்திற்கும், இருவினையாளரை – பாவமும் புண்ணியமும் செய்தோரை – மீண்டும் இம்ம னித உலகிற்கே இட்டுச் செல்கிறது.

ஒன்றின் வழியாக என்பது "சுஷும்னா" நாடி வழியாக என்பதாகும். புண்ணியம் மிகுந்த உலகம் "சுவர்"க்கமாகும். பாவ உலகம் என்பது, நரகமும், புழு, பூச்சி, மிருகம் முதல்ய பிறவிகளும் ஆகும். மனித உலகமோ புண்ணியமும் பாவமும் சமமாய்க் கலந்ததாகும்.

வெளியிலுள்ள பிராணன் சூரியன் ஆகிறது. இது கண்ணிலுள்ள பிராணனை இயக்குவித்துக் கொண்டு உதிக்கிறது. சரீரத்தில் உறைபவனின் அபானனை இயக்குவிப்பது பிருதிவியில் உள்ள தேவதையாகும். சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலுள்ள வெளியே சமானனாவான். சரீரத்தில் சமானனை இயக்குவிப்பது அதுவே. சரீரத்தில் வியானனை இயக்குவிப்பது வெளியிலுள்ள காற்றாகிய வியானனாகும்.

வானத்தில் திகழும் சூரியன் பிராணனே! இப்பிரபஞ்சத்தின் உயிர் அவனே! மானிடர் கண்களில் உள்ள உயிருக்கு இன்பப் பெருக்குத் தந்து அவன் எழுகின்றான். இம்மண்ணுலகின் அம்சம் தேவாம்சம். அபானனுடைய கீழிடங்களை ஆள்கின்றது. சூரியனுக்கும் மண்ணுலகிற்கும் இடையே அண்ட வெளியில் சமானன் நிலை கொண்டுள்ளது. காற்றே வியானனாவான்.

இங்கு சமஷ்டி வடிவான உலகத்திலுள்ள பிராணனுக்கும், வியஷ்டிவடிவான உடலிலுள்ள பிராணனுக்கும் உள்ள உறவு விவரிக்கப்படுகின்றது.

வெளியிலுள்ள ஒளியே உதானன். சரீரத்தில் உதானனை இயக்குவிப்பது அதுவே. ஆகையால் ஒளிமங்கியவர்கள் – இறந்தவர்கள் -- மனதில் ஒடுங்கிய இந்திரிய சக்திகளைக் கொண்டு மறுபிறப்பை அடைகிறார்கள்.

மரணகாலத்தில் இவன் என்ன எண்ணம் கொண்டிருக்கிறானோ அத்துடனே பிராணனிடம் லயமடைகிறான். உதானனுடன் கூடிய பிராணன், ஜீவனுடன் கிளம்பி, இறுதியில் சங்கல்பித்துக் கொண்ட உலகுக்கு அழைத்துச் செல்லுகிறது.

அக்னியின் ஒளியே உதானன். அவ்வுயிர்த் தீ நீங்கும்பொழுது, பொறிகள் மனத்தில் பதிகின்றன. அப்போது மனிதன் மீண்டும் பிறவி எய்துகிறான். அவனுடைய இறுதி எண்ணங்கள் எவையோ, அவைகளோடு அவன்

பிராணனிடம் போய்ச் சேருகின்றான். உதானனாக வாழும் அக்னி உடன்வர, ஆத்மாவே வழி நடத்த, தன் தகுதிகேற்ற கற்பனையில், தான் விரும்பிய இடத்திற்கே அவன் செல்கின்றான்.

எப்போது இச்சரீரத்தையாளும் ஜீவன் இதைவிட்டு கிளம்புகிறானோ அப்போது காற்றானது உறைவிடத்தினின்று வாசனைகளைப் போல மனதுடன் கூடிய ஆறு இந்திரியங்களையும் கவர்ந்து கொண்டு செல்கிறான். ஜீவனுக்கு தூலசரீரம், சூட்சமசரீரம், காரண சரீரம் என உடல் மூன்று. மரணத்தில் தூல சரீரத்தை மட்டும் விட்டுச் செல்கிறான். கடைசியில் எந்தெந்த நினைவை நினைத்துக் கொண்டு உடலைவிட்டாலும், எப்போதும் அந்நினைவையே நினைத்ததால் அதனையே அடைகின்றான்.

இவ்வாறு ஜீவனை அறிவோனுடைய சந்ததி ஒருபோதும் முடிவெய்துவதில்லை; அது அமரவாழ்வையே அடைகின்றது. இதற்கான உள்ள பாடல் ஒன்று சொல்கிறது—

பிராணனுடைய உற்பத்தியையும், அதன் வரவையும், அதன் இருப்பிடத்தையும், அதன் ஆட்சியையும், ஐந்து பிரிவையும், ஒவ்வொரு உடலிலுள்ள நிலையையும் அறிந்து சாகாநிலை அடைவான் ஒருவன். உண்மையில் அவன் சாகா நிலையே அடைவான்.

உயிரின் எழுச்சியையும் அது உடலுக்குள் எவ்வண்ணம் வருகிறது. தனது ஐவகைப் பிரிவோடு அங்கே அது எவ்வாறு நிலை கொள்கிறது என்பதை அறிந்தோனாய், அந்தராத்மாவுக்கும் அதற்குள் உள்ள தொடர்பை நன்கு தெரிந்து கொண்டவன் அமரவாழ்வு பெறுகின்றான். உண்மையில் அவன் சாகா நிலையையே எய்துகின்றான்.

## நான்காம் கேள்வி

அதன்பிறகு கர்க்க வம்சத்தவரான சௌர்யாயணி "ஐயனே! இந்த புருஷனிடத்தில் எவை தூங்குகின்றன?

எவை இவனிடம் விழித்திருக்கின்றன! இவற்றுள் எது சொப்பனங்களைக் காண்பது? இன்பம் எதனுடையது? எல்லாம் எதனிடம் நிலைபெற்று நிற்கின்றது" என்று கேட்டார்.

மனிதனிடம் உறங்கும் சக்திகள் எத்தனை? விழித்துக் கொண்டிருக்கும் சக்திகள் எத்தனை? கனவுகளைக் காணும் ஆத்மா யார்? கனவில்லாத துயிலை நுகர்ந்து இன்புறுவது யார்? எதனிடம் இவையனைத்தும் நிலை கொண்டுள்ளன? என்பதையெல்லாம் சற்று விளக்கிச் சொல்லுங்கள் என்று சௌர்யாயணி கேட்டார்.

பிப்பலாதர் விளக்குகின்றார் - அஸ்தமிக்கும் சூரியனுடைய கிரணங்கள் எவ்வண்ணம் ஒன்று குவிந்து சூரிய மண்டலத்தில் ஒடுங்குகின்றனவோ, மறுபடியும் சூரியன் உதிக்கும்பொழுது எங்ஙனம் வெளிப்பரவுகின்றனவோ அவ்வண்ணமே கனவில் - சொர்ப்பனத்தில் இந்திரியங்கள் அனைத்தும் பர தேவதையினிடம் ஒடுங்குகின்றன.

உதய காலத்தில் விரித்தெழும் அருணனின் கதிர்கள், அந்திப் பொழுதில் - அஸ்தமிக்கும் காலத்தில் - அக்கதிர்கள் அதன் ஒளிவட்டத்தில் ஒன்றுபடுவனபோல், பொறிகளின் ஆற்றல்கள் அனைத்தும் மனம் என்னும் உயர் ஆற்றலில் ஒன்றுபட்டு போகின்றன. அப்பொழுது அவன் பார்ப்பதுமில்லை கேட்பதுமில்லை. பேசுவதில்லை பெறுவதும் - வெளியே - விடுவதும் இல்லை. அசைவதும் இல்லை எதையும் நுகர்வதும் இல்லை. அந்நிலையையே உறக்கம் என்பர் உலகத்தோர்.

ஆனால் அவ்வமயம் இச்சரீரத்திலுள்ள பிராணாக்கினிகள் விழித்திருக்கின்றன. அபானனே கார்ஹபத்யாக்கினி; வியானனே தட்சிணாக்கினி, அபான அக்கினியிலிருந்து எடுக்கப்படுவதால் பிராணனே ஆஹவனீயாக்கினி.

அந்நிலையில் இவ்வுடலென்னும் நகரில் பிராணாக்கினிகள் - உயிரின் நெருப்புக்கள் - கனன்று கொண்டே

யிருக்கின்றன. அவை உறங்குவதே இல்லை. அப்பாவுக்குப் பின் பிள்ளை என வழிவழியாக நின்று அணையாது காக்கும் புனிதமான "இல்லத்"தீ" போல அபானன் இருக்கிறது. முன்னோர்களுக்குச் செய்யும் படையல்களுக்கான தென்திசைத் தீ போல வியானன் விளங்குகிறது. "இல்லத்தீ"யால் ஏற்படும் கீழ்த்திசை தீ போல பிராணன் விளங்குகிறது.

அக்னிஹோத்திர சாலையில் மூன்று அக்னிகள் வளர்க்கப்படும். கார்ஹபத்யம் என்பது யஜமானனுக்குப் பின் வட்ட வடிவமான குண்டத்தில் அமைவது; இதிலிருந்தே மற்ற அக்னிகள் எடுக்கப்படும். தட்சிணாக்கினி "அன்வாஹார்யபசனம்" என்பது, யஜமானனுக்குத் தென்புறம் அதாவது வலதுபக்கத்தில் அரைவட்ட வடிவான குண்டத்தில் உள்ளது; இதில் பிதிருக்களும் க்ஷுத்ர தேவதைகளும் ஆராதிக்கப்படுவர். ஆஹவனீயாக்கினி என்பது யஜமானனுக்கு முன் சதுரவடிவான குண்டத்தில் உள்ளது. இதில் தேவர்கள் ஆராதிக்கப்படுவர். அபானன் எப்பொழுதும் பின்பக்கத்தில் இருப்பதால், கார்ஹபத்யம் எனப்பட்டது. பிராணன் அதிலிருந்து பிரிந்து எழுவதால், பிராணன் ஆஹவனீயம் எனப்பட்டது. வியானன் இருதயத்துக்கு வலது பக்கத்து நாடியில் சஞ்சரிப்பதால் தட்சிணாக்கினி எனப்பட்டது.

பிராணனை அபானனில் ஹோமம் செய்யும் உள்மூச்சு, அபானனை பிராணனின் ஹோமம் செய்யும் வெளிமூச்சு இவ்விரு ஆஹூதிகளையும் சமமாக நடத்துவிப்பதால், அதைச் செய்யும் வாயு சமானன்.எனப்பட்டது. ஹோமம் செய்யும் யஜமானன் மனமேயாகும். இஷ்டமான பலனாயிருப்பது உதானன். ஏனெனில் அவனே, மனமாகிற யஜமானனை நாள்தோறும் சுழுப்தி நிலையில் பிரம்மத்திடம் சேர்ப்பிக்கிறான்.

சமானன்—ஹோத்ரி அர்ச்சகரைப்போல் இலங்குகிறது. வெளியிடுதலும் உள்ளிழுத்தலுமான இரு செயல்க

ளையும் சரிசமமாகச் செய்வதால் அது சமானன் என்றழைக்கப்படுகிறது. வேள்வி செய்வோன் மனமே! நாள் தோறும் துயிலில் ஆழ்ந்த மனத்தை, இறைவனிடம் – பிரம்மத்திடம் கொண்டு செல்லும் உதானனே வேள்வியின் பயனாகும். அதுவே மனத்தின் கனி.

இந்த தேவன் – மனம். சொர்ப்பனத்தில் தன் பெருமையை அனுபவிக்கிறான். எது எது வெளியே பார்க்கப்பட்டனவோ, அவையனைத்தையும் மீண்டும் பார்க்கிறான். எது எது கேட்கப்பட்டதோ அதையே மீண்டும் மீண்டும் கேட்கிறான். பல இடங்களிலும் பல திக்குகளிலும் எதையெதை, அனுபவித்தானோ அவையனைத்தையும் மீண்டும் மீண்டும் அனுபவிக்கின்றான். சமயத்தில் கண்டதும் காணாததும், கேட்டதும் கேளாததும், அனுபவித்ததும் அனுபவிக்காததும், உள்ளதும் இல்லதும் ஆன அனைத்தும் தானேயாகி, எல்லாவற்றையும் காண்கின்றான்.

கனவுகளில் மனம் தனது சொந்தப் பெருநிலையையே காண்கின்றது. வெளியே அது கண்டு, கேட்டு அனுபவித்த செயல்களிலேயே மீண்டும் ஈடுபடுகிறது. வெவ்வேறு இடங்களிலோ வெகு தொலைவிலுள்ள நாடுகளிலோ உணரப்பட்டவையே மீண்டும் மனத்திடம் திரும்புகின்றன. மனமே அனைத்துமாயிருப்பதால், அனைத்தையும் மனம் காண்கின்றது.

மனமாகிற தேவன், சித்தத்தின் ஒளியால் எப்போது ஆக்கிரமிக்கப் படுகிறானோ அப்போது அவன் சொர்ப்பனங்களைக் காண்பதில்லை. அப்போது இச் சுழுப்தி நிலையே இச்சரீரத்தில் சுகமாகிறது.

ஆனால் அதன் சொந்த ஒளியே மனத்தை வென்றிடும் பொழுது கனவும் காண்பதில்லை – ஏற்படுவதில்லை அப்போது சுகமான இன்பமும் அமைதியும் உடலுக்கு ஏற்படுகின்றன. பிரம்ம ஐக்கியத்திற்கு ஒரு பயிற்சியோ!

அழகிய சித்தம் படைத்தவனே! எவ்வாறு பறவைகள் தாம் வசிக்கும் மரத்தைச் சாருகின்றவோ, அவ்வண

ணமே சக்திகள் அனைத்தும் - கூடஸ்தனான - ஆத்மாவிடம் வந்து அடங்குகின்றன.

அன்பனே! பறவைகள் அனைத்தும் மாலை வேளையில் தாம் தங்கியிருக்கும் மரத்திற்குத் திரும்புவதைப் பார்த்திருப்பாயே! அவ்வண்ணமே அனைத்தும் பரம் பொருளையே - ஆத்மாவையே - வந்தடைகின்றன.

அனைத்தும் என்பது, மண், நீர், நெருப்பு, காற்று, வான் இவையும், இவையின் மூலகங்களும்; ஒளி, ஊறு, சுவை, ஓசை, நாற்றம் இவையும் இவையின் உணர்வுகளும், வாய், கைகால்கள், உற்பத்தி மற்றும் வெளியேற்றும் உறுப்புக்கள். இவைகளும், இவைகளின் ஆற்றல்களும், மனம் அது நினைக்கும் பொருள்கள், பகுத்தறிவு அது தெளியும் பொருள்கள், நான் எனும் அகங்கார உணர்வு, சித்தம், உள்ளொளி இவையெல்லாம் ஆகும். இவற்றுடன் உயிரும், எவற்றையெல்லாம் அது தாங்குகின்றதோ அவையுங்கூட தம் இறுதிப் பேரமைதியை, அழிவில்லாத அவ்வாத்மாவிலேயே - மேலான பரப் பிரம்மத்திலேயே - காண்கின்றன.

உண்மையில் இவனே பார்ப்பவன்; கேட்பவன், தொடுபவன், முகர்பவன், சுவைப்பவன், நினைப்பவன், அறிபவன், செய்பவனுமாகிய சரீரமாகிய புரத்தில் உறையும் புருஷனுமாவான். இவன் அழிவில்லாத பரமாத்மாவினிடம் உறைகின்றான்.

சுயம்பிரகாசமான ஆத்மா, தன்னுடைய மாயையால் தன்னைத்தானே கற்பிக்கிறான். அவனே சிருஷ்டி வேற்றுமைகளை அறிகிறான் என்பதே வேதாந்த நிச்சயம்.

அனைத்து உணர்வு நிலையையும் கொண்ட ஆத்மா, அழிவிலாப் பரம்பொருளில் அமைதி காண்கிறது.

மகனே! என்று ஒளிருவதும், உடலற்றதும், நிழலற்றதும், என்று மிருப்பதுமான அவ்வழிவிலாப் பரம்பொருளை எவன் அறிகின்றானோ அவன் அதனையே அடைகிறான். அனைத்தும் அறிகின்றான். உண்மையில்

அவன் இரண்டறக் கலந்து அனைத்தும் ஆகின்றான். இதோ பாடலொன்று அதைச் சொல்கிறது.

அழகிய சித்தம் உள்ளவனே! புத்தி குகையில் உறையும் விஞ்ஞானத்மா ஒளிபொருந்திய சக்திகளுடனும் புலன்களுடனும் எதனிடம் நிலைபெறுகின்றதோ. அந்த அழியாப் பொருளை எவன் அறிந்து கொள்கின்றானோ அவன் அனைத்தும் அறிந்தவனாய் எங்கும் நிறைபவனா கின்றான்.

என் அன்பா! அழிவிலா உணர்வுநிலைகொண்ட பொறிகளான உயிர் சக்திகளும் மூலகங்களும் இறுதி அமைதி காண்பது எங்கேயோ, அவ்வழிவிலா பரம்பொருளை– பிரம்மத்தை–அறிகின்றவனே, அனைத்தையும் அறிந்தவன் ஆகின்றான். அவனே அனைத்துள்ளும் உறைந்துள்ள நிலை கொண்டுள்ள - ஆத்மாவை உணர் கின்றான். அவனே ஆத்மாவாய் அனைத்துள்ளும் நுழை கின்றான்.

## ஐந்தாம் கேள்வி

அதன் பிறகு சிபிபுத்திரரான சத்திய காமர் "ஐயனே! மனிதர்களுள் எவன் ஒருவன் தன் ஆயுள் முடியும் வரை 'ஓம்'காரத்தை உபாசிக்கின்றானோ அவன் அதனால் எந்த நிலையை எய்துகிறான்?" என்று கேட்டார்.

குருவே! தனது உயிர் உடலை விட்டுபிரியும்வரை ஓங்காரத்தையே தியானம் செய்து வரும் மனிதன் இறுதி யில் எங்கே செல்கின்றான்?

'சத்தியகாமா! எது 'ஓம்'காரம் எனப்படுவதோ அதுவே பரப்பிரம்மமும், அபரப்பிரம்மமுமாகும். அதனால் அதை தொடர்ந்து உபாசித்து வருபவன் இரண் டில் ஒன்றை எய்துகிறான்" என்றார் பிப்பிலாதர்.

ஓங்காரம், அனைத்திற்கும் அப்பாற்பட்டதும், அனைத்துள்ளும் உறைவதுமான பிரம்மமேயாகும். அதனால் ஓங்காரத்தின் உதவியினால் அறிஞன் இவ்வி ரண்டு நிலைகளுள் ஒன்றை தப்பாமல் எய்துகின்றான்.

ணமே சக்திகள் அனைத்தும் – கூடஸ்தனான – ஆத்மாவி டம் வந்து அடங்குகின்றன.

அன்பனே! பறவைகள் அனைத்தும் மாலை வேளையில் தாம் தங்கியிருக்கும் மரத்திற்குத் திரும்புவ தைப் பார்த்திருப்பாயே! அவ்வண்ணமே அனைத்தும் பரம் பொருளையே – ஆத்மாவையே – வந்தடைகின்றன.

அனைத்தும் என்பது, மண், நீர், நெருப்பு, காற்று, வான் இவையும், இவையின் மூலகங்களும்; ஒளி, ஊறு, சுவை, ஓசை, நாற்றம் இவையும் இவையின் உணர்வுகளும், வாய், கைகால்கள், உற்பத்தி மற்றும் வெளியேற்றும் உறுப் புக்கள். இவைகளும், இவைகளின் ஆற்றல்களும், மனம் அது நினைக்கும் பொருள்கள், பகுத்தறிவு அது தெளியும் பொருள்கள், நான் எனும் அகங்கார உணர்வு, சித்தம், உள்ளொளி இவையெல்லாம் ஆகும். இவற்றுடன் உயிரும், எவற்றையெல்லாம் அது தாங்குகின்றதோ அவையுங்கூட தம் இறுதிப் பேரமைதியை, அழிவில்லாத அவ்வாத்மாவி லேயே – மேலான பரப் பிரம்மத்திலேயே – காண்கின் றன.

உண்மையில் இவனே பார்ப்பவன்; கேட்பவன், தொடுபவன், முகர்பவன், சுவைப்பவன், நினைப்பவன், அறிபவன், செய்பவனுமாகிய சரீரமாகிய புரத்தில் உறையும் புருஷனுமாவான். இவன் அழிவில்லாத பரமாத் மாவினிடம் உறைகின்றான்.

சுயம்பிரகாசமான ஆத்மா, தன்னுடைய மாயையால் தன்னைத்தானே கற்பிக்கிறான். அவனே சிருஷ்டி வேற்று மைகளை அறிகிறான் என்பதே வேதாந்த நிச்சயம்.

அனைத்து உணர்வு நிலையையும் கொண்ட ஆத்மா, அழிவிலாப் பரம்பொருளில் அமைதி காண்கிறது.

மகனே! என்று ஒளிருவதும், உடலற்றதும், நிழலற்ற தும், என்று மிருப்பதுமான அவ்வழிவிலாப் பரம்பொ ருளை எவன் அறிகின்றானோ அவன் அதனையே அடைகிறான். அனைத்தும் அறிகின்றான். உண்மையில்

அவன் இரண்டறக் கலந்து அனைத்தும் ஆகின்றான். இதோ பாடலொன்று அதைச் சொல்கிறது.

அழகிய சித்தம் உள்ளவனே! புத்தி குகையில் உறையும் விஞ்ஞானத்மா ஒளிபொருந்திய சக்திகளுடனும் புலன்களுடனும் எதனிடம் நிலைபெறுகின்றதோ. அந்த அழியாப் பொருளை எவன் அறிந்து கொள்கின்றானோ அவன் அனைத்தும் அறிந்தவனாய் எங்கும் நிறைபவனா கின்றான்.

என் அன்பா! அழிவிலா உணர்வுநிலைகொண்ட பொறிகளான உயிர் சக்திகளும் மூலகங்களும் இறுதி அமைதி காண்பது எங்கேயோ, அவ்வழிவிலா பரம்பொருளை- பிரம்மத்தை-அறிகின்றவனே, அனைத்தையும் அறிந்தவன் ஆகின்றான். அவனே அனைத்துள்ளும் உறைந்துள்ள நிலை கொண்டுள்ள - ஆத்மாவை உணர் கின்றான். அவனே ஆத்மாவாய் அனைத்துள்ளும் நுழை கின்றான்.

## ஐந்தாம் கேள்வி

அதன் பிறகு சிபிபுத்திரரான சத்திய காமர் "ஐயனே! மனிதர்களுள் எவன் ஒருவன் தன் ஆயுள் முடியும் வரை 'ஓம்'காரத்தை உபாசிக்கின்றானோ அவன் அதனால் எந்த நிலையை எய்துகிறான்?" என்று கேட்டார்.

குருவே! தனது உயிர் உடலை விட்டுபிரியும்வரை ஓங்காரத்தையே தியானம் செய்து வரும் மனிதன் இறுதி யில் எங்கே செல்கின்றான்?

'சத்தியகாமா! எது 'ஓம்'காரம் எனப்படுவதோ அதுவே பரப்பிரம்மமும், அபரப்பிரம்மமுமாகும். அதனால் அதை தொடர்ந்து உபாசித்து வருபவன் இரண் டில் ஒன்றை எய்துகிறான்" என்றார் பிப்பிலாதர்.

ஓங்காரம், அனைத்திற்கும் அப்பாற்பட்டதும், அனைத்துள்ளும் உறைவதுமான பிரம்மமேயாகும். அதனால் ஓங்காரத்தின் உதவியினால் அறிஞன் இவ்வி ரண்டு நிலைகளுள் ஒன்றை தப்பாமல் எய்துகின்றான்.

உருப்படைத்த அனைத்தும் க்ஷரம் அபரமாகும். கூடஸ்தன் அக்ஷரன்-பரமாகும்.

'ஓம்' எனும் மந்திரம் மூன்று ஒலிகளையுடையது. அவற்றுள் முதல் ஒலியைத் தியானிப்பவன் அதனால் ஒளியடைகின்றான். மரணத்திற்குப் பிறகு, ரிக்வேத மந்திரங்களால் வழி நடத்தப்பட்டு வெகுவேகமாக இம்மானிடர் உலகுக்கே அவன் திரும்புகின்றான். இங்கே பிரம்மசரியத்தைக் காத்து, உண்மை, தூய்மை இவற்றில் உறுதியாயிருந்து பெருமை எய்துகிறான் அவன்.

அந்த ஓங்காரத்தின் முதல் இரு ஒலிகளின் மேல் மனதை லயிக்கவைத்து தியானத்தில் ஆழ்பவன், யஜுர் வேத மந்திரங்களால் வழிநடத்தப்பட்டு சந்திரலோகத்துக்கு அழைத்துச் செல்லப்படுகின்றான். அவ்வானுலக இன்பங்களை அனுபவித்த பிறகு, இம்மண்ணுலகிற்கே அவன் மீண்டும் திரும்புகின்றான்.

மூன்று ஒலிகளோடும் தம்மனதை நிலைபெறச்செய்பவன், பாம்பு எங்ஙனம் தன் சட்டையின்று விடுபடுகின்றதோ அவ்வண்ணமே அவன் பாவத்தினின்று விடுபட்டு சாமங்களால் அவன் பிரம்ம லோகத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அனைத்து ஜீவ வடிவான ஹிரண்ய கர்ப்பனுக்கும் அப்பாலுள்ள பரம புருஷனை-உடல்களனைத்திலும் உறைபவனைக் காண்கிறான்.

நித்ய 'ஓம்'காரத்தின் மூன்று ஒலிகளோடும் தன் மனத்தை நிலைபெறச் செய்து தியானம் புரிந்து வருபவன், ஆதவன் ஒளியையே அடைகின்றான். அங்கே அவன் பாம்பு தன் தோல் சட்டையைக் களைவதுபோல் - பாவங்களையெல்லாம் தீமைகளையெல்லாம் - களைந்தவன் ஆகின்றான். அப்போது அவன் சாமவேதத்தின் மந்திரங்களால் வழிநடத்தப்பட்டு பிரம்மலோகம் அடைகின்றான். அங்கு அவன் உடலனைத்திலும் வியாபித்து வாழும் ஜீவாத்மனுக்கும் மேலான பரமபுருஷனை- பரமாத்மாவை காண்கின்றான். அதுவே மிகமிக உயர்ந்த வாழ்விற்கு

மேலிருப்பதாகும். அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர் என்பதற்கொப்பாகும் அது.

ஆனால் 'ஓம்'காரத்தின் மூன்று மாத்திரைகளும் தனித்தனியே தியானிக்கப்பட்டால் அவை அழியும் பலனையே தருவனவாகும். மூன்றும் சேர்ந்து தியானிக்கப் பட்டால் அங்ஙனமாகாது. வெளிவியாபாரங்களிலும் ஜாக்கிரத்திலும், உள் வியாபாராங்களிலும் – ஸ்வப்னத்தி லும் – இடை வியாபாரங்களிலும் – சுஷுப்தியிலும் அவை முறைப்படி பொருத்தப்பட்டால், ஞானி அசைவுறான்.

ஓங்காரத்தின் மூன்று மாத்திரைகளும் ஒன்றுபடா நிலையில், மீண்டும் நிலையற்ற பிறவிகளுக்கே இட்டுச் செல்வன. அவற்றைப் பரிபூரண சத்தியத்தின் மேல் செய்யும் தியானத்தில் இணைத்துப் புறம், அகம் இன்னும் இடைநிலைகளில் சரியாகப் பொருத்திப்பயன்படுத்தும் அறிஞன் உறுதியாளன் ஆகின்றான். அதன்பிறகு அவன் நடுங்குவதேது? அவனுக்கு அச்சமேது?

'ஓம்'காரத்தின் மூன்று மாத்திரைகள் அ,உ,ம, என்ப னவாகும், 'அ'விழிப்புநிலை தூலதேகத்தையும், 'உ' சொப்பன நிலையையும், 'ம'காரணதேகத்தையும் குறிப்ப னவாகும். இவைகளை தனித்தனியாய் காணப்பெறினும், கடலில் ஆறுகள் கலப்பதுபோல், ஆன்மாவிடம் ஒன்றுபடு கின்றன என்று காண்பதே சிறந்த அறிவுடைமையாகும். அவ்வண்ணம் அறிந்தவனை எதுவும் அசைக்கமுடியாதல் லவா! பிரணவத்தின் – ஓங்காரத்தின் – மூன்று மாத்திரைக ளையும் சேர்த்து தியானித்துவந்தால் முப்புரங்களையும் எரித்து முக்திபெறலாம். "திரிபுரசம்ஹாரம்" இதன் உட் கருத்தே!

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைத்தன முப்புரமுந்தீ பற ஒருங்குடன்
வெந்தவாறுந்தீ பற"

என்கிறார் மணிவாசகப் பெருமான்.

ரிக்வேதம் பரம்பொருளின் புகழைப் பாடுவது. யஜுர்வேதம் பரம்பொருளின் கிரியைகளை விளக்குவது. சாமவேதம் ஞானத்தைப் புகட்டுவது.

"காயத்ரி" எனும் மகாமந்திரத்தின் மூன்று பாதங்களும் இம்மூன்று வேதங்களின் சாரமேயாகும்.

ஓங்காரத்தின் மூன்று மாத்திரைகளையும், உரையிலும் செயலிலும் உள்ளத்திலும் வைத்து ஆழ்ந்து தியானித்து வந்தால் பரிபூரணநிலையாகிய துரீய - நிலைக்கு அழைத்துசெல்லும். அந்நிலையே சொல்லுங்கடங்காத சுகந்தருவத்தாகும்.

ரிக்வேதத்தால் இவ்வுலகையும், யஜுர் வேதத்தால் இடை வானுலகங்களையும் சாமவேதத்தால் - மகான்களே உணரும் - பிரம்மலோகத்தையும் அடையலாம். அனைத்தையும் ஓங்கார உபாசனையிலாலேயே ஞானி அடையக் கூடும். அதனால், பயம், மூப்பு, மரணம் அற்ற சாந்தமே நிறைந்த பரமபதத்தை அடையக்கூடும்.

வேதங்களினால் இம்மூன்று உலகங்களையும் அடையப்பெறலாம் என்றிருந்தாலும், ஞானியானவன் 'ஓம்'காரத்தின் உபாசனையின் மூலமே அழிவும் மரணமும் அச்சமும், இல்லா நிலையெய்தி பரம்பொருளில் அமைதி காண்கின்றான். இந்நான்கு நிலைகளையும் அரும்பு, மலர், காய், கனிக்கு ஒப்பிடலாம்.

## ஆறாம் கேள்வி

அதன்பிறகு பாரத்வாஜ வம்சத்தவரான சுகேசர் "ஐயனே கோசல நாட்டு அரசகுமாரன் இரண்யநாபன் என்னையணுகி பாரத்வாஜரே! பதினாறு கலைகளுள்ள பரம புருஷனை நீர் அறிவீரா? என்று கேட்டான், அதற்கு "நான் அறியேன்" என்று கூறினேன். அந்தப் புருஷன் யார் என்று தாங்கள் சொல்கிறீர்களா? என்று கேட்டான்.

"பதினாறு வடிவங்களோடு கூடிய ஆத்மாவை நீ அறிவாயா?" என்று அவன் கேட்டதற்கு "நான்

அறியேன்" என்றே கூறினேன். ஆத்மாவை அறிந்திருந்தால் அதனை அறியவில்லை என்று நான் எப்படிச் சொல்வேன்? பொய்பேசுவோன் வேரோடு பட்டுப் போகும் ஒரு மரத்திற்கொப்பாவான் என்பது எனக்குத் தெரியுமே! அதனால் நான் பேசுவதில்லை, அதனால் இப்போது நான் உங்களைக் கேட்கிறேன் அந்த ஆத்மா எங்குள்ளது?" என்றான்.

அழகிய சித்தம் உள்ளவனே! எவனிடம் பதினாறு கலைகள் உளவோ அவன் இங்கே இச்சரீரத்திலேயே உள்ளான்.

எதனின்றும் பதினுறுகலைகள் எழுவனவோ அவ் வாத்மா இவ்வுடலினுளே இங்கேயே இருக்கின்றது.

யார் தங்குவதால் நான் தங்குவேன்? யார் வெளியேறுவதால், நான் வெளியேறுவேன்? என்று ஆத்மா எண்ணியது.

பிறகு அது உயிரைப் படைத்தது, அதனின்று நம்பிக்கையைப்படைத்தது. அத்துடன் வானும் காற்றும் நீரும், நெருப்பும் மண்ணும் மனமும் பொறிகளும் படைக்கப்பட்டன. உணவையும், உணவினின்று வலிமை, தவம், தூய செயல்கள், திருமறைகள், உலகங்கள் என யாவையும் படைத்தது, மற்றும் உலகங்களில் பெயர்களைப் படைத்தது.

எவ்வண்ணம் நதிகள் சமுத்திரத்தை நோக்கி ஓடி அதையடைந்து அதனுள் மறைந்து தம் நாம ரூபங்களை இழந்து பின் சமுத்திரமென்றே சொல்லப்படுகின்றனவோ, அவ்வண்ணமே இங்கு-பார்ப்பவனுடைய பதினாறு கலைகளும் புருஷனை நோக்கிச் சென்று அவனையடைந்து நாம ரூபங்களையிழந்து பின் புருஷன் என்றே சொல்லப் படுகின்றன. அப்போதே அவன் மரணம் அற்றவனாகவும் கலைகள் அற்றவனாகவும் ஆகின்றான்.

கடலை நோக்கிப் பாயும் ஆறுகள் அங்கே இறுதி அமைதிகண்டு கலந்து கடல் எனும் பெயரையே அடை

கின்றன. அங்ஙனமே அனைத்தும் காணபோனது பதினாறு வடிவங்களும்- ஆத்மாவை நோக்கிப் பாய்ந் தோடி கலந்து அமைதிகண்டு அங்கு தம் பெயரும் வடிவும் மறைந்துபோக -ஆத்மா என்ற நாமத்தையே பெறுகிறது. ஆத்மாவின் சகுணமாகிய மரணமில்லாப் பெருவாழ்வை அடைகின்றது.

ஒரு சக்கரத்தின் ஆரக்கால்கள் அனைத்தும் அச் சக் கரத்தின் நடுவிலுள்ள குடத்தில் நிலைகொள்வதைப் போல இவ்வடிவங்கள் எல்லாம் ஆத்மாவிலேயே நிலை கொள்கின்றன. மரணம் உம்மை தீண்டாமலிருக்கும் பொருட்டு. இவ்வாத்மாவை "அறிவீர்களாக" என்றெல் லாம் விளக்கினார் பிப்பலாதர்.

பிறகு அம்முனிவர் மேலும் சொன்னார் "இப்பரம் பிரமத்தை நான் இவ்வாறே உணர்ந்தேன். இதற்குமேல் அறிய வேண்டியது ஒன்றுமில்லை."

நான் பிரம்மத்தை அறிவது இம்மட்டே. இதனினும் உயர்ந்தது ஒன்றுமில்லை எனச்சீ டர்களிடம் கூறினார்.

அவரைப் பூஜித்து இவர்கள் கூறுவர் "எங்களை அவித்தைக்கு அப்பாலுள்ள கரையில் ஏற்றிவிட்டதால், தாங்களே எங்கள் பிதாவாவீர் பரம ரிஷிகளுக்கு நமஸ்கா ரம்; பரமரிஷிகளுக்கும் நமஸ்காரம் "என்று எழுந்தனர்.

'எங்களை அறியாமையினின்று காப்பற்றி, நாங்கள் பிறவிப் பெருங்கடல் நீந்திக் கரைசேர உதவிய தாங்கள் உண்மையில் எம் தந்தையாவீர்' என்று போற்றினார்கள்.

முனிவர்கள் அடிதமையே
    முடிமேல் தாங்கியதான்
முனிவரைத் தொழுவோம் நாம் - உன்னத
    முனிவரை வழிபடுவோம்.
முனிவர்கள் அடிதமையே
    முடிமேல் தாங்கியதாள்
முனிவரைத் தொழுவோம் நாம் - உன்னத
    முனிவரை வழிபடுவோம்.

ஓம்! தேவர்கள்! காதுகளால் நாங்கள் நல்லதையே கேட்கவேண்டும்...!

ஓம்! முவ்கையிலும் சாந்தி நிலவுக!

மக்கள் உற்பத்தியானது எப்படி?

பிரஜாபதி, பிராணன் ரயி (Life & Matter) எனும் இரட்டையை சிருஷ்டித்தார். அவையின் கூட்டுறவால் மக்கள் உற்பத்தியாயினார்.

இம்மக்களை ஆதரிப்பவர் எத்தனை தேவதைகள்? முக்கிய தேவதை எது?

வான், காற்று, தீ, நீர், மண், இன்னும் வாய், மனம், கண் காது எனும் இவையே அச்சக்திகள் தேவதைகள். இவைகளுக்கு பிராணனே முக்கியமான தேவதை. அதுவே தன்னை ஐந்து பாகமாகப் பிரித்துக்கொண்டு அனைத்தையும் இயக்குவிக்கிறது. சக்கரத்தின் குடத்தின் ஆரங்களைப்போல இவ்வுலகமனைத்தும் இம்முக்கியபிராணனிடத்தின் பொருத்தப்பட்டுள்ளது.

பிராணன் எப்படி உண்டாகிறது? உடலுள் அது வியாபிப்பதும் பிரிவதும் எப்படி? புறத்தே உள்ள பிரபஞ்சத்தையும், அகத்தே உள்ள உலகையும். உடலின் மற்றைய வாழும் சக்தியையும் எவ்வண்ணம் இயக்குகின்றது?

ஆத்மாவிலிருந்து உண்டாகும் பிராணன் அதன் நிழல் போன்றதே! மனதின் செய்கையால் அது உடலுள் புகுகின்றது. ஐந்தாகப் பிரிந்து ஆளுகின்றது. உடலினின்று பிரிவு, உதானனால் தான் ஒரு பிரிவால் ஏற்படுகிறது.

சூரியனே வெளியிலுள்ள பிராணன். வானை இயக்குவிப்பது அதன் பிரிவான அபானன். அண்டவெளியை இயக்குவிப்பது அதன் பிரிவான சமானன்; காற்றே வியானன் ஒளியே உதானன்.

மனிதனிடம் எந்த தேவதைகள் தூங்குகின்றன? விழித்திருப்பன எவை? கனவுகளைக் காணும் தேவதை

கள் எவை? சுகத்தைக் கொடுப்பது எது? எல்லாம் நிலைபெறுவது எதிலே?.

(இங்கு வரும் தேவதைகளை, ஏதோ உருபெற்றவையாக எண்ண வேண்டாம், அத்தனையும் சக்திகளாகும்)

உறங்கும் பொழுது இந்திரியங்கள் மனதாகிற பரதேவதையிடம் ஒடுங்குகின்றன. பிராணனின் ஐந்து பிரிவுகளும் விழித்துள்ளன. மனதாகிற சக்தி, கனவில் அனைத்தும் தானேயாகி காண்கிறது. எப்போது அது கனவே காண்பதில்லையோ அப்போது ஏற்படுவதே சுகம். அனைத்தும் ஆத்மாவிடமே நிலை பெறுகின்றன.

'ஓம்'கார உபாசனையின் பயன் என்ன?

அதன் மூன்று மாத்திரைகளையும் ஒலிகளையும் தனித்தனியே உபாசித்து வந்தால் கிடைப்பது பிரம்மலோகந்தான். மூன்றையும் ஒன்று சேர்த்து உபாசித்து வந்தால் கிடைப்பது நிர்வாணம் முக்தியாகும்.

பதினாறு கலைகளுள்ள மனிதன் யார்?

இவ்வுடலில் உறைபவன்தான் பதினாறு கலைகளுள்ள புருஷனாவான். ஆறுகள் எவ்வண்ணம் கடலையடைந்து தம் நாம ரூபத்தையிழந்து கடலாகவே ஆகின்றதோ, அதேபோல் அப்பதினாறு கலைகளும் பரமாத்மாவிடம் பிரம்மத்திடம்-ஒடுங்கி இரண்டறக்கலந்து அப்பிரம்மமாகவே ஆகிவிடுகின்றன.

இதற்குமேல் அறிய வேண்டியது என்ன இருக்கின்றது? ஒன்றுமில்லை.

# வஜ்ரசூசிக உபநிஷதம்

பிரம்ம ஞானம் விளங்கப்பெறாதவரை இடிப்பதும், அறியாமையைத் தகர்ப்பதும், அறிவுக்கண் படைத்திருப் போரை மேலும் உயர்த்துவதுதான் வஜ்ரசூசிகையின் கொள்கையாகும்.

அந்தணன், க்ஷத்திரியன் போன்ற நான்கு வகுப்பு கள் பிரிவுகள்- வேதங்களின்படியும் நீதி நூல்கள் ஒப்புக் கொண்டபடியும் நடைமுறையில் உள்ளன. இப்பிரிவுக்குள் அந்தணனை முதலில் சொல்லப்பட்டுள்ளது.

இது குறித்து ஆயத்தகுந்த பொருள் ஒன்று உண்டு. உண்மையில் யார் அந்தணன். அவன் ஜீவனா? உடலா? அவன், பிறப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு வகுப்பா? அறிவால் அல்லது தொழிலால் ஒருவன் அந்த ணனா! சமயக் கிரியைகள் செய்வதால் அந்தணனா?

இவற்றுள் ஜீவன்தான் அந்தணன் என்றால் அது தவறாகும். அநேக முந்தைய உடல்களில் ஜீவவடிவம் ஒன் றெனினும், முந்தைய கர்மாக்களால் உந்தப் பட்டு, அநேக உடல்கள் எடுக்கும் நிலை அதற்கு உண்டல்லவா!

இவ்வுடல்களனைத்திலும் ஜீவபாகம் ஒன்றே, அதனால் ஜீவன் அந்தணன் ஆகாது.

பிறகு உடல்தான் அந்தணன் என்றால் அதுவும் தவறே! மானிட வகுப்புக்கள் அனைத்துள்ளும், ஐம்பூதங்க ளால் ஆன உடலியல்பின் ஒருமையாகும். மற்றும் குணம், குற்றம் முதுமை- மரணம் எனும் பொது நிலைகளாலும், இன்னும் இவைபோன்ற மற்ற பொதுமைகளாலும் உடல் அந்தணன் இல்லை என்றாகிறது.

பிறப்பால் அந்தணனாகின்றான் என்றால் அதுவும் தவறே! அநேக முனிவர்கள் வெவ்வேறு வகையான மூலம் உடையவராயுள்ளனரே!

மானிட இனமன்றி, வேறு அநேக உயிரினங்களையும் மூலமாய்க் கொண்டுள்ளனரே!

ஒரு மானிடமிருந்து பிறந்தவர் ரிஷ்யசிருங்கர்.

குசப் புல்லிருந்து கௌசிகர் தோன்றியுள்ளார்.

ஒரு நரியிலிருந்து ஜாம்புகரும், ஓர் எறும்புப் புற்றிலிருந்து வால்மீகியும், ஒரு மீனவப் பெண்ணினின்று வியாசரும் தோன்றியுள்ளனர்.

ஒரு முயலின் முதுகிலிருந்து கௌதமரும் ஊர்வசியினின்று வசிஷ்டரும், ஒரு மண் ஜாடியினின்று அகஸ்தியரும் தோன்றினர்.

புனித நூல்கள் இவ்வாறுதான் சொல்கின்றன. இவ்வாறு பிறந்தவரே எனினும் இவர்கள் சிறந்த அறிவொளி வீசித் திகழ்ந்தவர்கள். மிகவும் உயர்ந்த பதவி பெற்ற ஞானியர் ஆவர். ஆகவே பிறப்பு ஒருவனை அந்தணனாக ஆக்குவதில்லை என்பது உறுதியாகிறதல்லவா!

அறிவால் ஒருவன் அந்தணன் ஆகிறான் என்றால் அதுவும் சரியன்று. ஏனெனில் அந்தணன் தவிர மற்றப் பிரிவினருள்ளும் உள்ள உண்மையை, பரம்பொருளைக் கண்டவரும், அறிவொளி பெற்று வாழ்வோடும் பலருளர். அதனால் அறிவு ஒருவனை அந்தணனாக்குவதில்லை.

தொழில் ஒருவனை அந்தணனாக்குகிறது என்றால் அதுவும் தவறேயாகும். எப்படியெனின், கடந்த பிறவியில் சேர்ந்திருந்த பணிகளும், இப்பிறவியில் செய்யத் தொடங்கிய பணியும், இனிவரவிருக்கும் பிறவியில் தொடங்க இருக்கின்ற பணிகளும், உயிர்களனைத்திற்கும் பொதுவாகவே உள்ளன.

சென்ற பிறவிக'கர்மா'வால் உந்தப்பட்ட, நன்மக்கள் நற் செயல் புரிகின்றனர். ஆகவே செயல் ஒருவனை அந்தணன் ஆக்குவதில்லை.

சமயக்கடன்கள் செய்வதால் அவன் அந்தணன் ஆகிறான் என்றால் அதுவும் சரியன்று. சமயக்கடனில் பொன்னைவாரிக் கொடுப்பவர் அந்தணன் தவிர – மற்ற வரும் உண்டு. ஆகவே சமயக்கடன்கள் புரிவோன், அந்த ணன் ஆகான்.

இத்தனை வகையிலும் – அந்தணன் ஆகான் என்றால் உண்மையில் அந்தணன் யார்?

ஆத்மாவை– உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தானே அறிந்தவன் அந்தணன்.

பிறப்பு, இயல்பு செயல் எனும் வேற்றுமைகள் அற்ற வன் அந்தணன்.

ஆறுநிலை, ஆறு பலவீனங்கள் என்பன போன்ற குறைகள் ஏதும் இல்லாதவ்ன் அந்தணன்.

அறிவொளி, மகிழ்ச்சி, அழிவின்மை எனும் இவற் றின் வடிவமாயிருந்து, எண்ணிலாத் தீர்மானங்களுக்கு அடிப்படையாய் அமைய, எவன் எல்லா உயிருள்ளும் கோயில் கொண்டு விழுப் பொருளாய்ச் செயல் படுகின் றானோ அவன் அந்தணன்.

பகுக்க வொண்ணாத அளப்பரியநிலை, மகிழ்ச்சி யல்பு, ஒருவன் தன் சொந்த அனுபவத்தால் மட்டுமே உணர முடிவது. இத்தன்மைத்தாய், எவன் வான் வெளிபோல் அனைத்தின் உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்திருக்கிறானோ அவன் அந்தணன்.

எவன் தன்னை நேராய்– தன் ஆத்மாவாய் வெளிப் படுத்துபவனோ, தனது இயல்பின் நிறைவேற்றத்தின் மூலம், ஆசை, பந்தம் எனும் இவை போல்வனவற்றின் குற்றங்கள் நீங்கக்கண்டவனோ அவன் அந்தணன்.

அமைதியின் குணங்கள் முதலானவை உருவானவ னாய், ஆசை முதலிய கொடுநிலைகள் ஐந்தும் களைந்தவ னாய், வீண்பகட்டு 'நான் எனது' என்பது அற்ற மனத்தினனாய் வாழ்வோன் எவனோ அவனே அந்த

ணன். இக்குணங்கள்--இம்மேலான குணங்கள் உள்ள வனே அந்தணன்.

அந்தணர் என்போர் அறவோர். இதுவே வேதமுடிவும், மரபும், தொன்மையறிவும், வரலாறுமாகும்.

அவ்வாறின்றேல், அந்தணத்துவம் அல்லது அறம் எய்துதல் இயலாது.

தானே தானாய், ஒப்பிலானாய், சத்-சித்- ஆனந்தமாய் உள்ள பரம் பொருளை, பிரம்மத்தைத் தியானியுங்கள்.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

அந்தக்காலத்தில் அவரவர் புரிந்துவந்த கர்மாக்களைக் கொள்டே அந்தணன் முதலான நான்கு பிரிவுகளைப் பிரித்துள்ளனர்.

ஆனால் அவர்களுள் உயர்வு தாழ்வு என்று சொல்லப் படவில்லை. தொழில் என்ற முறையில் ஒவ்வொரு தொழிலும் சமமே!

தெருவைக் கூட்டிச் சுத்தம் செய்கிறான் ஒருவன். வரும் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு சொல்கிறார் நீதிபதி. தொழில் என்ற அளவில் இருவர் புரியும் தொழிலும் ஒன்றேதான்.

ஒருவனுக்கு நான்கு மக்கள் பிறந்தனர். ஒருவன் பிரம்மவிசாரணையில் ஆழ்ந்து போனான். ஒருவன் வீர தீரபாராக்கிரமசாலியானான். ஒருவன் வணிகம் செய்து பொருளீட்டினான். ஒருவன் அவரவருக்குத் தொண்டு செய்து வந்தான். இவர்களுள் யார் உயர்வு? யார் தாழ்வு? எப்படி ஏற்படும்? தொழிலில் பிரிவு இருக்கலாமேயொழிய அந்நால்வரும் ஒரே மரபைச்சார்ந்தவர்தாமே!

அந்தணன் என்பவன் யார் என்பதை உபநிஷதம் தெளிவாய் விளக்கியிருக்கும் இந்நிலையில் தற்காலத்தில் யார்தான் தன்னை பிராமணன் என்று சொல்லிக் கொள்ள இயலும்!

தற்காலத்திய ஓர் அந்தணப் பெண்ணுக்கும். ஓர் அந்தணனுக்கும் பிறப்பதனால் மாத்திரம் ஒருவன் பிராமணனாக ஆக மாட்டான். அவனை பிராமணபந்து என்று அழைக்கவேண்டும் என்று நீதி நூல் விளக்குகிறது.

அவன் பிராமணத்துவநிலையில் - உபநிஷதம் சொல்லியபடி நின்றால் அவன் பிராமணனாவன். இக் கலியுகத்தில் அப்படி நிற்க முடிவதில்லையே!

அந்த பிராமணத்துவநிலையில் நின்றால் என் வயிற்றுக்கு யார் பதில் சொல்வது? என்று கேட்கலாம், ஆனால் வேதகாலத்தில் அப்படி யாரும் கேட்டாரில்லை. அவர்களுக்கு இறைவன் மீது அத்துணை நம்பிக்கை!

இப்பொழுதும் அதே பிராமணத்துவநிலையில் நின்றால் வயிற்றுப் பிரச்சனைக்கான வழி அவசியம் ஏற்படவே செய்யும். ஆனால் அந்த தளராத நம்பிக்கை இருக்கவேண்டுமே!

வம்ச விருத்திக்காக மட்டுமே மனைவியுடன் சேரும் அந்தணனுக்கு அவசியம் அளவோடு பெற்றுவளமோடு வாழும் நிலையே ஏற்படும். கலகலெண புதல்வர்களைப் பெறுவீர், காப்பாற்றும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர் என்ற நிலை ஏற்படப் போவதில்லை. சிறுகுடும்பம் சீரான வாழ்வு, பிரம்மவிசாரணையினால் எதையும் தாங்கும் இதயம், பற்றற்ற நிலை. இக்குடும்பத்திற்கான செலவுக்கு இறைவனே மற்றவர் மூலம் அவசியம் ஏற்பாடுசெய்வான்; ஆனால் நம்பிக்கை வேண்டும்.

இந்த நிலையில் அவரவர் உயர்ந்தவர் என்றும் தாழ்ந்தவர் என்றும் கற்பித்துக் கொண்டு அல்லலுறுகிறார்கள்.

இந்த நிலையை தற்காலத்திய அந்தணரும் சரி அந்தணரல்லாதாரும் சரி அறிந்து கொண்டு ஒப்புறவாய் நடந்து வருதலே சாலச் சிறந்தது

"பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே" எனப் பாரதியாரும் பாடியுள்ளாரே!

மற்றும் அந்தக் காலத்தில் வேதகாலத்தில் ஏற்பட்ட இத் தொழில் பிரிவு இந்தக் கலிகாலத்தில் ஒத்து வருவதற்கும் இல்லை. அவரவருக்கு ஏற்பட்ட தர்மம் பிறண்டு போய் கிடக்கும் காலம் இது!

தொன்மையறிவும் மரபும், வரலாறும் இன்றேல் பிராமணத்துவம் அல்லது பிராமணநிலை எய்துதல் இயலாது.

பிரம்மத்தைத் தியானியுங்கள். ஒப்பு இல்லாதவனாய் தானே தானாய் சச்சித் ஆனந்தமாய் உள்ள பரம் பொருளைத் தியானியுங்கள்.

"பாகத்தினால் கவிதைபாடிப்படிக்கவோ
பக்திநெறி இல்லை, வேத
பாராயணப் பனுபல் மூவல் செய்பனுவலது
பகரவோ இசையும் இல்லை,
யோகத்திலே சிறிது முயல என்றால் தேகம்
ஒவ்வாது; இவ்ஊண் வெறுத்தால்
உயிர் வேறுத்திடம் ஒக்கும், அல்லது கிரியைகள்
உபயத்தினால் செய்யவோ
மோகத்திலே சிறிதும் ஒழியஇலை;மெய்ஞ்ஞான
மோனத்தில் நிற்க என்றால்
முற்றாது பரிபாக சக்திகள் அனேகம் நின்
மூதறிவிலே எழுந்த
தாகத்திலே வாய்க்கும் அமிர்தப்ர வாதமே!
தன்னந் தனிப் பெருமையே!
சர்வ பரி பூரண அகண்டத்துவம் ஆன
சச்சிதா னந்த சிவமே!"

எனும் தாயுமானவர் பாடல் இங்கு கருதற்பாலதாகும்.

# பைங்கல உபநிஷதம்

தண்ணீரை தண்ணீரோடும் பாலை பாலோடும், நெய்யை நெய்யோடும் ஒன்று சேர்க்கும் பொழுது அவை வேறுபாடு எதுவுமின்றி இரண்டற அழகாக கலந்து போகின்றன.

அவ்வண்ணமேதான் ஜீவாத்மனும் பரமாத்மனும் ஈரறக் கலக்கின்றன.

ஆத்மா வான் வெளிபோல் ஒரு நுண்ணுடல் கொண்டுள்ளது. ஜீவராசிகள் அனைத்திலும் உள்ளார்ந்த நிலையில் கோயில் கொண்டுள்ள அந்த ஆத்மா காற்றைப் போல் கண்ணால் பார்க்கத் தெரிவதில்லை.

அது உள்ளும் புறமும் இயக்கம் அற்றது. ஜீவராசிகள் அனைத்தினுள்ளும் குடி கொண்டிருக்கும் அவ்வுறுபொருள், அறிவொளி கொண்டே உணர்கின்றது.

எப்படியும் உறுதியாகப் பலன் அடையவேண்டும் என்று ஒருவன் ஓராயிரம் ஆண்டுகள் ஒற்றைக்காலில் நின்று தவம் செய்யலாம்.

அப்படியெல்லாம் துன்பப்பட்டு செய்யும் தவம், ஒரு முகப்படுத்திய ஆழ்ந்த தியானத்தின் பதினாறில் ஒருபங்கிற்குக் கூட- வீசம் அளவுக்குக் கூடத்தகுதியுறுவதில்லை.

அறிவின் மேம்பாடுகள் அனைத்தும் பற்றி இன்னும் அறிய வேண்டியவை எவ்வளவோ அவ்வளவையும் அறிந்து கொள்ள ஆசைப்படலாம்.

ஆனாலும்-இந்நோக்கத்துடன் அவன் ஓராயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும், வேதங்களின் – புனித நூல்களின்– முடிவை அவன் ஒரு நாளும் எய்துவதில்லை.

தன் வாழ்க்கை அநித்தியம் என்ற நிலையில் ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டியது, நுட்பமான அழி வில்லாத உன்னதப் பெருவாழ்வே!

ஆகவே, முடிவில்லாத பல புனித நூல்களின் தொகு திகளில் மனதைப் பதியவைப்பதை விட்டு, சத்தியத்தை- உண்மையை- தியானிப்பானாக!

முடிவில்லாத மதச்சடங்குகளும், தூய்மையைக் காக்கும் விரதங்களும், பிரார்த்தணைகளும், வேள்விகளும் புனித தீர்த்த யாத்திரைகளும் செய்து தேடுவது சத்தியத் தின் அறிவொளி எய்தாத வரையிலுந்தான்.

'என்னுடையது ' எனும் எண்ணத்தால் ஆத்மா கட் டுண்டு இருக்கிறது..அந்த 'எனது' எனற எண்ணம் இல்லா மையால் ஆத்மா விடுதலையடைகின்றது.

மனம், பெரும் நிலைக்கு- ஒளியுடன் - உயரும் போது, அது ஒரு போதும் ' இருமை உணர்வு'எய்துவதே இல்லை.

தேடிச் செல்வோன் எப்பொழுது ஒளிர்கின்ற உயர் நிலையை அடைகின்றானோ அப்பொழுது அவன் உன் னதப் பெருநிலையை எய்துகின்றான்.

அந்நிலையில் அவன் மனம் எங்கு சென்றாலும், அங்கு உன்னதமான ஒளி பொருந்திய பெரு நிலையே மிளிர்ந்து இலங்கும்.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

ஒரே இனத்தைக் சேர்ந்த பொருள் ஒன்றோ டொன்று கலக்கும் பொழுது வேறுபாடு எப்படித் தெரி யாதோ, அவ்வண்ணமே பரமாத்மாவுடன் ஜீவாத்மா இரண்டறக் கலந்துவிடும்.

ஜீவராசிகளனைத்திலும் அந்தராத்மா உள்ளார்ந்த நிலையில் கோயில் கொண்டுள்ளது. அறிவுவிளக்குக் கொண்டே அதை உணரலாம்.

நீண்டநாள் கடுமையாக உடலை வறுத்திசெய்யப் படும் தவம் எல்லாம் கூட, ஒருமுகப்படுத்திய ஆழ்ந்த தியானத்திற்கு உறை போடக் காணாது.

அனைத்தையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற முடிவில் ஓராயிரம் ஆண்டு வாழ்ந்தாலும் புனித நூல்களின் முடிவை அவன் அடைய முடியாது. அநித்திய வாழ்க்கையை மனதில் கொண்டு புனித நூல் விசாரணையில் இறங்காமல். சத்தியத்தைத் தியானிப்பானாக!

சத்தியத்தின் அறிவொளி எய்தாதவரைதான் மதச் சடங்களும், விரதங்களும், பிரார்த்தனைகளும் தேவைப் படும்.

'நான் எனது 'எனும் எண்ணத்தால் ஆத்மா கட்டுண்டிருக்கிறது. மனம் அந்த எண்ணத்தைத் தாண்டி பெருநிலை எய்தும் போது, அது அந்த 'இருமை உணர்வை' எய்துவதே இல்லை.

தேடிச் செல்வோன்– விசாரணை செய்வான் எப்போது ஒளி நிறை உயர் நிலையை அடைகின்றானோ அப்போதே அவன் உன்னதப் பெருநிலையை எய்துவனாகின்றான். அங்கேயே சஞ்சரிக்கின்றான்.

இந்த உபநிடதம் யஜுர் வேதத்தைச் சார்ந்த ஒளிக் கீற்றாகும்.

அறியவேண்டிய அனைத்தையும். புத்திவிசாலத் தால்– ஒருவன் அறிய அவாவுறலாம்.

ஆனாலும் அவன் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்தாலும் புனித நூல்களின் முடிவை அவன் ஒரு நாளும் அறிவதில்லை.

மனிதன் அறியவேண்டியது அழிவில்லாப் பெரு வாழ்வே.

ஆகவே அவன் புனித நூல்களின் தொகுதியை விடுத்து– உண்மையைத் தியானிப்பானாக.

'நான், எனது' எனும் எண்ணத்தால் ஆத்மா கட்டுண்டிருக்கிறது.

'நான் என நிற்கும் ஞானம்
ஞானம் அன்று, அந்த ஞானம்
மோனமாய் இருக்க ஒட்டா
மோனம் அன்று';ஆகவே தான்
தேன் என ருசிக்கும் அன்பால்
சிந்தை நைந்து உருகும் வண்ணம்
வான் என நிறைந்தான் அந்த
மாகடல் வளைவது இன்றே!

எனத் தாயுமானாரும் பாடியுள்ளாரே!

மனம் ஒளிபெறும் நிலைக்கு உயரும் போது அது ஒரு போதும் இருமை உணர்வெய்துவதில்லை.

தேடுவோன் எப்போது ஒளி நிறைஉயர் நிலையை எய்துகிறானோ அப்போது அவன் உன்னதப் பெருநிலையை எய்துகின்றான்.

அப்பொழுது அவன் மனம் எங்குச்செல்லினும் அங்கு உன்னதப் பெருநிலையே மிளிர்ந்திலங்கும்.

"அட்டாங்க யோகமும் ஆதாரம்
ஆறும் அவத்தை ஐந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே
வியப் பொன்று கண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூறல்
உண்டு மகிழ்ந்திருக்க்
எட்டாத பேரின்பம் என்னை
விழுங்கியிருக்கின்றதே!

என்கிறார் பட்டினத்தார்.

ஓம்! முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

# அதர்வசிகோபநிஷதம்

ஓம்! பிறகு அதர்வண முனிவரை நோக்கி, பிப்பலாதர் சந்ததியாரான ஆங்கீரசரும், சனத்குமாரரும் வினவினர்.

ஓ! பிரபுவே! தியானம் என்பது என்ன? தியானிப்பதற்கு முதல் பிரயத்தனம் யாது? அத்தியானம் எது? தியானிப்பவர் யார்? யாரை தியானிப்பது?.

அவர்கட்கு அதர்வண முனிவர் விடை பகருகின்றார்.

ஓம் என்னும் அட்சரமே முதலாக தியானிப்பதற்கு எதுவாகியது.

இவ்வட்சரமே பரபிரம்மம். இவ்வட்சரத்தின் நான்கு பாகங்களின்றும் நான்கு வேதங்களும் உண்டாகின. ஆகவே அவ்வட்சரம் நான்கு பாகங்களை உள் அடக்கிக் கொண்டுள்ளது, இதுவே பிரம்மம்.

இதன் முதன் மாத்திரை பூலோகத்தைக் குறிக்கின்றது. அகரமானது இருக்குவேதத்தின் மந்திரங்கள்– பிரம்மா, அஷ்டவசுக்கள், காய்த்ரீ, சந்தம், காருபத்தியம்.

இரண்டாவது மாத்திரை புவர்லோகத்தைக் குறிக்கிறது. உகரமானது யஜுர்வேத மந்திரம்– விஷ்ணு, ஏகதேச ருத்ரர், திருஷ்டி சந்தம், தட்சணாக்னி.

மூன்றாவது மாத்திரை சுவர் லோகத்தைக் குறிக்கின்றது. மகாரம் சாம வேதத்தின் மந்தரம் உருத்திரன், பன்னிரு ஆதித்யர், ஜகதீ சந்தம், ஆகவனீயம்.

பிரணவத்தின் அந்தமாகிய நான்காவது (ஆதத மாத்திரை சர்வனாகிய சிவபெருமானென்பது கோபத பிராமணத்தினும் காண்க) அர்த்தமாத்திரை சோம

லோகத்தைக் குறிக்கிறது,– அதர்வமந்திரம், சம்வர்த்தகம், சப்த மருத்துக்கள், விராட் ஏகருஷி)– (ஏகருஷி சிவபெருமானே என்பது சுவேதா சுவதரமில் காண்க)

இவைகள் ஜோதி சொரூபம் எனச் சொல்லப்படுகின்றது.

முதலாவது சிவப்பும் சிறிது மஞ்சளும் கலந்த நிறம் இது பிரதம பிரம்மதேவனைக் குறிக்கிறது.

இரண்டாவது மின்னல் கலந்த நீலநிறமுடையது, இது விஷ்ணு தேவனைக் குறிக்கின்றது.

மூன்றாவது மங்களமும் மற்ற நிறமும் கலந்த வெண்மை நிறம். இது உருத்திர தேவனைக் குறிக்கின்றது.

கடைசியாக உள்ள நான்காவதான அர்த்த மாத்திரை எல்லாப் பிரகாசமும் கலந்த நிறம். இது புருஷோத்தமனைக் குறிக்கின்றது. (புருஷோத்தம சப்தம் சிவ பெருமானையே குறிக்கும் என்பது தைத்தரீயம் ஆரணியகம் மூலம் அறியலாம்)

இவ்வண்ணம் ஓங்காரமானது நான்கு அட்சரங்களாய், நான்கு பாதங்களாய், நான்கு சிரங்களாய், நான்கு மாத்திரைகளாய், இருந்தாலும்–ஸ்தூலமாய் ஒன்று, இரண்டு, மூன்று மாத்திரை உச்ச ரிப்பாகவே உள்ளது.

'ஓம், ஓம் ஓம்' என ஒவ்வொன்றினையும் ஒன்று, இரண்டு மூன்று மாத்திரைகளாக முறையே உச்சரிக்க வேண்டியதாகும்.

நான்காவது பரமசாந்தமான ஆத்மா – இங்கு ஆத்மா வென்பது பரமாத்மாவையே குறிக்கும்.

பிரணவத்தினை மூன்றாவது மாத்திரையால் உச்சரிக்கின் உடனே ஆன்ம விளக்கத்திற்குச் செலுத்துகிறது.

ஒருதரம் உச்சரித்தலினாலேயே மேனோக்கச் செய்யும் ஓங்காரம் எனப் பெயர் பெற்றது. எல்லா பிராணிகளையும் இது லயப்படுத்தலால், பிரளயம் எனச் சொல்லப் படுகிறது.

எல்லாப் பிராணிகளையும் பரமாத்மாவினிடத்துச் செலுத்துகையில் பிரணவம் எனச் சொல்லப்படுகிறது.

எல்லாத் தேவர்கட்கும் வேதங்கட்கும் உற்பத்திஸ்தானமானதினால் இது நான்காக வகுக்கப்பட்டுள்ளது.

பிரணவமானது எல்லாத் தேவர்களுடன் எல்லாவற்றையும் தீர்மானமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது எனத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சர்வ பயங்களையும், சர்வ துன்பங்களையும் கடக்கச் செய்வதால் இது தாரம் (கடத்தல்) என்றாகியது.

எல்லாத் தேவரும் வியாப்பியமாதலால் விஷ்ணு என்றாகியது.

எல்லாவற்றையும் விச்ரிம்பிக்கச் செய்தலால் இதுவே பிரம்மமாகும்!

தேகத்தின் உள்ளே தியானிக்கப்படும் எல்லாவற்றிற்கும் தீபம் போலப்பிரகாசித்தலால் காந்தி எனச் சொல்லப்படுகிறது.

உண்மையான பிரணவமானது சர்வபிரகாசத்தினும் மிகுந்த பிராகாசமாய்த் தேகத்தினிடத்தே அடிக்கடி பிரகாசிக்கிறது. அது மின்னலைப் போல எப்பக்கத்தும் எவற்றினும் ஊடுருவிப்பாய்கிறது. அது அனைத்து லோகங்களிலும் பரவியிருக்கிறது. அது எல்லாவற்றையும் சூழ்ந்திருத்தலால் சர்வ வியாபகனான மகாதேவனேயாகும்.

பிரணவத்தின் முதன் மாத்திரை சாக்கிரம். இரண்டாவ்து மாத்திரை சொப்பனம். மூன்றாவது மாத்திரை சுழுப்தி. நான்காவது மாத்திரை துரியம் இதேகருத்தை பரம் பிரமேபநிஷத்தும் காண்க.

எல்லாப் பாகங்களிலும் அடங்கிய மாத்திரைகளை கடத்தலாகிய இயற்கை விளக்க முடையான்- பிரமமே ஆவான். இம்மந்திரம் பூர்ண விளக்கத்தை விளக்குதலால் தியானத்திற்கு முதல் சோபனமாக இருக்கிறது.

கரணத் தொழில்களை விடுதலுக்கும் வேண்டு வென எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருத்தலால், பிரம்மம் நான்காவது பொருளாயிருக்கிறது.

இந்நிலைமையான தியானம் விஷ்ணுவென்று அழைக்கப்படுகின்றது. அதில் மனதின் எல்லாக் கரணங்க ளும் அடங்கியுள்ளது.

தியேயனாவான் உருத்திரன், மனத்தின் கரணங்களு டன் பிராணனைக் காக்கின்றான்.

பிராணனையும், மனத்தோடு கரணங்களையும் நிலைநிறுத்தி நாதாந்தத்தின் முடிவிலிருக்கிற ஈசான னொருவனே தியானிக்கத்தக்கவன்.

பிரமன், விஷ்ணு, உருத்திரன் இந்திரன் யாவரும் படைக்கப்படுகின்றனர். இந்திரியங்கள் எல்லாம் பூதங்களு டனே படைக்கப்படுகின்றன. ஆதலால் அவர்களும் அவை களும் காரணமில்லை.

தியாதாவாகிய அவர்களாலே தியானிக்கப்படுகிற தியேயன் எனும் சருவைச் சுவரிய சம்பன்னனும் சர்வேஸ் வரனும் சம்பு சப்தவாச் சியார்த்தனும் பரமாகாசத்தின் மத்தியில் இருப்பவனுமான சிவனே காரணன்.

ஒரு நிமிஷத் தியானத்தால் நூற்றியெழுபத்து நான்கு யாகத்தின் பலனும், ஓம்காரத்தின் முழுபலனும் சித்திக்கும்

"ஈசன் ஈசன்என் றென்றும் அரற்றுவன்
ஈசன் தான்என் மனத்திற் பிரிவிலன்
ஈசன் தன்னையும் என் மனத்துங் கொண்டு
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே"

என்று திருமூலரும் அருளியுள்ளாரே!

சர்வ தியானங்கட்கும் யோகங்கட்கும் ஞானத்திற்கும் பலனையறிவார் ஓங்காரம் அல்லது மகத்தான ஈசானரே!

சிவபெருமான் ஒருவனே தியானிக்கத் தகுந்தவன். சிவனே எல்லா நன்மைகளையும் கொடுக்கத்தகுந்தவன். மற்றெல்லாவற்றையும் விடவேண்டும். இந்த அதர்வகி கோபநிஷதத்தின் கருத்தே எல்லா உபநிஷ்தங்களிலும் உள்ளது.

'சிவ' என்னும் பதம் இரண்டு விதமாகப் பொருள் படுத்தப்ப்டுகின்றது. 'ஹிம்ச' என்ற பதம் சிம்ம என்றாயினது போல், 'வசி என்ற பதம் 'சிவ என்று ஆயின தென்பார் ஆன்றோர்.

'வசி' என்பதன் பொருள் 'இச்சிப்பவர் என்பதாகி' தேவர் மனுஷர் முதலாகிய எல்லா உயிர்களுக்கும் இன்பம் கொடுக்க விரும்பி, அவையனைத்திற்கும் ஆகற்பாலன வாகிய உபகரணங்களை எக்காலமும் விருத்தி செய்கின்ற வர்" எனப் பொருள்படும்.

இன்றும் இம்மொழி சுபம், கல்யாணம், மங்களம் என்ற பொருளாகி யாவர்க்கும் சுபத்தைச் செய்கின்றவர் எனவும் போதரும்.

இவ்விரு பொருளாலும், யாவர்க்கும் என்றும் அவரவர்கள் சுகத்தை விரும்பி அவர்களுக்கு முடிவில் பரமசுகமாகிய மோட்ச இன்பத்தைக் கொடுப்பவர் என்பதாகும். என்றெல்லாம் வியாக்கியானம் செய்துள்ளோர் ஆன்றோர்.

இந்த உபநிஷத்தை ஆராயும் துவிஜன் முக்தியை அடைகிறான். மறுபடியும் கர்ப்ப வ்ாசம் கிடையாது. கர்ப்ப வாசமுறான்.

ஓம் முவ்வகையிலும் சாந்திநிலவுக!

# பஞ்சபிரம்மோபநிஷதம்

ஓம்! பிறகு அனாதிகாலமாக நிலையாக நிற்பது எது? எனப் பகவானை நோக்கிப் பிப்பிலாதா முனிவர் கேட்டார்.

சத்யோஜாதம், பகவானே அஃதென்ன? அகோரம், பகவானே அஃதென்ன? வாமதேவம், பகவானே அவை என்ன? தத்புருஷம் பகவானே இவையென்ன?.

எல்லா வித்தைட்கும் தேசிகனாகிய ஈசானமே!

அவர் பூத பவுஷியங்கட்கும் ஈசனாக இருக்கிறார்.

எல்லா இரகசியங்கட்கும், எல்லா தேவர்கட்கும், அவைகளின் அனைத்து வகையான நிறங்கட்கும், பாகுபடு கட்கும், முயற்சிகட்கும், பிரபுவாகிய மகேஸ்வரரே கதியா வார்!

மகா தேவருக்கும் மகாருத்திரருக்கும் நமஸ்காரம்.

ஓ சகலனே! உலகில் எவ்வகையான இரகசியங்கட் கும் இரகசியமானவற்றை என்னிடம் கேள்.

சத்யோஜாதம்– இது விரும்புகின்ற அனைத்தையும் கொடுக்கிறது. அது, பூமி, பூஷா (சூரியன்) இலட்சுமி, பிரம்மா, திரிவிருதஸ்வர சப்தம், இருக்கு வேதம் காருகபத் யம், ஏழு சுரமுள்ள மந்த்ரங்கள், பீதநிறம், கிரியாசக்தி இவைகளைக் குறிக்கிறது.

அகோரம். இது அனைத்து பாவங்களின் திரள்களை யும் அழிக்கிறது. இது துன்பங்களையெல்லாம் சாந்தப் படுத்துகிறது. எல்லாச் செல்வங்களையும் கொடுக்கிறது. இது தண்ணீர், சந்திரன் கௌரி, யஜுர்வேதம், மேகநிறம், சாந்தரேஸ்வரம், தட்சணாக்னி, ஐம்பது அசைகளுடன்

கூடிய மந்திரங்கள், இரட்சிப்பு, இச்சாசக்தி இவைகளைக் குறிக்கிறது.

வாமதேவம். இது பெருஞானத்தைக் கொடுக்கிறது. அக்னி, வித்யாகலை, சாமவேதம் எட்டு கானங்களையுடையசுரம், தீரஸ்வரம், ஆகவனீயம், அறிவு, விஞ்ஞானம், முயற்சி, இருள் கலந்த வெண்மை நிறம் இவைகளைக் குறிக்கிறது.

அவருடைய ஜோதி, கோடி சூரியர்களுக்குச் சமமாக உள்ளது. முழு சைதன்னியராய் மூவகை நிலைமைக்கும் தலைவராக இருக்கிறார்.

மனிதர்கட்கு எல்லா செய்கைகளின் பலன்களைத் தக்கவாறு கொடுக்கிறார். மூவகை சைதன்னியங்களாய் விளங்குகிறார்.

அவர்கட்கு எல்லா பாக்கியத்தையும் அளிக்கிறார். அவர் மந்திரம் எட்டசைகளுடன் கூடியது. இதயமாகிற எட்டிதழ் தாமரை மத்தியில் விளங்குகிறார்.

தத்புருஷம் அவர் காற்றினையும் பஞ்சாக்னியையும் உடையவராயிருக்கிறார். மந்திரங்களின் சக்திகளை நடத்துகிறார்.

அவர் ஐம்பது அட்சரங்களையும் அவற்றின் கரங்களையும் அதர்வவேதத்தையும் உடையவராயுள்ளார். கோடி ஞானங்கட்குத் தலைவராக இருக்கிறார். அவர் மேனி எல்லா உலகமாகும்.

அவரது நிறம் விரும்புகிற கோரிக்கைகளை முடிக்கும் சிகப்பு ஆகும். எல்லா வகையான நோய்கட்கும் சர்வ ரோக நிவாரணியாய் – மருந்தாக -- இருக்கிறார்

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் முதலியவைகட்கு காரணமாக இருக்கிறார். சர்வ சக்திமானாக உள்ளார்.

மூவகை சைதன்ய நிலைக்கு மேற்பட்டிருக்கிறார். அவர் நாலாவது சதுர்த்தம். சத்தாய், சைதன்யராய் கருணையாகவே இருக்கிறார்.

பிரமன் விஷ்ணு முதலியவர்களால் அவர் வணங்கப்படுகிறார்

அவரே அனைவருக்கும் பரமபிதா.

ஈசானம்- பரம அதிகாரி எனவும் எல்லா அறிவனுக்கும் சாட்சி எனவும் தெரிந்து கொள்ளவும்.

அவர், ஆகாயம், அவதரிப்பவரல்லர், ஓங்கார நாதத்தால் துதிக்கப்படுவர், சாந்தாதீதர்;

அகரத்திலேயும் இதரசுரங்களிலேயும் ஆதிக்கமுடைய தேவ மூர்த்தி, அவர் மேனி ஆகாயமே, பஞ்ச கிருத்தியங்கட்கும் காரணர் அவர்.

பஞ்சபிரமங்களின் பெரிய உருவத்திலுள்ள ஐந்து காரியங்கட்குக் காரணராக இருந்து அவற்றின் மேற்பட்டும் இருக்கிறார். அவரிடத்திலுள்ள மாயையால் எல்லா அவதாரங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு அவர் மாத்திரம் இருக்கிறார்.

பஞ்சபிரமங்களில் ஊடுருவிப் பாய்ந்த அவர் சொந்த ஜோதியால் எப்போதும் பிரகாசிக்கிறார். எவ்வித ஆதராமின்றி முக்காலத்திலும் அவரே விளங்குகிறார்.

மகா தேவராயும். உலக குருவாயும், காரணங்கட்கெல்லாம் காரணமாகவுள்ள சம்புவின் மாயையால் கலக்கமடைந்து எல்லாத் தேவர்களும் அவருண்மையைத் தெரிந்து கொள்வதில்லை.

"மனத்தகத்தான் தலைமேலானான் வாக்கினுள்ளான்
வாயாரத்தன்னடியே பாடுந்தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியானவன் என் கண்ணுள்ளானே!"

என்றெல்லாம் அனுபவித்துள்ளனர் ஆன்றோர்.

அவரது ஆகிருதி ஒருவர் முன்னில்லாது. உயர்வுக் கெல்லாம் உயர்வானவர். உலகத்திற்கும் புருஷனுக்கும் ஆதாரமாயிருக்கிறார். அவரிடத்திருந்தே உலகம் உண்டா கிறது. அவரிடத்திலே உலகம் ஒடுங்குகிறது. பிரமம், சாந்தர், அவர். பரமோட்சவீட்டினர். அந்தப் பிரம்மம் நானே!

சத்தியோஜதமும் மற்றவையும் மகா பஞ்ச பிரம மம் என அறியவும். இது ஒரு பிரமத்தின் பகுதிகள். ஒன்றே ஐந்தென தெரிந்து கொண்டவர் ஈசானத்தை அடைகிறார்.

பஞ்ச பிரமங்களில் உருவமாக இருக்கிற எல்லாவற்றிலும் நானே இருக்கிறேன் என்று அறிகிற அறிஞன் பிரமத்தையடைந்து நித்தியனா யிருக்கிறான். அவன் மனத்தினின்றும் விடுபடுகிறான். இதற்குச் சந்தேக மில்லை.

சம்பு, பஞ்சாட்சர சொரூபியாக இருக்கிறார் அவர் பரபிரம்மம். நகரமுதல் யகரம் ஈறாயுள்ளது பஞ்சாட்சரம் என தெரிந்து கொண்டு ஜெபிக்க வேண்டும்.

பஞ்ச பிரமங்களின் இயற்கை பஞ்சாட்சரம் என ஒருவன் உலகத்தை அனுபவிக்க வேண்டும்.

பக்தியுடன் பஞ்ச பிரமத்தை தியானிக்கிறவன், பஞ் சபிரம நிலையையடைந்து பஞ்சபிரமமாகவே விளங்குகி றான்.

இவ்வண்ணம் மகாதேவர் மகானாகிய காலவ னைப் பிரார்த்தித்துக் கூறி அவனை ஆசீர்வதித்து மறைந் தனர்.

ஓ! சகலா! முன்பு கேட்கப்படாததும், நினைக்கப்படா ததும் தெரிந்தன.

ஓ! கவுதமா! பூமியின் ஒரு பாகத்தை மாத்திரம் அறி வதனாலேயே, அது காரியம் காரணத்திற்கு அன்னிய மல்ல.

ஒரு உலோகத்தாலாகிய ஆபரணத்தைப் பார்த் ததனாலேயே, மற்றைய உலோகங்களால் ஆக்கப்பட்ட

ஆபரணங்கள் காரியம் எனத் தெரிகிறது. ஒரு இரும்பி னால் செய்யப்பட்ட மற்றைய கருவிகள் காரியம் எனத் தெரிகிறது. ஆதலின் காரணத்திலிருந்து அதன் சுபாவம் வேறாயிருத்தலினாலாகும்.

அவ்வாறே காரணம் காரியத்தினின்று வேறு அல்ல, காரியமானது அதன் காரணரூபத்தில் எப்போதும் நிலைபேறுடையதாகிறது. காரணகாரியம் வேறு என்பது உண்மையாகவே தவறாகும்.

காரணமொன்றே, அதனின்றும், அவன் வேறானவ னுமல்ல, காரண காரியங்கட்கு உட்பட்டவனுமல்ல, வேற் றுமையுடைய காரணத்தைக் கண்டுபிடிப்பது கூடாமையாலே வேறு என்பது தவறு.

ஆகையினால் காரணம் ஒன்றே, அது நித்தியம், இரண்டாவதில்லை. இரண்டாவதல்லாத காரணமே சைதன்னியம்.

ஓ! முனிவரே! தாமரை போன்ற ஒரு சிறு வீடு தேக மாகிய- பிரமபட்டினத்தில் காணப்படுகிறது. அதன் மத்தி யில் தகராதஸமாக இருக்கிறது.

அது சத்து சித்து ஆனந்தம் அவர் முக்தி விரும்புவர் யாவராலும் தேடப்பட்டவர்.

யாதொரு வித்தியாசமின்றி அவர் இருதயகுகையில் வசித்தலினால் சிவன் சம்காரத்தினின்றும் விடுவிக்கிற இருதயன் எனப் படுவன். இவ்வண்ணம் உபநிஷத் முடிகி றது.

ஓம் முவ்வகையிலும் சாந்தி நிலவுக!

Wrapper Printed at M. K. Color Process, © 841478